ஜீவபந்து ஸ்ரீபால்

With the best Compliments
of the Author.

To,
The Swaminathaiar
Library,
Adyar.

ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால்

மணிவிழா மலர்

அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதிபகவன்
முதற்றே உலகு. —திருக்குறள்

ஜீவபந்து T. S. ஸ்ரீபால் அவர்களின்

வாழ்க்கையும் தொண்டும்

‘மணிவிழா மலர்’

இயற்றியவர்கள் :

சிறுவை. மோகனசுந்தரன்

(கலைக்களஞ்சியக் காரியாலயம், சென்னை - 5.)

வித்துவான் கா. சி. தனக்கோடி

(தமிழாசிரியர், தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளி, சென்னை.)

அளித்தவர் :

மணிவிழாக் குழுவினர்

1959

மணிவிழா வெளியீடு
முதற்பதிப்பு: செப்டெம்பர், 1959.
பதிப்புரிமை பெற்றது.

விலை ரூ. 2-0-0.

பதிப்பகம்:
திருத்தக்கதேவர் இலக்கிய மன்றம்,
34, சுப்பிரமணிய முதலி தெரு,
சென்னை-1.

காணிக்கை

நாடறிந்த நல்லறிஞர் உயர்திரு. ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்களைத் தமிழ்நாடு நன்கு அறியும். நாட்டிற்குத் தலைவர்கள், வீரர்கள் கிடைத்து விடலாம். ஆனால் தொண்டர்கள் கிடைப்பது மிக மிக அருமை. ''ஆருயிர்கட் கெல்லாம் அன்புசெயல் வேண்டும்'' என்ற இராமலிங்க அடிகளார் நெறியையும், ''அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே'' என்ற தாயுமானவர் நல்லுரையும் ஈண்டு நினைந்து மகிழ்தற்கு உரியவைகள். தொண்டுள்ளம் யாவர்க்கும் அமைதல் மிகக் கடினம். ''ஒரு சிலர் ஓயாது உழைத்து, சலிப்பு, கோபம், வெறுப்பு, பகை எனும் உணர்ச்சிகளுக்குப் பலியாகி விடாமல், புன்னகையும் பெருமூச்சும் கலந்த நிலையில் பணி புரிந்து, பட்டமரம் துளிர்விடும் வரை, படர்ந்து போக இருந்த விளக்கு மீண்டும் ஒளிவிடும் வரையில் பாடுபட்டு, வெற்றி கண்டு மறுமலர்ச்சி உண்டாக்கி வைக்கிறார்கள்'' என்று தொண்டரின் பெருமையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் இன்றைய அரசியல் தத்துவப் பேராசிரியர் அறிஞர் அவர்கள். இதற்கு ஏற்ப அன்பு, இன்சொல், வெள்ளை உள்ளம், கொண்ட கொள்கையிலே—குறிக்கோளிலே—உறுதி, ஆழ்ந்த தமிழ்ப் பற்று, சிறந்த நூலறிவு, ஒப்புரவு, ஈதல், விருந்தோம்பல், பொறுமை ஆகிய இனிய குணங்கள் அனைத்தும் ஒருங்கே பெற்ற மனித வடிவம் நமது டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள்.

தாய்மை உள்ளம் பயன் அறியாது. அன்பர் டி. எஸ். ஸ்ரீபால் அவர்களும் அத்தகைய தாய்மை உள்ளத்தோடு ''கொல்லா நெறியை இக்குவலயம் எல்லாம் ஓங்கச் செய்தல் வேண்டும்'' என்று கடந்த 32 ஆண்டுகளுக்குமேல் அரும்பாடுபட்டுத் தெய்வத்தின் பெயரால் நடைபெற்ற உயிர்ப்பலியை அறவே நிறுத்துவதில் பூரண வெற்றியும் புகழும் கொண்டார். இவர் தம் மாசற்ற அருள் தொண்டு தமிழகத்துப் பெருமக்கள் பலரின் உள்ளங்களைக் கவர்ந்துள்ளது. தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப் பள்ளி சிவகாருண்ய சங்கச் செயலாளர் திரு. சின்னத்தம்பி பிள்ளை அவர்கள் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களின் தொண்டில் திளைத்தெழுந்து அவர் தம் நாடகத்தைக் கண்டும், சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புற்றவர். எனவே அவர் தமது உள்ளத்தில் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் என்றும் நின்று நிலவத்

தம்து குழந்தைக்கு 'ஸ்ரீபால்' எனப் பெயரிட்டு மகிழ்ந்து வருவதினின்றும் நமது ஜீவபந்து அவர்களின் தனிச் சிறப்பு விளங்குகின்றது. நிற்க இவர் நுண்ணிய தமிழ்ப் புலமையும், பரந்த நல்லறிவும் வாய்க்கப் பெற்றவராய் பல பாடல்கள், கட்டுரைகள், சிறு சிறு சுவடிகள், ஆராய்ச்சி நூல்கள், நாடகங்கள் முதலியனவும் வெளியிட்டுத் தமிழ் இலக்கிய உலகிற்கும் அரிய தொண்டு செய்துள்ளார். இத்தகு சிறப்பால் இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும்கூட. தமிழ் எழுத்தாளர் சங்கத்திலும் உறுப்பினராவர்.

இப்படிப்பட்ட அறிஞர், வீரர் வரலாறுகளைத் தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்த வேண்டியதும் என்றும் நிலவுமாறு பொறித்து வைப்பதும் மிக மிக இன்றியமையாதது. எனவே அறிஞர் டி. எஸ். ஸ்ரீபால் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை வெளியிட்டு மணி விழா நடத்துவதென முடிவு செய்த சென்னைத் திருத்தக்க தேவர் இலக்கிய மன்றத்தினர், திருவல்லிக்கேணி நடராஜா கல்விக் கழகத்தினர், சௌகார்பேட்டை மண்டல காங்கிரஸ் கமிட்டியினர் மற்றும் பேரன்பர்களாகிய திருவாளர்கள் ஷா தேவ்ஸி மூல்சந்த்ஜீ, ஸ்ரீ விருஷபதாஸ் B. ஜெயின், ஸ்ரீ ஜேத்மல் புக்ராஜ்ஜீ, ஸ்ரீ ஜி. தேவி சந்த்ஜீ. மயிலை சினி வேங்கடசாமி, மல்லிநாத் ஜெயின் சாஸ்திரியார், பரத சக்ரவர்த்தி சாஸ்திரியார், சிம்மச்சந்திர சாஸ்திரியார், ஜெ. அப்பாவு ஜெயின், நாபிராஜ் ஜெயின், வித்துவான் தணிகை உலகநாதன், ஸ்ரீதர ஜெயின், பாஸ்கரநாத ஜெயின், ச. அ. அப்பாண்டை ஜெயின், ஸ்ரீ. ரத்தன்லால் தாஹிமா, தியாகி ஸ்ரீ ஏ. எம். வெங்கோபராவ் ஆகியவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கியும், குறிப்பாகத் தம் இளமை முதற்கொண்டு திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் கருத்துக்களை விடாது தம் இதயத்தில் பதியவைத்த நாடறிந்த தொண்டர், எழுத்தாளர், அச்சுக்கலை வித்தகர் திரு ஜி. உமாபதி அவர்களின் வேண்டுதலுக்குகந்தவாறும் நாங்கள் இருவரும் இவ்வரலாற்றை ஒருவாறு எழுத முடிந்தது. எனினும் இது சுருக்கமானதென்றே கூற வேண்டும். இதனால் ஜீவபந்து அவர்களின் நற்றொண்டில் கலந்து கொண்டு பெரும்பணிகள் செய்த பல நண்பர்களின் பெயர்கள் குறிப்பிட இயலாமைக்கு வருந்துகிறோம்.

ஜீவபந்துவின் வாழ்க்கைக் குறிப்புக்களைப் பல நாட்களாக, ஏன்? கால் நூற்றாண்டுகளுக்குமேல்

அவரிடம் பழகியதின் வாயிலாகவும், தென்னிந்திய ஜீவரக்ஷகப் பிரசார சபை, திருத்தக்கதேவர் இலக்கிய மன்றம் முதலியவைகளின் ஆண்டறிக்கைகளில் கண்ட குறிப்புக்களின் வாயிலாகவும் இவரது நெருங்கிய நண்பர்களின் மூலமும் கொண்ட குறிப்புக்களை வைத்து ஒருவாறு எழுதி முடித்தோம். இந்த நல்வாய்ப்புக்கு நாங்கள் இருவரும் பெருமைப்படுகிறோம்.

எனவே தொண்டின் செல்வர் ஒருவரின் உண்மை உழைப்பின் வரலாற்றைத் தமிழ் நாட்டிற்கு அளிக்க முன் வந்தோம். இம் மணிவிழா மலரைச் சீரிய முறையில் உதவ திரு ஜி. உமாபதி அவர்களே முன் வந்து தமது அச்சகத்திலேயே அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அவரது அன்புக்கு மணி விழாக் குழு தன் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும் ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்களின் மணிவிழாவினை ஒட்டி வெளிவரும் இவ் வரலாற்று நூலைத் தமிழ் நாட்டு அமைச்சர் பெருமக்களும் அறிஞர் பெருமக்களும் வழங்கியருளிய வாழ்த்துரைகள் அணி செய்கின்றன. மணி விழாக் குழுவினரின் வேண்டுகோளுக்கிணங்கி நல்லுரையருளிய எல்லோருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி என்றும் உரித்தாகும்.

இச்சிறு நூல் தொண்டர் ஒருவரின் வாழ்க்கைக் குறிப்புக்களைத் தெரிவிப்பதோடு அமையாது பல தொண்டர்களுக்குப் பயன்படவும், நல்வழிகாட்டியாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இது போன்ற தொண்டர் பெருமக்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் தமிழகத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாம். அச்செயலுக்கு இந்நூல் ஒரு முன்னோடியாக அமையட்டும். வாழ்க நற்றொண்டர் டி. எஸ். ஸ்ரீபால், வாழ்க அவரது நற்பணி, வளர்க அவரது தமிழ்த் தொண்டு.

" தமிழகம் "
27, கொண்டலையர் தெரு,
சென்னை-1.
16-6-59.

சிறுவை. மோகனசுந்தரன்.
புலவர் கா. சி. தனக்கோடி.

முக்கிய குறிப்பு:— படங்களில் (photoes) நமது ஸ்ரீபால் அவர்களை அறிந்து கொள்ள வேண்டி அவர் சட்டையில் நட்சத்திரக் குறிகள் வைக்கப் பெற்றுள்ளன. சில படங்களில் இடம் குறித்துள்ளோம்.

நல்லறம் வளர்க!

தமிழகத்தின் தவச் செல்வர்களாய் விளங்கும் அமைச்சர்கள், அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகிய சான்றோர்களின் வாழ்த்துரைகளும் பாராட்டுரைகளும்.

மதிப்புமிக்க கு. காமராஜ் அவர்கள்,
முதலமைச்சர், சென்னை.

"சேவை மனப்பான்மையும் இலக்கியப் பணியும்"

தென்னிந்திய ஜீவரக்ஷகப் பிரசார சபையின் தலைமைப் பிரசாரகர் திரு. ஜீவபந்து ஸ்ரீபால் அறுபதாவது ஆண்டை அணுகியுள்ளார் என்ற செய்தி மகிழ்ச்சிக் குரியது. அவரை யான் நன்கு அறிவேன். அவர்தம் சேவைக் குறிப்புகள் வருங்கால இளைஞர்களுக்கும், சேவை மனப்பான்மையுடையவர்களுக்கும் ஒரு நல்ல வழிகாட்டியாக விளங்கும். அவர் நமது தமிழகத்தில் உயிர்ப்பலியை நிறுத்த எடுத்துக் கொண்ட முயற்சிகள் அளவிடற்கரியன. பல எதிர்ப்புக்களிடையே பொறுமையாகவும் அன்பாகவும் பணி புரிந்து பல வெற்றியுங் கண்டுள்ளார். உயிர்ப்பலி தடைச் சட்டம் பிறந்து வெற்றிகரமாக நடைபெறுவதற்கு அவரது உழைப்பும் முயற்சியும் பெரும் காரணமாகும். அவர் பலி விலக்குப் பிரசாரத்துடன் இலக்கியப் பணியும் புரிந்து, தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்துள்ளது பாராட்டற்குரியது. ஜீவபந்து ஸ்ரீபால் மேலும் பல்லாண்டுகள் வாழ்க.

சென்னை,
17-8-59.

(ஒப்பம்) காமராஜ்.

மதிப்புமிக்க சி. சுப்பிரமணியம் அவர்கள,
நிதி அமைச்சர், சென்னை.

"நாட்டுப் பற்றும் தமிழ் ஆர்வமும் அவருடைய கொள்கைக்கு அரணாக அமைந்துள்ளன"

ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களின் மணிவிழாவை அண்மையில் கொண்டாடப் போவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். "இறைவன் மக்களைப் படைத்தது போலவே நாம் காணும் உயிர் உள்ள விலங்குகளையும், உயிரற்ற பொருள்களையும் படைத்துள்ளார். அனைத்தும் அவருடைய அருளினால் உண்டாக்கப்பட்டவை. எனவே அனைத்துயிரையும் நம்மைப் போலவே நேசித்து அவைகளிடம் அன்பு காட்டுவதுதான் நாம் ஆண்டவன்பால் காட்டும் அன்பாகும்" என்னும் உயர்ந்த கொள்கை நம்முடைய நாட்டிற்குப் புதிதன்று. எனினும் இதை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம்.

இவ்வுயர் கொள்கையை மக்கள் அனைவருக்கும் எடுத்துச் சொல்லி அவர்களின் மனத்திலே பசுமரத் தாணிபோல் அவை பதியும் வண்ணம் விளக்கித் தொண்டாற்றி வருபவர் ஸ்ரீபால். **நாட்டுப் பற்றும் தமிழ் ஆர்வமும் அவருடைய கொள்கைக்கு அரணாக அமைந்துள்ளன.** அவருடைய அருள் வழியிலே எண்ணற்ற இடையூறுகள் ஏற்பட்டபோதும் அவற்றைக் கண்டு தளராது தம் தொண்டை இன்றுவரை அவர் இடைவிடாது ஆற்றிவருபவர். அவருடைய மணிவிழா மிகச் சிறப்பாக அமையும் என்பதிலே ஐயம் இல்லை. அவர் நீண்ட காலம் நல்லுடலோடு வாழ்ந்து தம்முடைய உயரிய கொள்கைகளை இந் நாட்டில் மேலும் மேலும் பரப்பிவர இறைவன் இன்னருள் செய்வானாக.

சென்னை,
3-9-59.

(ஒப்பம்) **சி. சுப்பிரமணியம்.**

மதிப்புமிக்க எம். பக்தவத்சலம் அவர்கள்,

உள்துறை அமைச்சர், சென்னை.

"அன்பு வழித் தொண்டர்"

ஸ்ரீ டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் அன்பு நெறியில் தொண்டாற்றிவரும் அன்பர். இதுவே நம் பெரியோர்கள் காட்டிய சிறந்த வழி. அன்பு வழியைப் பரிபூரணமாகக் கடைப்பிடிப்பது மிகவும் சிரமமானது. ஆனால் ஸ்ரீபால் அத்தகைய புனிதத் தொண்டில் ஆடம்பரமும் விளம்பரமுமின்றி ஈடுபட்டிருக்கிறார். அவருக்கு என் பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை,
13-8-59.

(ஒப்பம்) **எம். பக்தவத்சலம்.**

மதிப்புமிக்க யு. கிருஷ்ணராவ் அவர்கள்,

சட்டமன்றத் தலைவர், சென்னை.

"மகாத்மாவின் அறவழி நின்றவர்"

I am glad to hear that Sri Sripal is beginning his 60th year. Sri T. S. Sripal is a great scholar and a selfless worker. He has been doing very good work in the South Iudian Humanitarian League and has rendered valuable service. He is a good speaker and an erudite scholar of Jaina Philosophy. He is a great disciple of Mahatma Gandhi and believes in the Ahimsa doctrine. I congratulate him on the useful work he has been doing and wish him many more years of a happy and contented life.

**Madras,
17-8-59,**

(Sd) U. Krishna Rao.

உயர்திரு. கி. இராஜாராம் அவர்கள்,
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

"பலித்தடை மசோதாவின் தாய் நமது ஸ்ரீபால்"

அன்பர் ஸ்ரீபால் அவர்களை 1950-லிருந்து எனக்கு நன்ருகத் தெரியும். தமிழ்நாட்டில் உருப்படியாகத் தொடர்ந்து பொதுஜன சேவை செய்துவரும் முக்கியமானவருள் ஒருவர். தென் இந்திய ஜீவ ரக்ஷண சபை மூலமாக அவர் ஆற்றிவரும் தொண்டு மிகவும் பாராட்டுதற்குரியது. பலித்தடை மசோதாவை 1951-இல் சென்னை சட்டசபையில் நான் பிரேரேபிப்பதற்கு தூண்டுகோலாக இருந்தவர் அவர் தான். அவரது இடையருு முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஓய்வு ஒழிவின்றித் தமிழ்நாடெங்கும் சுற்றித் திரிந்து பொதுஜனத் தொடர்பு கொண்டிருப்பவர். இந்நூலில் அவருடைய சேவைகளில் சிலவற்றைத் தொகுத்துக் கூறியிருப்பது எல்லோரும் அறிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கிறது.

அவர் நீடூழி வாழ்ந்து இன்னும் பல ஆண்டுகள் தமிழ் நாட்டிற்குச் சேவை செய்ய இறைவன் அருள் புரிவாளுக.

சென்னை,
21-8-59.

(ஒப்பம்) **கி ராஜாராம்.**

THATHUVASOODAMANI RAO BAHADUR A. CHAKRAVARTHI NAINAR, M.A., L.T. I.E.S. (Rtd.)

"மறக்களக் கோயில்கள் அறக்களக் கோயில்களாயின"

Sri T. S. Sripal has rendered very valuable service in reforming temple worship among the Hindus in South India. Temple worship in South India was often associated with slaughtering of animals. To stop this horrible practice the Humanitarian league of Madras, sent workers to preach against this unholy

practice. T. S. Sripal as a lecturer of the Humanitarian league went to different places of worship where animal sacrifice was practised. In this work of propaganda he met persons who were mainly responsible for such cruel practice in the name of religion In this work of propaganda he succeeded marvellously. In fact as a result of his propaganda work, many temples completely gave up this practice of slaughtering animals as a part of temple worship. As a result of this noble service, the practice of offering animal sacrifice is practically stopped in south Indian temples. For this service the Humanitarian league conferred on Sripal the title of 'Jeevabandhu'

His service is not confined to humanitarian work. He is interested in preserving Jaina antiquities. In his travels he came across various places containing caves, in mountain sides which were used, as residence by Jaina Saints. These caves contain valuable idols, representing the Jaina Thirthankaras These images were probably used by the Jain saints for worshipping while dwelling in the caves. He took the trouble of interviewing the officers of the Archeaological department and requested them to preserve these images from being mishandled and mutilated by ignorant persons, who do not know the value of such treasures of antiquity.

He is also interested in correcting false notions prevalent among the non-jains. Whenever such false notions are published either in journals are in books. Mr. Sripal does not fail to notice them and correct them by printing out the truth about Jaina religion. His work in this respect is greatly appreciated by Tamil Scholars.

He deserves support and co-operation in his service to culture and religion of South India.

Madras,
20-8-59.

(Sd) A. Chakravarti.

பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை
B. A., B. L., D. Litt. அவர்கள்.

தமிழ்த்துறைத் தலைவர், பல்கலைக்கழகம், சென்னை-5.

"சீலர் ஸ்ரீபால்"

தமிழகத்தில் அருளற நெறியில் வாழும் அன்பர் அனைவரும் திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்களை நன்கறிவர். அறுபதாண்டுகளாக இந்நாட்டில் வாழ்ந்து வரும் அந் நல்லாரைக் காண்பதுவும் நன்று ; அவர் நலங்களை உரைப்பதுவும் நன்று.

திரு. ஸ்ரீபால் அவர்கள் செந்நெறியில் வாழும் சீலர் ; சிற்றுயிர்க்கு உற்ற தோழர் ; அருந்தமிழ் வளர்க்கும் சிறந்த தொண்டர். மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது உயிர்ப் பலி நிகழும் ஊர்தொறும் சென்று அருள் நெறியின் பெருமையை அன்பாக எடுத்துரைத்து ஐயறிவுயிர்களின் ஆருயிர் காத்த பெருமை அவருக்கே உரியதாகும். மறக்கள வேள்வி நிகழ்ந்த திருக்கோயில்கள் ஸ்ரீபாலின் பெரு முயற்சியின் பயனாக அறக் கோட்டங்களாய் விளங்கக் கண்டு அகங்களிக்கும் அன்பர்கள் இந்நாட்டில் பல்லாயிரவர் என்பது மிகையாகாது. அவர் தொண்டின் திறமறிந்த தமிழகம் பதினறு ஆண்டுகளுக்கு முன்பு "ஜீவபந்து" என்ற பட்டம் வழங்கி மகிழ்ந்தது. வாயில்லா உயிர்களுக்கு வாய்த்த உயிர்த் துணையாகிய ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் இந் நல்லுலகத்தில் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்னும் பொய்யா மொழிக்குச் சான்றாக நின்று நிலவும் வண்ணம் இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றேன் !

சென்னை,
23-7-59.

(ஒப்பம்) **ரா. பி. சேதுப்பிள்ளை.**

உயர்திரு. பேராசிரியர்
டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள்,
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

"அன்பையும் அருளையும் வளர்த்த பெரியார்"

திருவாளர் ஸ்ரீபால் தமிழார்வமும் உண்மையில் பற்றும் மிகுந்த அறிஞர். தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சுற்றி உயிரிரக்கம் கருதி அவர் ஆற்றிய தொண்டு நாடு அறிந்ததே. தொண்டு என்பது அவரிடம் இயல்பாக அமைந்துள்ளது. உண்மை காணும் நோக்கத்தோடு அவர் செய்துள்ள ஆராய்ச்சிகளும் வெளியிட்டுள்ள நூல்களும் அறிக்கைகளும் பயனுள்ளவை. செய்வன திருந்தச் செய்தல் அவருடைய சிறப்பியல்பாக அமைந்துள்ளமை மகிழ்தற்குரியது. 'நல்லறம்' என்ற நல்ல பெயர் கண்டு, திங்களிதழ் நடத்தி வருதலிலும் இப்பெற்றியைக் காணலாம். காழ்ப்பும் பூசலும் இல்லாமல் அன்பும் அருளும் வளர்த்து வாழும் அவருடைய வாழ்க்கை இளைஞர்களுக்கு எடுத்துக் காட்டான நல்வாழ்க்கையாகும்.

அவர்தம் தொண்டு மேன்மேலும் சிறந்து விளங்குக. வளர்க நல்லறம்!

சென்னை,
22-7-59.

(ஒப்பம்) மு. **வரதராசன்.**

உயர்திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனுர்,
எம். ஏ., எல். டி., எம். ஓ. எல்., பி. எச்டி. அவர்கள்.

"மனிதப் பண்பும் சீரிய ஒழுக்கமும்"

யான் ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்களை முப்பது ஆண்டுகளாக நன்கறிவேன். சென்னை மாநகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும், பல்வேறு வெளியூர்களிலும் உயிர்க் கொலை தவிர்த்தல் பற்றி இவர்கள் செம்மையான தொண்டு செய்து வரு

கின்றார்கள்; தமிழ் இலக்கிய நூல்களையும் நன்கு படித்துள்ளார்கள்; தமிழ் ஆராய்ச்சியிலும் சிறந்து விளங்குகின்றார்கள்; சமண சமயச் சிறப்பு வாய்ந்த இடங்களை எல்லாம் நேரிற் கண்டு, அவை பற்றிய செய்திகளை அவ்வப்போது செய்தித் தாள்களில் வெளியிட்டு வருகின்றார்கள். இவை அனைத்திற்கும் மேலாக மனிதப் பண்பும், சீரிய ஒழுக்கமும் உடைய வர்கள். இத்துணை நற்பண்புகளும் ஒருவரிடம் வாய்க்கப் பெறுதல் அரிது. இவ்வருமைப்பாட்டைக் கருதியே இப்பெரியாரை யான் பாராட்டு கிறேன்; வாழ்த்துகிறேன்; போற்றுகிறேன்.

சென்னை, 20-8-59. (ஒப்பம்) மா. இராசமாணிக்கம்.

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்
எம். ஏ., பி. எச்டி., எம். எல். சி. அவர்கள்
தலைவர், ஆங்கிலத் தமிழ் அகராதி. சென்னைப் பல்கலைக்கழகம்.

"உலைவின்றி ஊக்கத்தோடு உழைப்பவர்"

திரு டி. எஸ். ஸ்ரீபால் அவர்களை ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக அறிவேன். அவர்கள் மன்பதை உலகிற்குச் செய்து வரும் தொண்டு தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் அறிந்ததொன்று. உலைவின்றி ஊக்கத்தோடு உழைத்து வரும் பெருமையுடைய அந்நண்பர் அண்மையில் அறுபதாண்டுகள் நிறைவெய்தப் பெறுகிறார் என்பதைக் கேட்டு மகிழ் கிறேன். அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து கொல்லா விரதத்தைக் குவலயத்திற் பெருகும்படி செய்யுமாறு அருளும்படி இறைவனை வழுத்து கிறேன்.

திருவள்ளுவர் அறங்களுள் தலையாயது கொல்லாமை என்றார். தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளுதற்காகப் பிற உயிர்களைக் கொல்லுதல் பொருந்தாது என்றார். பிற உயிர்களைப் பாதுகாத்தலுக்காகவும் பிறர் உயிர்களைப் பாதுகாத்தலுக்காகவும், மற்ற உயிர்களையும் மற்றையோர் உயிர்களை

யும் கொல்லுதல் அடாது என்பது டாக்டர் சுவைட்சர் உள்ளிட்ட பேரறிஞர்கள் கருத்து. உண்மையில், அருளறம் வளர வேண்டுமானால் கொல்லாத நலத்தில்தான் அது தொடங்குதல் வேண்டும். இதனை நன்குணர்ந்து, பிற உயிர்களுக்கு வரும் நோயைத் தம் உயிருக்கு வரும் நோயைப்போல மதித்து, தக்க வழிகளால் அந்நோய்களைத், தடுக்க முற்பட்டு உழைத்து வந்துள்ள திரு. ஸ்ரீபால் பாராட்டத் தக்கவர். சிறப்பாக, கோயில்களில் உயிரினங்களைப் பலியிடுதல் எவ்வளவு பொல்லாதது என்பதைப் பல ஊர்களில் மக்களுக்கு எடுத்துக் காட்டி, மக்கள் உள்ளத்தை மாற்றி, விழிப்புணர்ச்சியை உண்டாக்கி அறநெறிப்படுத்தி வந்துள்ள அந்நண்பர் மேன்மேலும் அத்தொண்டு சிறக்கும் பொருட்டு நெடுங்காலம் நல்ல உடலுரத்துடன் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

சென்னை,
24-7-59. (ஒப்பம்) **அ. சிதம்பரநாதன்.**

உயர்திரு. பெ. தூரன் அவர்கள்

பிரதம ஆசிரியர், 'கலைக்களஞ்சியம்' சென்னை.

"நல்ல தமிழர், சிறந்த தொண்டர்"

ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களை நான் பல ஆண்டுகளாக அறிவேன். நல்ல தமிழர்; சிறந்த தொண்டர். நாட்டுப் பணியிலும் இலக்கியப் பணியிலும் என்றும் மாறாத ஆர்வம் உடையவர். அவருக்கு மணி விழா நடப்பதை அறிந்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். மணி விழா இனிது நடைபெற்று ஜீவபந்து அவர்கள் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சென்னை.
21-7-59. (ஒப்பம்) **பெ. தூரன்.**

உயர்திரு. நா. சங்கரன் எம். ஏ., எல். டி. அவர்கள்
ஆணையாளர், சென்னை நகராண்மைக் கழகம், சென்னை.

'உண்மைக்காக வாழும் உத்தமர்'

திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் தமிழ் நாட்டினர் அனைவருக்கும் நன்கு அறிமுகமான ஒரு தொண்டர். அவருடைய பொதுநலத் தொண்டினைப் பற்றி ஏடுகள் புகழ்ந்துள்ளன; நாடும் நன்கறிந்தவை. அவர் சிறு வயது முதற் கொண்டே தமக்கு உண்மையென்று தோன்றும் எதையும் தைரியமாக எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றவர்; தமிழ் நாட்டிலுள்ள சமயச் சார்பு, பொதுநலப் பணி, சீர்திருத்தக் கொள்கை ஆகியவைகளைக் கொண்ட எல்லா நிறுவனங்களிலும் கலந்து கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றினார் — என்பவை அவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்து அறியக் கிடப்பவையாகும்.

தென்னிந்திய ஜீவரக்ஷக சபையின் தலைமைப் பிரசாரகராய் இருந்து, தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம், எண்ணற்ற எதிர்ப்புக்களிடையே, உயிர்ப் பலியிடுவதைக் கண்டித்துச் சொற்பொழிவுகள் பல ஆற்றி வெற்றி கண்டவர். முக்கியமாகத் திருவொற்றியூரில் பலி தடுப்புக்காக உண்ணா நோன்பு மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. உயிர் பலித் தடுப்புச் சட்டம் இன்று அமலுக்கு வந்திருக்கக் காரணமாயிருந்தவர்களில் திரு. ஸ்ரீபால் அவர்கள் முக்கியமானவர்; அயராது தளராது உழைத்தவர் என்றால் மிகையாகாது. இதற்காக நாடு அவருக்கு என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

திரு. ஸ்ரீபால் அவர்களின் மணி விழா நினைவு மலராக அன்னாருடைய வாழ்க்கையையும் தொண்டினையும் குறித்த இந்நூல் வெளியிடப்படுவது மிக மிகப் பொருத்தமானது; மகிழ்ச்சிக் குரியது. இதனை இயற்றியவர்களும், அளிக்கும் மணி விழா குழுவினர்களும் போற்றற்குரியர்.

(ஒப்பம்) நா. சங்கரன்

உயர்திரு திருமதி ருக்மிணிதேவி எம். பி. அவர்கள்,
கலா க்ஷேத்திர அமைப்பாளர், அடையாறு, சென்னை.

' ஒரு பவ்ய ஜீவன் '

திருவாளர் ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்களைக் கடந்த பல்லாண்டுகளாக நான் அறிவேன். அவர் தமக்கென வகுத்துக் கொண்ட ஜீவத்தொண்டு இயக்கத்தில் நானும் ஈடுபட்டுள்ளேன்; ஆகவே, அவர் தொண்டில் ஈடுபடவும் எனக்கு வாய்ப்பு கிடைத்ததுண்டு.

திருவாளர் ஜீவபந்து அவர்கள் அன்பு, ஆற்றல், எடுத்த காரியத்தை முடிக்கும் முயற்சி ஆகிய அரிய பண்புகள் நிரம்பப் பெற்றவர். சமயம், தமிழ் இலக்கியம், பொதுமக்கள் வாழ்க்கை முதலிய பல துறைகளில் அவர் முயன்று வெற்றி பெற்றுள்ளார் எனினும், அவருடைய புகழெல்லாம் வாயில்லா உயிர்ப் பிராணிகளின் துன்பங்களைக் குறைப்பதிற் கொண்ட முயற்சிகளிலே அமைந்துள்ளது. அம் முயற்சிகளில் அவர் ஓரளவு வெற்றியும் கண்டுவிட்டார். கோயில்களில் உயிர்ப்பலி இப்பொழுது சட்ட மூலமாகத் தடுக்கப் பெற்றுள்ளது. இவ்வெற்றியில் திரு. ஸ்ரீபால் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

இச் சிறு நூல் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மிக எளிய, தூய மொழியில் அமைக்கின்றது. இது ஒரு பவ்ய ஜீவனின் தனக்கென வாழாப் பிறர்க்கென முயலும் வரலாறாகும் எனலாம்; அன்றியும், தமிழகத்தில் உயிர்ப்பலி நிறுத்த எடுத்துக் கொண்ட இயக்கத்தின் வளர்ச்சியும் வெற்றியும் என்று இதனைக் கூறுதலும் ஆம்.

கடவுள் கடவுள் படைப்பின் ஒரு கூறே ஆகும். அவனுக்குப் பிற கூறுகளைத் துன்பப்படுத்த எவ்வித அதிகாரமும் கிடையாது. கடவுள் அம்சம் எங்கும் நிறைந்து கிடக்கிறது. அதனைப் போற்றி வாழ்வதே மனிதனின் கடமை. அவ்வாறின்றி, நாட்டில் எங்கும் காணவும் கருதவும் ஒண்ணாத பிராணி இம்சை நடந்து வருகிறதே என்றால், அதற்குக் காரணம்

மனிதனின் அறியாமையே காரணம். அவ்வறியாமையை அன்புடன் நீக்குவதே இன்று அறிவுள்ள ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய தொண்டு. அதனைத் திரு. ஸ்ரீபால் அவர்கள் தாம் ஏற்று, நல்வழியில் முயன்று, ஒரு துறையில் வெற்றியும் கண்டுள்ளார்.

பிரசாரர்கள், தொண்டர்கள் போன்று நல்வாழ்வு வாழ விரும்பும் யாவர்க்கும் இப்புத்தகம் ஓர் அரிய வழிகாட்டி. வருங்கால மக்களாகிய மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த துணை. இப்புத்தகத்தால் நாட்டில் நல்லறம் ஓங்க வழி திண்ணமாகப் பெருகும் என்று நம்புகிறேன்.

(ஒப்பம்) **ருக்மிணி தேவி.**

Sri. S. Lalchandji Dadha

இலவச ஜெயின் மருத்துவ நிலைய அமைப்பாளர், சென்னை.

"மகாத்மா காந்தியடிகள் போற்றிய தொண்டர்'

I have pleasure to introduce Sri T. S. Sripal whom I know since he joined in the Services of The South Indian Humanitarian League which was established in the City of Madras on 19th. December 1926 under the blessings of our JAINA GURU HIS HOLINESS GAMBEERA VIJAYAJI MAHARAJ who came here for propagation of religious preaching.

Sri T. S. Sripal was taken as a lecturer in July 1927. Since then he has been serving this League with great and practical security. He has done yeoman Service at great personal risk and has been responsible for the stoppage of the cruel and savage habit of sacrificing animals before God at different places like Tiruvottiyur, Chidambaram, Coimbatore, Palayamkottai, Sankaranainar Koil etc

His Services in this task have been supported by Mahatma Gandhi and many other religious, and Social

scholars, throughout the country. He has written two dramas about anti-animal sacrifices. As a fitting reward for his great and tireless services for the abolition of cruelty to animals, he has been rightly honoured with the title of Jeeva-Bandhu. The Animal sacrifice Abolition Act has been passed by the Govt. of Madras in 1951 and its enactment was also due to his great endeavour. He is also a lover of research and has brought about very many books in Tamil on Jaina Religion and Jaina literatures. He has saved the Sramana Hill in Madura Dist from being broken up to serve as Road metals This Hill is a noted Jaina monument containing inscriptions and images of Jains

I wish and pray for his long life and prosperity, and successes in all his endeavours.

(Sd.) S. Lalchand Dadha,

உயர்திரு. சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்

தலைவர், தமிழரசுக் கழகம், சென்னை.

"அன்பு வழி நின்ற அறிஞர்"

மனிதனுக்குத் தேவைப்படும் நல்ல குணங்களிலே 'கருணை' என்பதும் ஒன்று. ஏழை எளியவர்பால் காட்டப்படும் இரக்க உணர்வே 'கருணை' எனப்படும். அத்தகைய கருணை குணம் வாய்ந்த பெரியார்கள் பலர் நம் பாரதத்திலே வாழையடி வாழையாகத் தோன்றி வந்துள்ளனர். குறிப்பாகச் சமண சமயத்துப் பெரியார்கள் அத்தனை பேரும் கருணை வழி நின்று உயிர்க் குலத்திற்குத் தொண்டு செய்தவர்கள் எனலாம்.

பிற்காலத்தில் சமண சமயம் ஓங்கி வளரவில்லை என்றாலும் அந்தச் சமயத்தின் உயிர்நாடிக் கொள்கையான ஜீவகாருண்யம் மனித சமுதாயம் முழுவதிலுமே நன்கு பரவிவிட்டது. அதனைப் பரப்பப் பல்லா

யிரம் தொண்டர்கள் பாடுபட்டு வருகின்றனர். அவர்களிலே தலையானவர் ஜீவபந்து ஸ்ரீபால்.

நண்பர் ஸ்ரீபால் அவர்களை நான் பல ஆண்டுகளாக நன்கு அறிவேன். அவரது அழைப்புக்கிணங்கிப் பலமுறை ஜீவகாருண்யப் பிரசாரக் கூட்டங்களிலும் பங்கு கொண்டிருக்கிறேன். இப்போதன்று; இளமையிலே!

உயிர்களின்பால்அன்பு காட்டும் பண்புடைய ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களை மனிதகுலம் முழுவதுமே பாராட்ட வேண்டும் என்றால், தமிழ் மக்கள் அதற்கு விலக்கன்று. ஸ்ரீபால் அவர்கள் ஆற்றியுள்ள தொண்டுகளைச் சமுதாயப் பணியில் அவர் கண்டுள்ள சாதனைகளை விளக்கும் இந்நூல் தமிழர் ஒவ்வொருவருடைய இல்லத்திலும் இருக்க வேண்டும். தன்னலங் கருதாது அடக்கம் ஒன்றையே கண்ணுகக் கொண்டு, அன்புவழி நின்று, ஆடம்பரமின்றித் தொண்டு புரிந்து வருகிறார் ஸ்ரீபால். அவருக்குச் சிறப்பு செய்ய முன்வந்த ஒவ்வொருவரும் எனது பாராட்டுக் குரியவர்களாவர்.

ஸ்ரீபால் அவர்கள் தமிழ் இலக்கியங்களிலே நல்ல பயிற்சியுடையவர். குறிப்பாகச் சமண இலக்கியங்களில் பூரணமான புலமை பெற்றவர். அதனால் அவருக்குச் செய்யும் சிறப்பு தமிழ் மொழிக்குச் செய்வது போலாகும்.

நண்பர் ஸ்ரீபால் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழுக்கும், உயிர்க் குலத்துக்கும் பணியாற்ற, அவரை வாழ்த்துகின்றேன்.

(ஒப்பம்) ம. பொ. சிவஞானம்.

உயர்திரு. மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள்

துணைத்தலைவர், தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை.

"செயற்கரிய செய்த பெரியார்"

பெரியார் என்னும் கேள்விக்கு விளக்கம் கூறுகிற திருவள்ளுவர், "செயற்கரிய செய்வார் பெரியர்" என்று கூறுகிறார். எனவே, செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்தவர்கள் பெரியர் ஆவர். எந்தத் துறையாக இருந்தாலும் அந்தத் துறையில் அருமையான செயல்களைச் செய்த பெரியார்களைப் பாராட்டிப் போற்ற வேண்டுவது மனிதத் தன்மையுடைய மக்களின் கடமையாகும்.

ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் செயற்கரிய செயலைச் செய்த பெரியார் ஆவார் என்பதில் ஐயமில்லை. சமயத்தின் பேரால் மூடநம்பிக்கையோடு மக்கள் செய்து வந்த கோழி, ஆடு, மாடு, பன்றி முதலியனவற்றைப் பலியிடுதல் என்னும் கொடிய செயலை நிறுத்தியவர் டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள். பாமரமக்களிடத்தில் ஒரு பழக்கம் ஏற்பட்டு விடுமானால் அதனை நிறுத்துவது முடியாத காரியம். அவ்வழக்கம் பல நூற்றாண்டுகளாக நிலைபெற்று விடுமானால் அவ்வழக்கத்தைக் களைவது அருமையாகும். அந்த வழக்கம் சமயம் தெய்வங்களுடன் தொடர்புடையதாக அமைந்து விடுமானால், அவ்வழக்கத்தை நிறுத்துவது பெருங் கஷ்டமாகும். மதச் சார்பாகவும் தெய்வச் சார்பாகவும் பல நூற்றாண்டுகளாக வேரூன்றிக் கிடந்த கொடிய பழக்கந் தான் உயிர்ப்பலி முதல் என்னும் கொடுஞ்செயல்.

பல ஆண்டுகளாக உயிர்ப்பலி நிறுத்தம் செய்யும் பிரசாரத்தைச் சென்னை ஜீவரக்ஷகப் பிரசார சபையின் ஆதரவில் செய்து பலியிடுவதைக் கைவிடுமாறு செய்து, அதனை அறவே நிறுத்திய பெருமை டி. எஸ். ஸ்ரீபால் அவர்களுக்கே உரியது. திரு. ஸ்ரீபால் அவர்கள் ஊர் ஊராகச் சென்று பலி நிறுத்தப் பிரசாரம் செய்து கடைசியாக அதில் வெற்றி பெற்றார். தக்கவர்களின் உதவியைக்

கொண்டு, உயிர்ப் பலியிடுவது சட்டப்படிக் குற்ற மாகும் என்னும் சட்டத்தையும் நிறைவேற்றி வைத்தார் திரு. ஸ்ரீபால் அவர்கள். இது அவருடைய குன்றாத ஊக்கத்தினாலும் முயற்சியினாலும் ஏற்பட்ட அருஞ்செயலாகும்.

ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் செய்துள்ள பல தொண்டுகளில், அவர் பலிநிறுத்தம் செய்த தொண்டு முதன்மையானது ; போற்றத் தக்கது ; பெருமை படத் தக்கது. செயற்கரிய செய்த இப்பெரியாருக்கு மணிவிழாக் கொண்டாடுவது தகுதியும் முறையும் கடமையும் ஆகும். அவரைப் பாராட்டி அவருடைய சேவையைத் தெரிவிக்கிறது மணிவிழா நினைவு மலர். இம்மலரில் அவருடைய அரும்பெருந் தொண்டுகளைப் படித்து மகிழலாம்.

ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் மணிவிழா இனிது நிறைவேறுக. மணிவிழாத் தலைவர் நெடுங் காலம் வாழ்வாராக.

(ஒப்பம்) **மயிலை சீனி. வேங்கடசாமி.**

முத்தமிழ்க் கலா வித்வரத்தினம் உயர்திரு.
ஔவை டி. கே. ஷண்முகம் அவர்கள்
" ஔவை இல்லம் " சென்னை.

"ஸ்ரீபால் ஒரு கவிஞர், நாடகாசிரியர், ஆராய்ச்சியாளர் !"

ஜீவபந்து திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்களை நான் நன்கு அறிவேன். அவரது ஆழ்ந்த தமிழறிவும் நாவன்மையும் ஒழுக்க உயர்வும் உள்ள உறுதியும் உயிர்ப்பலி கூடாதென்னும் கொல்லா விரதக் கொள்கையும் எல்லோராலும் போற்றத்தக்கவை.

1950-ஆம் ஆண்டில் நாங்கள் நிரந்தரமாக நடத்தி வந்த எங்கள் நாடகக் குழுவுக்கு 'மூடுவிழா' செய்தபோது திரு. ஸ்ரீபால் அவர்கள் அறிமுகமானார். 25, ஆண்டுகாலமாகத் தமிழகம் இலங்கை ஆகிய

இடங்களில் பல்வேறு புராண இதிகாச சரித்திர சமுதாய நாடகங்களை நடித்துப் பெரும் புகழும் பெற்றிருந்த எங்கள் குழு மூடப்படுகிறது என்ற செய்தியைக் கேட்டு வருந்திய நல்லவர்களிலே இவரும் ஒருவர்.

திரு. ஸ்ரீபால் அவர்களும் கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவர்களும் முன்னின்று 1950 மார்ச்சு மாதம் எங்களுக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினர்கள். அவ்விழாவிலே தக்க பேரறிஞர் களைக் கலந்து கொள்ளச் செய்தார்கள். நீண்ட காலமாக உழைத்த எங்களுக்கு அப்பாராட்டு விழா சிறிது ஆறுதலை யளித்தது.

அன்று நன்றியுணர்வின் காரணமாகத் திரு ஸ்ரீபால் அவர்களோடு நட்புறவு கொண்டேன். இன்று வரை அந்த நல்லுறவு வளர்ந்து வருகிறது.

நாடகத்தால் விளையும் நற்பயனைத் திரு. ஸ்ரீபால் அவர்கள் நன்குணர்ந்தவர். இவர் ஒரு நாடக ஆசிரி யருமாவார். 'பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை,' 'கலியுகப் பிரகலாதன்' என்னும் இரு நாடகங்களும் இவரது நாடகத் திறமைக்குச் சான் ருக விளங்குகின்றன. அப்பிரசார நாடகங்கள் எத் தனையோ வாயில்லா ஜீவன்களைக் காப்பாற்றியிருக் கின்றன.

இசைப் பாடல்கள் புனைவதிலும் இவர் வல்லவர். நெஞ்சையுருக்கும் இவரது பாடல்கள் எத்தனை எத் தனையோ இரும்பு இதயங்களை இளகச் செய்திருக் கின்றன. அந்தச் செய்திகளையெல்லாம் இந்நூலிலே காணலாம்.

'இமயத்தில் நாம்' என்னும் நாடகத்தில் நான் இளங்கோ வடிகளாக நடித்தேன். அந்நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்ததின் காரணமாகவோ என்னவோ 'இளங்கோவடிகளின் சமயம் யாது' என்னும் அரிய ஆராய்ச்சி நூல் இவரிடமிருந்து எனக்கு அன்பளிப் பாகக் கிடைத்தது. தாம் எழுதி வெளியிடும் நூல் கள் பலவற்றையும் அவ்வப்போது எனக்கு அனுப்பி

உதவுவது வழக்கம். 'பகுத்தறிவியக்கத்தின் பழமை,' ஆதிபகவனும் ஆச்சார்ய விநோபாஜீயும்,' 'எம்மான் கோயில்,' 'சமணர் மலை செல்வோம்' முதலிய இவரது நூல்களை நான் படித்திருக்கிறேன். இந்நூலை நடுநிலையோடு படிக்கும் எவரும் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் சிறந்த ஆராய்ச்சித் திறன் படைத்தவர் என்பதை ஒப்புக் கொள்வார்கள்.

இப்பேர்ப்பட்ட தன்னலங் கருதாத ஒரு பெரியாரின் சீரிய தொண்டினைப் பாராட்டும் முறையில் மிக விரிவாகவும் விளக்கமாகவும் தமிழிலே ஒரு நூல் வெளியிட்டுள்ளது மிகவும் போற்றுதற்குரியதாகும். இந்நூல் வெளிவரக் காரணர்களாக விருந்த நல்லோர்களை நான் மனமார வாழ்த்துகிறேன்.

சீரிய தொண்டர்களின் சேவையைப் போற்றும் இத்தகைய நூல்கள் பிறமொழிகளிலும் வரவேண்டுமென்பது என் ஆசை.

ஜீவபந்து திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து பணி செய்து புகழ் பரப்பி எல்லார்க்கும் வழிகாட்டுமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன்.

(ஒப்பம்) **டி. கே. ஷண்முகம்.**

உயர்திரு. பன்மொழிப் புலவர்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்.

"கற்பதும் ஆராய்வதுமே தமது வழக்கமாகக் கொண்டவர்"

ஸ்ரீமத் ஜீவபந்து T. S. ஸ்ரீபால் அவர்களை 25 ஆண்டுகட்கு மேலாக அறிவேன்; அவர்களின் இளம் பருவத்துச் செயல்களைக் கேட்டறிந்துள்ளேன்.

ஸ்ரீபால் அவர்கள் முதலில் நாட்டின் முன்னேற்றத்திற்காகச் சிறந்த பணிகளைச் செய்து வந்து, பின்னர், சமயம், மொழி இவற்றின் வளர்ச்சியில் கருத்தூன்றித் தொண்டு புரியலானார்கள்.

ஸ்ரீபால் அவர்கள் தமிழில் சிறந்த காவியங்களாயுள்ள சிலப்பதிகாரம், சிந்தாமணி, சூளாமணி முதலிய காவியங்களையும், ஒப்புயர்வில்லாத நூலாகிய திருக்குறளையும், நாலடியார் அறநெறிச்சாரம் முதலிய அற நூல்களையும் நல்லாசிரியரிடங் கற்றுச் சிறந்த புலமை யடைந்துள்ளார்கள். தமது நுண்ணறிவினால் சிலப்பதிகாரம் முதலியவற்றை ஆராய்ந்து அரிய நூல்களை எழுதியிருக்கின்றார்கள். ஸ்ரீபால் அவர்கள் எப்பொழுதும் கற்பதும் ஆராய்வதுமே தமது வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

நம் நாட்டில் சிறு தேவதைகட்கு உயிர்களைப் பலியிட்டு வந்ததை ஒழித்ததற்காக ஸ்ரீபால் அவர்கள் மேற்கொண்ட முயற்சியும் அடைந்த தொல்லையும் அளப்பரியன. அவ்வாறு பல துன்பங்களை யடைந்தும் விடா முயற்சியினால் பலப்பல ஊர்கட்குச் சென்று பஜனையினாலும் சொற்பொழிவினாலும் ஆங்காங்கு உள்ள மக்களைத் தம் வசப்படுத்தி, அவர்கட்குக் கொல்லா விரதத்தை எடுத்து வைத்து உயிர்க் கொலையைத் தவிர்க்கும்படி செய்தார்கள். இவ்வரிய செயலைப் பாராட்டி அறிஞர் பெருமக்கள் அவர்கட்கு 'ஜீவபந்து' என்றும் பட்டம் அளித்துச் சிறப்பித்திருக்கின்றனர். இஃதொன்றே அவர்கள் புகழை நிலை நிறுத்தற்குச் சாலும்.

ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் தமிழ் நாட்டில் பல விடங்கட்குஞ் சென்று திருவறத்தை விருத்தி செய்ததோடு ஆங்காங்கு காணும் ஜைன விக்ரஹங்களைப் பாதுகாத்தற்குரிய ஏற்பாடுகளையும் செய்திருக்கின்றார்கள். தமிழ் நாட்டில் அவர்களை அறியாத அறிஞர்கள் இலர் என்னலாம்.

ஸ்ரீபால் அவர்கள் நல்லறமே வடிவெடுத்து வந்தது போன்றவர்கள்; ஊக்கமும் உழைப்புமே குறிக்கோளாகக் கொண்டவர்கள். அவர்கள் சென்னை நகரில் 'திருத்தக்கதேவர் மன்றம்' நிறுவி அதன் மூலம் தமிழையும் சமயத்தையும் வளர்த்து வருதலை அறிஞருலகம் அறியும்.

ஸ்ரீபால் அவர்கள் ஜீவகாருண்யத்தைப் பற்றியும் ஜன சமுதாயத்தைப் பற்றியும் வெளியிட்டிருக்

கும் நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் நோக்கின் அவர்களது பெரும்புலமையை நன்கு அறிதல் கூடும். இத்தகைய பேராசிரியர் இப்போது "நல்லறம்" என்னுந் திங்கள் இதழை நடத்தி வருவது இயைபுடையதே. அதனை ஆதரிப்பது தமிழறிஞர்கட்கு உரிய கடனாகும்.

இக்காலத்தில், தமக்கென வாழாமல் பிறவுயிர்கட்காக வாழ்ந்து வரும் பெருந்தகையார் நம் ஸ்ரீபால் ஒருவரே எனலாம்.

ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் இன்னும் ஒரு நூற்றாண்டு வாழ்ந்து நாட்டையும், மொழியையும், சமயத்தையும் நன்முறையில் விருத்தி செய்யுமாறு ஆதி பகவன் அருள் புரிவாராக.

(ஒப்பம்) **வே. வெங்கடராஜுலு ரெட்டியார்.**

Sri RISHABHDAS JAIN

I know very well Jeeva Bandhu Sripal for the past twenty-five years when I have the previlege to be the Honorary Secretary and continuously a member of the executive committee of the South India'n Humanitarian League, Madras. Dnring all these years, he has been rendering meritorious services to the innocent dumb animals and the Mission of Ahimsa.

He is a man of enthusiastic zeal having a good study of Tamil Literature. He has written dramas and essays in Tamil for the propagation of Humanitarian ideas. These works have been very much appreciated by eminent scholars. He is also a good speaker.

In all, his noble activities greatly helped in bringing about the success of the South Indian Humanitarian League in saving the lives of several thousands of animals from sacrificial swords.

Madras,
8-9-59.

(Sd) RISHABHDAS JAIN.

சிந்தாமணிச் செல்வர் வித்துவான்.
மே. வீ. வேணுகோபால் பிள்ளை அவர்கள்.

'மணிவிழா மங்கல வாழ்த்து'

குணபால நயினூர் குழந்தையம் மாள்செய்
மணமிகு தவத்தால் மண்ணினில் தோன்றிய
சீபால் என்னும் செம்மலே! வாழ்க!
பூபால் எவரும் புகழுநற் செயல்புரி
ஏந்தலே! வாழ்க! எழிலார் தொண்டுகள்
தீந்தமிழ்க் கியற்றும் ***சீரியோய்***! வாழ்க!
'ஒன்றாக நல்லது கொல்லாமை,' என்ற
நன்றுங் குறளின் நன்னெறி வழாது
கொலைதவிர் வாழ்வைக் குவலயம் உணர
உலையா துழைக்கும் உத்தமா! வாழ்க!
'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்,' எனச் செப்பிய
பொய்யில் புலவன் பொருண்மொழிக் கேற்ப
வையந் தன்னில் மாண்புடன் அறுபான்
ஆண்டுகள் வாழ்ந்த அன்பனே! வாழ்க!
மீண்டுமோர் அறுபான் ஆண்டுகள் வரையில்
நின்னரும் பணிகளால் நீணிலம் மகிழப்
பன்னருஞ் சிறப்பெலாம் பல்கப் பெற்றே
மணிவிழாக் காணுமிம் மாண்புறு நாள்போல்
அணிதிகழ் வாழ்வுனக் கவனியிற் சிறக்க
முக்குடை நீழல் முன்னவன் அருள்க!
திக்குறு ***சீர்த்திச் சீவகன்*** புகழ்போல்
என்றும் நின்புகழ் ஏர்பெற் றிலக
நன்றுநீ வாழ்க நனிமகிழ் சிறக்கென்!

(ஒப்பம்) ***மே. வீ. வே. பிள்ளை.***

உயர்திரு மீ. ப. சோமசுந்தரம் அவர்கள்.

தலைவர். எழுத்தாளர் சங்கம்.

'காட்சிக்கு எளிமை, பேச்சில் நிதானம், முகத்தில் வாஞ்சையுடையவர்'

ஜீவபந்து ஸ்ரீபால் என்ற பெயரைக் கேட்டதும் ஏதோ நம்மோடு சம்பந்தப்படாத ஒரு கதாபாத்திரமோ என்று நினைக்கத் தோன்றும். அப்படித் தோன்றுகிறவர்களுக்கு ஜீவபந்து ஸ்ரீபால் நம்மோடு இந்த புண்ணியத் தமிழ் நாட்டில் வாழ்கிற ஒரு சிறந்த தேச பக்தர் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும், அந்த நோக்கத்தோடு வெளி வந்துள்ள இவருடைய வாழ்க்கைக் குறிப்புக்களைப் பார்த்தால் மீண்டும் பழைய சந்தேகம் ஏற்படும்! ஜீவபந்து என்பவர் நிச்சயம் வீரக் கதைகளிலே வருகிற ஒரு கதாநாயகர், நம்மோடு வாழ்கிற நம்மைப் போன்ற ஒரு கதைகளிலே ஒரு மனிதரில்லை என்று சொல்லத் தோன்றும். ஏனென்றால் அவருடைய வாழ்க்கை அப்படிப்பட்ட ஒரு அபூர்வ வாழ்க்கை. வீரமான வாழ்க்கை. இன்றைய இளைஞர்களுக்குத் தெரியாத பல சம்பவங்கள் நிறைந்த அதிசய வாழ்க்கை அது!

வியாபார நோக்கம் நிறைந்த இன்றைய இலௌகிக உலகில் தப்பிப் பிறந்த ஒரு மனிதர் ஸ்ரீபால். அவரோடு பழகும்போது புத்தகங்களிலே நாம் பார்க்கிற நல்ல மனிதர்களில் ஒருவர், ஏடுகளுக்குள்ளிருந்து குதித்து வந்திருப்பது போல் தோன்றும். அவருடைய பேச்சு, அடக்கம், மரியாதை, அன்பு, அமைதி, பரிவு எல்லாம் சேர்ந்து அவரிடத்தில் ஒரு மதிப்பை உண்டுபண்ணும்.

ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களோடு நான் நெருங்கிப் பழகியதில்லை. ஆனால் பலநாள் பழகியது போன்ற ஓர் உணர்ச்சி அவரைப் பார்க்கும் போதெல்லாம் ஏற்படுகிறது. காட்சிக்கு எளிமை, பேச்சில் நிதானம், முகத்தில் வாஞ்சை—இப்படிப்பட்ட ஒரு மனிதர் எல்லாருக்கும் நல்லவராக, எல்லாருடைய மதிப்பையும் பெற்றவராக விளங்குவது கதை போன்றிருக்கலாம். ஆனால் முற்றிலும் உண்மை.

கருணை என்ற இதயச் செல்வம் எல்லாருக்கும் வாய்ப்பதில்லை, பணத்தை எத்தனையோ வழிகளில்

எளிதாகச் சம்பாதித்துச் செல்வந்தர்களாவதற்கு இன்றைய உலகில் பல துறைகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் கருணை என்ற செல் வத்தை எப்படிச் சம்பாதிப்பது என்பது யாருக் குமே தெரியாத ஒரு இரகசியம் தாம்! அந்த இரகசி யம் ஸ்ரீபால் அவர்களுடைய இதயத்துக்குள்ளே எப் படியோ பிறவிச் செல்வமாகவே நின்று திகழ்கிறது.

''மன்னுயிர் எல்லாம் கடவுளின் படிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்''

என்பது வெறும் பயிற்சியினால் மட்டும் வந்து விடக் கூடிய அறிவு ஆகாது. அது இதயம் தோய்ந்த ஓர் அநுபவமாகும். அத்வைதம் என்ற சொல்லுக்கு அறிவு முறையிலே பல பொருள்கள் கூறுவதுண்டு. ஆனால் உண்மையான அத்வைதம் பிற உயிர்களிலே தன்னுயிரை ஒன்ற வைத்து நோக்குவதும் தன் னுயிரிலே பிற உயிரைக் காண்பதுமே ஆகும். ஈசா வாஸ்ய உபநிஷத்திலும் கீதையிலும் சொல்லப்பட் டுள்ள இந்த நுட்பமான தத்துவத்திற்கு 'கருணை யோகம்' என்றே பொருள் கொண்டு 'பூத தயை' என்ற பண்புக்கு ராஜாஜி விளக்கம் கூறியிருக் கிறார்கள். இந்த அரிய விளக்கங்கள் எல்லாம் ஸ்ரீபால் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பைப் படித்த போது எனக்கு மீண்டும் நினைவு வந்தன.

உயிர்களிடத்தில் கருணை காட்டுவது, ஜீவ பலியை நிறுத்துவது போன்ற பெரும் பணிகளிலே ஸ்ரீபால் அவர்கள் நிகழ்த்தியுள்ள தொண்டு மகத் தானது. தமிழ் நாட்டில் எத்தனையோ பல நூற் றாண்டுகளாக நம்முடைய பெரியோர்களும் முனிவர் களும் சொல்லி வந்துள்ள அறத்தைச் செயலிலே கடைப்பிடித்து நாளும் உழைத்து வருகிற ஸ்ரீபால் அவர்களின் சேவை மேலும் மேலும் வளர வேண்டும் என்றும் அவருடைய புகழ் ஓங்க வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்கிறேன்.

''ஆர்வம் உடையவர் காண்பார் அறனடி
ஈரம் உடையவர் காண்பார் இணையடி''

என்பது திருமூலர் வாக்கு!

(ஒப்பம்) **மீ. ப. சோமசுந்தரம்.**

உயர்திரு கு. மு. அண்ணல்தங்கோ அவர்கள்
வேலூர்.

' திருக்குறட் காவலர் நல்லறப் பெரியார்!!'

அன்பறம் ஆற்றும் திருக்குறட் காவலர் — நல்லாருக்கும் அல்லாருக்கும் அன்பர்—உயர்திரு மன்னுயிர்க் காவலர் ஸ்ரீபாலர் அவர்கள் தாம் தம் இளமைக் காலத்தில் ஆற்றிய அருளறப் பணியின் உண்மையும், தன்மையும், உயர்வும், சிறப்பும், இக்கால மக்கள் ஒருவாறு உணர்ந்தாலும், உணராவிடினும், பிற்கால மக்களாவது உணர்ந்து மகிழும் வண்ணம் பணியாற்றுகிறார். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக" என்னும் உலகில் ஒப்பற்ற நல்லறம் சொல்லும் "நல்லறம்" என்னும் தூய தமிழ் இதழை நடத்தி வருகின்றார் நமது ஸ்ரீபாலர்.

எனவே, இடையறாது தமிழ்ப் பணியும் திருக்குறட் பணியும், மன்னுயிர்ப் பணியும் ஆற்றி வரும் உயர்திரு. மன்னுயிர்க் காவலர் திரு ஸ்ரீபாலர் நீடூழி வாழ்க! நல்லறப் பெரியார் வளர்க!! என்று அவரது மணிவிழாவன்றும் முன்னரும் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றுகூடி அப் பெரியாரை நம் உளமார உரையார வாழ்த்தி மகிழ்விப்போமாக!

வணக்கம். வாழ்க தமிழ் நிலம்!

(ஒப்பம்) கு. மு அண்ணல்தங்கோ,
தமிழ்நாடு.

கவிஞர் புத்தனேரி. ரா. சுப்பிரமணியம் அவர்கள்

"உத்தமன் ஸ்ரீபால்"

அவனியிலே எவ்வுயிர்க்கும் அன்பாக
இருத்தல்எனும் அறமே பேணும்
தவநெறியோன் அறிவாளன் தமிழ்த்தொண்டன்
சமணமதத் தத்து வத்தைக்
கவனமுடன் ஆராய்ந்து கருணைமணம்
நாடெங்கும் கமழ்வ தற்கே
உவகையுடன் உழைத்துவரும் உத்தமனும்
ஸ்ரீபாலின் ஊக்கம் வாழி!

(ஒப்பம்) புத்தனேரி ரா. சுப்பிரமணியம்.

Sha. Devsee Moolchandji

Ex. Hony Secratary, S. I. H. League

I know Mr. T. S. Sripal for the last 30 years. My self and Sree Shyamji Bhai invited him to this Humanitarian league. The League's committee appointed Sri Sripal as its chief Lecturer in 1928. Since then, he has continuously done invaluable service. He, being a true Humanitarian in thought, feeling and action, his soul-stirring speeches interspersed with apt and moving songs and delivered with tears of compassion for the victims of animal immolation, not only had a tremendous effect but actually caused the abolition of animal sacrifices in most of the Tamil Nad Temples and redeemed an untold number of dumb creatures from the sacrificial altar. Sri. Sripal's successful efforts progressively increased to such an extent that the League in recognition of his humanitarian services conferred on him the title of 'Jeevabandu' in 1943, When wave after wave of success crowned the League activities there by the object of reaching a still wider public by a permanent means loomed large and Sri. Sripal finally hit upon the idea of producing a monumental dramas.

On this happiest occasion of his Diamond Jublee celebration for his tireless thirty two years of service in the Humanitarian League, I Pray to God to give him a long prosperous life.

Madras,
12-9-59.

(Sd.) Devsee Moolchand.

மயிலை. சிவமுத்து அவர்கள்

தலைவர், மாணவர் மன்றம், சென்னை.

வாழ்த்துரை

'நம் நாட்டிலே தொண்டர்களைவிடத் தலைவர்களே அதிகமாக இருக்கின்றனர்' என்று ஒருமுறை காந்தியடிகளார் பேசியதை நான் அடிக்கடி நினைந்து பார்ப்பதுண்டு. அத்தகைய குறையைப் போக்கித் தொண்டு செய்வதால் உயர்ந்து திகழ்பவர்கள் நம் நாட்டிலே பொதுநலப் பெரியார் வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும் ஜீவபந்து T. S. ஸ்ரீபால் அவர்களும் ஆவர். வா. தி. முதலியார் அவர்கள் மாணவர்களுக்காகத் தொண்டாற்றி வருகின்றார். நமது ஸ்ரீபால் அவர்களோ வாயில்லாப் பிராணிகள் என்று வழங்கும் ஆடுமாடுகளைக் காப்பாற்றியதோடு, ஆறறிவு படைத்த மக்களுக்கும் அறநெறி கூறி வருகின்றார்.

ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களை நான் சுமார் முப்பது ஆண்டுகளாக அறிவேன். அவர் தம் செயற்கரும் செயல்களை யெல்லாம் கண்டும் கேட்டும் பெருமகிழ்ச்சி கொள்ளும் பேரன்பர்களுள் நானும் ஒருவன். பழைய பழக்க வழக்கங்களை ஒழிப்பது என்பது எளிதில் புரியக் கூடிய காரியமன்று. அவருடைய சரிதையைப் படிக்கும் போது இத்தகைய அரிய செயல்களைச் செய்துவரும் ஒரு பெரும் தொண்டரை நம் நாடு தக்கவகையில் பாராட்டாமலிருக்கின்றதே என்றே எண்ணி வருந்த நேர்கின்றது. அவர் ஒரு சிறந்த தமிழறிஞராக இருந்தும் பேச்சிலும் எழுத்திலும் வல்லவராக இருந்தும் எல்லோரிடத்திலும் பணிவான தன்மையில் நடந்து கொள்வது அவருடைய அருங்குணத்தையே நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. ஜைன சமயத்தின் மீது சைவர்கள் கொண்டிருந்த வெறுப்பினை முற்றிலும் மாற்றிய பெருமை நம் ஸ்ரீபால் அவர்களுக்கே உண்டு. எனக்குத் தெரிந்த வகையிலே அவருடைய குணநலன்களைக் குறித்துப் பாராட்டி எழுதுவதென்றால் ஒரு நீண்ட கட்டுரையாகவே அமையும். அவருடைய பேச்சு எத்தகைய பிடிவாதக்காரரையும் இணங்கச் செய்துவிடும். தாம் எடுத்த ஒரு செயலை

நிறைவேற்றி வைப்பதில் அவருக்கு இணையான ஒரு வரை நான் கண்டதில்லை. நான் தெற்கே பல இடங்களுக்குச் சென்றிருக்கின்றேன் ; நான் சென்ற இடங்களிலெல்லாம் ஸ்ரீபால் அவர்களின் அருமை பெருமைகளை ஆங்குள்ளோர் சொல்லக்கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன். அவரைப் பாராட்டுவதால் பிற அன்பர்களும் தொண்டுசெய்தலே சிறந்தது என்பதை உணர்ந்து தொண்டாற்ற வருவார்கள். தமிழர்களைக் காட்டிலும் சிறப்பாக ஜைன மதத்தவர்கள் அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஸ்ரீபால் அவர்களின் பேருழைப்பினை நம் நாடு இன்றும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை. அந்தக் குறையினை இந்த மணிவிழா மலர் பெரிதும் போக்குதல் கூடும். மிகச்சுருங்கிய கால அளவிலே, இத்தகைய ஓர் அரிய மலரினைப் படைத்துத் தந்த சிறுவை மோகனசுந்தரனார், வித்துவான் கா. சி. தனக்கோட்டி ஆகிய இருவரையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன். துவக்கத்திலிருந்து முடிவு வரையில் இந்த மலரில் உள்ள செய்திகள் படிப்போருக்கு இன்பத்தைத் தந்த வண்ணம் திகழ்கின்றன. சிறந்த படங்கள், கல் வெட்டுக்கள், பல அறிஞர்களின் எண்ணத் தொகுப்புக்கள் யாவும் மக்களின் உள்ளத்தைக் கவரும் தன்மையில் அமைந்திருக்கின்றன. நம் நாட்டிலே நிகழ்ந்துவந்த மிகக் கொடிய செயலாகிய பலியிடும் பழக்கத்தை முற்றிலும் நீக்குவதற்குப் பேரன்பர் ஸ்ரீபால் அவர்கள் எந்தெந்த முறைகளையெல்லாம் கையாண்டனர் என்பதை இந்த மலர் மிகவும் விளக்கமாகத் தெரிவிக்கின்றது. பலிநிறுத்தத்தோடல்லாமல் நமது ஸ்ரீபால் அவர்கள் மேலும் பலப்பல அரிய செயல்களையெல்லாம் ஆற்றக்கூடியவர் என்பதற்கு வேண்டிய செய்திகளையும் இக்கட்டுரை மலர் நமக்குத் தெரிவிக்கின்றது. என் நெருங்கிய நண்பரும், பொதுநலத் தொண்டரும், ஒரு சிறந்த அறிஞரும் ஆகிய ஜீவபந்து T. S ஸ்ரீபால் அவர்கள் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து நம் நாட்டிலே என்றும் அழியாத வகையில் அவருடைய பேரையும் புகழையும் நிலைநாட்டுவார் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

(ஒப்பம்) **மயிலை. சிவமுத்து**

சகோதர உணர்ச்சி
உயிர்கள்பால் அன்பு
தன்னலமின்மை
அஹிம்ஸை
சத்தியம்
தெய்வத்தின் பெயரால்
உயிர்ப்பலி செய்வது குற்றமெனச்
சட்டம் பிறந்து விட்டது.
இஃது அஹிம்சையின் வெற்றியாகும்.
எனவே
அஹிம்ஸை சத்தியம் என்னும்
அந்த அற்புதக் கற்பகத்தருவை
உங்கள் உள்ளங்களிலே வளரவிடுங்கள்.
தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசார சபை, சென்னை.

திருவறம் வளர்க.

ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால்

அவர்களின் வாழ்க்கையும் தொண்டும்.

卐

1922-ஆம் ஆண்டு ஒருநாள் மாலை சான்றோருடைய தொண்டை நன்னாட்டுக்குக் கண்ணென விளங்கும் காஞ்சீபுரத்துக்கு அடுத்த திருப்பறம்பூர் கிராமத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஊர் மக்கள் அனைவரும் திரண்டு இருந்தனர். வட ஆற்காடு ஜில்லா செய்யாறு தாலுக்கா தாசில்தார் பின்வருமாறு பிரசங்கம் செய்தார்.

''இங்கு கூடியிருக்கும் மகாசனங்களே! இப்பொழுது நம் நாட்டில் ஒரு பெருங் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. காங்கிரஸ்காரர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்கின்றனர். பிரிட்டிஷ் அரசாங்கம் நமக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். கல்வி வளர்ச்சிக்காகப் பள்ளிக்கூடங்கள். போக்குவரத்திற்குச் சௌகர்யமான ரயில்கள், தபால், தந்தி, இன்னோரன்ன பல நன்மைகளை அது நமக்குப் புரிந்துள்ளது. இதனை உணராமல் காங்கிரஸ்காரர்கள் ஒத்துழையாமை என ஒரு இயக்கத்தை ஆரம்பித்து நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள் என்று பேசி வந்தவர் ''காந்தி, அவர் பேசுவதெல்லாம் வாந்தி'' என்று கூறினார். உடனே கூட்டத்தின் நடுவிலிருந்து ***''காந்தி அவர் பேசுவதெல்லாம் சாந்தி''*** *என்று ஒரு ஆவேசக்குரல் எழுந்தது.*

தாசில்தார்:-யார் அவர்? எழுந்திருந்து பேசுங்கள்

காங்கிரஸ் பக்தர் :-(எழுந்திருந்து) ***காந்தி அவர் பேசுவதெல்லாம் சாந்தி.***

தா :-எது சாந்தி? மாணவர்களைப் படிக்கவேண்டாம் என்கிறார்களே அதுவா? வக்கீல்களை வேலையை விட்டு வரும்படி அழைக்கின்றார்களே அதுவா? போலீஸ்காரர்களை உத்தியோகங்களைத் துறக்கும் படித் தூண்டுகிறார்களே அதுவா? எது சாந்தி?

கா. ப :-மாணவர்களைப் படிக்க வேண்டாம் என்று கூறவில்லை. ஆங்கில ஆட்சியினின்றும் நாடு சுதந்திரம் பெறவேண்டி ஆங்கிலப் படிப்பையும், ஆங்கிலேயர் கோர்ட்டுகளையும் பகிஷ்கரிக்கும்படியும், அதை சாந்தமாக நிறைவேற்றும்படியும் கட்டளை இடுகிறார். ஆகவே அவருடைய இயக்கம், நேர்மையானதென்பதையும், சாந்தத்தோடு கூடியது என்பதையும் விளக்கவே '' சாந்தி என்றேன்.'

தா :-ஆங்கிலேயர்களை எதற்காக எதிர்க்க வேண்டும்? அவர்கள் இல்லையேல் இவ்வளவு நன்மைகள் நம் நாட்டிற்கு ஏற்பட்டிருக்குமா?

கா. ப :-ஆங்கிலேயர்களை வெறுக்கவில்லை. ஆங்கிலேயர்களின் ஆட்சிமுறையைத்தான் மகாத்மா காந்தியடிகள் வெறுக்கின்றார். ஆங்கிலேயர்கள் இந் நாட்டில் செய்துள்ள நன்மைகள் அளவற்றன. அவைகளில் பெரும்பாலும் அவர்கள் சுயநலத்தைக் கருதியே அன்றி மக்கள் நன்மைக்காக அல்ல. மேலும் சுதந்தரம் அளிக்க மறுக்கிறார்கள். அந்த உண்மையை 1919-ல் நடந்த பஞ்சாப் ஜாலியன் வாலாபாக் படுகொலையே நிரூபித்து விட்டது. அன்று முதலே இந்திய மக்களுக்கு ஆங்கிலேய ஆட்சியின் சுயநலம் வெளிப்பட்டது. வெறுக்கிறார்கள்.

தா:-பஞ்சாப் படுகொலை உண்மை என்று நினைக்கின்றீர்களா?

கா. ப:—ஆம்! உண்மையே! பஞ்சாப் படுகொலையை விசாரித்த சப் கமிட்டியின் ரிபோர்ட் புத்தகத்தை யான் வாசித்திருக்கிறேன்.

தா — புத்தகம் உம்மிடம் இருக்கிறதா?

கா. ப — இருக்கிறது.

தா — கொண்டு வாருங்கள். அன்பர் புத்தகம் கொண்டுவர புத்தக நிலையம் சென்றார். தாசில் தாரர், அங்கு நின்ற கிராம முனிசீப். உயர் திரு. மே. அப்பாதுரை நயினார் அவர்களைக் கூப்பிட்டு, "இந்தக் காங்கிரஸ்காரரின் தந்தை இங்கு இருக் கின்றாரா?" என்றார். உடனே கிராம முனிசீப் அவர்கள், "ஐயா! குணபால நயினார் அவர்களே! இங்கு வாருங்கள்" என்றார். திரு. குணபால நயி னார் புன்சிரிப்புடன் எதிரே நின்றார். அவர் சிங்கம் போன்ற தோற்றமும், ஏற்றமும் உடையவர். இள கிய மனமும் ஏழைகள்பால் அன்பும் கொண்டவர். திருப்பறம்பூர் கிராமத்தில் அவருக்கு தனிமதிப்பு உண்டு. கட்சிகள் ஏற்பட்டால் ஏழைகள் பக்கம் நின்று போராடுவார். கூடுமானால் தன்னுடைய பொருளையும் செலவழித்து ஏழைகளின் வழக்கு களைத் தீர்ப்பார். அவர் தாசில்தார் முன் சென்ற வுடன் பின்வரும் உரையாடல் நிகழ்ந்தது.

தா — புத்தகம் கொண்டுவரச் சென்றவர் தங் கள் குமாரர்தானா?

கு — ஆமாம்.

தா — அவரை நல்ல வேலை வாங்கப்படாதா? வயல்களில் எவ்வளவு வேலை உள்ளன! இவ்வா றெல்லாம் சிறு வயதில் ஆடவிடலாமா? வயதான வர்கள், நல்ல அனுபவமுள்ளவர்கள், படித்தவர்கள், ஆகியோர் நிறைந்த இந்தக் கூட்டத்தில் உங்களை யும் மதிக்காமல் பேசுகிறாரே! இதெல்லாம் சிறு பிள்ளைகளுக்கு அழகா! இப்படி வளர்க்கலாமா பிள்ளைகளை?

கு — அவன் சிறுவயதிலிருந்தே காஞ்சிபுரத்தில் வளர்ந்தவன். அங்கேயே வாசித்துக் கொண்டிருந்

தான். நல்ல புத்திசாலி என்ற பெயரும் எடுத்துள்ளான். பின்னர் இக்கிராமத்துக்கு வந்தான். இங்கே தருமசாகர சுவாமிகள் இலவச வாசகசாலை ஒன்றை ஏற்படுத்தியுள்ளான். அதற்கு நிறைய புத்தகங்களை வரவழைத்து அனைவரையும் படிக்கும் படித் தூண்டுகின்றான். பத்திரிகைகள் வரவழைக்கின்றான். தினசரி, பத்திரிகைச் செய்திகளைப் பலருக்கும் எடுத்து விளக்குகின்றான். கிராமப் பொது நல சேவை செய்கின்றான். அவன் செய்து வரும் பணிகளுக்காக கிராம மக்கள் அவனைப் பாராட்டுகின்றனர். அது எனக்குப் பெருமகிழ்ச்சியாக உள்ளது. ஆகவே அவன் விருப்பப்படி சேவை செய்யட்டுமே என்று விட்டு விட்டு, நானே விவசாயத்தைக் கவனித்துக் கொள்கிறேன்.''

தா — அதுதான் தவறு. அவர் உங்களைப்போல் பாடுபட்டால் இப்படி அகம்பாவமாகப் பேசுவாரா? இதனால் பின்னர் உங்களுக்குத்தான் கேடு விளையும். நல்ல வேலை வாங்குங்கள்.

இவ்வாறு உரையாடல் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது அன்பர் புத்தகமும் கையுமாக வந்து விட்டார், தாசில்தார் புத்தகத்தை வாங்கிப் புரட்டிப் பார்த்தார். ''உம்முடைய விஷயமாக உமது தகப்பனாரிடம் சொல்லியிருக்கிறேன், ஜாக்கிரதையாக நடந்து கொள்ளும்.'' என்று கூறிவிட்டுக் கூட்டம் முடிந்து விட்டது என்று எழுந்து வீட்டிற்குள் சென்று விட்டார். எல்லோரும் கலைந்தனர். இவ்வாறு இளம் வயதிலேயே தம் உள்ளத்தில் உண்மை என்று தோன்றியதைத் துணிவுடன் எடுத்துரைத்தவர் யார்? அவர் தாம் நம் போற்றுதற்குரிய ஜீவபந்து ஸ்ரீபால்.

திருப்பறம்பூர் கிராமம் காஞ்சிபுரத்துக்குப் பத்து மைல் தூரத்தில் உள்ள மிகச்சிறந்ததொரு புராதனமான கிராமம். ஜைன சமய வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது. இவ்வூரில் புராதனமான இரண்டு ஜைன ஆலயங்கள் உள்ளன. அவைகளில்

பெரிய ஆலயம் இருக்கும் பதிக்கு இக்காலத்தில் கரந்தைகிராமம் என வழங்குகிறது. அதற்கு முனிகிரி ஆலயம் என்பது பெயர். குலோத்துங்க சோழ மன்னனல் கட்டப்பட்டதென தெரிகிறது. திருப்பறம்பூர் ஜினலயம் என்பதற்குரிய கல்வெட்டுச் செய்திகளும், பண்டைய நூல்களின் பாக்களும் நன்கு விளக்குகின்றன. இம்முனிகிரி ஆலயத்தி லுள்ள மகாவீரர் சந்நிதானத்தில் அழகிய ஓவியங்கள் எழுதப்பட்டிருந்தன. அவைகளின் இடையே,

''காவுவயல் சூழ்தடமும் கனத்தமணி கோபுரமும்
பாவையர்க ளாடல்களும் பரமமுனி வாசமுடன்
மேவு புகழ்திருப்பறம்பை விண்ணவர்கள்
போற்றி செய்யும்
தேவரிறைவன் கமலச்சேவடியை வணங்குவோமே.''

எனுங்கவியும் எழுதப்பட்டிருந்தது. மேலும் கரந்தை திருப்பறம்பூர் பாடல் பெற்றத் திருப்பதியாயிருப்பதுடன் பிற்காலத்தில் பௌத்தமதம் விஷ்ணுமதம், சைவமதம் ஆகிய மதங்களுக்கும் உறைவிடமாயிருந் திருக்கின்றன. இன்றும் பாழடைந்த பௌத்த ஆலயம், விஷ்ணு ஆலயம், சிவாலயங்களேயும் காணலாம். அத்துடன் புத்த சமயத்தை வாதில் வென்ற அகளங்க முனிவரின் திருவடிகளேக் கொண்ட ஒரு மண்டபமும் அவ்வூரை அழகு செய்கின்றது.

''காலேப் பொழுதும் மாலேப்பொழுதுங்
கல்விப் பொருளே செல்வப் பொருளாய்
மேலேக்குறு நற்குணநனேக் கருதி
மிகுமா தவமேபுரிவார் தமதூர்''
செய்யும் வினேயும்இரு ளுண்பதுவும்
தேனும் நறவும் ஊனுண் செயலும்
பொய்யும் களவும் தவிரப் பொய்தீர்
அறநூல் செய்வார் தமதூர்.''

எனக் கலிங்கத்துப் பரணி ஆசிரியர் ஜயங்கொண்டாரை உமதூர் யாது? என்று வினவினுர்க்குத்

தமது சமயக் கொள்கைகளையும் அவைகளை உடையாரையும் சிறப்பித்துக் கூறியதுபோல் இந்தத் திருப்பறம்பூர், கரந்தை கிராமங்களும் ஜைன சமயத்தவரே மிகுதியாக வாழும் ஓர் உயர்பதிகள். ஒரு காலத்தில் தமிழகமெங்கும் பரவி, நல்ல அறிஞர்கள் தோன்றிப் பல அற்புத கலைகளை வளர்த்து அறிவு விருந்தளித்த சமண சமயம் இன்று தமிழ் நாட்டில் சுமார் பதினைந்தாயிரம் மக்களைக் கொண்டதாக இருக்கிறது. திரும்பறம்பூரில் பூர்வகுடிகளாகவும், ஜைன சமயத்தில் சிறந்த குலதிலகர்களாவும் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகவும் விளங்கியவர்கள் சந்தணம் நயினர் என்ற பெரியாரின் வழி வந்தவர்களாவார்கள். இவர்களைச் சந்தணம் வமிஸத்தார் என்றே இன்றும் அழைப்பதுண்டு. இத்தகைய சிறப்பு வாய்ந்த சந்தணம் நயினர் பரம்பரையில் உதித்தவர் ஸ்ரீ குணபால நயினர் என்பவர். அவருக்கும் ஸ்ரீமதி குழந்தை அம்மாளுக்கும், சார்வரி வருஷம் ஆடி மாதம் (1900 ஜுலை) நமது ஸ்ரீபால் புத்திரராகப் பிறந்தார். இவர் பிறந்த நான்காம் நாளே அன்னையார் இறந்து விட்டார்கள். ஆகவே இவரை இவர் பாட்டியார் ஸ்ரீமதி இரத்தின அம்மாள் அவர்கள் எடுத்து வளர்த்து வந்தார்கள்.

ஸ்ரீபால் அவர்கள் தாயார் குழந்தை அம்மாள் மிகவும் பொறுமையுள்ளவர்கள். கணவரின் மனங் கோணாது நடந்து கொள்ளும் மாண்புடையவர்கள். கூர்மையான அறிவுள்ளவராகவும் விளங்கினார்கள். அதற்கேற்ப அந்தக் குடும்பத்தைத் திறம்பட நடத்தியவர்கள். தந்தையும் அப்படியே. தந்தை அறிவு மகனறிவு என்றபடி ஸ்ரீபால் விளங்கினார்.

இவருக்கு 5 வயது நிரம்பப் பெற்றதும் பள்ளி வைத்தல் முதலிய சிறப்புக்கள் நடந்தேறின. கிராமப் பள்ளிக்கூடத்தில் ஒரு வருடம் வாசித்தார். இவர் தாயாருடன் பிறந்த சகோதரர்கள் இருவர். அப்பாண்டை நயினர். மற்றவர் ஜினச்சந்திர நயினர். திரு அப்பாண்டை நயினர், என்பவர்

காஞ்சீபுரத்தில் நெல் மண்டியும் ஜவுளி வியாபாரமும் செய்து கொண்டிருந்தார். அவர் ஸ்ரீபால் அவர்களை எட்டாவது வயதில் காஞ்சீபுரத்திற்கு அழைத்துக் கொண்டுபோய் அங்குள்ள முனிசிபல் பள்ளியில் சேர்த்தார். பின்னர் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் நம் ஸ்ரீபால் அவர்கள் சேர்ந்து வாசித்து வந்தார், 1919-ல் உடல் நலம் சரியில்லாமையால் பள்ளியை விட்டு விட்டு ஊருக்குச் சென்றூர். அங்கு சென்றதும் கிராம சேவையில் ஈடுபட்டார். அவ்வூரில் உயர்திரு வஜ்ஜிரபாகு நயினூர் என்பவர் துறவு பூண்டு வடநாடு சென்றிருந்தார். அவருடைய தூயத் துறவைப் பலரும் பாராட்டினர். என்வே அப்பெரியாரின் நினைவாக அவ்வூர் கோயிலில் அவர் பெயராகிய தருமசாகர சுவாமிகள் என்னும் பெயராலேயே அவ்வூர் கோயிலில் புத்தக நிலையம் ஒன்றை நிறுவினூர். வாசகசாலையும் ஒன்று அமைத்தார். காஞ்சீபுரம், உயர்திரு. அனந்தநாத நயினூர் அவர்கள் திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன தர்மமும் என எழுதிய ஆராய்ச்சி நூலுக்கு இந்நூல் நிலையம் எவ்வளவு உதவியாயிருந்த தென்பதை அந்நூலின் முகவுரையில் ஆசிரியர் எழுதியுள்ளார். சமய சம்பந்தமான நூல்களுடன் அரசியல் சம்பந்தமான அரிய பெரிய புத்தகங்களையும் வாங்கி வைத்துப் பலரையும் படிக்கும்படித் தூண்டி வந்தார். சுதேசமித்திரன், நவ சக்தி, ஆனந்த போதினி முதலிய பத்திரிகைகளையும் அப்புத்தக சாலைக்கு வரவழைத்தார். இவருக்குத் தமிழில் நல்ல ஆர்வமும் அதற்கேற்ற அறிவும் இருந்தமையால் அவ்வூரில், தொல்காப்பியம், நன்னூல், சீவகசிந்தாமணி, சூளாமணி, முதலிய நூல்களில் நல்ல பயிற்சி யுள்ளவரும் தமிழ் அறிஞருமாக விளங்கிய நல்ல அக்ஸ்தியப்ப நயினூர் அவர்களிடம் சூடாமணி நிகண்டு, நாலடியார், திருக்குறள் முதலிய நூல்களை நன்கு பயின்று வந்தார். பின்னர் அவரிடம் சீவக சிந்தாமணியும் பாடம் கேட்டார். 1919-ல் அதாவது அவர் தம்பத்தொன்பதாம் வயதில் திருமணம் நடந்தேறியது. இவர் மனைவி

யார் மாணிக்கம்மாள் என்பவர். இவர் திருமணம் நடந்த பின்னரும் குடும்பக் கவலையின்றி பொது நலச் சேவையிலேயே ஈடுபட்டிருந்தார். இவருக்கு ஒரே ஒரு பெண் குழந்தைதான் உண்டு.

சமயப் பிரசாரம்

நாம் முன்னர் கூறிய கரந்தை கிராமத்தில் வருடாவருடம் மாசி மாதத்தில் அவ்வூர் ஸ்ரீ ஜிநாலயத்தில் பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும். அக்காலங்களில் வெளியூர்களிலிருந்து ஏராளமாக ஜைனர்கள் வருவார்கள். அக்காலத்தில் அவ்விழாவிற்கு வந்துள்ள ஜைன பண்டிதர்கள், சாஸ்திரிகள் முதலியவர்களைக் கொண்டு தினந்தோறும் புத்தக சாலையில் சமயப் பிரசங்கங்கள் செய்ய ஏற்பாடு செய்வார். இவரும் ஜைன சமய முன்னேற்றத்தைப் பற்றியும் மற்ற சீர்திருத்தங்களைப் பற்றியும் பேசி மக்களை மகிழ்விப்பார். இவ்வாறு வருடா வருடம் நடந்துவந்ததால் தென்னிந்தியாவிலுள்ள ஜைன சமயத்தவரிடையே இவருக்குப் பேரும், புகழும் வளர ஆரம்பித்தன.

காங்கிரஸில் ஈடுபடுதல்

1922-ம் வருஷம் காங்கிரஸ் மும்முரமாக வேலை செய்து வந்தது. இவரும் காங்கிரஸில் சேர்ந்தார். பல இளைஞர்களையும் காங்கிரஸில் சேர்த்தார். 1922, 1923-ம் வருடங்களில் வேலூர் குப்புசாமி முதலியார் அவர்களையும் சிதம்பரம் நயினப் பிள்ளை அவர்களையும் தனது கிராமத்திற்கு வரவழைத்துக் காங்கிரஸ் பிரசாரம் செய்ய வைத்தார். தம் கிராமமட்டுமல்லாமல் பக்கத்துக் கிராமங்களிலும் அவர்களைக் கொண்டு காங்கிரஸ் பிரசாரம் செய்து வந்தார். இருமாத காலம் இவர்களைத் தமது ஆதரவிலேயே வைத்துக் காங்கிரஸைப் பலப்படுத்தி வந்தார். இச்செய்தி போலீஸாருக்குத் தெரிய வந்தது. திடீரென ஒருநாள் கோடையிடி

திரு குப்புசாமி முதலியாரைக் கைது செய்து கொண்டு போய் விட்டார்கள். அடுத்தபடிதான் திரு நயினப் பிள்ளையை வரவழைத்தது. அவர் வந்த பத்துப் பதினைந்து நாட்களுக்கெல்லாம் அவரையும் கைது செய்து கொண்டு போய்விட்டார்கள். இவ்வாறு ஸ்ரீபால் காங்கிரஸில் ஈடுபட்டு நல்ல சேவை செய்தார், மகாத்மா காந்தியடிகளைச் சிறையிலிட்ட காலத்தில் ஸ்ரீபால் அவர்கள் மகாத்மாஜீ சிறை சென்ற தினத்தைக் கொண்டாடும் முறையில் மாதா மாதம் தன்னுடைய சகாக்களுடன் மகாத்மாவின் படத்தை ஊர்வலமாகக் கொண்டுவர ஆரம்பித்தார். இச்செய்தியும் போலீசாருக்கு எட்டியது. தனது சகாக்களான, மே. இராமசாமி நயினார், தேவபால நயினார், துரைசாமி நயினார், சந்தண கீர்த்தி நயினார், சாந்தி நயினார் அ. செல்வராசு நயினார், மற்றும் சில இளைஞர்களுடன் ஊர்வலம் நடத்த முடிவு செய்திருக்கையில் ஒருநாள் திடீரெனப் போலீஸ் சப்இன்ஸ்பெக்டரும் சில கான்ஸ்டேபிள்களும் புத்தகசாலைக்கு வந்தார்கள். அவர்கள் ஸ்ரீபால் அவர்களை அழைத்து. "இன்று மகாத்மாவின் ஊர்வலம் நடத்தக் கூடாது" என்று சொன்னார்." உத்தரவு பிறப்பித்திருக்கிறதா? என்றார் ஸ்ரீபால். ஏன்நான் சொன்னால் உத்தரவு அல்லவா என்றார் அவர். இல்லை! ஊர்வலம் நடத்துவதில் தவறில்லை என்பதாக நேற்று வந்த சுதேசமித்திரன் பத்திரிகையில் பாட்னாஹைகோர்ட் ஜட்ஜ் பி. ஆர். தாஸ் அவர்கள் தீர்ப்புக் கூறிய செய்தி வந்திருக்கிறதே! தாங்கள் எந்தச் சட்டத்தின் கீழ் உத்தரவு இடுகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன் என்றார். சப் இன்ஸ்பெக்டர் ஓர் இளைஞர். புன்சிரிப்புடன், "சரி; நீர் கிராம முனிசீப் விட்டண்டை வாருங்கள்" என்றார் அவர். "தாங்கள் போங்கள், பத்து நிமிடத்தில் வருகிறேன்" என்றார் ஸ்ரீபால். போலீஸார் சென்று விட்டார்கள். உடனே ஸ்ரீபால் தனது சகாக்களை அவசரமாக வரும்படி ஆள் அனுப்பினார். அனைவரும் வந்தனர். மேளக்காரன் எங்கே என்றார்,

அவர்களைப் போலீஸார் தடை செய்து விட்டனர் என்றார்கள். உடனே ஸ்ரீபால் மிருதங்கம் எடுத்துக் கொண்டார், மற்றொருவர் ஹார்மோனியத்தை வாசிக்க ஆரம்பித்தார், மகாத்மா படத்துடன் ஊர் வலம் புறப்பட்டனர். நேரே கிராம முனிசிப் வீடு நோக்கி ஊர்வலம் சென்றது. அன்று அதிக கூட்டம் இல்லை. போலீஸார் வந்திருப்பதால் கிராம ஜனங் கள் கலந்து கொள்ளவில்லை. ஸ்ரீபால் அவர்களும் அவருடைய 10 சகாக்களுமே சென்றனர். கிராம முனிசிப் வீடு வந்தது. சப் இன்ஸ்பெக்டர் ஊர்வலம் செல்லக் கூடாது என்று தடுத்தார். உடனே ஸ்ரீபால் நடுத்தெருவிலே உட்கார்ந்து கொண்டு மிருதங்கம் வாசித்தார். மற்றவர்களும் அப்படியே உட்கார்ந்து விட்டனர். சுமார் ½ மணி நேரமாகப் போலீஸார் தடுத்துக் கொண்டிருந்தனர். இவர்களும் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தனர். கடைசியாக இன்ஸ் பெக்டர் ஒரு ரிபோர்ட் எழுதிக் கொண்டு போய் விட்டார்கள். இவர்கள் ஊர்வலத்தை வெற்றிகர மாக நடத்தினர். இவ்வாறு ஸ்ரீபால் அவர்கள் காங்கிரஸ் பிரசாரமும் சமயப் பணியும், கிராம சேவையும் ஆற்றி வந்தார்.

தருமசீலனில் தொண்டு

1923-ம் ஆண்டில் சென்னையிலிருந்து 'தரும சீலன்' என்னும் சமயப் பத்திரிகை ஒன்று வெளி வந்தது. அதன் உரிமையாளர் 'உயர்திரு ஆதி நயினார்' அவர்கள். சென்னையில் வாழ்ந்து வந்த திரு ஆதி நயினார் ஜைன சமயத்தவருள் சிறந்த வியாபாரியாக விளங்கி வந்தார். அவர் நமது ஸ்ரீபால் அவர்களின் ஒன்றுவிட்ட பெரிய தந்தை யாவர். தருமசீலன் பத்திரிகையை கவனிக்க விய லாது போகவே செம்பூர் வித்துவான் ஆறுமுகஞ் சேர்வை அவர்களை ஆசிரியராக அமைத்து நடத்தி வந்தார். அது சமயம் தருமசீலன் வாழ்த்து என் னும் தலைப்பில் நமது ஸ்ரீபால் அழகிய பாக்களைப் பாடி அனுப்பியிருந்தார். அது தரும சீலனில்

வெளியாயிற்று. அப்பாட்டின் பொருளமைப்பும் கருத்துக்களும் படிப்போர் உள்ளத்தைக் கவர்வன வாக இருந்தன. வித்துவான் சேர்வை அவர்களும் அவ்வாழ்த்துக் கும்மியைப் பாராட்டினர். அது சமயம் திரு சேர்வை அவர்களுக்குத் துணைசெய்ய அலுவலகத்தில் ஒருவர் தேவையாக இருந்தது. ஆகவே திரு சேர்வை அவர்களும் திரு ஆதி நயினர் அவர்களும் நம் ஸ்ரீபால் அவர்களின் அறிவையும் பொதுப் பணியிலுள்ள ஆர்வத்தையும் அறிவார் களாகையால் அவரே தகுதி வாய்ந்தவரென அறிந்து நம் ஸ்ரீபால் அவர்களைச் சென்னைக்கு அழைத்தார் கள். அவரும் ஆர்வத்தோடு சென்று தருமசீலன் அலுவலகத்தில் சேர்ந்து திரு வித்வான் ஆறுமுகஞ் சேர்வை அவர்களுக்குப் பெருந்துணையாக இருந்து தருமசீலனைச் சிறப்பாக நடத்தி வந்தார். ஓய்வு நேரங்களில் ஸ்ரீபால் அவர்கள் சீவகசிந்தாமணி, நாலடியார், திருக்குறள் முதலிய நூல்களைப் பாடங் கேட்டு வந்தார். இவ்வாறு சென்னையில் இரண்டு வருட காலம் இருந்தார். பின்னர் தமது சொந்த குடும்ப சம்மந்தமாக ஊருக்குச் சென்றார்.

சீவகசிந்தாமணிச் சொற்பொழிவு

திருப்பறம்பூருக்கு இரண்டு மைல் தூரத்தில் சித்தாத்தூர் என்ற கிராமம் உள்ளது. அங்கு ஜைன ரல்லாதாரே அதிகம். வருடா வருடம் அவ்வூரில் பாரத பிரசங்கம் நடைபெறும். அந்தப் பாரத பிரசங்கத்தைக் கேட்க சுற்று வட்டாரத்து கிராமங் களிலிருந்தும் பலர் வருவார்கள். அது போன்றே நமது ஸ்ரீபாலும், திருப்பறம்பூர் திரு அப்பாவு ஆச் சாரி (கருமார்) என்பவரும் அப்பிரசங்கத்திற்குச் சென்றார்கள். திரு அப்பாவு ஆச்சாரி அவர்களுக் கும் தமிழில் நல்ல பயிற்சியுண்டு. அவரும் ஸ்ரீநல்ல அகஸ்தியப்பநயினர் அவர்களிடமும், ஸ்ரீ.ச. கிருஷ்ண சாமி நயினர் என்ற மற்றொரு தமிழ் அறிஞரிடமும் சீவகசிந்தாமணி பாடங் கேட்டவர். அவர் எப் பொழுதும் சீவகசிந்தாமணியைக் கையிலேயே

வைத்துக் கொண்டிருப்பார். ஆகவே பாரதப் பிரசங்கத்திற்கு இருவரும் போகவர இருந்தார்கள். இவ்வாறு ஒருவாரம் நடந்தது. நமது ஸ்ரீபால் அவர்களுக்கு ஓர் உணர்ச்சி தோன்றிற்று. இந்த பாரத பிரசங்கத்தைப் போல் நாம் கற்றுள்ள சீவகசிந்தாமணியை நமது கிராமத்தில் வாசித்து மக்களுக்குச் சமய உணர்ச்சியையும், தமிழின்பத்தையும் ஏன் ஊட்டக் கூடாது என்று எண்ணினர். அது நாளுக்கு நாள் உள்ளத்தே வேரூன்றியது.

'' எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின்.''

என்ற திருவள்ளுவர் வாக்கின்படி தமது புத்தக நிலைய மண்டபத்தில் சீவகசிந்தாமணி வாசிப்பதென முடிவு செய்தார். தமது முதல் ஆசிரியராகிய திரு நல்ல அகஸ்தியப்ப நயினர் அவர்களைக் கலந்தார். அவரும் ஆர்வமோடு ஊக்கமளித்தார். சொற்பொழிவை நல்ல நாள் பார்த்து ஆரம்பித்தார். கரந்தை, திருப்பறம்பூர் கிராமப் பெரியோர்களும் பெண்மணிகளும் வந்திருந்தனர். முதல் நாள் கடவுள் வாழ்த்தை மட்டும் நடத்தினர். அவர் சொற்பொழிவு மக்களைக் குதூகலப் படுத்தியது. வந்திருந்த பலரும் மிக நன்ருக இருந்தது என்று பாராட்டிப் பேசினர்கள். இவ்வாறே தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தார். மக்கள் ஏராளமாகக் கூடிக் கேட்டனர். பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் மக்கள்வர ஆரம்பித்து விட்டனர். எனவே ஸ்ரீபால் அவர்களுக்குப் பொறுப்பு அதிகரித்து விட்டது. பகலெல்லாம் சிந்தாமணியை நன்கு ஆராய்ந்து கம்பராமாயணம், பாரதம், நாலடியார், திருக்குறள், மேரு மந்திர புராணம் போன்ற நூல்களினின்றும் மேற்கோள்களைக் கொடுத்து விளக்கமாகச் சொற்பொழிவாற்றி வந்தார். சொற்பொழிவு வரவர சிறப்புற்றும் தெளிவாகவும் பல நயங்களைக் கொண்டதாகவும் விளங்கிற்று. இவ்வாறு சீவகசிந்தாமணி சொற்பொழிவு சுமார் 6 அல்லது 7

மாதங்கள் நடந்து முடிந்தது. பின்னர் சூளாமணி, மேரு மந்தரபுராணம், ஆகிய காவியங்களையும் பிர சங்கம் செய்தார். இதற்குக் காரணம் சமய நூல் களிலுள்ள ஆர்வமும் அவைகளில் காணப்படும் அறிவியல் கருத்துக்களையும் நயங்களையும் பலரும் அறிந்து இன்புறவேண்டும் என்பதேயாம்.

''தாமின்புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தோர், எனும் பொய்யாமொழித்தேவர்.''

திருவாய்மொழிக் கிலக்காய் விளங்கினர் நமது ஸ்ரீபால்.

இவருடைய பிரசங்கத்தின் சிறப்பு ஜைன கிராமங்கள் எங்கும் பரவி விட்டது. பின்னர் மக்கள் வேண்டுகோளின்படி பக்ககதுக் கிராமமாகிய கரந்தை கிராமத்திலும், காஞ்சீபுரத்திலும் முறையே நான்கு நான்கு மாதங்கள் சீவகசிந்தாமணிப் பிர சங்சம் செய்தார். எவ்விடத்தும் அதற்காகப் பணம் வாங்குவதில்லை. அதனைத் தமது கடைமையாகக் கொண்டுஅவர்களைத் தொண்டு செய்து வந்தார். இதனால் ஸ்ரீபால் பெரும்புகழ் பெற்றார். காஞ்சீபுரத் தில் ஜைனரல்லாத அறிஞர்கள் பலர் வந்து பிரசங் கத்தைக் கேட்டனர். அவர்களும் சொற்பொழிவின் முடிவில் ஸ்ரீபால் அவர்களைப் பாராட்டிப் பேசியது குறிப்பிடத் தக்கது. இவருக்குக் கையேடு வாசித் தவர்கள் (கவியை வாசிப்பது) பெரும்பாலும் திரு. அ. பலதேவ நயினரும் திரு ச. சந்தண கீர்த்தி நயினருமாகிய இருவருமாவர்.

வனவாசம்

ஸ்ரீபால் அவர்களின் தந்தை ஏழைகளின் நண் பர் என்று முன்னரே கூறியுள்ளோம். அதன் காரணமாகவும் கட்சிகள் வழக்குகள் காரணமாக வும் ஏராளமான பணத்தைச் செலவழித்து வந் தார். நிலங்களை அடமானம் வைத்துக் கடனைத்

தீர்க்க முயன்றும் கடன் அதிகரித்து விட்டது. இந்த நிலையில் ஸ்ரீபால் அவர்களுக்கு குடும்ப விஷயமே ஒன்றுந் தெரியாது. 1925-ம் வருடம் வரை அவர் குடும்ப விவகாரத்திலேயே ஈடுபட வில்லை. பொதுநலத் தொண்டிலேயே இருந்து விட்டார். எனவே குடும்பத்தின் நிலையை அவர் அறியார். மேலும் திருமணம் நடந்த நாள் முதல் ஸ்ரீபால் தமது மாமியார் வீட்டிலேயே இருந்து விட்டார். அவர் மனைவிக்குச் சகோதர சகோதரிகள் இல்லாமையால் அந்தக் குடும்பத்திற்கும் உரிமை யாளராக அங்கேயே தங்கி விட்டார். தந்தைக்குக் கடன் கொடுத்தவர்கள் அவர் பேரில் வழக்குத் தொடுத்து விட்டார்கள். தந்தையாரின் கடன் நிலைமையை உணர்ந்தார் நம் ஸ்ரீபால். ஆயினும் இக்கடன் தொல்லையிலிருந்தும் மீள ஒரே ஒரு வழிதான் இருந்தது. அது ஸ்ரீபால் அவர்கள் மைனர் வழக்கு போடுவதாகும். பலரும் இதை ஸ்ரீபாலிடம் வற்புறுத்தினர். தந்தைக்கும் தூபம் போட்டனர். தந்தை உடன் பட்டார். ஆனால் தனையர் உடன்பட வில்லை. கிராமப் பொதுநலச் சேவையில் ஈடுபட்ட ஸ்ரீபால், காங்கிரஸில் சேர்ந்து கதர் உடை உடுத்திக் காங்கிரஸ் பிரசங்கம் செய்த ஸ்ரீபால், சிந்தாமணிப் போன்ற அரும்பெருங் காவி யங்களைப் பலருக்கும் எடுத்து உபதேசித்த ஸ்ரீபால், எவ்வாறு கடன் கொடுத்தவர்களை வஞ்சிக்க இசை வார். ஒரு பக்கம் குடும்ப நிலையும், தந்தையின் பரிதாபக் காட்சியும், மறுபக்கம் பொதுநலச் சேவையும் அறிவுரைகளின் மாண்பும் நின்று அவ ரைப் பரிசோதித்தன. இருப்பினும் அவர் உள்ளம் தெளிந்தார். அறத்தின் வழி நின்றார். "கடன் காரரை மோசம் செய்ய என்னால் இயலாது. நான் மைனர் வழக்கும் போட இசைய மாட்டேன். தாங் களும் அந்த எண்ணத்தை விட்டு விடுங்கள். கடன் காரர்களுக்குப் போனது போக மீதி இருந்தால் அந்தச் சொத்தை வைத்துக் கொண்டு வறுமை வாழ்வு வாழ்வதே சிறப்புடையது. மைனர் வழக்குப் போடுவதுமூலம் பிறருடைய பழியையும் பாவத்தை

யும் சுமந்து கொண்டு வாழும்வாழ்க்கையை யான் விரும்பவில்லை.'' என்று கூறி நம் ஸ்ரீபால் மைனர் வழக்குப் போட மறுத்து விட்டார். உடனே தந்தைக்குக் கோபம் வந்துவிட்டது. பலவாறுகக் கடிந்து பேச ஆரம்பித்தார். இருவருக்கும் வாக்குவாதம் பலமாக நிகழ்ந்தது. கடைசியாக உங்கள் சொத்தும் வேண்டாம் வேறு எந்த சொத்தும் வேண்டாம். நான் தனியாகவே சம்பாதித்து வாழ்க்கை நடத்துகிறேன் என்று கூறிவிட்டு வேகமாக வீட்டை விட்டு வெளியே சென்று விட்டார். காலை 8 மணிக்குச் சென்றவர் 12 மணி வரையும் காணும், மாலையும் வரவில்லை. மறுநாள் கிராமமே துக்கத்தில் ஆழ்ந்தது. ஸ்ரீபால் அவர்களின் மனைவியார், மாமியார், மற்ற பந்துக்கள் அனைவரும் புலம்ப ஆரம்பித்து விட்டனர். ஒரு வாரம் வரை எங்கும் தேடினர்கள். ஆள் அகப்படவில்லை. இவ்வாறு தேடி வருகையில் ஒருநாள் காலை ஸ்ரீபால் அவர்களின் மாமிஅவர்களும், மாமியாரின் ஒன்றுவிட்ட தம்பி திரு ஜீவேந்திர நயினரும் செங்கற்பட்டு ரயில்வே ஸ்டேஷனில் ஸ்ரீபால் அவர்களைப் பார்த்து விட்டார்கள். அழுதார்கள். ஸ்ரீபால் அவர்களைத் தேற்றி ஊருக்கு போகும்படியும் தான்ஒரு வேலைபார்த்துக்கொண்டு வருவதாகவும் கூறினர். அவர்கள் கேட்கவில்லை. எந்த வேலையும் வேண்டாம். வீட்டில் இருந்தால் போதும்! என்று வற்புறுத்தி அழைத்தார்கள். இதனல் ஸ்டேஷனில் கூட்டம் கூட ஆரம்பித்து விட்டது. அதற்காக அஞ்சி அவர்களுடன் காஞ்சிபுரம் சென்ருர். அங்கு ஒருவாரம் தங்கியிருந்தார். அதற்குள் தந்தையும் தமது எண்ணத்தைக் கைவிட்டுவிட்டார்.

பள்ளி ஆசிரியர்.

அச்சமயம் திருப்பறம்பூர் கிராமத்திற்கு அடுத்த நெல்லிக் கிராமத்தில் பஞ்சாயத்து போர்டு பாடசாலைக்கு உபாத்தியாயர் தேவை என்ற செய்தி அவருக்குத் தெரிந்தது. உடனே கலெக்டருக்கு மனுப் போட்டார். அழைப்புவந்தது, சர்டிபிகேட் முதலி

யவைகளைப் பரிசைஷ செய்து ஆர்டர் அனுப்புவதாகக் கலெக்டர் உறுதி கூறினார். ஒரு வாரத்திற்குள் உத்திரவு வந்து விட்டது. உபாத்தியாயராக நெல்லிக் கிராமத்தில் வேலை பார்த்து வந்தார். ஒரு வருடக் காலம் தமது கடைமையைச் சரிவரச் செய்தார். மாணவர்கள் உபாத்தியாயரிடத்தில் பெரும் பாசம் கொண்டனர். அவ்வளவு அன்பாகவும், அக்கறையாகவும் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து வந்தார் அவர். அதனால் அந்தக் கிராமமே அவரைப் புகழ ஆரம்பித்து விட்டது. இவ்வாறு 1925 ஜுலை 8 தேதி முதல் 1927 நவம்பர் மாதம் வரை உபாத்தியாயராக இருந்தார். அந்தத் தாலுக்காவில் உபாத்தியாயரின் மாதாந்தரக் கூட்டங்கள் மாதம் மாதம் கடைசிசனிக்கிழமை தோறும் நடைபெறும். அக் கூட்டம் பெரும்பாலும் திருப்பறம்பூர் போர்டு பள்ளியில் கூடுவது வழக்கம். அது நம் ஸ்ரீபால் அவர்கள் பிறந்த கிராமமாகையால் அவர் அம்மாதாந்தர கூட்டங்களுக்கு வருகின்ற உபாத்தியாயர்களுக்கு சிற்றுண்டி, மோர் முதலியவைகளைத் தந்து உபசரிப்பார். கூட்டந்தோறும் சொற்பொழிவு நடைபெறும். நம் ஸ்ரீபால் அதில் பங்கு எடுத்துக் கொள்வார். அதனால் உபாத்தியாயர்களிடையே அவருக்கு பெரு மதிப்பு ஏற்பட்டது. இதற்கிடையில் 1925–ம் ஆண்டில் பஞ்சாயத்து ரிஜிஸ்டிரார் ஜெனரல் திரு என். கோபால் சாமி அய்யங்கார் அவர்கள் (நமது மத்திய அரசாங்கத்தில் ரயில்வே மந்திரியாக பணியாற்றியவர்) பஞ்சாயத்து போர்டு நியமிக்கும் பொருட்டு திருப்பறம்பூருக்கு விஜயம் செய்யும் அவர் வருகையை முன்னதாகவே அறிந்த ஸ்ரீபால் ஒரு வரவேற்புப் பத்திரம் தயார் செய்தார். அதில் தருமசாகர சுவாமிகள் புத்தக நிலையத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். திரு கோபால் சாமி அய்யங்கார் அவ்வூருக்கு விஜயம் செய்தார். நம் ஸ்ரீபால் தாம் தயார் செய்து வைத்திருந்த வராவற்புப் பத்திரத்தை அவருக்கு வாசித்தளித்தார். திரு கோபால் சாமி ஐயங்கார் ஆச்சரியம் அடைந்து விட்டார். அவர் புத்தகசாலையைப் பார்க்கவேண்டுமென விரும்

பிக் கோயிலுக்கு வந்து பார்வையிட்டார். பின்னர் அவர் வரவேற்புப் பத்திரத்திற்குப் பதில் அளிக்கையில், "இதுவரை நான் பல கிராமங்கள் சுற்றியுள்ளேன். இம்மாதிரி ஒரு கிராமத்தில் வரவேற்புப் பத்திரம் அளித்ததையும், தனியாகப் புத்தக நிலையம் வைத்து நடத்துவதையும் நான் பார்த்ததேயில்லை. மேலும் வரவேற்புப் பத்திரத்தில் பராந்தகனது கல்வெட்டினின்றும் பஞ்சாயத்துப் போர்டுகளின் சிறப்பை எடுத்துக் காட்டியதை இதுவரை எந்த நகர வரவேற்புப் பத்திரங்களிலும் கண்டதில்லை. இச் சிறிய கிராமத்தில் நடைபெறும் இந்தக் காட்சியைக் கண்டால், இங்கே நல்ல அறிஞர்கள் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது." என்று புகழ்ந்தார். அந்தப் புத்தக நிலையத்தின் பார்வையாளர் புத்தகத்திலும் தமது கருத்துக்களை அழகாக எழுதி அந்நிலையத்திற்கு ரூபாய் 250 அளிக்கும்படி தாலுக்கா போர்டுக்கு உத்தரவு போட்டு விட்டார்.

ஸ்ரீகம்பீர விஜயாஜி முனிவரின் நல்வரவு

குஜராத்திலுள்ள பாலிடானா என்னும் ஜைனத் திருப்பதியினின்றும் ஸ்ரீகம்பீர விஜயாஜி என்னும் ஒரு ஜைன முனிவர் சென்னைக்குப் பிரயாணமானார். ஜைன முனிவர்கள் வண்டிகளிலோ, ரெயில், கார் முதலியவைகளிலோ பிரயாணம் செய்யமாட்டார்கள். அவர்கள் எங்குச் சென்றாலும் கால்நடையாகவே செல்வார்கள். எனவே ஸ்ரீகம்பீர விஜயாஜி முனிவர் தன் நான்கு சீடர்களுடன் தினந்தோறும் பத்து மைல் வீதம் நடந்து 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை வந்து சேர்ந்தார். சென்னையில் வடநாட்டு, தென்னாட்டு ஜைனப் பெருமக்கள் சுவாமிகளைச் சிறப்பாக வரவேற்றுத் தங்கள் அன்பையும், பக்தியையும் காட்டினர். சுவாமிகள் குஜராத்தி மொழியிலும் வடமொழியிலும் நல்ல புலமை பெற்றவர்கள். எனவே சுவாமிகள் சென்னை சௌக்கார்ப்பேட்டையிலுள்ள ஜைன கோயிலில் தினந்தோறும் அரிய சொற்பொழிவு ஆற்றி வந்தார். அவருடைய சொற்பொழிவைக்

கேட்க சென்னையிலுள்ள ஜைனர்களேயன்றி ஏனை யோரும் வந்து கூடினர். சுவாமிகள் தமது சொற் பொழிவில் ஜைன தர்மத்தின் அடிப்படையான அஹிம்சையில் சகோதர உணர்ச்சியும் தன்னல மின்மையும், உயிர்கள்பால் அன்பும் அருளும் அடங்கியுள்ளன என்றும், ஆகவே ஒவ்வொருவரும் அஹிம்சா தர்மத்தை மேற்கொள்ள வேண்டும் என வும் வற்புறுத்தி வந்தார். நமது தேசத்தில் மதத் தின் பெயராலும் தெய்வத்தின் பெயராலும் உயிர்க் கொலை நடைபெறுவது வருந்தத்தக்க தென்றும், அஹிம்சா தர்மத்திற்கு முரணான செயல் என்றும் பல ஆதாரங்களுடன் விளக்கிப் பேசி, இத்தகைய உயிர்ப் பலியை அறவே அகற்றி மக்கள் அறி வுடையவர்களாகவும் ஒழுக்க மேம்பாடுடையவர்க ளாகவும் வாழ ஜைனப் பெருமக்கள், ஒரு பிரசார சபை ஏற்படுத்த வேண்டுமென வற்புறுத்தினர்.

ஜீவரக்ஷக பிரசார சபையின் தோற்றம்

சுவாமிகளின் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்த வடநாட்டு ஜைனப் பெருமக்கள் "தென் னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபை" என்ற ஒரு சபையை நிறுவ முன் வந்தனர். சுமார் இருபது முதல் இருபத்தைந்தாயிரம் ரூபாய்கள் வரை சபை நிறுவு வதற்காக சுவாமிகளிடம் கொடுத்தனர். சுவாமி கள் மகிழ்வடைந்தார். 1926 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19-ம் தேதி, அகில இந்திய காங்கிரஸ் கமிட் டித் தலைவரும், பிரபல வழக்கறிஞருமான உயர்திரு எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் பீ.ஏ.,பீ.எல்., அவர்க ளால், "சென்னை தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபை" சுவாமிகளின் முன்னிலையில் சௌக்கார்ப் பேட்டையில் திறக்கப்பட்டது. சுவாமிகள் அனை வருக்கும் வாழ்த்துரை கூறினார். சென்னையிலுள்ள பெரியோர்கள் பலரும் இத்திறப்புவிழா நிகழ்ச்சி யில் கலந்துகொண்டனர். இச்சபை சென்னை சௌக் கார்ப்பேட்டை தங்கசாலை தெரு, 436 எண்ணுள்ள இல்லத்தில் நிறுவப்பெற்றது.

ஸ்ரீ கம்பீரவிஜயாஜி முனிவர் சென்னை தென்னிந்திய ஜீவரக்ஷகப் பிரசாரசபை அலுவலகத்தைத் திறந்து வைக்கும் காட்சி. —(18 ஆம் பக்கம் பார்க்கவும்.)

சென்னை தென்னிந்திய ஜீவரக்ஷகப் பிரசார சபை முதல் தலைவர் உயர்திரு. S. ஸ்ரீனிவாச அய்யங்கார் M. L. A. அவர்கள் சபைக்குவிஜயம் செய்தல். (கதர் குல்லாய் அணிந்திருப்பவர் தலைவர்)

உயர்திரு எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் பி.ஏ., பி.எல்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு நியமிக்கப் பெற்றது. சேட் மோகன் மல்ஜி சோர்டியா. 2. சேட்—லால்சந்த்ஜி டாடா. 3. சேட் அமொலக்சந்தஜி கேலடா. 4. சேட் கோமராஜ் படே சந்த்ஜி 5. சேட் சுக்லால்ஜி சம்தரியா. 6. மூக்சந்த்ஜி ஹன்ஸ்ராஜ். 7. ரிகப்தாஸ் ஜெயின். 8. பூர்ஜிபாய். 9. ரதன் சந்த்ஜி கபூர்சந்த்ஜீ, 10. கோபி கிருஷ்ண கோகுல்தாஸ், சேட். அமர்சந்த் சோபாசந்த்ஜீ, சேட் சம்பாலால்ஜீ,சேத்ஜேத்மல்ஜீ சுகன்ராஜ், ஷா. சிமன்லால்ஜி கொட்டாரி. ஷா ஜே. எம். ஷேட் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் நியமிக்கப் பட்டார்கள். ஸ்ரீ. ஷா, ஷாம்ஜி பாய், ஸ்ரீ ஷா, தேவ்ஸி மூல்சந்த்ஜி ஆகிய இருவரும் கௌரவ காரியதரிசிகளானார்கள். திரு இராமநாத அய்யர் என்பவரைப் பிரசாரகராகக் கொண்டு சபை தொடங்கிற்று. ஆறு மாதங்களாயின. ஆடி மாதம் பிறந்தது. அதாவது 1927 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் வாரத்திலிருந்து நான்கு வாரங்கள் சென்னைக்கு 25 மைல் தூரத்தில், நெல்லூர் போகும் சாலையிலுள்ள பெரியபாளையத்து எல்லையம்மனுக்கு விழா நடந்தது. ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் அவ்விழா நடப்பதுண்டு. அவ்விழாவில் ஆயிரக்கணக்கான ஆடு கோழிகள் பலியிடப்படும். ஆண்களும் பெண்களும் தங்கள் ஆடைகளைக் களைந்து விட்டு, வேப்பிலையைச் சுற்றிக் கொண்டு கோயிலை வலம் வருவார்கள். இக்கண் மூடி வழக்கங்களை மண்மூட வேண்டிச் சென்னை தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபையினர் சேவை செய்ய முற்பட்டனர். ஜூலை மாதம் முழுமையும் பெரியபாளையம் சென்று பணிபுரிவார்கள் என "சுதேசமித்திரன்" பத்திரிக்கையில் அறிக்கை வெளிவந்தது. இவ்வறிக்கையைக் கண்ணுற்ற நமது ஸ்ரீபால் வாளாயிருப்பரோ? எப்பொழுதும் பொது நலத் தொண்டிலேயே விருப்பங்கொண்டுள்ள எவருக்கும் இத்தகைய அறிக்கைகள் உணர்ச்சியூட்டும். எனவே, நம் ஸ்ரீபால், சென்னை ஜீவரக்ஷக

பிரசாரசபைச் செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதி ஞர். அக்கடிதத்தில்; தான் ஒரு போர்டு பள்ளி யாசிரியன் என்றும் தமக்கு அஹிம்சா தருமப் பிர சாரத்தில் கலந்து கொள்ள விருப்பம் இருப்பதாக வும், அனுமதி கிடைத்தால் சனி ஞாயிறுகளில் நடைபெறும் பெரியபாளையத்துப் பிரசாரத்தில் கலந்து தொண்டாற்ற வருவதாகவும் எழுதியிருந் தார். இக்கடிதத்தைக் கண்டதும் செயலாளர்கள் இருவரும் மகிழ்ச்சி அடைந்தனர். ஸ்ரீபால் ஒரு ஜைனராய் இருப்பதாலும் ஆசிரியராய் இருப்ப தாலும் தங்கள் பிரசாரத்திற்குத் தகுதியுடையவர் என்று அறிந்து, அவரைப் புறப்பட்டு வருமாறு கடிதம் எழுதினர்கள். ஸ்ரீபால் அவர்களும் 1927 ஆம் ஆண்டு ஜூலை (ஆடி) மாத முதல் சனிக்கிழமை சென்னை வந்து, ஜீவரக்ஷக பிரசார சபைக்குச் சென்றார்.

அங்கு அமர்ந்திருந்த செயலாளர் அவர்களிடம் தனக்கு வந்த கடிதத்தைக் காட்டினர். அதனைக் கண் டதும் ஸ்ரீபால் அவர்களை இரு செயலாளர்களும் அன் புடன் வரவேற்றனர். சிறிதுநேரம் உரையாடிய பின் னர், ஷா. தேவ்ஸிமூல்சந்த்ஜீ அவர்கள் ஸ்ரீபால் அவர் களைத் தன் இல்லத்திற்கே அழைத்துச் சென்று விருந்தளித்தார். சனிக்கிழமை மாலை இரண்டு மணிக்குப் பெரியபாளையம் புறப்பட்டார்கள். எல்லோரும் ஆரணி சென்றார்கள். ஆரணி பெரிய பாளையத்திற்கு மூன்று மைல் தூரத்திலுள்ள ஒரு பெரிய கிராமம். பெரியபாளையத்தில் பிரசார சபை முகாம் செய்ய வியலாமையால் ஆரணியி லேயே தனி வீடு ஒன்றை வாடகைக்குப் பெற்று அங்கு முகாம் செய்திருந்தார்கள். அன்று மாலை ஆரணியில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடாயிற்று. சபையினர் பஜனைக் குழுவுடனும் ஜீவகாருண்ய பாடல்களுடனும் ஊர்வலமாகச் சென்று, கூட்டம் ஏற்பாடு செய்துள்ள இடத்தைச் சேர்ந்தார்கள். அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தார் கள். சபையின் பிரசாரகர் திரு. இராமநாத அய்யர்

அவர்களும் சில தொண்டர்களும் சொற்பொழி வாற்றினார்கள். பின்னர் நம் ஸ்ரீபால் அவர்களைப் பேசுமாறு அழைத்தார்கள். ஸ்ரீபால் அவர்கள் கொல்லாமையின் மேன்மையையும், கொலையினால் வரும் கேட்டையும் விளக்கியதோடு; காளி, மாரி, பிடாரி போன்ற சிறுதெய்வங்கள் தோன்றிய வரலாறுகளையும், அவைகளுக்கு உயிர்ப்பலியிடும் வழக்கம் காட்டு மக்களிடமிருந்தே வந்ததென்றும், உயிர்ப் பலியிடுதல் தெய்வ சம்பந்தமும், மத சம்பந்தமும் அல்ல வென்றும் பல இலக்கிய ஆதாரங்களுடன் நகைச்சுவை ததும்ப விரிவுரை ஆற்றினார். ஸ்ரீபால் அவர்கள் பள்ளி ஆசிரியராக இருந்தமையாலும், சென்னையிலிருந்த செம்பூர் வித்துவான் திரு. ஆறுமுகம் சேர்வை அவர்களிடம் நாலடியார், திருக்குறள், சீவகசிந்தாமணிப் போன்ற நூல்களைப் பாடம் கேட்டமையாலும் அவருடைய சொற்பொழிவு சிறப்புற்று விளங்கிற்று. மக்களும் ஆர்வமுடன் அமைதியாகக் கேட்டனர். தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபை செயலாளர்களும் பொது மக்களும் அவருடைய சொற்பொழிவை மிகமிகப் பாராட்டினார்கள்.

பெரியபாளையத்தில் பிரசாரம்

அன்றிரவு ஏழு மணிக்கு அனைவரும் பெரிய பாளையம் சென்றனர். அங்கும் ஸ்ரீபால் அவர்கள் இரண்டு மூன்று இடங்களில் உயிர்ப்பலியைக் கண்டித்து உருக்கமாகவும், உணர்ச்சி ததும்பவும் பேசினார். அதனால் பெரும்பாலான மக்களுக்குப் புத்துணர்ச்சி உண்டாயிற்று. மறுநாள் ஞாயிறன்று சபையினர் சென்னை வந்து சேர்ந்தார்கள். அன்றே பெரியபாளையத்தம்மனை வேண்டி ஆடு கோழிகள் அழுவதாக, "இறைவியே எல்லம்மா" என்று தொடங்கும் பாடலை இயற்றிக் கொடுத்தார் நம் ஸ்ரீபால். அப்பாடல் மிகச் சிறந்த கருத்துடையதாய் இருந்தமையினால் அதனை அடுத்த வாரத்திற்குள் அச்சிட்டுப் பெரியபாளையத்தில் வழங்குவதென செயலாளர்கள் தீர்மானித்தனர்.

பின்னர் செயலாளர்கள் சபையின் நிருவாக உறுப்பினர்களை வரவழைத்து ஸ்ரீபால் அவர்களின் சேவையையும் உணர்ச்சியுள்ள சொற்பொழிவுகளையும் பாராட்டி அவரை அறிமுகப்படுத்திஞர்கள். நிருவாக உறுப்பினர்களும் செயலாளர்களும் மகிழ்ந்து பாராட்டி ஸ்ரீபால் அவர்களை ஊருக்கு வழியனுப்பிஞர்கள். அடுத்த வாரமும் வருமாறு கேட்டுக்கொண்டனர். இவ்வாறு அவர் நான்கு வாரங்கள் சபையாருடன் பெரியபாளையத்தில் பிரசாரம் செய்தார். ஒவ்வொரு வாரமும் புதுப்புதுக் கருத்துக்களை விளக்கிப் பேசியதால் ஸ்ரீபால் அவர்களைச் சபையிலேயே பிரசாரகராக அமர்த்திக்கொள்ள நிருவாக உறுப்பினர்களும் செயலாளர்களும் விரும்பினர். இவ்விருப்பத்தை நிறைவேற்றுமாறு கடைசி வாரத்தன்று ஸ்ரீபால் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். அவரும் இரண்டு மாதங்களில் தம் கருத்தை அறிவிப்பதாகக் கூறித் திருப்பறம்பூர் சென்றுவிட்டார்.

1927 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அகில இந்திய காங்கிரஸ் மகாசபை சென்னையில் நடத்த ஏற்பாடாகி யிருந்தது. இம்மகாசபையை முன்னின்று நடத்துபவர் இச்சபையின் தலைவராகிய திரு. எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் பீ.ஏ.,பீ.எல்., அவர்களாவர். இந்தியாவில் பல பாகங்களிருந்து வரும் காங்கிரஸ் தலைவர்களும் பொதுமக்களும் சபையின் தொண்டுகளை அறியும்படிச் செய்ய டிசம்பர் மாதத்திலும் ஜனவரியிலும் சிறந்த ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். அதஞல் செயலாளர்கள் இருவரும் ஸ்ரீபால் அவர்களை ஆசிரியர் தொழிலை இராஜிஞமா செய்து விட்டு சபையின் நிரந்தரப் பிரசாரகராக நவம்பர் மாதத்திலிருந்தே பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுதல் கடிதம் விடுத்திருந்தனர். இக்கடிதத்தைக் கண்டதும் ஸ்ரீபால் அவர்களுக்கு மகிழ்ச்சி பொங்கிற்று. தமது ஆசிரியத் தொழிலிலிருந்து விலகிவிட்டு 1927 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ந் தேதி முதல், சபையின் உதவிப் பிரசாரகர் பணியை ஏற்றுக் கொண்டார்.

பலிவிலக்குப் பிரசாரம்

ஜீவரக்ஷக சபையில் திரு சுந்தரம், திரு. ராதா, நாராயணன் மூவர் பாடகர்களாகவும், ஹார்மோனியம் தபேலா வாசிப்பவர்களாகவும் இருந்தனர். இவர்கள் மூவரும் நல்ல இசை ஞானம் படைத்தவர்கள். தினந்தோறும் காலையில் சென்னை நகரில் பஜனை ஊர்வலம் வருவதுடன் ஆங்காங்குப் பிரசாரகர்களால் ஜீவகாருண்யப் பிரசங்கமும் செய்வது வழக்கம். நமது ஸ்ரீபால் உதவிப் பிரசாரகராக வந்ததும் அவரும் இக்கோஷ்டியில் கலந்து கொண்டார். சபை புதியதாக ஆரம்பித்தமையால் ஜீவகாருண்ய பாடல்களும் மக்கள் மனத்தை வசீகரிக்கக்கூடிய விளம்பரத் தாள்களும் குறைவாக இருந்தன. எனவே, ஸ்ரீபால்அவர்கள் பஜனைகோஷ்டிக்காக ஜீவகாருண்ய சம்பந்தமான பல பாடல்களும், உயிர்ப்பலியை அகற்றும் அறவுரைகளும் கொண்ட பல விளம்பரங்களையும் தயாரித்தார். அவை மட்டுமன்றி ஆடு, கோழி, பன்றி, எருமைக்கடா முதலியவைகளின் தலைகளைப்போல் உருவங்கள் செய்து அவைகளை சிறு பிள்ளைகள் தலையில் அணிவித்துப் பஜனையுடன் ஊர்வலமாக வரச் செய்தார். இதனால் ஜீவகாருண்ய பஜனை, ஊர்வலம் வந்தால் ஏராளமான மக்கள் தொடர்ந்து வர ஆரம்பித்தனர். இக்காட்சிக்கேற்ற வாறு நம் ஸ்ரீபால் மக்கள்மனத்தை உருக்கும் வகையில் அரும்பெரும் பாடல்களை இயற்றித் தந்தார். இப்பாடல்கள் மக்களுக்கு நல்லறிவைப் புகட்டியதுடன் ஊமை உயிர்களிடத்தில் இரக்கமும், தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடும் வழக்கம், மூடநம்பிக்கை என்பதையும் உணரச் செய்தன. பாட்டுக்களினாலேயே மக்கள் அன்பு நெறியை உணரலாயினர். இவ்வாறு இவர்பஜனைக் குழுவில் புதிய காட்சிகளையும், புதிய பாட்டுக்களையும் உண்டாக்கிச் சேர்த்தார்.

சென்னை மக்கள் ஜீவரக்ஷகப் பிரசார சபையின் பிரசாரத்தைத் தினந்தோறும் ஆவலாக எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டது. ஸ்ரீபால் அவர்களின் சொற்



ஷா. தேவ்ஸி மூல்சந்த்ஜி ஷா. ஷாம்ஜிபாய்,
கௌரவ செயலாளர்கள்.

ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால்

பொழிவு உயிர்ச்சக்தி பெற்று விளங்கிற்று. மக்களைப் பீடித்துள்ள அறியாமையை அகற்றவேண்டுமெனும் உணர்ச்சி அவர் உள்ளத்தே பதிந்து விட்டமையால், அவருடைய சொற்பொழிவு அறியாமையில் ஊறிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பிற்று. அதுமட்டு மன்று, ஒரு புதிய அறிவையும் ஒரு புதிய நாகரிகத் தையும், ஒரு புதிய சமுதாய சகாப்தத்தையும் உண் டாக்கக் கூடியதாக, அவர்கள் சொற்பொழிவு அமைந் திருந்தது. இவர் வெளியிடும் சிறுவெளியிடு கள் அறிவின் சின்னங்களாக விளங்கின. பல் வேறு படங்களுடன் பல்வேறு கருத்துக்கள் நிறைந்த சிறுவெளியிடுகளை வழங்கி வந்தார். இவைகள் யாவும் தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலியிடும் வழக்கத்தை அகற்றுவனவாகவே இருந்தன. மக்க ளிடையே கொல்லாமையும் புலால் உண்ணாமையும் வேரூன்ற வேண்டுமாயின், தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலியிடும் மூட நம்பிக்கை அகல வேண்டும் என்பதை அறிந்தே, தெய்வ சம்பந்தமான உயிர்க் கொலையை அகற்றுவதில் தீவிரமாக முயன்றார்.

வாழ்த்துரைகள்

இவ்வாறு சபையின் சேவை ஒரு புதிய முறை யில் சிறப்புடன் விளங்கிக் கொண்டிருக்கையில், சபையைத் தோற்றுவித்த ஸ்ரீகம்பீர விஜயாஜீ முனிவர் பெங்களூரிலிருந்து சென்னைக்கு வந்தார். அவரைத் தரிசிக்க ஸ்ரீபாலும், செயலாளர்களும் சென்றனர். மூவரும் சுவாமியை வணங்கிய பின்னர். செயலாளர்கள் இருவரும் ஸ்ரீபால் அவர்கள் தமது சபையின் பிரசாரகர் என்றும், அவருடைய சேவை நமது சபைக்குச் சிறப்பை அளித்துள்ள தென்றும் அவர் தமிழ்நாட்டு ஜைன சமயத்தைச் சார்ந்தவரென்றும், அறிமுகப்படுத்தினார்கள்.

சுவாமிகள் அன்புடனும் ஆர்வமுடனும் ஸ்ரீபால் அவர்களை வாழ்த்தி, ஊக்கமாகச் சேவை செய்து அஹிம்ஸா தர்மத்தை நாடெங்கும் பரப்ப வேண்டும்

என்று கூறினர். சுவாமிகளின் வாழ்த்தினை ஏற்று, அவ்வாறே பணிபுரிவதாக வாக்குறுதி யளித்தார் நம் ஸ்ரீபால்.

மாநாடு

1927ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அகில இந்திய காங்கிரஸ் மகாசபை நடந்தேறியபின் இச் சபையின் ஆதரவில் 1928ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பண்டித மாளவியா அவர்கள் தலைமை யில் அகில இந்திய ஜீவரக்ஷக பிரசார சபை மா நாடும் நடந்தது. அம்மாநாட்டில் இந்தியாவின் பலப் பகுதிகளிலிருந்தும் வந்த ஜீவகாருண்ய சபைப் பிரதி நிதிகளும் காங்கிரஸ் மகாசபை பெரியோர்களும் கலந்து கொண்டனர். சிறப்பாக உயர்திரு டீ. எல். வாஸ்வானி அவர்களும் மற்றும் பல அறிஞர்களும் அகிம்சையின் பெருமையைப் பற்றி பேசினர்கள். இதனுல் சபையின் சேவை பலருக்கும் அறிமுக மாயிற்று. அம்மாநாட்டில் இடைவிடாது சேவை செய்து வந்த ஸ்ரீபால் அவர்களை, சபையின் தலைவர் உயர்திரு எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் மிகச் சிறப்பாக பாராட்டிப் பேசினர்கள்.

வெளியூர் பிரசாரங்கள்

தமிழ் நாட்டில் உயிர்ப்பலியிடும் கோயில்கள் உள்ள நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் சென்று பிரசாரம் செய்ய சபை முற்பட்டது. ஆதலால் ஸ்ரீபால் பஜனை குழுக்களுடன் வெளியூர்களுக்குப் புறப்பட்டார். கிராம தேவதைகளின் பெயரால் உயிர்ப்பலியிடுவதை ஒரு தெய்வவழிபாடாக மக்கள் கருதி யிருந்தமையால், இந்த ஜீவகாருண்ய பிரசா ரத்தைப் பெரும்பாலான மக்கள் எதிர்த்தனர். சில இடங்களில் பலத்த எதிர்ப்பும் கலகங்களும் கூட ஏற்பட்டன. நம் ஸ்ரீபால் அவர்கள் இவைகளை யெல் லாம் பொறுமையாகச் சமாளித்துக்கொண்டு மக் களுக்கு நல்லறிவு புகட்டி வந்தார். சிதம்பரம், தஞ்சை,

திருச்சிராப்பள்ளி, மதுரை, திண்டுக்கல் முதலிய நகரங்களுக்குச் சென்று பிரசாரம் செய்தார்.

பெரியபாளையம்

1928ஆம் ஆண்டு ஆடி மாதம் வந்தது. பெரிய பாளையம் செல்ல வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அப்போது பெரியபாளையத்தில் முகாம் செய்ய இயலாமல் இருந்ததோடு பலமான எதிர்ப்பும் இருந்தது. எனவே அவ்வருடமும் ஆரணி யிலேயே முகாம் செய்ய வேண்டியதாயிற்று. அவ் வருடம் இவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களையும், சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களையும், ஸ்ரீமதி கமலாபாய் சடோ பாத்யாயா அவர்களையும் ஸ்ரீமதி ருக்குமணி லக்ஷ்மீபதி அவர்களையும் மற்றும் சில தொண்டர்களையும் அழைத் துச் சென்றார். ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமை களிலும் மேற்கண்ட பெரியார்களையும் அழைத்து வந்தார். இவ்வாறு பல பெரியோர்களின் தொடர்பு களை ஏற்படுத்திக் கொண்டார். பெரியபாளையத் திலுள்ள எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டி அவ்வூர் பிரமுகர்களையும் எதிர்ப்புக் குழுவிலுள்ள இரண் டொரு தலைவர்களையும் கண்டு பேசி வந்தார். அவர் கள் இவருடைய அன்பு கலந்த உரையாடலில் மூழ்கி னார்கள். பிரசாரத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய் வதாகவும் உறுதி கூறினார்கள். 1929ஆம் ஆண்டு பெரியபாளையப் பிரசாரத்திற்கு பெரியபாளையத் திலேயே முகாம் செய்தார். ஒரு தனி வீட்டை வாட கைக்கு எடுத்தார். இரண்டு சமையல்காரர்களைச் சென்னையிலிருந்து அழைத்துச் சென்றார். சுமார் 100 பேருக்கு விருந்தளிக்குமாறு சமையல் தயார் செய்யப்பட்டது. சென்னையிலிருந்து சுமார் 50 தொண்டர்களைப் பெரிபாளையம் அழைத்துச் சென் றார். பிரசாரம் எவ்வித எதிர்ப்பும் இன்றி நடந்தது. கிராமப் பெரியோர்களின் ஆதரவையும் போலீஸ் அதிகாரிகளின் ஆதரவையும் பெற்றார். தொண்டர் கள் 50 பேர் தவிர கிராமத்தில் உள்ள முக்கிய

பெரியோர்களையும் வரவழைத்து விருந்து செய்வித்தார். இவ்வாறு பலருடைய அன்பைப் பெற்று பெரியபாளையத்தில் ஆண்டுதோறும் வெற்றிகரமாகப் பிரசாரம் செய்து வந்தார்.

காங்கிரஸ் தொடர்பு

திரு ஸ்ரீபால் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே காங்கிரஸ் வாதியாகையால், சென்னையிலும் காங்கிரஸ் சம்பந்தமான இயக்கங்களில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மேலும் மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளை எங்கும் வற்புறுத்திப் பேசி வந்தார். அச்சமயம் சென்னை, கோவிந்தப்ப நாயக்கன் தெரு 180வது எண்ணுள்ள இல்லத்திலும், சுப்பிரமணிய முதலி தெரு 30-ம் எண்ணுள்ள இல்லத்திலும் காங்கிரஸ் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் தங்கியிருந்தனர். இவர்கள் கள்ளுக் கடைகளுக்கும் அயல்நாட்டு ஜவுளிக் கடைகளுக்கும் சென்று மறியல் செய்வார்கள். இவர்களுக்கு உணவு முதலிய உதவிகள் சௌக்கார் பேட்டை மார்வாரிகளாலும் குஜராத்திகளாலும் செய்யப்பட்டன. இத்தொண்டர்கள் போலீஸ் கண்காணிப்பில் இருந்தார்களாதலால், ஒவ்வொரு நாளும் இரவு மூன்று அல்லது நான்கு மணிக்கு இரகசியமாக ஸ்ரீபால் அவர்கள் இவர்களுக்கு உதவி செய்து வந்தார். அவை தவிர, மறியல் செய்யும்போது தடியடிபட்டுக் கிடக்கும் தொண்டர்களை வண்டிகளின்மூலம் தம்புச்செட்டி தெருவிலுள்ள பிரபல காங்கிரஸ்காரரான டாக்டர் யு. ராமாராவ் அவர்களின் மருத்துவ நிலையத்தில் சேர்க்கும் பணியையும் ஏற்று இவர் செய்து வந்தார். இவ்வாறு நடந்து வரும் நாட்களில் ஒரு நாள் காலை, கோவிந்தப்ப நாயக்கன் தெரு 180வது எண்ணுள்ள இல்லத்தில் உள்ள தொண்டர் படையைக் காணச் சென்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் அத்தொண்டர் படை சட்ட விரோதமான கூட்டம் என்று குற்றஞ்சாட்டப்பட்டு மொத்தமாக அவர்களைக் கைது செய்வதற்குப் போலீஸ் கமிஷ்னர் திரு. அனந்தாச்சாரி அவர்கள்

பெரியபாளையத்தில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களும் திருவாளர்கள் ரா. கண்ணன், ஆடலரசு, புத்தனேரி ரா. சுப்பிரமணியம் ஆகியவர்களும் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களும் பல தொண்டர்களும்.

திருவான்மியூரில் உயிர்ப்பலி நிறுத்திய காட்சி. நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர்களில் நடுவின்கண் அமர்ந்திருப்பவர் ஜீவபந்து ஸ்ரீபால். அவருக்கு இடது பக்கம் உள்ளவர் திரு. P.S. கிருஷ்ணசாமி அவர்கள்,

தமது போலீஸ் படைகளுடன் ஒரு லாரியில் வந்து அவ்வீட்டைச் சூழ்ந்து கொண்டார். அச்சமயம் தொண்டர் படையின் தலைவர் திரு. கணபதி ஐயர், காமாட்சியம்மாள், திரு. சர்மா முதலியோர்களுமாக சுமார் 45 தொண்டர்கள் கைது செய்யப்பட்டு போலீஸ் லாரியில் ஏற்றப்பட்டனர். அவர்களுடன் ஸ்ரீபால் அவர்களும் கைது செய்யப்பட்டார். இச் செய்தி சபைக்கு எட்டியது. திரு. ஸ்ரீபால் அவர்களை மீட்க சபையின் கௌரவ செயலாளர்கள் ஷா. ஷாம்ஜி பாய் அவர்களும் ஷா. தேவ்ஸி மூல்சந்த்ஜீ அவர்களும் போலீஸ் கமிஷனர் நிலயத்திற்கு வந்து முயற்சி செய்தார்கள். இவர் ஜீவரக்ஷகப் பிரசார சபை பிரசாரகரென்றும், தம் நண்பரைப் பார்க்கவே அந்த முகாமிற்கு வந்தாரென்றும் கூறி, ஜீவரக்ஷகப் பிரசார சபை ஆண்டு அறிக்கைகளைக் கொண்டு நிரூபித்த பின்னர் அன்று மாலை சுமார் 3 மணிக்கு இவரை விடுதலை செய்தார்கள்.

சுயமரியாதை இயக்கம்

அக்காலத்தில் பெரியார் ஈ. வெ. ரா அவர்களின் சுயமரியாதை இயக்கம் தீவிரமாக நடந்து வந்தது. சமயத்தின் பெயராலும் தெய்வத்தின் பெயராலும் மக்களிடையே பரவியுள்ள மூட நம்பிக்கைகளை அகற்றுவதாகிய அவ்வியக்கக் கொள்கைகள், ஸ்ரீபால் அவர்களின் பலி விலக்குச் சேவைக்குப் பெருந்துணையாயிருந்தன. எனவே இவர் பெரியார் ஈ. வெ. ரா அவர்களின் இயக்கத்தில் சேராவிடினும் அக் கொள்கையில் நம்பிக்கையும் ஆதரவுமுடையவராக விளங்கினர். அதனல் தமது ஊரிலுள்ள தர்மசாகர சுவாமிகள் நூல் நிலையத்திலிருந்து "தர்ம பரீக்ஷை" என்னும் ஏட்டுப்பிரதியைக் கொண்டுவந்து "புராண ஆபாசம்" என்னும் தலைப்பின் கீழ் சில கட்டுரைகளை எழுதிப் பெரியார் நடத்திய "குடி அரசு" இதழுக்கு அனுப்பி வந்தார். 1928, 1929 "குடிஅரசு" இதழ்களில் இக்கட்டுரைகளைக் காணலாம். இக்கட்டுரைகளை ஒன்று சேர்த்தே

பெரியார் அவர்கள் "புராண ஆபாசங்கள்" என்னும் நூலை வெளியிட்டார். அந்நூலை வெளியிடுகையில் பெரியார் அவர்கள் ஸ்ரீபால் அவர்களைக் கலந்தார். அந்நூலில் தமது பெயர் இல்லாமல் பண்டைய ஓலைச் சுவடியிற் கண்டது என்று வெளியிடுமாறு வேண்டிக்கொண்டார். இக்கட்டுரையால் "குடிஅரசு" இதழினைப் படிக்கும் மக்களுக்குப் புத்துணர்ச்சி உண்டாயிற்று. பெரியார் அதை மகிழ்ச்சியோடு வெளியிட்டதுமல்லாமல் ஸ்ரீபாலையும் வாழ்த்தினார்கள்.

சன்மார்க்க சங்கங்கள்

இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பாவைக் கொண்டு விளங்கும் சமரச சன்மார்க்க சங்கங்களிலெல்லாம் நம் ஸ்ரீபால் அவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டார். சுவாமிகளின் ஆறுந் திருமுறை தெய்வ வழிபாட்டின் உண்மைத் தன்மையை விளக்குவதாகவும், திருக்குறள் போலவே அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதாகவும் இருந்தமையால் அதில் உள்ள பாடல்கள் தமது பிரசாரத்திற்கு அரண் செய்வதாக அமைந்திருந்தன என்பதையும் கண்டார்.

இதுபோலவே இவர் தமிழ் நாட்டிலுள்ள சமயச் சார்பு, பொதுநலப் பணி, சீர்திருத்தக் கொள்கை ஆகியவைகளைக் கொண்ட எல்லா நிறுவனங்களிலும் கலந்து சொற்பொழிவு நிகழ்த்திவந்தார். 1929ஆம் ஆண்டில் சபையின் பிரசாரகர் திரு. இராமநாதன் அவர்கள் வேறு தொழில் சம்மந்தமாகச் சபையினின்றும் நீங்கி விட்டார். எனவே நமது ஸ்ரீபால் அன்று முதல் பிரசார அமைப்பாளராகவும், பிரதம பிரசாரகராவும் பணியாற்றி வருகிறார்.

சொற்பொழிவுகள்

இவருடைய பலி விலக்குச் சொற்பொழிவுகள் தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது. தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலியிடுவது தெய்வ சம்மதமல்ல

வென்பதை விளக்க, இவர் பண்டைய நூல்களிலிருந்தும் அனுபவத்திலிருந்தும், யுக்தியினின்றும் பல மேற்கோள்கள், கதைகள் ஆகியவற்றைக் கொண்டு, மக்கள் மனத்தில் பதியுமாறு அழகாகவும், உணர்ச்சி ததும்பவும் இடையிடையே நகைச்சுவை கலந்தும் பேசி வந்தார். இதனல் தமிழ் நாடெங்கும் திரு. ஸ்ரீபால் அவர்களது பிரசாரத்திற்குப் பேராதரவு வளர்ந்து வந்தது.

வெளியீடுகள்

சபையினின்றும் வெளியாகும் வெளியீடுகளை மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் வகையில் புதுப் புதுக் கருத்துக்களையும் பாடங்களையும் அமைத்து வெளியிட்டதுடன், வெவ்வேறு இசை அமைப்புக்களில் பல பாடல்களை இயற்றி வெளியிட்டு மக்கள் மனத்தைக் கரையும்படி செய்தார். இந்தத் துறையில் பிரசாரம் செய்வது இதுவே முதல் சபை யாகையால் இப் பிரசாரத்திற்கு வேண்டிய கதைகளும் நூல்களும் நாடகங்களும் பாடல்களும் புதியனவாகவே அமைக்க வேண்டியதாய் இருந்தது. சுவரொட்டிகளோ சொல்லத் தேவையில்லை, அவைகளைப் பல வண்ணப்படங்களுடன் அறிவை புகட்டக் கூடிய வகையில் வெளியிட்டார். எனவே மக்கள் தெய்வத்தின் பெயரால் பலியிடுதல் மூடநம்பிக்கை என்றும் அது பூசாரிகளின் மோசச் செயல் என்று உணர்ந்ததுடன், உயிர்களிடத்தில் அன்பாய் இருப்பதே உண்மையான தெய்வ வழிபாடும், மக்கள் பண்பும், நாகரிகமும் ஆகும் எனவும் உணர்ந்தனர். ஆகவே சபையின் கொள்கையைத் தமிழ்நாடு வரவேற்கவும் ஸ்ரீபால் அவர்களின் சொற்பொழிவைக் கேட்கவும் தங்கள் தங்கள் ஊர்களிலுள்ள கிராம தேவதை விழாக்களில் உயிர்ப்பலிகளை நிறுத்தும் ஆதரவும் வளர்ந்தது. எனவே தமது பஜனை குழுக்களுடன் தமிழ்நாடெங்கும் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார் நம் ஸ்ரீபால் அவர்கள்.

எதிர்ப்பும் ஏற்பும்

பலிவிலக்குப் பிரசாரத்துக்குப் பெரியபாளையத்தில் ஏற்பட்ட எதிர்ப்புப் போலவே தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்புக்கள் இருந்தன. இவைகளில் மிக இன்றியமையாதனவும் சுவைபயப்பனவுமான எதிர்ப்புக்களை அன்பர்கள் அறிவது நலம் என எண்ணி அவைகள் மட்டும் இங்கே தரப்படுகின்றன.

குரங்கணி

1929ஆம் ஆண்டு திருநெல்வேலி வட்டத்திலுள்ள ஆழ்வார் திருநகர், திருத்திருப்பேரை என்னும் ஊர்களுக்கடுத்த குரங்கணி என்னும் ஊரில் முத்து மாரியம்மன் கோயில் ஒன்று உள்ளது. அவ்வம்மனுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதம் கடைசி செவ்வாய் அன்று சிறப்பு விழாச் செய்வார்கள். அவ்விழாவிற்குத் திருநெல்வேலி வட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரள் திராளாகவந்து ஏராளமாகக் கூடுவார்கள். அன்றிரவு சுமார் 5,000 ஆடுகள் வரை பலியிடப்படும். இம் மூடநம்பிக்கையை அறவே அகற்ற வேண்டி நம் ஸ்ரீபால் அவர்கள் பஜனை குழுக்களுடன் குரங்கணிக்குப் புறப்பட்டார். குறிப்பிட்ட நாளில் அனைவரும் குரங்கணிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அன்று அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் கூடி இருந்தனர். எங்கு பார்த்தாலும் ஆடுகள் கட்டப்பட்டிருந்தன. மாலை நான்கு மணிக்குப் பிரசாரத்தை துவக்கி நம் ஸ்ரீபால் அவர்களும் அவரது குழுவினரும், பாடிக்கொண்டும் சிறு வெளியீடுகளை வழங்கிக்கொண்டும் புறப்பட்டனர். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு பெருங் கூட்டம் பஜனையைச் சூழ்ந்துகொண்டது. நம் ஸ்ரீபால் கூட்டத்திற்கு பின்னே வந்து கொண்டிருந்தார். கோயில் எதிரே பஜனை சென்றதும், பூசாரிகளும், நிருவாகிகளும் ஊர்வலத்தைத் தடுத்து, 'நீங்கள் எந்த ஊர்?' என்று



1929ல் ஸ்ரீபால் அவர்களும் அவர் பஜனைக்
குழுவினரும். வலது கோடியில் நிற்பவர் நமது ஸ்ரீபால்.

திரு. ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் தலைமையில் சபையின்
பஜனை கோஷ்டி ஊர்வலம் வரும்காட்சி.

பாடகர்களைக் கேட்டார்கள். அவர்கள் தங்கள் ஊர் "சென்னை" என்றும் "தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலி இடுவதை நிறுத்தி சுத்த பூசை புரிந்து தெய்வங்களை வழிபடுமாறு சொல்லவே வந்தோம்" என்றும் கூறினார்கள். இதனைக் கேட்ட நிருவாகிகள் "முட்டாள்களே! அம்மனுக்கு இரத்தப்பலி கொடுப்பது ஆகம முறைப்படி நடந்து வருகிறது என்பதை நீங்கள் அறியவில்லையா? இந்த இடத்தில் இவ்வாறெல்லாம் பிரசாரம் செய்தால் நாங்கள் சும்மாவிட மாட்டோம், மரியாதையாகச் சென்றுவிடுங்கள்" என்று கோபத்தோடு கூறினார்கள். உடனே அங்கிருந்த கூட்டத்தினருள் சிலர் கூச்சலிட்டு மணலை வாரி ஹார்மோனியத்தின் மேல் போட்டார்கள். ஒருவர் தபேலாவைக் குத்திப் பொத்தலாக்கிவிட்டார். சிலர் துண்டு வெளியீடுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தவரிடமிருந்து அவ்வெளியீடுகளைப் பிடுங்கிக் கிழித்துவிட்டார்கள். நம் ஸ்ரீபால் இச்செயல்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். நிலைமை வரவர மோசமாகவே, அவர் தமது சட்டையைக்கழற்றிவிட்டுஅங்கவஸ்திரத்தை மேலே போட்டுக்கொண்டு கூட்டத்தின் இடையில் சென்றார். தாமும் அவ்விழாவிற்கு வந்திருந்த மனிதர்போல நடித்து, நிருவாகிகளைப் பார்த்து "யார் இவர்கள்?" என்றார். உடனே அவர்கள், "பட்டணமாம், அம்மனுக்குப் பலியிடக்கூடாதெனத் தடுக்க வந்துள்ளார்களாம்". என்றனர். உடனே ஸ்ரீபால் "அப்படியா! அவர்களை ஒன்றும் செய்யாதீர்கள். பாவம்! வெளியூர்காரர்கள்" என்று கூறிவிட்டு பஜனைக் குழுவைப் பார்த்து, "அப்பா இவ்வூரில் உங்கள் பிரசாரம் வேண்டாம், நிறுத்திவிடுங்கள். நீங்கள் இப்பொழுதே இவ்வூரை விட்டுப் போய்விடுவது நல்லது. என்னுடன் வாருங்கள்" என்று அழைத்துக்கொண்டு போய். ஒரு குதிரை வண்டியைப் பேசி அவர்களை அமர்த்திவிட்டு, "நான் இவர்களை ரெயில் ஏற்றி அனுப்பிவிட்டு வருகிறேன்" என்று அங்குள்ளவர்களுக்குக் கூறிகொண்டே தாமும் அவ்வண்டியில் ஏறிக்கொண்டு ஆழ்வார் திருநகருக்கு வந்து சேர்ந்தார். ஆழ்வார் திருநகரில்

உள்ள காங்கிரஸ் அன்பர்களாகிய திரு. கிருஷ்ண ஐயங்கார் அவர்களும், திரு. இராமனுஜ ஐயங்கார் அவர்களும், இவர்களைக் கண்டதும் "ஏன் இதற்குள் திரும்பி விட்டீர்கள்?" என்று வினவினர். நம் ஸ்ரீபால் அவர்கள் அங்கு நிகழ்ந்தவற்றைக் கூறினர். "நல்ல சூழ்ச்சி செய்தீர். இல்லையேல் உங்கள் அனைவருக்கும் பேராபத்து நேர்ந்திருக்கும்" என்று கூறி, அவர்கள் இருவரும் இவரைப் பாராட்டினர். இவர்கள் கருத்துப்படிக் குரங்கணியிலிருந்து திரும்பிவந்தது மிகவும் பொருத்தம் என்பது விளங்குகிறது. பின்னர் சில காலம் சென்ற பின் திரு. துரைசாமி நாடாரின் அழைப்பின் பேரில் நம் ஸ்ரீபால் அங்கு சென்று செய்த முயற்சியால் உயிர்ப்பலியிடும் வழக்கம் பெரும்பாலும் நின்றது.

திருமங்கலம்

மதுரை ஜில்லாவில் உள்ள திருமங்கலம் என்னும் கிராமத்தில் உள்ள பத்திரகாளி அம்மனுக்கு ஆண்டு தோறும் விழா நடப்பதுண்டு. அவ்விழாவில் நூற்றுக் கணக்கான உயிர்கள் பலியிடப்படும். அவைகளை நிறுத்த வேண்டி, திண்டுக்கல் சர்வஜன ஜீவகாருண்ய சங்கத்தார் நம் ஸ்ரீபால் அவர்களை அழைத்திருந்தார்கள். அவரும் தமது பஜனைக் குழுவுடன் அங்குச் சென்றார்.

அன்று மாலை ஆறு மணிக்குப் பஜனை ஊர் வலமாகப் புறப்பட்டது. அவ்வூர்வலத்தில் திருவாளர்கள் சிங்காரவேல் பாண்டியன், நாகரத்தின நாடார், அண்ணாமலை நாடார் முதலிய பலர் பஜனையுடன் கலந்து கொண்டார்கள். கோயில் அருகே சென்றதும் எதிர்பாராத வகையில் ஒரு கூட்டத்தினர் வந்து பஜனைக் குழுவையும், மற்றவர்களையும் வசை மொழிகளால் திட்டித் தாக்கலாயினர். அதுவுமன்றி விளக்குகள், ஹார்மோனியம், தபேலா முதலியவைகளைப் பிடுங்கிச் சென்று விட்டார்கள், சிங்காரவேல் பாண்டியன் தலையில் இரத்தக் காயம் ஏற்பட்டது.

திருமங்கலம் போலீஸ் இன்ஸ்பெக்டரும் தொண்டர்களும்
திரு. ஸ்ரீபால் அவர்களும்

அவருடன் பஜனைக் குழுவில் அடிபட்டவர்களை யும் அழைத்துக்கொண்டு ஸ்ரீபால் அவர்கள் உடனே போலீஸ் நிலையத்திற்குச் சென்று இன்ஸ்பெக்டரி டம் மனுச்செய்தார். இன்ஸ்பெக்டர் சுப்ரமணியம் பிள்ளை அவர்கள் வழக்கைப் பதிவு செய்துகொண் டார். அவர் சில காவலர்களுடன் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்தார். சிலரைக் கைது செய்து ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்து அடைத் தார். பின்னர் பூசாரிகளையும் தருமகர்த்தர்களையும் ஸ்டேஷனுக்கு வரவழைத்து விசாரணை நடத்தினர். அவர்கள் அச்சம்பவத்தைக் குறித்து வருத்தம் தெரிவித்தார்கள். ஸ்ரீபால் அவர்களும் இவ்விசா ரணையை மேற்கொண்டு நடத்தாமல், அவர்களனை வரையும் மன்னித்து விடுதலை செய்யுமாறும், தம் பிரசாரத்தை விழா நடைபெறும் பத்து நாட்கள் வரையும் தொடர்ந்து நடத்த உத்தரவிடுமாறும் கேட்டுக்கொண்டார். இதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் அவர்களும் அங்கு வந்திருந்த பெரியோர்களும் ஸ்ரீபால் அவர்களின் பரந்த நோக்கத்தைப் பாராட்டிய தோடு, பிரசாரத்தை மேற்கொண்டு நடத்துவதில் தங்களுக்கு மகிட்சிதான் என்றும் தெரிவித்துக் கொண்டார்கள். அவ்வாறே பத்துநாட்களும் பிர சாரம் எவ்வித இடையூறும் இன்றிச் சிறந்த முறை யில் நடந்தேறியது. பொதுமக்களும் ஆர்வமோடு பிரசாரத்தில் கலந்துகொண்டு கூட்டத்தைச்சிறப் பித்தார்கள். பின்னர் இவ்விடத்திலும் உயிர்ப்பலி நின்றது.

திருச்சி

1933-ஆம் ஆண்டு ஒரு நாள் திருச்சி பெரிய கடைத் தெரு வழியாகப் பஜனை ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. ஏராளமான மக்கள் உருக்கமான பலி விலக்குப் பாடல்களைக் கேட்டுக்கொண்டே பின் தொடர்ந்து சென்றனர். நமது ஸ்ரீபால் அவர் களும் தென்னூர் ஜீவகாருண்ய சங்கத்தினர் பல ரும் கூட்டத்திற்குப் பின்னே பேசிக்கொண்டு வந்த

னர். பஜனை ஊர்வலம் சென்று கொண்டிருக்கையில் திடீரென்று, சில முஸ்லிம் இளைஞர்கள் தங்கள் கடைகளை விட்டு இறங்கி வந்து பஜனை குழுவினரையும் பொதுமக்களையும் தாக்க ஆரம்பித்தனர். உடனே மக்கள் எல்லோரும் நாலாபுறமும் ஓடலாயினர். கடைகள் எல்லாம் மூடப்பட்டன. நாலைந்து முஸ்லிம் இளைஞர்கள், ராதா, சுந்தரம், ஆகிய இருவரையும் தாக்கிக் கொண்டிருந்தனர். இந்த நேரத்தில் நம் ஸ்ரீபால், தம் நண்பர்களைக் காப்பாற்ற வேண்டி வேகமாக ஓடி முஸ்லிம் இளைஞர்களைத் தடுத்தார். அவர்கள் இவரையும் தாக்க ஆரம்பித்துவிட்டனர். முஸ்லிம்கள் இடையில் ஸ்ரீபால் ஒருவரே நின்று போராடினார். அந்தச் சமயத்தில் போலீஸ் லாரி வர, தாக்கிக் கொண்டிருந்த அந்த முஸ்லிம் இளைஞர்கள் அனைவரும் ஓட ஆரம்பித்தனர். போலீசார் அவர்களைப் பிடித்துக் கொண்டனர். இவ்வளவுக்கும் காரணம், பஜனை சென்று கொண்டிருந்த தெருவில் சிறிய மசூதியொன்று இருந்தது, இரவு நேரமாகையாலும், கூட்ட மிகுதியாலும் பாடல்களைப் பாடிக்கொண்டுவரும் ராதாவும், சுந்தரமும் அதனைக்கவனிக்காமல்பஜனை செய்துகொண்டே சென்றனர். நிற்க, ஸ்ரீபால் அவர்கள் அங்கு வந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் நடந்தவற்றையெல்லாம் விவரமாகச் சொன்னார். அவர் ஸ்ரீபால் அவர்களின் வீரத்தை மெச்சியதோடு உங்கள் நண்பர்கள் எங்கே? என்று கேட்டார். இவர் "நான் அவர்கள் துணைக்கு வந்ததும் அவர்கள் தப்பித்துக் கொண்டார்கள்." என்றார். பின்னர் முஸ்லிம் பிரமுகர்கள் பலர் ஸ்டேஷனுக்கு வந்து இவ்வூரில் இந்து முஸ்லிம் கலகங்கள் அடிக்கடி நடைபெறுவதால், இவர்கள் சென்னை வாசிகள் என்பதையறியாமல் இந்த முஸ்லிம் இளைஞர்கள் ஆத்திரம் கொண்டு இச் செயலில் ஈடுபட்டு விட்டார்கள்" என்று கூறித் தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்தார்கள். ஸ்ரீபால் அவர்களும் அவ்வநுதாபத்தை யேற்றுக்கொண்டார். போலீஸ் டெப்டி சூப்ரின்டென்ட்டும் ஸ்ரீபால் அவர்களின் நற்குணத்தைப் பாராட்டினர். இச் சம்பவம்

நடைபெற்ற மறுநாள், இச்சம்பவத்தையொட்டி தென்னூர் ஜீவகாருண்ய சங்கத்தார் பின் வரும் தீர்மானத்தை நிறைவேற்றித் தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபைக்கு அனுப்பினார்கள்.

Resolution No. 7: The Executive Committee of the league is highly pleased to place on record the heroic spirit displayed by Mr. T. S. Sripal, the eminent Tamil lecturer who headed the Bhajan Party of S. I. Humanitarian League, Madras, when the Party was attacked by irresponsible Muslim youths at Big Bazar Street, fort, Trichinopoly on the night of the 26th February, 1933. Mr T. S. Sripal not only presented a bold front but also took all the brunt of the brutal attack on himself, whith an attitude which is calculated to do all credit to a true satyagrahi. By this bold stand he saved his followers with thabla amd harmonium from serious injury."

(Seventh Annual Report of S. I. H. League for 1933.)

இவ்வாறு பல இன்னல்களை ஏற்றுச் சிறிதும் சளைக்காமல், "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலை" என்னும் வள்ளுவர் வாக்கிற்கு இலக்காக, நம் ஸ்ரீபால் அவர்கள் தமது தொண்டினைச் செய்து வந்தார்.

1948ஆம் ஆண்டில் பலி விலக்குச் சட்டம் கொண்டுவர ஸ்ரீபால் முயற்சித்தபோது அவர் தம் தொண்டினைப் பாராட்டி தமிழ் நாட்டின் தலைசிறந்த கவிஞராய் விளங்கும், புதுவை புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்கள், தாம் நடத்தி வந்த குயில் பத்திரிகையின் 1–3–48-ல் வெளியான இதழில் பின் வருமாறு புகழ்ந்துள்ளார்.

"பலியிட்டுயிர்களை நலிவு செய்யாதீர்
என்ற கருத்தையித் தென்னாட்டில்
நாடொறும் நாடொறும் ஏடுகள் விடுத்தும்
வீடுகள் தோறும் விழாக்கள் தோறும்.
சிற்றூர் தோறும் செழுநகர் தோறும்
சென்றும் பரப்பினோன் சீபால்! அடடா!
அன்று தொடங்கி இன்று வரை அவன்
என்னென்ன இன்னல் ஏற்றான். அவற்றை
இன்னல் என்றான் இன்பம் என்றெண்ணினான்
தன்னல மற்ற பெருந்தகைக்கு
நன்றி நவிலுக சீபால் வாழ்கவே!"

(சீபால்—ஸ்ரீபால்)

வினாக்களும் விடைகளும்.

திருக்குறளில் ஒரு குறளுக்கு விளக்கம்

விருதுநகர் மாரியம்மன் கோயில் விழாவின் போது உயிர்ப்பலியை நிறுத்தப் பொதுக் கூட்டம் ஒன்று அவ்வூர் உயர்நிலைப்பள்ளி விளையாட்டிடத்தில் நடந்தது. பெயர்போன காங்கிரஸ் தொண்டர் திரு சுப்பிரமணியம் நாடார் அவர்கள் அக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்கள். திரு ஸ்ரீபால் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார். அவர் தம் சொற்பொழி வுக் கிடையே

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிரும் தொழும்"

என்னும் திருக்குறளை மேற் கோள் காட்டி உயிர்ப் பலியை நிறுத்துமாறு வேண்டிக் கொண்டார். மறு நாளும் அதே யிடத்தில் சொற்பொழிவுக்கு ஏற் பாடாகி யிருந்தது. ஏராளமான மக்கள் கூடி யிருந்த னர். அது சமயம் அவ்வூர் அச்சக முதலாளி ஒருவர் நம் ஸ்ரீபால் அவர்களைக் கேள்வி கேட்கும் முறையில் துண்டு வெளியீடு ஒன்று அச்சிட்டு அக்கூட்டத்தில்

வழங்கி விட்டுக் கடைசியாக நம் ஸ்ரீபாலிடம் ஒரு வெளியீட்டையும் கொடுத்து அதில் உள்ள வினாவிற்கு விடை கூறுமாறு கேட்டுக் கொண்டார். அவ்வெளியீட்டில் அவர் ''ஐயா! ஜீவகாருண்ய பிரசாரகரே! தாங்கள் ஜீவகாருண்ய பிரசாரம் செய்வதால் தாங்கள் கொலையும் புலையும் தவிர்த்தவராகவே இருக்க வேண்டும். ஆகவே தாங்கள் நேற்றுக் கூறிய'' கொல்லான் புலாலை மறுத்தானை'' என்ற திருக்குறள் கருத்துப்படி நல்லபாம்பு, சிங்கம், புலி போன்ற மிருகங்கள் தங்களைத் தொழுமா?'' என்று கேட்டிருந்தார்.

அதனைக் கண்ட ஸ்ரீபால் அவர்கள் சிறிது புன்முறுவலுடன் ''அன்பருடைய கேள்வியை யான் வரவேற்கின்றேன். பாராட்டுகிறேன். கேள்வி சிக்கலான கேள்வி. என்னையே சோதிக்கும் கேள்வி. என்னை எந்த மிருகமும் தொழாது. ஏன்! அறிமுகமான மனிதர்கள் தவிர வேறு எந்த மனிதனும் தொழான். ஏனெனில் திருவள்ளுவர் கூறும் கொல்லாமையாகிய பண்பு என்னிடம் பூரணமாக இல்லை. கொல்லாமை என்ற சொல் மனத்தாலும், வாக்காலும் காயத்தாலும் பிறவுயிர்க்குத் துன்பம் விளைவிக்காமையையே உணர்த்துகின்றது. யான் பிறவியிலேயே புலால் உண்ணாத மரபைச் சேர்ந்தவன். கொலைபுரியாதவன். ஆனால் மனத்திலும், வாக்கிலும் என்னிடம் கொல்லாமை என்ற உயரிய பண்பு கோபங் காரணமாகச் சிதறி விடுகிறது. அதுமட்டுமல்ல? யான் சொற்பொழிவு செய்து வருகையில் உயிர்க்கொலை செய்பவரையும், புலாலுண்பவரையும் கோயில் பூசாரிகளையும் இகழ்ந்து பேசி வருகிறேன். அதனால் கொலைத் தொழில் புரிபவர்கள் என்றால் சிறிது மனம் புண்ணுவார்கள். பூசாரிகள் என்னைத் தம் எதிரியாகவே எண்ணுகின்றனர். ஆகவே, மனத்தாலும், வாக்காலும் பிறர்க்குத் தீங்குண்டாகும் வகையில் தவறு செய்கின்றேன். எனவே, யான் மாசற்ற கொல்லா நோன்புடையவனல்லன். ஆகையால் திருவள்ளுவர் கூற்றுப்படி என்னிடம் குறை

உள்ளது. எனவே என்னை எவ்வுயிரும் தொழா. பகைவரிடத்தும் அன்பு பாராட்டும் பண்புடைய கொல்லாமையாகிய நோன்புடையாரையே எல்லாவுயிரும் தொழும் என்பது நிச்சயம் என்று கூறி முடித்தார். மக்கள் மிகவும் மகிழ்ச்சி யடைந்து நம் ஸ்ரீபால் அவர்கள் கூறிய உரையை உடன்படும் வகையில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அந்த அச்சக முதல்வர் மிகவும் ஆனந்த மடைந்து ஒரு மலர் மாலையை உரையாசிரியருக்கு அணிவித்துத் தம் கேள்விக்குத் தக்க விடை பகர்ந்தார் என்று வியந்து பாராட்டிப் பேசி ஆங்குக் கூடியிருந்த மக்கள் அனைவரையும் உயிர்ப்பலி செய்ய வேண்டாம் என்றும் யான் இனி புலால் உண்பதில்லை என்றும் வாக்குறுதி அளித்தார்.

இது போன்று பல வினுக்களுக்கு அவ்வப் போது தக்க விடை கூறி மக்களைத் திருத்துவார். வேருெரு சமயம் ஒருவர் கசாப்புக்கடையில் தினந் தோறும் ஆடு மாடுகளைக் கொல்லுகின்றுர்களே அதனைக் கேளாமல் ஆண்டுக் கொருமுறைக் கோயிலில் நடைபெறும் பலியை மட்டும் ஏன் இவ்வளவு அக்கறையாக நிறுத்த முற்படுகிறீர்கள் என ஒருவர் கேட்டார். அவ்வினுவைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு அருமையான விடை பகர்ந்தார். பொது மகளிர் வீடு ஒன்றும் அதற்கெதிரில் கற்புடை மகளிர் வீடும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். பொது மகளிர் இல்லத்தில் தொழில் முறையால் பலர் சென்று வருகின்றனர். அதுபோன்று கற்புடை மகளிர் வீட்டில் ஏன் பிற ஆடவர் செல்வதில்லை எனக்கேட்டால் நாம் என்ன பதில் சொல்வோம். எனவே கசாப்புக் கடை கொலை புரியும் தொழிலையே அடிப்படையாகக் கொண்டது. கோயிலோ அன்பும் அருளும் வளரும் இடம். இங்கே கொலை செய்வது பெருங்குற்றம், கற்புடைப் பெண்டிரைக் கெடுப்பதற் கொப்பாகும். ஆகவே கோயிலைக் கொலைக் களமாக்காதீர் என்கின்ருேம். அதனுல் மக்கள் அறிவும் பண்பும் வளர்கின்றது என்ருர்'' இவ்விடையைக்

கேட்டுப் பலரும் தெய்வத்தின் பெயரால் பலிடுயி தல் பெருந்தவறு எனத் தெளிந்தார்கள்.

சங்கர நயினார் கோயிலில் ஸ்ரீபால் அவர்கள் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கையில் ஒருவர் எழுந்திருந்து, நாம் செய்யும் உயிர்ப் பலியை அந்தத் தெய்வம் ஏற்றுக்கொள்வதாகப் பெரியோர்கள் காலம் முதல் நம்பித்தானே செய்துவருகின்றோம் என்றார். உடனே ஸ்ரீபால் அவர்கள் அப்பா! தெய்வம் என்றால் மனிதசமூகத்திற்கு மட்டும் தெய்வமல்ல! மன்னுயிர் அனைத்திற்கும் தெய்வம் அதுவே. ஆகவே உலகிலுள்ள உயிர்களெல்லாம் தெய்வத்தின் குழந்தைகளாகும். இவ்வுண்மையை அறியாமல் தெய்வத்தின் குழந்தைகளாகிய ஆடு கோழிகளை அதன் எதிரிலேயே பலி கொடுத்தால் தெய்வம் ஏற்றுக் கொள்ளுமா? இதற்கு ஒரு உதாரணம் தருகின்றேன் தயவு செய்து கவனமாய்க் கேளுங்கள். நான் எனக்கு ஒரு வேலை தேடி அலைகின்றேன். இவ்வூர் பஞ்சாயத்து போர்டில் ஆள் தேவைப்படுவதாகக் கேள்விப்பட்டு, யான் ஒரு மனுவை எழுதிக்கொண்டு போய் பஞ்சாயத்து தலைவரிடம் கொடுத்து வேலை கேட்கின்றேன். அதுசமயம் அவர் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அவருடைய குழந்தையை ஓங்கி அடித்து விட்டுத் தங்கள் குழந்தையையும் நன்றாக அடித்து விட்டேன். தயவு செய்து என் மனுவை ஏற்று வேலை கொடுங்கள் என்றால் எனக்கு என்ன நேரும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். அதுபோன்றே தெய்வத்தின் முன் நின்று அதன் குழந்தைகளாகிய ஆடு கோழிகளை வெட்டி வீழ்த்தி விட்டுத் தம்மைக் காப்பாற்றும்படி கேட்பது, யான் வேலைக் கேட்டு உதையுடன் வீடு திரும்பிய தற்கொப்பாகும். அவ்விளக்கத்தை கேட்ட மக்களின் ஆரவாரமும் கரகோஷமும் வானைப் பிளந்தன. மேலும் கேளுங்கள். நாம் கோயிலுக்குச் சென்று தெய்வத்தை வேண்டிக்கொள்வது யாது? நமது குறைகளைத் தீர்க்கும் படியும் குழந்தை குட்டிகளை நோயின்றி காப்பாற்றும் படியுமாகும். அதே

சமயத்தில் நாம் செய்வது என்ன? மற்ற உயிர்களாகிய ஆடு கோழிகளைக் கொலை செய்து அந்த இரத்தத்தையும் பிணத்தையும் தெய்வத்திற்குக் காட்டி, தெய்வமே இதோ பார் உயிர்களை வெட்டிப் பிணமாக்கி விட்டேன்! என்னையும் என் குழந்தைகளையும் காப்பாற்று என்று வேண்டுகிறோம். இச்செயலைப் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பாருங்கள்! கொலைச்செயலைப் புரிந்து விட்டு நல்ல பலனைக் கேட்கின்றோம். இச் செயல் அறிவுடைமையா? கொலை செய்பவர்களை நல்லவர்களாக மனிதனே ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் தெய்வம் அவன் செயலை ஏற்று மகிழுமா? ஒரு நாளும் ஏற்காது! வெறுத்துத்தள்ளும். நன்மைக்கு நன்மை! தீமைக்குத் தீமைதானே இயற்கை. தீமைக்கு நன்மையும், நன்மைக்கு தீமையும் பொருந்தாதல்லவா? ஆகவே நாம் கொலை செய்து நன்மையை எதிர்பார்ப்பது மூட நம்பிக்கையாகும் என்பதை அறிய வேண்டும் என்றார். இவ்விளக்கம் மேலும் மக்களைத் தெளிவுபடுத்தியது. சங்கரநயினார் கோயிலில் உயிர்ப்பலி நின்றதற்கு இத்தகைய அறிவு சான்ற மேற்கோள்களேயாகும்.

ஜீவரக்ஷகன்

1931-ஆம் ஆண்டில் சபையின் ஆதரவில் "ஜீவரக்ஷகன்" என்னும் திங்கள் இதழ் ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. இப்பத்திரிகையில் நம் ஸ்ரீபால் அவர்கள் அருளறத்தின் (அஹிம்சா தருமத்தின்) மேன்மையைப் பற்றியும், தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடும் மூட நம்பிக்கைகளைக் குறித்தும் பல கட்டுரைகளும் பாடல்களும் எழுதினார். அத்துடன் தொடர்ச்சியாகப் "பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை," "கலியுகப் பிரகலாதன்" என்னும் இரு நாடகங்களையும் எழுதி வந்தார். இவ்விரு நாடகங்களும் நாட்டு மக்களைப் பெரிதும் கவர்ந்தன. நமது ஸ்ரீபால் அவர்கள் குஜராத்திலுள்ள பாலிடாண என்னும் ஜைனத் திருப்பதிக்கு யாத்திரை சென்றார். அந்த யாத்திரை

யில் 10,000 மக்கள் கலந்து கொண்டனர். அப் புனிதயாத்திரையின் வரலாற்றையும் நிகழ்ச்சிகளையும் "பாலிடாறு யாத்திரை" என்னும் ஓர் அழகிய கட்டுரையும் எழுதினூர். பின்னர் பாலிடாறு யாத்திரை வரலாற்றை நூல் வடிவிலும் வெளியிட்டார். ஜீவரஷகன் நல்ல நிலையில் வளர்ச்சியுற்று 1935ஆம் ஆண்டுவரை நடந்து வந்தது.

நாடகங்கள்

பல நூற்றாண்டுகளாக நமது நாட்டில் காளி, மாரி, கொற்றவை முதலிய தெய்வங்களுக்குப் பலியிடும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கும் மக்களின் அறியாமையைப் போக்க நாடகங்களே பெருந்துணை செய்யும் என்று நம்பிய நம் ஸ்ரீபால் அவர்கள், தமது அனுபவத்தைக் கொண்டும், கிராமங்களின் நம்பிக்கைகளை வைத்தும் பூசாரிகளின் போக்குகளைக் கவனித்தும் கால முறைமைக் கேற்றவாறு எழுதிய "பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை" என்னும் விழுமிய நாடகத்தையும், "கலியுகப் பிரகலாதன்" என்னும் மற்றொரு அறிவு சான்ற நாடகத்தையும் நூல் வடிவில் கொண்டு வந்தார். இந்நூல்களின் பண்பை அறிந்த தமிழ் மக்கள் அவைகளை ஏராளமாக வாங்கிப் படிக்கலாயினர். அத்துடன் நில்லாமல் நாடகமாகவும் நடிக்கத் துவங்கினர் பலர்.

1932-ஆம் ஆண்டில் முதன் முதலாகச் சென்னையில் "பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை" என்னும் நாடகம் நடிக்கப் பெற்றது. சென்னை பெத்து நாய்க்கன் பேட்டையில் **இந்திய இளைஞர் சங்கம்** என்று ஒரு சங்கம் இருந்தது. அதன் **உறுப்பினர்களால் 1932-ஆம் ஆண்டு** நவம்பர் **19-ஆம்** நாள் **சென்னை** பிரமம் ஞான சபையில் **துணைத்தலைவர்** திரு **ஜினராஜதாசா அவர்கள்** தலைமையில், சென்னையில் உள்ள விக்டோரியா பொது மண்டபத்தில் அந்த நாடகம் நடைபெற்றது. பின்னர் **4-12-1932ல்** நாடகமணி திருவாளர் ராவ்பகதூர்



குஜராத்தைச் சார்ந்த பாலிடாணு யாத்திரையில் திரு. ஸ்ரீபால் அவர்களுக்கு வரவேற்பு

இராஜபாளையம் ஜீவகாருண்ய சங்க மகாநாட்டில்
திரு. ஸ்ரீபால் அவர்கள் கொடியேற்றியவைபவம்.

ப. சம்பந்த முதலியார் பி.ஏ.,பி.எல்., அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. இவ்விரண்டு நாட்களும் நாடகமண்டபத்தில் மக்கள் நிறைந்து விட்டனர். அந்த இரண்டு நாட்களிலும் சுமார் 5,000 ரூபாய் வரை வசூலாயிற்று. அச்சமயம் சென்னை நகரெங்கும் இதைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. தலைமைத் தாங்கிய இரு தலைவர்களும் நாடக ஆசிரியர் ஸ்ரீபால் அவர்களைப் புகழ்ந்ததுடன், நாடகத்தைப் பெரிதும்பாராட்டினார்கள். இந்நாடகம்நடப்பதில்முக்கியமாக பங்கு கொண்டவர்கள் தற்போது "சினிமா உலகம் ஆசிரியரும், சென்னை நகராண்மைக்கழக உறுப்பினராய் உள்ள வருமான திரு பி.எஸ். செட்டியார் அவர்களும், நாரதர் பத்திரிகை உதவி ஆசிரியராயிருக்கும் திரு. ஸ்ரீனிவாசராவ் பி.ஏ., அவர்களும், திரு எஸ். ரங்கநாதன் அவர்களும், திரு அனந்தபத்மநாபர் அவர்களும், சாத்தூர் சாமிநாதன் அவர்களும் திரு. குந்துநாத் ஜெயின் அவர்களும், திரு. S. சங்கரன் அவர்களும் ஆவர். இதைப்போன்றே தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் இளைஞர்கள் ஒன்று கூடி இவ்விரு நாடகங்களையும் பயின்று நடித்தனர். சிறப்பாகச் சென்னை, பெங்களூர், தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, திண்டுக்கல், சங்கரநயினார்கோயில், தச்சூர், புதுவை, திருக்காட்டுப்பள்ளி, திருக்கழுக்குன்றம், முதலிய நகரங்களிலும், கிராமங்களிலும் இருந்த பல சங்கத்தவர்களால் இந்நாடகங்கள் நடிக்கப் பெற்றன. திருவத்திபுரம் வித்துவான் த. குருநாதன் அவர்கள் தனது தம்பி வித்துவான் தணிகை உலகநாதன் அவர்களையும் மற்றும் பல இளைஞர்களையும் கொண்டு பாலசுந்தரம் நாடகத்தைச் சிறப்பாக நடித்துப் புகழ் பெற்றார்கள். சென்னை மாணவர் மன்ற முதல் ஆண்டு விழாவில் 1931-ல் சென்னை தியாகசுந்தர முதலியார் அவர்களை நாடக ஆசிரியராகக் கொண்டு மேற்படி மன்றத்தை தோற்றுவித்த சண்முகசுந்தரம், கு. குலசேகரன், பி. ஜே. இராஜராமன், சிறுவை. மோகன சுந்தரம் ஆகிய மாணவர்களால் "பாலசுந்தரம் பலியின் கொடுமை" என்ற நாடகம் மிக அழகான முறையில் நடிக்கப் பெற்றது.

சென்னை வி.பி. மண்டபத்தில் நடித்த இந்திய இளைஞர் சங்கத்தினரும்
திரு. ஸ்ரீபால் அவர்களும்.

இதனால் தென்னிந்தியாவில் உள்ள பெரும்பான்மை யான மக்கள் திருந்திய அறிவைப் பெற்றனர். தெய் வங்களுக்கு உயிர்ப்பலியிடுதல் மூட நம்பிக்கையே என்று உணர்ந்தனர்.

ரூபாய் இருநூறு அன்பளிப்பு

திருச்சியில் ஜுஹார்மல் பாங்க் உரிமையாளர் ஆதரவில் திருச்சி தென்னூர் சர்வ ஜீவானந்த சங் கீத சபையாரால் நகராண்மைக் கழக பொது மண்ட பத்தில் "பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை" என்னும் நாடகம் நடந்தது. நாடகம் முடிந்தவுடன் தென்னூர் ஜீவரஷக சபையின் தலைவர் நாடக ஆசிரி யராகிய ஸ்ரீபால் அவர்களைப் பாராட்டிப் பேசினார். அப்போது அந்நாடகத்தைக் கண்டு களித்த பெரி யோர்களில் ஒருவராகிய நாட்டுக்கோட்டைச் செட்டி யார் திரு பி. ஆர். எஸ். சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் மேடைமீது வந்து நாடகத்தின் தன்மையைப் பாராட்டி, தமது வாழ்நாளில் இத்தகைய சீர்திருத் தம் மிக்க நாடகத்தைப் பார்த்ததேயில்லை என்றும், இந்நாடகம் தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊர் களிலும் நடைபெற வேண்டுமென்றும் கூறியதோடு அமையாமல், நம் ஸ்ரீபால் அவர்களை வாழ்த்திச் சென்னை தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபைக்கு ரூபாய் 200 நன்கொடை அளித்தும், ஆண்டு தோறும் ரூபாய் 25 நன்கொடை அளிப்பதாகவும் வாக்களித்தார். அச்சமயம் மக்கள் அவர் வள்ளல் தன்மையை உணர்ந்து கைதட்டித் தங்கள் பாராட் டுதலைத் தெரிவித்தார்கள்.

இவ்வாறு நாடக மேடைகளில் சிறப்புற்று வந்த இவ்விரு நாடகங்களையும் அறிஞர் பெருமக்கள் புகழ்ந்ததுடன், இந்து. சுதேசமித்திரன், ஊழியன், செங்குந்தமித்திரன் முதலிய இதழ்கள் சிறப்பு வாய்ந்த மதிப்புரைகளை எழுதின. இவ்வாறே "பொன்னுலகநாதனின் பூவுலகத் தொண்டர்கள்", "கண்கண்ட தெய்வங்கள் கருணையுடன் காத்துவரக்

திரு. பி. ஆர். எஸ். சுப்பிரமணியம் செட்டியார் அவர்களும், தென்னூர் ஜீவகாருண்ய சங்கத்தினரும், ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களும்.

காணுத தெய்வங்கள் கழுத்தறுக்கச் சொல்லினவா'' ''கிள்ளை விடு தூது'' ''மாரியம்மன் திருவாய் மொழி'' முதலிய உரைநடைகளையும் செய்யுள் நூல்களையும் அவ்வப்போது இயற்றி வெளியிட்டு வந்தார்.

உண்ணுவிரதம்

* சென்னைக்கு அடுத்த திருவொற்றியூரில் உள்ள தியாகராயப்பெருமானின் கோயிலில் வட்டபுரி (நாச்சியார்) அம்மன் என்று ஒரு சிறு தெய்வம் உள்ளது. அவ்வம்மனுக்கு ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் பதினைந்து நாட்கள் விழா நடைபெறும். அவ்விழாவின் ஒவ்வொரு நாளும் ஐந்து ஆடுகள் வீதம் பதினைந்து நாட்களிலும் எழுபத்தைந்து ஆடுகளைப் பலியிடுவார்கள். கடைசி நாளன்று ஒரு எருமைக் கடாவையும் சேர்த்து பலியிடுவார்கள். இக்கொடிய செயலை நிறுத்த நம் ஸ்ரீபால் அவர்கள் ஆண்டு தோறும் பல அறிஞர்களுடன் திருவொற்றியூருக்குச் சென்று பலிவிலக்குப் பிரசாரம் செய்து வந்தார்.

ஒவ்வொரு ஆண்டும் நம் ஸ்ரீபால் அவர்கள் செய்து வரும் பிரசாரத்தை நன்கு அறிந்தும், அக்கோயிலின் தருமகர்த்தர் திரு தியாகராஜ செட்டியார் அவர்கள் உயிர்ப்பலியை நிறுத்த இசையவில்லை. எனவே ஸ்ரீபால் அவர்கள் அக்கோயிலில் உண்ணுவிரதம் இருக்க உறுதி கொண்டார். அவ்வாறே 1936ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ம் நாள் கோயிலில் உண்ணு விரதம் இருக்கத் துவங்கி விட்டார். இச் செய்தி சுதேசமித்திரன், தமிழ்நாடு, இந்து, முதலிய தினசரி இதழ்களில் வெளிவரவே, சென்னை நகரின் பலபகுதி களிலிருந்தும் மக்கள் திரண்டு, திருவொற்றியூரில் உண்ணுவிரதம் இருக்கும் நம் ஸ்ரீபால் அவர்களைக் காண தினந்தோறும் வந்தவண்ணமிருந்தனர்.

---

* சுதேசமித்திரன், தமிழ்நாடு, தினமணி 20–4–36 நாள் களில் வெளியிடப்பட்டுள்ளன

இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி தமிழாசிரிய ராயிருந்த திரு கோ. வடிவேல் செட்டியார் அவர்கள் தலைமையில் திருவொற்றியூரில் ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அக் கூட்டத்தில் திருவாளர் திரு. வி. க. அவர்களும், சாது நாராயண தேசிகர் மடத்தைச் சார்ந்த திரு அருணகிரிநாதசுவாமிகளும், திரு. ம. பொ. சிவஞானம் (தற்சமயம் தமிழரசுக் கழகத் தலைவர்) அவர்களும், திரு பி. சத்தியமூர்த்தி முதலியார் அவர்களும் கலந்து கொண்டார்கள். தலைவரும் மற்றப் பெரியார்களும் சிவன் கோயிலில் உயிர்ப் பலியிடுவது சைவ சமயத்திற்கே இழுக்கான தென்றும், அவ்வழியைப் போக்க நம் ஸ்ரீபால் அவர்கள் உண்ணுவிரதம் இருப்பதைப் பாராட்டுவதாகவும் தருமகர்த்தர் திரு தியாகராய செட்டியார் இவ்வுயிர்ப்பலியை உடனடியாக நிறுத்தி அன்பர் ஸ்ரீபால் அவர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்றும் உருக்கமாகப் பேசினர்கள். இவ்வாறு நான்கு நாட்கள் தொடர்ந்து பொதுக்கூட்டங்கள் நடைபெற்று வந்தன. ஒவ்வொரு கூட்டத்திலும், உண்ணுவிரதம் இருக்கும் நம் ஸ்ரீபால் அவர்களும் சொற்பொழிவு ஆற்றி வந்தார். ஐந்தாம் நாள் செங்கற்பட்டுஜில்லா போர்டு தலைவர் திரு டி. சண்முகம் பிள்ளை அவர்கள், தருமகர்த்தா அவர்களைச் சந்தித்து உரையாடினர். அதன் பயனுக ஐந்தாம் நாள் மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தருமகர்த்தர் அவர்கள் வந்து, தான் அடுத்த ஆண்டு முதல் இந்த உயிர்ப்பலியை அறவே நிறுத்தி விடுவதாகவும், இன்றுமுதல் நம் ஸ்ரீபால் அவர்கள் உண்ணுவிரதத்தை நிறுத்திக் கொள்ள வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டார். உடனே அக்கூட்டத்திலிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஆரவாரம் செய்து தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். ஸ்ரீபால் அவர்களும் பல பெரியார்களின் கட்டளைக் கிணங்க உண்ணுவிரதத்தை முடித்துக் கொண்டார். தருமகர்த்தர் அவர்கள் தாம் வாக்குறுதியளித்த படி 1937—ஆம் ஆண்டில் உயிர்ப்பலியை அறவே

நிறுத்தவில்லை. சில ஆடுகளையும் ஒரு எருமைக் கடாவையும் பலி கொடுத்து வந்தார். எனவே தொடர்ந்து பிரசாரம் செய்து வந்தார், இறுதியாக 1940ஆம் ஆண்டு அது அறவே நிறுத்தப்பட்டது. இவ்வெற்றிச் செய்தியைப் பாராட்டி உயர்திரு மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் 'அருளாட்சி' என்னும் திங்கள் இதழில் "உயிர்ப்பலி நீக்கிய உத்தமர்" என எழுதிய கட்டுரையின் சுருக்கம்.

"திருவொற்றியூர் வட்டப்பாறை நாச்சியார் என்னும் காளி நெடுங்காலமாக எருமைக்கடாவைப் பலிகொண்டு வந்தாள். இக் கொடுஞ் செயலைக் கண்டு மனம் வருந்திய திரு டி.எஸ் ஸ்ரீபால் அவர்கள் 18 ஆண்டுகளுக்கு முன்னே, 1936 ஆம் ஆண்டில் இந்த பலியை நிறுத்துவதற்காக இக்கோயிலின் முன்னர் உண்ணாவிரதம் இருந்தார். "பலியிடுவதை நிறுத்துங்கள் ; பலியிட விரும்பினால் என்னைப் பலி கொடுங்கள். எருமைக்கடாவைப் பலியிடாதீர்கள்" என்று அவர் உறுதியாகக் கூறினார். அப்போது கோயில் தருமகர்த்தர் வந்து அடுத்த ஆண்டிலிருந்து பலியிடுவதை நிறுத்தி விடுவதாகவும் உண்ணாவிரதத்தை நிறுத்திக்கொள்ளும்படியாகவும் கேட்டுக் கொண்டார். அதன்படியே ஸ்ரீபால் அவர்கள் உண்ணாவிரதத்தைக் நிறுத்திக்கொண்டார்.

"ஆனால் தர்மகர்த்தர் கொடுத்தவாக்குறுதியைத் தவறிவிட்டடார். பலியைத் தொடர்ந்து செய்தார். திரு ஸ்ரீபால் அவர்கள் வாளா இருக்க வில்லை. பலியை நிறுத்த வேண்டுமென்று கிளர்ச்சி செய்து பொது ஜனங்களின் ஆதரவைத் தேடினார். ஸ்ரீபால் அவர்களுக்குப் பொது ஜனங்களின் ஆதரவு அதிகமாகக் கிடைத்தது. திருவாளர்கள் திரு வி. கலியாணசுந்தர முதலியார், கோ. வடிவேல் செட்டியார், சுவாமி அருணகிரிநாதர், டி. சண்முகம் பிள்ளை, சிவஞான கிராமணியார் முதலிய பல பெரியார்கள் ஸ்ரீபால் அவர்களுக்கு ஆதரவு அளித்தார்கள். ஆகவே கோயில் தர்மகர்த்தர் எருமைக்கடா பலியை நிறுத்த

வேண்டியதாயிற்று. 1940 ஆம் ஆண்டில் (விக்ரம ஆண்டு) வட்டப்பாறை நாச்சியார் என்னும்காளிக்கு எருமைக்கடா பலி நிறுத்தப்பட்டது. திரு ஸ்ரீபால் அவர்கள் கொண்ட முயற்சி நிறைவேறிற்று. நெடுங் காலமாக நடைப்பெற்று வந்த எருமைக்கடா பலி இப்பொழுது நடைபெறுவதில்லை.

"திரு டி.எஸ். ஸ்ரீபால் அவர்கள் திருவொற்றியூரில் மட்டுந்தான் பலி நிறுத்தம்செய்தார் என்று கருத வேண்டாம். தமிழ் நாட்டில் பல வட்டங்களில் பற்பல ஊர்களில் நடைபெற்று வந்த ஆடு, மாடு, கோழி, பன்றி முதலிய உயிர்ப்பலிகளை அடியோடு நிறுத்தி யிருக்கின்றார். அவர் பலி நிறுத்தம் செய்த ஊர்களின் பெயரையும் நிறுத்திய முறைகளையும் எழுதினால் இடங் கொள்ளா. பரம்பரை, பரம்பரையாக, பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகிற பழக்கத்தை நிறுத்துவது எளிதன்று. தொன்று தொட்டு நடைபெற்று வந்த பழக்கத்தைத் தடுத்து நிறுத்துவதென்றால் அது செயற்கரிய செயலாகும் 'செயற்கரிய செய்வார் பெரியார்' என்கிறபடி செயற்கரிய செயலை—பலிநிறுத்தத்தை ஸ்ரீபால் அவர்கள் செய்து வெற்றி கண்டார். இவரது அரும் பெருந்தொண்டுகளைப் பாராட்டி, தென்னிந்திய ஜீவ ரக்ஷகபிரசார சபையினர் இவருக்கு "ஜீவபந்து' என்னும் சிறப்புப் பெயர் சூட்டியது போற்றுதற்குரியது.

"ஜீவபந்து டி.எஸ். ஸ்ரீபால் அவர்களின் முயற்சியினால், பலி நிறுத்தச் சட்டம் சட்டசபையில் கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளது. எளிதில் செய்ய முடியாத, செயற்கரிய செயல்களைச் செய்து வெற்றி பெற்றவர் மிகச் சிலரே. அச்சிலரில் நமது ஸ்ரீபால் ஒருவராவர்."

(ஜய ஆண்டு சித்திரை இதழ் "அருளாட்சி")

தமிழ் நாடெங்கும் பிரசாரம்

திருவொற்றியூரில், ஸ்ரீபால் அவர்கள் உண்ணா விரதத்தின் வாயிலாக உயிர்ப்பலியானது தடைப்

பட்ட செய்தி தமிழ் நாடெங்கும் பரவியது. இதனால் தமிழ் நாட்டிலுள்ள காங்கிரஸ் சபைகள், பொது நலச் சங்கங்கள், சன்மார்க்க சங்கங்கள், சீர்திருத்த ஜீவகாருண்ய சங்கங்கள், சமூக நல் சங்கங்கள், திராவிடக் கழகம் போன்ற பற்பல நிறுவனங்களும், தனிப்பட்ட பெரியோர்களும், வாலிபர்களும், தங்கள் தங்கள் ஊரில் நடைபெறும் உயிர்ப்பலியை நிறுத்தவேண்டும் என்னும் உறுதியைக் கைக்கொண்டனர். அதனால் அவர்கள் தங்கள் தங்கள் ஊர்களுக்கு நம் ஸ்ரீபால் அவர்களை அழைக்க ஆரம்பித்தனர். ஸ்ரீபால் அவர்களும் சிறிதும் தயங்காமல் தமிழ் நாடெங்கும் சென்று அரியசொற்பொழிவுகள் ஆற்றி ஆங்காங்கு உயிர்ப்பலியை நிறுத்தி வந்தார். முதலில் அவர் செல்லும் இடங்களில் எதிர்ப்பும் பலாத்காரமும் நடைபெற்றன. பின்னர் எங்கு பார்த்தாலும் தங்கள் தங்கள் அன்பை செலுத்தி ஸ்ரீபால் அவர்களை வாழ்த்தி அவர் தொண்டினைச் சிறப்பித்துப் பாராட்டி வரவேற்புத்தாள்கள் வழங்கலாயினர்.

திருநெல்வேலி-பாளையங்கோட்டை

திருநெல்வேலியைச் சார்ந்த பாளையங்கோட்டை என்னும் ஊரில், ஆயிரத்தம்மன் என்னும் சிறு தேவதையின் கோயில் ஒன்று இருக்கிறது. அதற்கு ஆண்டுதோறும் நடத்தும் விழாவில் ஒரு சூல் கொண்டுள்ள (கருப்பம்) ஆட்டையும், ஒரு எருமைக் கடாவையும், பல ஆட்டுக்குட்டிகளையும் பலியிடுவார்கள். இக் கண்மூடி வழக்கத்தை நிறுத்தவேண்டித் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக முகவர் உயர்திரு வ. திருவரங்கம்பிள்ளை அவர்கள் ஜீவரக்ஷக பிரசாரசபையினருக்குத் தெரிவித்தார். உடனே ஸ்ரீபால் அவர்கள் தமது பஜனைக் குழுவினர்களுடன் பாளையங்கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தார். திரு. வ. திருவரங்கம் பிள்ளை அவர்களும், அவர் தம்பி திரு. வ. சுப்பையாப் பிள்ளை அவர்களும் நல்ல சிவநெறிச் செல்வர்கள். திருவரங்கம் பிள்ளை அவர்கள் மனைவியார் திருவாட்டி

நீலாம்பிகை அம்மையார் அவர்கள் சென்னை பல்லாவரம் மறைமலையடிகளாரின் மகளார் ஆவர். அதுவுமன்றி இவர்கள் அனைவரும் நல்ல தமிழ் அறிஞர்கள். மக்கள் நலமேம்பாட்டில் கருத்துள்ளவர்கள். நாட்டில் அறியாமையைப் போக்கவேண்டும் என்னும் வேட்கை மிகுதியும் உள்ளவர்கள். எனவே இவர்கள் ஆயிரத்தம்மன் கோயில் உயிர்ப்பலியை நிறுத்தி மக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்னும் எண்ணத்துடன் ஸ்ரீபால் அவர்களை அழைத்துத் தங்கள் விருந்தினராக வரவேற்று உபசரித்தார்கள். அவர்கள் குடும்பம் பழுத்த சைவக் குடும்பம். ஸ்ரீபால் அவர்களோ பழுத்த சமணர். எனினும் அவர்கள் பழகிய நட்புமுறை சங்ககால மக்களின் உறவுமுறையை நன்கு உணர்த்திற்று. பதினைந்து நாட்கள் பாளையங்கோட்டையில் திருவரங்கம் பிள்ளை அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்த ஸ்ரீபால், ஒவ்வொரு நாளும் பலிவிலக்குச் சொற்பொழிவு செய்து வந்தார். அவர்தம் கலைசான்ற சொற்பொழிவால் பாளையங்கோட்டை மக்களும், திருநெல்வேலி மக்களும் மனம் மாறினர். பலியிடும் வழக்கம் கடவுள் வழிபாட்டிற்கும், பகுத்தறிவிற்கும் புறம்பானது என்பதை உணர்ந்தனர். அதன்பயனைத் திருநெல்வேலியிலுள்ள பெரிய சிவன் கோயிலாகிய நெல்லையப்பர் கோயில் வசந்த மண்டபத்தில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதுவரையில் அவ்வசந்த மண்டபத்தில் சமய சம்பந்தமான சொற்பொழிவுகளே நடைபெறும். எனினும் ஸ்ரீபால் அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஆவலாய் இருந்த மக்கள், சைவசித்தாந்த சபையின் ஆதரவில், நெல்லையப்பர் கோயில் வசந்த மண்டபத்தில் ஒரு மாபெருங்கூட்டம் கூட்டினார்கள். அச்சமயம் ஸ்ரீபால் அவர்கள் சைவசமயப் பெரியார்களான அப்பர், தாயுமானவர், பட்டினத்தார், திருமூலர், சிவவாக்கியர், இராமலிங்கர் போன்ற ஞானியர்களின் நூல்களிலிருந்தும், சங்க இலக்கியங்களிலிருந்தும், சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற சிறந்த காப்பியங்களிலிருந்தும் மேற்கோள்களைக் காட்டித் தெய்வத்தின் முன்

உயிர்ப்பலி இடுவது சமயச் சார்புடையதல்ல வென்றும், உயிர்களிடம் அன்பாயிருக்கும் ஜீவ காருண்ய மார்க்கமே மக்கள் பண்பாட்டிற்கு உகந்த தென்றும், தமிழ்நாட்டு அறவோர்களாலும், துற வோர்களாலும் பாராட்டிப் போற்றப்பட்ட அறம் "ஆருயிர்கட்கெல்லாம் அன்புசெய்தலாகிய அறமே யாம்" எனவும் விளக்கிச் சுமார் இரண்டு மணிநேரம் பேசி முடித்தார். பின்னர் திருவாட்டி நீலாம்பிகை அம் மையார் அவர்கள் "கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வெட்ப மொழிவதாம் சொல்" என் னும் பெருநாவலர் பொருளுரைக்கு ஏற்பச் சொற் பொழிவாற்றிய ஸ்ரீபால் அவர்களின் கருத்துப்பொழி வைப் பாராட்டிப் பேசுகையில், சைவசமயம் அன்பை அடிப்படையாகக் கொண்ட சமயம் என்றும், தெய் வங்களுக்கு உயிர்ப்பலியிடும் மூட வழக்கத்தையும், அதற்கு அடிப்படையாயுள்ள நம்பிக்கையையும் அகற்ற வேண்டுமென்றும் பேசினர். பின்னர் அக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த பெரியார் ஸ்ரீபால் அவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசி "மேற் கண்ட மூட வழக்கத்தை அறவே ஒழிக்கத் துணைபுரிய வேண்டுவது இக் கூட்டத்தினரின் கடமையாம்" என்று பேசினர்கள். இவ்வாறு, திருநெல்வேலி, பாளையங்கோட்டை ஆகிய இருநகரங்கள் எங்கனும் நம் ஸ்ரீபால் அவர்களின் பலிவிலக்குப் பிரசாரம் சீரிய முறையில் நடைபெற்று வந்தது.

மகாத்மா காந்தியடிகளின் மணிமொழிகள்

இப்படி நடந்துவரும் சமயத்தில் ஒருநாள் பாளை யங்கோட்டையில் ஒரு பொதுக்கூட்டத்தில் ஸ்ரீபால் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார். அந்தநேரத்தில் உயிர்ப்பலியை ஆதரிக்கும் ஒருசிலர் கூட்டத்தில் புகுந்து கலகஞ் செய்ய ஆரம்பித்தார்கள். அதுவு மன்றி ஆயிரத்தம்மன் கோயிலில் நடைபெறும் உயிர்ப்பலி ஆகம முறைப்படி நேர்மையானதென் றும் வாதிக்கலாயினர். இவ்வாறு அவர்கள் எதிர்ப்புப் பிரசாரம் செய்யவே, ஸ்ரீபால் அவர்கள், பலிவிலக்

குத் தொண்டு செய்துவரும் வ. திருவரங்கம்பிள்ளை, திருவாட்டி நீலாம்பிகை அம்மையார், வ.சுப்பையாப் பிள்ளை முதலியோர் பேசி, முடிவில் மகாத்மா காந்தி அடிகளுக்கும் பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு அவர்களுக்கும் 14-7-37 அன்று பலியிடும் வழக்கத்தைக் குறித்துத் தங்கள் கருத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று டி. எஸ் ஸ்ரீபால் அவர்கள் தந்தி அனுப்பினார்கள். அன்றுமாலை நான்கு மணிக்கெல்லாம் அம்மாபெருந் தலைவர்களிடமிருந்து பின்வருமாறு தந்திகள் வந்தன.

"Sacrifice of animals in the name of religion and God is remnant of Babarism."

(Sd) GANDHI

சமயத்தின் பெயராலும் தெய்வத்தின் பெயராலும் உயிர்களைப் பலியிடுதல் காட்டுமிராண்டித்தனத்தின் கையிருப்பு.

(ஒப்பம்) காந்தி

(கையிருப்பு என்றால் நம்மிடமுள்ள அநாகரிகப் பழக்க வழக்கங்களில் ஒழிந்தன போக எஞ்சியிருப்பது)

"I am grieved to learn that it is proposed to offer animal sacrifice in temples. I think that such sacrifices are barbarous and they degrade the name of religion. I trust that the authorities of the temple will pay heed to the sentiments of cultured people in this matter and refrain from such sacrifices"

(Sd) JAWAHARLAL NEHRU

கோயில்களில் மிருகங்களைப் பலியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்று கேட்க மிகவும் வருந்துகின்றேன். அவ்வாறு பலியிடுதல் மிலேச்சத்தனமானதென்றும் மதத்திற்கு இழுக்காகுமென்றும் நான் கருதுகின்றேன். இதனைக் கோயில் அதிகாரிகள் கற்றவர்களுடைய மனப்பான்மையைக்

கவனித்து அவ்வாறு பலியிடுவதை விலக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

(ஒப்பம்) ஜவஹர்லால் நெஹ்ரு.

அறிவும் அனுபவமும் மிக்க இருபேரறிஞர்களின் அறிவுரைகளும் ஆயிரக்கணக்கில் அச்சிட்டு வழங்கப் பெற்றன. இதனால் மக்கள் மனம் பலிவிலக்குப் பிரசார வழியில் மீண்டும் திரும்பிவிட்டது. தர்மகர்த்தாவும் பலியை நிறுத்த உடன்பட்டார். எதிர்ப்புப் பிரசாரம் செய்யும் கூட்டத்தினருக்கு அதிர்ச்சி உண்டாகிவிட்டது. அவர்கள் திருநெல்வேலி மாஜிஸ்டிரேட் திரு. விசுவநாத முதலியார் அவர்களிடம் பின்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டார்கள். தங்கள் கோயிலில் உயிர்ப்பலியிடும் வழக்கம் தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறதென்றும், அதற்கு மாருகப் பிரசாரம் செய்யும் கூட்டத்தினரை நாடிப் பிரசாரம் செய்யாதவாறு தடை செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். மாஜிஸ்டிரேட் அவர்களின் மனுவைத் தள்ளுபடி செய்து உயிர்ப்பலியை நிறுத்தவேண்டுமெனக் கட்டளையிட்டார். அவ்வாறே அக்கோயிலில் உயிர்ப்பலி நிறுத்தப்பட்டது. மறுநாள் அவ்வூரார் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி, நம் ஸ்ரீபால் அவர்களை மனமாரப் பாராட்டினார்கள். இவ் வெற்றிச்செய்தி திருநெல்வேலி மாவட்டமெங்கும் பரவியதால் அந்த மாவட்டத்தின் பல கிராமங்களிலும் உயிர்ப்பலி நிறுத்தப்பட்டது. திருவாளர்கள் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் அவர்கள், கிருபானந்தவாரி அவர்கள் போன்ற அறிஞர்களும் இப் பிரசாரத்தில் கலந்து கொண்டனர். பாளையங்கோட்டை ஆயிரத்தம்மன் கோயில் உயிர்ப்பலி நிறுத்தச் செய்தி தமிழகத்தில் நிலவும் இந்து, சுதேசமித்திரன், தினமணி, எக்ஸ்பிரஸ் போன்ற செய்தித்தாள்களில் பெரிய எழுத்துக்களில் வெளியாயிற்று. அவைகளில் இந்து 28–7–37 இதழில் வெளியான செய்தியை மட்டும் தருகின்றோம் :

பாளையங்கோட்டை ஆயிரத்தம்மன் கோயில் தருமகர்த்தாவும், பலிவிலக்குச் சேவையில் கலந்து கொண்ட பெரியோர்களும், திரு. ஸ்ரீபால், உயர் திரு. கிருபானந்தவாரியார் அவர்களும்.

BUFFALO SBCRIFICE GIVEN UP

PALAMCOTTA TEMPLE FESTIVAL

(From our correspondent)

Tinnevelly, July 27.

As a sequel to the agitation carried on by T. S. Sripal the buffalo sacrifice in connection with the tenth day festival of the Ayirthamman temple at Palamcottah was given up to-day.

As has been already reported in these columns, there has been for sometime past a compaign against this sacrifice. Gandhiji sent a message stating that the "sacrifice of animals in the name of religion is a remnant of barbarism". Mr. Jawaharlal Nehru wrote, "I am grieved to learn that it is proposed to offer animal sacrifice in temples. I think that such sacrifice are barbarous and they degrade the name of religion- I trust that the authorities of the temple will pay heed to sentiments of cultured people in this matter and re. frain from such sacrifices".

The Tinnevely circle Temple Committe declared its opinion against the animal sacrifice and Mr. V. Muthuswami Ayyar, the trustee of the temple, decided to abandon the sacrifice in deference to public opinion. As there was a section of the public which was in favour of the sacrifice the trustee presented a petition to the Sub-Majistrate of Pallamcottah stating that he apprehended trouble and asking for bandobust during the festival. Mr. D. Viswanatha Mudaliar, the Magistrate promulgated an order under Section 144, C M.P.C restraining the members of the general public from interfering with the division of the trustee.

ஆத்தூர் செல்லியம்மன் விழாவில் உயிர் மீண்ட எருமைக்கடாக்களை ஊர்வலமாகக் கொண்டுபோகும் காட்சி

People from all parts of the district, numbering about 25,000 gathered to attend to-day's festival. The deity was taken out in procession this evening under strong police bandobust and terminated peacefully.
(Hindu)

எருமைக்கடாக்கள் உயிர் மீண்டன

சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூரில் செல்லியம்மன் என்னும் கிராமதேவதைக்கு ஆண்டுதோறும் விழா நடைபெறும். அவ்விழாவில் அத்தேவதைக்கு நூறு எருமைக்கடாக்களை வெட்டிப் பலியிடுவது வழக்கம். அக்கோரக் கொலையை நிறுத்த வேண்டி அவ்வூர் வாலிப சங்கத்தார் சென்னை ஜீவரக்ஷக பிரசார சபைக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். உடனே ஸ்ரீபால் அவர்கள் தமது பஜனைக்குழுவுடன் ஆத்தூர் சென்றார். அவ்வூர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு ஏ. சாம்பசிவ ரெட்டியார் (தற்கால சட்டசபை உறுப்பினர்) அவர்களைத் தலைவராகக் கொண்ட வாலிப சங்கத்தினர், ஸ்ரீபால் அவர்களை வரவேற்று பிரசாரத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஆத்தூர் ஒரு கூட்டுறவு கிராமமாகையால் அவ்வூரின் பல பாகங்களிலும் பஜனை ஊர்வலமும் சொற்பொழிவுகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. ஒவ்வொரு சொற்பொழிவிலும் ஸ்ரீபால் அவர்கள் உயிர்களிடத்தில் அன்பாயிருக்கும் பண்பினை அழகாகவும் உருக்கமாகவும் பேசியதுடன், தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடும் வழக்கம் காட்டு மக்களிடமிருந்தே நாட்டு மக்களிடம் நுழைந்ததென்றும், அது நமது சமயக்கொள்கைகளுக்கும், அறநெறிகளுக்கும் புறம்பானதென்றும், நாம் அனைவரும் பாமர மக்களால் வளர்க்கப்பட்டு வந்த கண்மூடி வழக்கங்களை மண்மூடி மாய்க்க வேண்டுமென்றும் பேசி வந்தார். இக்கூட்டங்களில் திரு ஏ சாம்பசிவ ரெட்டியார் அவர்களும், டாக்டர் ஆனந்தம் அவர்களும், எத்தாபூர் ஒய். எஸ். அருணாசலம் அவர்களும் உயிர்ப்பலியைக் கண்டித்துப் பேசி வந்தார்கள்.

ஆத்தூர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும், யூனியன் போர்டு தலைவரும்
அங்கத்தினர்களும் திரு ஸ்ரீபால் அவர்களைப் பாராட்டிய காட்சி

பஜனைக் குழுவின் உருக்கமான பாடல்களும் தலைவர்களின் சொற்பொழிவுகளும் மக்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கின. கிராம மக்கள் அனைவரும் அவ்வருடம் உயிர்ப்பலியை நிறுத்துவதென முடிவுசெய்து கொண்டார்கள். இந்தச் சமயத்தில் அவ்வூரில் வசிக்கும் திரு பெருமாள்சாமி என்பவர் உயிர்ப்பலியிடுவது இந்துமதத்தைச் சார்ந்ததென்றும், தெய்வவழிபாட்டிற்குப் புறம்பானதல்லவென்றும் அறிந்து, ஜீவகாருண்ய சங்கத்தாரின் பொய்ப் பிரசாரத்தைக் கேட்டு உயிர்ப் பலியை நிறுத்தினால் செல்லியம்மன் கோபத்துக்கு ஆளாகவேண்டி வரும் என்றும், ஆகவே உயிர்ப் பலியை நிறுத்துவது கூடாது எனவும் துண்டு வெளியீடுகள் அச்சிட்டுக் கிராம மெங்கும் வழங்கினார். இத்துண்டு வெளியீடுகளை ஆதாரமாகக் கொண்டு பூசாரிகளும், உயிர்ப்பலியை நிறைவேற்ற வேண்டுமெனப் பிடிவாதம் செய்யும் சிலரும் கூடி உயிர்ப் பலியை நிறுத்த வேண்டாமெனத் தெருத் தெருவாய் பிரசாரம் செய்து வந்தனர். இதனை அறிந்த ஸ்ரீபால் அவர்கள், எருமைக்கடாக்களின் விண்ணப்பமாக, "அந்தோ! பெருமாள் சாமியே!" என்னும் தலைப்பைக் கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிக்கையின் சுருக்கம் வருமாறு.

"உமது துண்டு வெளியீட்டில் எங்கள் உயிர்களுக்கு உலைவைத்து விட்டீராமே! சந்நியாசியே! ஐயோ! உம்முடையநாவா கொலையைப் போதித்தது? எங்களைப் பலியிடவும், யாகம் செய்யவும் சாத்திரம் இருப்பதாகக் கூறினீராமே! எந்தச் சாத்திரத்தில் காளிக்கு உயிர்ப்பலி உண்டு என்று கூறினீரோ அதில் நரபலியும், பௌண்டரீக யாகமும் கூறப் பட்டுள்ளதே, அதைச் செய்யும்படி வற்புறுத்த முன் வருவீரா? முன்காலத்தில் உடன்கட்டை ஏறினார்களே அவ்வழக்கத்தைப் புதுப்பிக்க உமது நாவை அசைப்பீரா? நீர் அச்சமற்ற இந்து மத சந்நியாசியாயின் நரபலி, உடன்கட்டையேறுதல், பௌண்டரீகயாகம், அலகு குத்துதல் முதலிய சாத்திர பூர்வமான தெய்வ

வழிபாடுகளைச் சொற்பொழிவாற்ற வாரும். வருவீரா? அவ்வளவு வீரம் உமக்கு ஏது? அரசாங்கச் சட்டம் உம்மை அந்தப்புரத்தில் அடைத்துவிடும் என்பது உமக்குத் தெரியும். ஆகவே, நாங்கள் திக்கற்றவர்கள். ஊமைப் பிராணிகள், அரசாங்கப் பாதுகாப்பில்லாதவர்கள் என்ற காரணத்தால் உமது நாக்கு எங்களைக் கொலை புரியலாம் என்று சுலபமாகக் கூறிற்று. ஆஹா! சந்நியாசியே! எல்லாம் வல்ல ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான். பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்கர் முதலிய உத்தமமான சமயக்குரவர்கள் கூறிய "கொல்லாமை யெத்தனைக் குணக்கேட்டை நீக்கும்" என்று கூறிய உயர்ந்த அறத்திற்கு மாறாக, அவர்களைப்போல் வேடந் தரித்தநீர் "கொலையே அறம்" எனக் கூறி எங்களை அறுக்க அனுமதி கொடுத்திருக்கின்றீரே, இது நீதியா? அறமா? முறையா? அறிவுடைமையா? நாகரிகமா? என்பதைச் சற்று சிந்தித்துப் பாரும். மக்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்லாதீர். இது எம்பணிவான வேண்டுகோள்."

இங்ஙனம்

எருமைக்கடாக்கள்

இத்துண்டு வெளியீடுகள் வெளியானவுடன் மக்கள் பலரும் பெருமாள் சாமியின் துண்டு வெளியீடுகளைக் கிழித்தெறியலாயினர். அவரையும் அவருடைய தோழர்களையும் மேலே குறித்துள்ள கேள்விகளைக் கேட்கலாயினர். அவர்கள் அவைகளுக்குத் தக்க விடையளிக்க இயலாமல் விழித்தார்கள். ஸ்ரீபால் அவர்கள் இத்துடன் நிற்கவில்லை. "ஆத்தூர் செல்லியம்மா" என்று தொடங்கும் ஒரு பாடலை இயற்றி, வீதி தோறும் உருக்கமாகப் பாடிவந்தார். வாலிப சங்கத்தினரும் தொடர்ந்து அப்பாடல்களைப் பாடி ஊர்வலமாக வந்தனர். அந்தப் பாடல்கள், எருமைக்கடாக்கள் நேரே வந்து புலம்புவது போன்ற உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டியது.

பலியிடும் நாளுக்கு முன்னுள் இரவு இப்பாடல் களைப் பாடிக்கொண்டு போகையில் சப்மாஜிஸ்டிரேட் அவர்களின் வீட்டின் முன் ஊர்வலம் சென்று கொண் டிருந்தது. மாடியிலிருந்த சப் மாஜிஸ்டிரேட் சிறிது நேரம் அப்பாடலைக் கேட்டார். மனம் இரங்கினுர். உயிர்ப்பலியை நிறுத்தவேண்டும் என ஆவல் கொண்டார். ஆனுல் சட்டம் இடம்தர வில்லை. என் செய்வார்! மறுநாள் காலை பலி விலக்குப் பிர சாரகர்களையும் அதற்கு எதிராகப் பிரசாரம் செய் வோரையும் கோர்ட்டுக்கு வரவழைத்தார். எருமைக் கடாக்களைப் பலியிடுவதை நிறுத்துவதுதான் அறி வும், நாகரிகமும் வளர்ந்து வரும் தற்காலத்திற்குப் பொருத்தமானதென்று கூறினுர். இதைக் கேட்ட பெருமாள்சாமியின் கூட்டத்தினர் பரம்பரையாக நடத்தி வரும் உயிர்ப்பலியைச் செய்வதற்குத் தாங் கள் அனுமதிக்க வேண்டுமென்று வற்புறுத்தினுர் கள். அதனைக் கேட்ட சப் மாஜிஸ்டிரேட் அவர்கள் எருமைக்கடாக்களைப் பலியிடும்பொழுது ஒவ்வொன் றையும் ஒரே வெட்டில் வீழ்த்தவேண்டும்மென் றும்,பலவெட்டுக்களால் சித்திரவதை செய்தால் எஸ்.பி.சி.ஏ. சட்டத்தின்படி விலங்குகளைச் சித்திர வதை செய்வதின் காரணமாகக் கிடைக்கும் தண்ட னையிலிருந்து அவர்கள் மீள முடியாது என்றும் எச் சரிக்கை செய்தார்.

அன்று மாலை கோயிலில் ஏராளமான கூட்டம். ஆடு கோழிகள் ஒன்றும் வரவேயில்லை. 100 எரு மைக்கடாக்கள் வரவேண்டிய விழாவில் 35 எருமைக் கடாக்களே வந்திருந்தன. சப் மாஜிஸ்டிரேட் அவர் களும் போலீஸ் அதிகாரிகளும் கோயிலுக்கு வந்தார் கள். ஸ்ரீபால் உருக்கமான சிறு சொற்பொழிவு நடத் தினுர். வந்திருந்த எருமைக்கடாக்களுக்கு உரியவர் களான 35 பேரும் தங்கள் கடாக்களை வெட்டுவ தில்லையெனத் தீர்மானித்துச் சப்மாஜிஸ்டிரேட் அவர் களிடம் தங்கள் கருத்தை வெளியிட்டனர். சப்மா ஜிஸ்டிரேட் அவர்களைப் பெரிதும் பாராட்டினுர். இதனுல் முப்பத்தைந்து எருமைக்கடாக்களும் உயிர்

மீண்டன. எருமைக்கடாக்கள் உயிர் மீண்டதை அறிந்த கூட்டத்தினர் ஆரவாரம் செய்து தங்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். உயிர்மீண்ட 35 எருமைக்கடாக்களையும் நிழற்படம் எடுக்கப் பட்டது. பின்னர் அவ்வெருமைக்கடாக்களை மேளதாளத்துடன் ஊர்வலமாகக் கொண்டுவந்தனர். அச்சமயம் ஆத்தூரிலுள்ள பல வாணிபர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தெருக்களில் நின்ற ஆண்களும் பெண்களும் உயிர்மீண்ட எருமைக்கடாக்களைக் கண்டு, 'பாவம்! இந்த எருமைக்கடாக்களுக்கு ஆயுள் கெட்டி, பூசாரிகளின் ஏமாற்றுதல் பொய் யாகிவிட்டது' என்றும் பலவாருக ஜீவகாருண்யத் தொண்டர்களின் உழைப்பைப் பாராட்டிப் பேசினர். அன்று மாலை ஆத்தூர் தலைவர்கள் பொதுமக்கள் சார் பில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தினார்கள். ஏராள மான மக்கள் கூடியிருந்தனர். அக்கூட்டத்தில் பேசிய தமிழ் ஆசிரியர் பி. சாம்பசிவ ரெட்டியார், டாக்டர் டி. எஸ். ஆனந்தம், வி. எஸ். அருணசலம், வழக் கறிஞர் பூவராகமூர்த்தி ஆகிய பலரும் ஸ்ரீபால் அவர் களின் தன்னலமற்ற தொண்டினைப் பாராட்டினர். கடைசியாக ஸ்ரீபால் அவர்கள் நன்றி கூறுகையில், இவ்வெற்றி தமது வெற்றியல்லவென்றும், நமது நாட்டின் வெற்றி என்றும், இப்பெரும் வெற்றிக்குக் காரணமாயிருந்தவர்கள் இவ்வூர் வாலிப சங்கத் தாரும், பொதுமக்களுமேயாகும் என்றும் பேசினர். இத்தியாக உரையைக் கேட்ட மக்கள் அனைவரும், கைதட்டி, "ஸ்ரீபால் அவர்களுக்கு ஜே!" என் ஆரவாரமிட்டுத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

சட்டம் கொண்டுவர முயற்சி

மக்களிடையே பல்லாண்டுகளாக வேரூன்றி யுள்ள மூட நம்பிக்கைகளை அகற்ற வேண்டுமென் பதில் பேரவாக் கொண்டவர் நம் ஸ்ரீபால். அதற் கேற்ற வகையில் எவ்வாறெல்லாம் தொண்டு செய்ய லாம் என சிந்தித்து, அதற்கு ஏற்ற பல முயற்சி



குடியாத்தம் கங்கை அம்மன் கோயிலில் உயிர்ப்பலியினின்றும் மீண்ட எருமைக்கடாக்கள். சட்டையில் நட்சத்திரக்குறி அணிந்து நிற்பவர் ஸ்ரீபால்.

களை மேற்கொள்வதில் மிக்க திறமையுடையவர் திரு ஸ்ரீபால். இதற்காக இவர் இயற்றிய நாடகங்களும் தனிப்பாடல்களுமே சான்று பகரும். "கிள்ளைவிடு தூது" என்னும் பாடல் மூலம் ஆடு, கோழி, பன்றி, எருமைக்கடா முதலிய உயிர்கள், தங்களைத் தெய்வத்தின் பெயரால் கொலை புரியும் கொடுமையை விளக்குவனபோல் பாடியுள்ளார்.

அப்பாடலில்,

> **கோயிலென் றுன்று கட்டி**
> **குட்டிச் சாமிகள் நட்டு**
> **வாய்மையற்றோர் எம்மை—கிளியே**
> **வதைக்கும் விதம் கேளாய்**

எனத் துவங்கி,

> **சட்டசபை சென்றே**
> **சந்ததம் வாதிக்கவே**
> **திட்டமுடன் உனையே—கிளியே**
> **தேர்ந்தெடுத்தோம் வாராய்**

எனக் கிளியிடம் முறையிடுகின்றன. எனவே பிரசாரத்தினுல் மட்டும் இம் மூடநம்பிக்கை அறவே அகலா தென்பதையும் இம் மூட பழக்க வழக்கங்களைச் சட்டத்தின் மூலமே ஒழிக்க முடியும் என்பதையும் இருபது ஆண்டுகட்டு முன்னரே அறிந்து எழுதியுள்ளார். இப்பாட்டுடை நூல் 1933ஆம் ஆண்டிலேயே இயற்றப்பட்டதாகும்.

> **'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
> **திண்ணியர் ஆகப் பெறின்'**

என்னும் தமிழ் மறைக்கு ஏற்ப 1938ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சி சட்டசபையைக் கைப்பற்றியது. இதுதான் தக்க சமயம் என அறிந்து, வட ஆர்க்காடு வட்ட, செய்யாறு தொகுதி சட்டசபை உறுப்பினர் திரு டி. இராமலிங்கா ரெட்டியார், எம். ஏ., பி. எல்., எம். எல். ஏ., அவர்களை, கோயில்களில் தெய்வத்திற்

காகப்; பலியிடும் வழக்கத்தை அகற்றக் கோரும் ஒரு சட்டமூலம் (மசோதா-Bill) கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். திரு. ரெட்டியார் அவர்களும் அக்கோரிக்கையை ஏற்றுச் சட்டசபைக்குப் பலி விலக்கு சட்ட மூலம் பற்றிய அறிக்கையை அனுப்பினார். இச்சட்ட மூலம் சட்டசபையில் வருவதற்குள் பொதுமக்களின் ஆதரவைத் தேடவேண்டி, சென்னை ராஜ்ய மெங்கும் உள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் பொதுகூட்டங்கள் கூட்டி, திரு.டி. இராமலிங்கா ரெட்டியார் கொண்டுவரும் '' பலிவிலக்கு சட்ட மூலத்தை'' அனுமதித்து நிறைவேற்றி வைக்கவேண்டுமெனச் அரசியலாரைக் கேட்டுக்கொள்ளும் வகையில் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசியலாருக்கு அனுப்புமாறு செய்தித்தாள்கள் மூலம் அறிக்கை விடுத்தார். இவ்வறிக்கையை எல்லாச் செய்தித்தாள்களும் வெளிவிட்டு உலகமறியச் செய்தன.

உடனே ஸ்ரீபால் அவர்கள் சென்னை ராஜ்ய மெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்யப் புறப்பட்டார். தமிழ் நாட்டில் செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், விழுப்புரம், கடலூர், சிதம்பரம், சீர்காழி, தஞ்சை, கும்பகோணம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, திருமங்கலம், திருநெல்வேலி, தூத்துக்குடி, சங்கரநயினார் கோயில், இராஜபாளையம், விருதுநகர், உடுமலைப் பேட்டை, பழநி, கோவை, திருப்பூர், மேட்டுப்பாளையம், கூனூர், உதகமண்டலம், பெங்களூர், சேலம், ஆத்தூர் முதலான பல ஊர்களுக்கும், நெல்லூர், குண்டூர், விஜயவாடா, குடிவாடா முதலிய ஆந்திர நாட்டு பேரூர்களுக்கும் சென்று, ஆங்காங்கு உள்ள பெரியோர்கள் தலைமையில் பொதுக்கூட்டங்கள் கூட்டிப் பலிவிலக்குச் சட்டம் எவ்வளவு அவசியமானது என்பதையும், அதனுல் மக்களிடம் குடி கொண்டுள்ள மூட நம்பிக்கைகள் அகல்வதுடன், தெய்வ வழிபாட்டின் மேன்மையும் உண்மையும் விளக்கமுறும் என்று சொற்பொழிவுகள் நிகழ்த்தி, இக்கருத்தையே அமைத்துப் பல தீர்மானங்கள் நிறைவேற்றச் செய்து அரசியலாருக்கு அனுப்பச்

செய்தார். இவைகளுக்கு எடுத்துக் காட்டாக சென்னையில் சர்க்கார் பார்லிமென்ட் செயலாளர் அவர்கள் தலைமையில் நடந்த ஒன்றை கீழே தருகின்றோம்.

ANIMAL SACRIFICE CONDEMNED.

Plea for Legislation

Madras, Aug. 13.

Under the auspices of the Young Men's Progressive League, Mr. Sripal of the South Indian Humanitarian League spoke yesterday on "Animal Sacrifice" Mr. B. S. Murthy, Parliamentary Secretary to Government, presided.

Mr. Sripal deplored the inhuman custom of offering 'Animal Sacrifice' in the name of religion and God. He pointed out that conditions in the country were fast changing and that all social and legislative bodies should, therefore, work for the complete eradication of this and other remnants of barbarism. He hoped the Government, which was striving to root out the drink evil, would also do something to put an end to 'Animal Sacrifice.'

The Chairman, in his concluding remarks, assured the gathering that the Government would do everything it could, to further their interests and advised them to continue to carry on propaganda against cruelty to animals.

A resolution was then passed Condemning 'Animal Sacrifice' and requesting the Government to adopt legislative measures to put an end to it.

'HINDU'—Dated 14th Aug, 38.

இதைத் தவிர ஸ்ரீபால் அவர்களின் அறிக்கையின் படி தமிழ் நாடெங்கும் உள்ள பல்வேறு சங்கங்களும் பொதுக்கூட்டங்கள் நடத்தி பலிவிலக்குத் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசியலாருக்கு அனுப்பி வைத்தன.

1939 ஆம் ஆண்டு பிறந்தது. சென்னைத் தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபையின் 12வது ஆண்டு விழா கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. சங்கப் பெரியோர்கள் அவ்வாண்டு, முதன் மந்திரி கனம் சி. இராசகோபாலாசாரியாரை ஆண்டு விழாவுக்கு அழைப்பதென முடிவு செய்தனர். அவ்வாறே அவ்வாண்டு ஜனவரித் திங்கள் 16 ஆம் நாள் கோகலே மண்டபத்தில் முதன் மந்திரி தலைமையில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அச்சமயம் சபையின் கௌரவச் செயலாளர் ஷா. தேவ்ஜிமூல்சந்த்ஜீ அவர்களால் விழாத் தலைவருக்கு வரவேற்பு இதழ் ஒன்று வாசித்தளிக்கப் பெற்றது. அவ்விதழில் தெய்வத்தின் பெயரால் கோயில்களைக் கொலைக்களமாக்கும் கொடும் செயலைச் சட்ட மூலம் தடை செய்ய வேண்டுமென விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. இதனை ஆதரித்து எஸ். பி. சி. ஏ. செயலாளர் திரு என். சி. ரங்கசாமி ஐயங்காரும், திரு. எம். எஸ். கோடீஸ்வர முதலியார், எம். ஏ., எல். டீ., திரு வி. ஜி. முனுசாமிப் பிள்ளை, ஸ்ரீபால் அவர்களும் பேசினார்கள். ஸ்ரீபால் தமது சொற்பொழிவில் தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலியிடும் வழக்கம், உலகத்தின் பல பாகங்களிலும் இருந்தன வென்றும், அந்நாடுகளிலெல்லாம், அவ்வப்போது தோன்றிய மதத்தலைகள், அறிஞர் பெருமக்கள், முதலியோர் அவ்வழக்கத்தை அறவே ஒழித்தார்கள். எனவும் தக்க வரலாற்றுச் சான்றுகளோடு பேசினார். சீன தேசத்தில் சன்யாட்சென் என்ற மாபெருந்தலைவர் தோன்றிப் பலதெய்வ வழிபாட்டை ஒழித்து, ஒரு தெய்வ வழிபாட்டை உண்டாக்கிய பெரும் புரட்சியையும் விளக்கிக் கூறினார். சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், நீலகேசி, யசோதர காவியம், திருவருட்பா,

பாரதியார் பாடல்கள் ஆகியவற்றிலிருந்து, தெய்வத்தின் பெயரால் பலியிடும் மூடநம்பிக்கைகளைக் கண்டித்திருக்கும் பாக்களை எடுத்துக் கூறி, மகாத்மா காந்தியடிகள் கூறிய அறிவுரைகளுள் தேவையானவற்றையும் கூறி உயிர்ப்பலியின் கொடுமையை விளக்கிப் பேசினார். மேலும் தெய்வத்தின் பெயரால் பலியிடும் உயிர்களை எவ்வாறு சித்ரவதை செய்கிறார்கள் என்பதையும், மக்கள் மனம் உருகும்படிப் பேசி இத்தகைய உயிர்ப்பலி இடும் வழக்கத்தை நமது காங்கிரஸ் சர்க்கார் நிறுத்தி மக்களை நல்வழிப் படுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு தன் பேச்சை முடித்தார். இவ்வரிய சொற்பொழிவைக் கேட்ட மக்கள் கை தட்டுதல் மூலம் தங்கள் ஆதரவுகளைத் தெரிவித்தனர்.

பின்னர் முதல் மந்திரி கனம் சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் எழுந்து பின்வருமாறு பதில் கூறினார்.

* துன்பத்தைப் போக்க ஒருவன் ஆட்டைக் கொல்லுகிறான். செய்த பாவத்தைத் தொலைக்க என்ன செய்ய வேண்டுமென்று அவனுக்குத் தெரியவில்லை. சொல்லுகிறவர்கள் இல்லை. முன்னோர்கள், பாட்டன்மார்கள், தகப்பன்மார்கள் அனுசரித்த வழக்கத்தைத் தானும் அனுசரிப்பதால் பாவம் போகும் என்று செய்கிறான். ஒருவன் பலியிடுவதைப் பூசை என்று நினைத்து நம்பி அதைச் செய்கையில், அப்பொழுது அது சரியல்ல என்று சொல்லக்கூடாது. "மழையில்லை, பலியிட்டால் மழை வரும்" என்று நம்பி அவன் செய்வான். திடீரெனச் சட்டத்தால் "இதை நிறுத்து" என்றால் "நீ மழை கொண்டு வருகிறாயா" என்று கேட்பான். தனக்கோ அல்லது தன் குழந்தைக்கோ நோய் வந்தால் அதனை நீக்கும்படி தெய்வத்தை பிரார்த்தனை செய்து கொண்டு ஒரு ஆட்டையோ கோழியையோ பலி கொடுக்கிறான்.

* சுதேசமித்திரன் 16-1-1939

இதனைச் சட்டத்தால் தடுக்க முயன்றால், "எங்கள் நோயை தீர்த்து விடுவாயா?" என்று கேட்பான். ஆகவே அவர்களுக்குத் தோன்றிய பக்தியின் வழியில் குறுக்கே நிற்கக் கூடாது, எனக்கூறி உயிர்ப் பலியை நிறுத்த சட்டம் செய்ய இயலாதென மறுத்து விட்டார். கனம் முதல் மந்திரியார் அவர்களிடம் இருந்து வந்த பதிலைக் கண்டு மக்கள் வருந்தினர். நம் ஸ்ரீபால் அவர்கள் ஆவலாக எதிர்பார்த்ததற்கு மாறாக பதில் கிடைத்தது பற்றி வருந்தினாராயினும் சோர்வடையவில்லை. நமது நாட்டு மக்களின் அறிவையும், நாகரிகத்தையும் வளர்ப்பதே தமது கடமையெனக் கொண்டு தீவிரமாகப் பிரசாரம் செய்ய முற்பட்டார். ஸ்ரீபால் அவர்களோ கடந்த ஒன்பது ஆண்டுகளாகச் செய்த பிரசாரத்தாலும், சொற்பொழிவாலும், நூற்றுக்கணக்கான இடங்களில் உயிர்ப்பலியை அறவே நிறுத்தி வெற்றி கண்டவர். எனவே மேலும் தமது பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்துவதில் ஊக்கம் கொண்டார்.

மஞ்சப்புத்தூர் செட்டிமார்களின் மனமாற்றம்

மதுரை, இராமநாதபுரம், பரமக்குடி, இளையாங்குடி முதலிய பாகங்களில் மஞ்சபுத்தூர் செட்டிமார்கள் என ஒரு வகுப்பார் வாழ்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் காசுக்கடை ஜவுளி முதலிய வியாபாரிகளாயிருக்கின்றனர். அவர்களுக்குக் குல தெய்வம் மானாமதுரைக்கு அடுத்த திருப்பூவனத்திலுள்ள கோரக்கநாதர் என்னும் தெய்வமாகும். இவர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் காதணி விழா நடத்துவதாயின் ஆண்டுக்கொரு முறை அங்குச் சென்று விழா நடத்தித் தங்கள் தங்கள் குழந்தைகளுக்குக் காதணி விழா நடத்துவார்கள். அச்சமயம் அந்தக் குடும்பத்தின் வளத்துக்கேற்ப 8, 16, 32 என்ற முறையில் ஆடுகளைப் பலியிடுவார்கள். 8 ஆடுகளுக்கு குறைந்த பலியே கிடையாது. இவ்விழா நடைபெறும்போது மற்றைய ஊர்களிலிருக்கும் உறவினர்களும் வந்து கலந்து கொள்வார்கள். இவர்கள் அனைவரும் தமக்கு வேண்டிய புலாலை சமைத்

துண்ணை எடுத்துக் கொண்டு, மீதியை அவ்வூராருக்கு அளித்து விடுவார்கள். இக்கொடிய பழக்க வழக்கங்களைப் பொறுக்காத இளையாங்குடி மஞ்சபுத்தூர் செட்டியாராகிய திரு. இரத்தினம் செட்டியார் அவர்கள் ஜீவரக்ஷக பிரசார சபைக்கு அறிவித்தார். உடனே ஸ்ரீபால் இளையான்குடிச் சென்றார். அவ்வூரிலுள்ள சிவாலயத்தின் வாயிற்படிக்கருகில் உள்ள ஆதிநாதர் சிலையைக் கண்டு வியப்படைந்தார். அவ்விக்கிரகத்துக்கு அழகிய கூரை அமைத்துப் பாதுகாப்புடன் வைத்திருப்பதோடு பூசையும் நடந்து வருவதாக அறிந்தார். உடனே அவ்விக்ரகத்தின் வரலாற்றைக் கேட்டார். அங்கு இருந்த ஒரு முதிய செட்டியார் ஒருவர் அது அம்மணசாமி என்றும் அதுதான் தங்கள் முதல் தெய்வம் என்றும், அதனை இன்றும் வெள்ளிக்கிழமை தோறும் எண்ணெய்க் காப்பிட்டுச் சிறப்புசெய்து வணங்கிவருகிறோம் என்றும் சொன்னார். அப்படியானால் உங்கள் ஆதிவரலாறு யாது என்று கேட்டார் நம் ஸ்ரீபால். உடனே அப்பெரியவர் எங்கள் வகுப்பார் தென்னார்க்காட்டிலுள்ள கடலூரைச் சார்ந்த மஞ்சக்குப்பத்தில் வாழ்ந்தவர் என்றும், எங்கள் வகுப்பில் பெண்கொள்ள வேண்டி ஒரு அரசன் தனக்கு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து தருமாறு கேட்டதாகவும், அவ்வாறு கொடுக்க விருப்பமில்லாத எங்கள் வகுப்புத் தலைவர், தம் வீட்டில் ஒரு பெட்டைநாயைக் கட்டிவைத்துவிட்டு, இதைத்தான் உனக்குத் திருமணம் செய்துகொடுக்க முடிவு செய்துள்ளோம் என்று ஒரு ஓலையில் எழுதி வைத்துவிட்டு இரவோடு இரவாக ஊரைவிட்டு ஓடி வந்து மதுரைப்பக்கம் குடியேறியதாகவும் கூறினார். இவ் வரலாற்றைக் கேட்டதும் ஸ்ரீபால் அவர்கள் வியப்படைந்தார். இதே வரலாறு தமிழ்நாட்டு ஜைனர்களுக்கும் உண்டு. இவ் வரலாறு "Castes and Tribes of Southern India, Vol-II" என்ற நூலில் விளக்கப்பட்டிருக்கிறது. இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், இவர்களும் ஒரு காலத்தில் ஜைனர்களாக இருந்து மதம் மாறியவர்கள் என்று அறிந்தார். இதனை மனத்தில் கொண்டு பிரசாரம் செய்ய

மதுரை மஞ்சப்புத்தூர் வைசிய வாலிபர் சங்க அன்பர்களும் நமது ஸ்ரீபால் அவர்களும்.

ஆரம்பித்தார். இளையான்குடிப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் இவ்வாண்டு முதல் கோரக்க நாதர் கோயிலில் பலியிடும் வழக்கத்தை மறக்க வேண்டு மென்றும், அவர்கள் ஒரு காலத்தில் ஆதிநாதர், மஹாவீரர், அருளிய அஹிம்சா தருமத்தை உடைய வர்கள் என்றும், ஆகவே அவர்கள் இத்தகைய பலி யிடும் வழக்கங்களை விட்டுக் கொல்லா நோன்பினர் களாக மாறவேண்டும் என்றும் உணர்ச்சி ததும்பப் பேசினர். இதைப் போன்றே பரமக்குடிமஞ்சபுத்தூர் வைசிய வாலிபர் சங்கத்திலும், இராமநாதபுரத்தி லும், சொற்பொழிவுகள் ஆற்றினர். மதுரை வைசிய வாலிப சங்க அன்பர்கள் உயர்திருவாளர்கள் து. காசிவிஸ்வநாதம் செட்டியார், த. பிச்சை செட்டி யார், ரெ. தனகோபால் செட்டியார், மு. சி. குரு நாதன் செட்டியார், பரமக்குடி, தில்லை சிதம்பரம் செட்டியார் ஆகியோர் ஸ்ரீபால் அவர்கள் பிரசாரத்தின் பயனுக 23-3-1938 லிருந்து 25-3-1938 வரை திருப்பூவனம் வந்து மஞ்சபுத்தூர் வைசியப் பெருமக் கள் பொதுக் கூட்டம்கூட்டி, உயிர்ப்பலியை அறவே நிறுத்துவதென முடிவுச் செய்தனர். அவ்வாறே பலி யின்றி பாற்பொங்கல் படைத்தனர். மதுரையில் ஒரு பெரிய கூட்டம் கூட்டி அதில் ஸ்ரீபால் அவர்களைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்கள்.

இவை போன்று நமது தென்னுடெங்கும், சிறப் பாகத் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் உயிர்ப் பலியை நிறுத்தி வெற்றி கண்டார் நம் ஸ்ரீபால். இவ்விவரங்களைத் தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபையின் ஆண்டு அறிக்கைகளில் நாம் காணலாம். பலி நிறுத்துதல் பிரசாரகாலத்தில் ஆங்காங்கு நடை பெற்ற நிகழ்ச்சிகளையும், வரவேற்புகளையும் நாம் அறியும்போது ஸ்ரீபால் அவர்களின் அரிய சேவை கள் நம்மை வியப்புக் கடலில் மூழ்கடிக்கச் செய்கி றது. இவைகளை யெல்லாம் விவரிப்பின் இவ்வேடு இடந்தராது. இருப்பினும் இரண்டொரு நிகழ்ச்சிகளை மட்டும் இங்குக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஆகையால் சிலவற்றை மட்டும் கீழே தருகின்றோம்.

கோயமுத்தூர் கோணியம்மன் பலி நிறுத்தம்.

கோயமுத்தூர் நகரில் உயிர்ப்பலியை நிறுத்திய வரலாற்றை அவ்வூர் பாரதி சங்கத் தலைவர் திரு. கே. என். பழனியப்பன் அவர்களால் எழுதப் பெற்று, அவ்வூர் பிரபல வியாபாரி சேட். திருபுவன் தாஸ் வந்த்ராவன் அவர்கள் கம்பெனியாரால் வெளியிடப்பட்ட "கோவை நகர் பலி நிறுத்தம்" என்னும் புத்தகத்திலிருந்து ஒரு பகுதியைச் சுருக்கமாகக் கீழே தருகிறோம்:

"வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணியிருக்கும். கோயமுத்தூர் நகரதேவதையான கோணியம்மன் கோவிலில் ஏராளமான கூட்டம். சுத்தமான ஆடை அணிந்து ஆடவரும் பெண்டிரும் அம்மன் கோவிலைச் சுற்றி வந்து கொண்டிருந்தனர். நறுமணங் கமழும் பலவித மலர்களாலும் ஆடை ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட அம்மனின் காட்சி பக்தர்களின் மனத்தைத் கவர்ந்தது. பலி பீடத்தின் அருகில், ஏராளமான தேங்காய்கள் உடைக்கப்பட்டன. ஏழைச் சிறுவர்கள் துண்டுத் தேங்காய்களை எடுத்துக் கொள்ளவிரும்பி ஒருவர்மேல் ஒருவராக விழுந்து பொறுக்கினர். மூலஸ்தானத்தில் இருந்த அம்மனை ஆடவரும் மகளிரும் பயபக்தியுடன் தங்கள் கரங்களைக் கூப்பி வணங்கினர். கற்பூரம், தூபம் இவற்றின் புகை கோயில் முழுவதும் மேகம்போல் பரவியிருந்தது. தூபத்தின் ஆராதனையும் மலர்களின் மணமும் மக்களைப் பரவசப்படுத்தின. கற்பூர ஆராத்தி நடக்கும் போதெல்லாம் மக்கள் மெய்மறந்து தங்கள் தாடைகளில் போட்டுக் கொண்டும், முழங்காலிட்டு, அம்மனை வணங்கிக் கொண்டுமிருந்த காட்சி என் உள்ளத்தைக் கவர்ந்தது. கோணியம்மனை இந்நகர வாசிகள் தங்கள் நகரத்தேவதையாகவும், குலதெய்வமாகவும், கொண்டாடுவதால் வழிபாடு குறைவின்றி நடந்தது. கோணியம்மன் பெயரால் இந்நகருக்குக் கோணியமுத்தூர் என்ற பெயர் முற்காலத்தில் இருந்த தென்றும், காலப்போக்கில் அது கோயமுத்தூர் எனத் திரிந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இக்கோணியம்மனுக்கு நகரமாந்தர் ஆண்டுதோறும் விழா நடத்தி, ஒரு எருமைக்கடாவைப் பலியிடுவார்கள். தேர் புறப்பட்டு வருகையில், பிரார்த்தனைக் காரர்கள் அத்தேரின் சக்கரத்தின்கீழ் ஆட்டுக்குட்டிகளையிட்டு பலி கொடுத்து வருவதும் வழக்கம்.

அன்று கோயில் அருகிலும், நகரத்தின் பல பகுதிகளிலும் மக்கள் சிறுசிறு கூட்டமாகக் கூடி ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். ஒருவர் எருமைக் கடாவையும், ஆடுகளையும் பலியிடுவதை நிறுத்தி விடவேண்டும் என்றார். மற்றவர், "நன்றாய்ச் சொன்னீர்கள்! எது இல்லாவிட்டாலும் எருமைக்கடா பலியை மட்டும் நிறுத்தக்கூடாது" என்றார். மற்றொரு பக்கத்தில் நின்ற ஒருவர், மகிஷாசுர மர்த்தனம் என்னும் கதையைச் சொல்லி பலியிடுவதுதான் முறை என்றார். இதைக் கேட்ட வேறொருவர் எருமைக்கடாவாக மாறுவேடம் பூண்டுவந்த அசுரனைக் காளி கொன்றால் ஒருபாவமும் அறியாத எருமைக் கடாவைக் காளிக்குப் பலியிடுவது என்ன நியாயம்? எனக்கேட்டார். ஒருபக்கம் வாலிபர்கள் பலர்சேர்ந்து "சாஸ்திரமோ, புராணமோ எங்களுக்கு வேண்டாம். தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபையார் கூறுகிறபடி, தெய்வத்தின் இருப்பிடத்தில் உயிர்ப்பலியிட்டு இரத்தம் சிந்தும் கொடிய பழக்கம் கூடாது. அது மனிதத் தன்மையும் அல்ல, தெய்வத் தன்மையும் அல்ல, பகுத்தறிவிற்கு உகந்ததாகவுமில்லை. இக்கொடிய வழக்கத்தை எப்படியாவது இவ்வருடம் நிறுத்திவிடவேண்டும்" என்றனர். என்னே இளைஞர்களின் ஊக்கம்! தாய்மார்கள், சகோதரிகளிலும் பலர் பலியிடுவதைப் பற்றிச் சாதகமாகவும் பாதகமாகவும் பேசிக்கொண்டிருந்தனர். இவ்வாறு பேசிக்கொள்வதின் காரணம் என்னவென்பதை அறிய முயன்றேன். என்னுடன் வந்துகொண்டிருந்த நண்பர், கடந்த ஆண்டு சென்னைத் தென்னிந்திய ஜீவரக்ஷகப் பிரசார சபையார் கோணியம்மன் கோயில் உயிர்ப்பலியை நிறுத்தப் பிரசாரம் செய்தது போலவே இவ்வாண்டும் வந்துள்ளார்கள் என்றார், இச்செய்தியைக்

கேட்டுக் கொண்டே வரும்போது 'டவுன் ஹாலை' நோக்கி ஒரு பெரிய கூட்டம் போய்க்கொண்டிருந் ததைக் கண்டேன், ஒரு பஜனைக் குழுவுடன் தென் னிந்திய ஜீவரக்ஷக சபையின் பெயர் பொறித்த தோர ணம் எடுத்துச் செல்லப்பட்டது. "மதத்தின் பெய ரால் மிருகங்களைப் பலியிடுவது காட்டுமிராண்டித் தனத்தின் கையிருப்பு" "Sacrifice of animals in the name of religion is remnant of Barbarism" என்னும் மகாத்மா காந்தியடிகளின் மணிவாக்கைக் கொண்ட பல அறிவிப்புக்கள் எல்லோர் உள்ளத்தையும் கவர்ந் தது. ஒவ்வொருவரும் அதையே மீண்டும் மீண்டும் படித்துச் சொல்வதுமாக இருந்தனர். நானும் என் நண்பரும் ஒருசில துண்டு அறிக்கைகளைப் பெற்று அவற்றைப் படித்துக்கொண்டே அக்கூட்டத்தின ரைப் பின்தொடர்ந்து டவுன்ஹால் திறந்தவெளியை அடைந்தோம்.

பொதுக்கூட்டம்

டவுன்ஹால் திறந்தவெளியில் ஆயிரக்கணக் கான மக்கள் திரண்டிருந்தனர். கோவையின் புகழ் பெற்ற வழக்கறிஞர் திரு. ஸி. கே. சுப்பிரமணிய முதலியார் பீ. ஏ., பீ. எல்., அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபையின் சொற்பொழிவாளர் திரு. ஸ்ரீபால் அவர்கள் தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலி இடு வது காட்டுமிராண்டித்தனம் என்றும், அத்தகைய செயலை நமது சமயப்பெரியோர்கள் ஆதரிக்கவில்லை என்றும், திருக்குறள் போன்ற நமது தெய்வத்தமிழ் நூல்கள் அன்பாயிருக்கும் கொள்கையையே வற் புறுத்தியுள்ளன என்றும் தெளிவாகவும் உருக்கமா மாகவும் பேசிக் கோணியம்மன் கோயில் உயிர்ப் பலியை நிறுத்துமாறு வேண்டிக்கொண்டார். தலை வர் அவர்களும் ஸ்ரீபால் அவர்களின் சொற்பொழி வைப் பாராட்டிக் கோவை மக்கள், கோணியம்மன் கோயிலில் நடைபெற விருக்கும் உயிர்ப் பலியை நிறுத்த முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்

டார். கூட்டம் இனிது முடிந்தது. அன்பர் திரு. ஸ்ரீபால் அவர்களின் சீரிய சொற்பொழிவின் வயப்பட்ட நான், அன்றுமுதல் அவர் பேசும் ஒவ்வொரு கூட்டத்துக்கும் செல்வது வழக்கம். அவர் எடுத்துக்காட்டும் மேற்கோள்களை மனப்பாடம் செய்துகொண்டு, அப்பொருள்பற்றி நானும் பேசக் கற்றுக்கொள்ள வேண்டுமென்னும் ஆவல் நாளுக்குநாள் வளர்ந்து, அவர் பேசுங் கூட்டங்களிலெல்லாம் நான் முதன்மையாக இருந்து கேட்டுவரலானேன்.

நகரெங்கும் கூட்டம்

அன்பர் ஸ்ரீபால் அவர்கள் கோவை நகரின் பல பாகங்களிலும் பலிவிலக்குக் கூட்டங்கள் நடத்தி உயிர்ப்பலியை நிறுத்துமாறு மக்களையும் தரும கர்த்தர்களையும் வேண்டிக்கொண்டு வந்தார். அவவாறே பொதுமக்களிடமும் கையொப்பங்கள் வாங்கி அவ் வேண்டுகோளைத் தருமகர்த்தர்களுக்கு அனுப்பி வைத்தார். கோணியம்மன் கோயில் தருமகர்த்தாக்களான திருவாளர்கள் பி. நஞ்சுண்ட கவுடர், போரே கவுடர், சுவாமிநாத அய்யர் ஆகிய மூவரும் பொது மக்களின் வேண்டுகோள்களை ஏற்றுப் பின்வரும் அறிக்கையை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

ஸ்ரீ கோணியம்மன் கோயில். கோயமுத்தூர்.

விளம்பரம்.

இதனால் சகலமான ஜனங்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், ஷை தேவஸ்தானத்தில் 1941ம் வருடம் மார்ச்சு மாதம் 4ம் தேதி முதல் நடக்கும் பிரமோற்சவத்தில் மகிஷா சுர மர்த்தனம் என்ற எருமைக்கடா வெட்டும் வழக்கத்தை நிறுத்த வேண்டுமென்றும் விஷயம் பாபகரமான காரியம் என்றும், சில பொதுஜனங்களாலும் ஜீவகாருண்ய சங்கத்தாராலும் மகஜர்களும் கடிதங்களும் வந்திருப்பதால்

அது விஷயமாகப் பொதுஜனங்களுக்கு ஆட்சேபனைகள் ஏதாவதிருந்தால் அவைகளை 1941-ஞு மார்ச்சு மாதம் 5-ந் தேதி மாலை 6-மணிக்குள் ஷை தேவஸ்தானம் டிரஸ்டிகளுக்குத் தெரிய படுத்திஞல் அவ்விஷயமாக அன்று தீர்மானிக்கப்படும். அன்று கோயிலில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

கோவை
1-3-1941

(Sd) பி. நஞ்சுண்ட கவுடர்
(Sd) சி. எஸ். போரே கவுடர்.
(Sd) கே. என். சுவாமிநாத ஐயர்.

இவ் வறிக்கை வெளியானதும், செய்தி காட்டுத் தீப்போல் நகரமெங்கும் பரவியது. மார்ச்சு மாதம் 5ஆம் தேதியை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். 5ஆம் தேதி மாலை ஐந்துமணிக்கெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்துவிட்டனர். சுமார் ஆறுயிரம் மக்கள் வந்து கூடினர். கூட்டத்திற்கு ஒலிபெருக்கி அமைக்கப்பட்டது. கோவைநகர் பிரபல வாணிகர் ஸ்ரீ அபயசந்த வந்த்ராவன் அவர்கள், இக்கூட்டத்திற்குக் கோணியம்மன் கோயில் தலைமை தருமகர்த்தரான திரு. நஞ்சுண்ட கவுடர் அவர்களைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொண்டார். தலைவர் தலைமைப் பதவியேற்று, "இன்று, கோணியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் நடந்துவரும் உயிர்ப் பலியை இவ்வாண்டு முதல் நிறுத்தவேண்டுமெனச் சென்னை ஜீவரக்ஷக பிரசார சபையினரும் பொதுமக்கள் பலரும் விரும்புகின்றனர், இவ்வேண்டுகோளைப் பொதுமக்களாகிய உங்களிடம் விடுவதெென முடிவுசெய்தே உங்களை இங்கு வரவழைத்துள்ளோம். உயிர்ப்பலியிடுவது சமயச் சார்புள்ளதுதாஞ? இல்லையா? என்பதுபற்றிச் சென்னையிலிருந்து வந்துள்ள அன்பர் திரு. ஸ்ரீபால் அவர்கள் இன்று விளக்கமாகப் பேசுவார். அச்சொற்பொழிவைக் கேட்டபின்னர் உங்கள் தீர்ப்பை அளிக்குமாறு வேண்டுகிறேன்" என்று கூறி, திரு. ஸ்ரீபால் அவர்களைப் பேசுமாறு அழைத்தார்.

கோவை நகர் கோணியம்மன் கோயில் பலி நிறுத்தப் பிரசாரத்தில்
திரு. ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களுடன் சேவை செய்த அன்பர்கள்.

அப்போது அங்கு வந்திருந்த [illegible]ர் அனைவரும் தங்கள் தங்கள் கரங்களை உயர்த்[illegible]த தங்கள் கருத்தைத் தெரிவித்தனர். மறுபடியும், "வழக்கம்போல் உயிர்ப்பலி நடைபெறவேண்டும் என்பவர்கள் தங்கள் கரங்களை உயர்த்தவும்" என்றார் பூசாரிகள் உட்பட அங்கு வந்திருந்த அத்தனை பேர்களில் ஒருவர் கூட கையை உயர்த்தவில்லை. இதனைக்கண்ட நஞ்சுண்ட கவுடர் மகிழ்ச்சியடைந்து, "இன்றுமுதல் இந்தக் கோணியம்மன் கோயிலில் உயிர்ப்பலி நிறுத்தப்பட்டது. இது பொதுமக்களின் தீர்ப்பாகும்" என்றார். உடனே மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். "கோணியம்மன் கோயில் தர்மகர்த்தர்கள் வாழ்க! ஸ்ரீபால் அவர்கள் வாழ்க!" என்று மக்கள் ஆரவாரமிட்டுக்கொண்டே சென்றனர். பல அன்பர்கள் ஸ்ரீபால் அவர்களுக்கு மலர்மாலையிட்டுத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

கண்மூடிவழக்கத்தை மண்மூடிப் புதைத்தனர்

எருமைக் கடாவைப் பலியிடவேண்டிய நாளாகிய 9–3–41 ல் கோயிலில் மக்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். எருமைக்கடா நிறுத்தப்படவேண்டிய இடத்தில் ஒரு பூசணிக்காய் வைக்கப்பட்டிருந்தது. அக்காட்சி அனைவர்க்கும் மகிழ்ச்சியையளித்தது. பூசாரிகள் பூசணிக்காயை உடைத்து எருமைக் கடா பலியை நிறுத்தினர். கொலை ஒழிந்தது, கொல்லாமை நின்றது; மறம் சாய்ந்தது, அறம் வென்றது; அறியாமை அகன்றது, அறிவு நிலைபெற்றது; மக்கள் எல்லோரும் மனமகிழ்ந்து விழாவில் கலந்து கொண்டனர். கோணியம்மன் தேர் ஊர்வலம் வருகையிலும் அத் தேர்ச் சக்கரத்தின்கீழ் கொடுக்கும் ஆடுகளின் பலியும் நின்றன. தெருவெல்லாம் தோரணங்கள் கட்டியும், "கொல்லா விரதத்தை மேற்கொண்ட கோணியம்மனே வருக" எனப் பலகைகளில் எழுதித் தொங்கவிட்டும் விழாவைச் சிறப்பித்தனர். இச்செய்தி **மகாத்மாகாந்தியடிகளுக்கும்** அனுப்பப்பட்டது. காந்தியடிகளும் தருமகர்த்தர்களைப் பாராட்டி ஒரு பதில் தந்தி அனுப்பிவைத்தார்.

திரு. ஸ்ரீ...ால் அவர்கள் பலத்த கைதட்டலி டையே எழுந்... தெய்வத்தின் பெயரால் உயிர்ப் பலி ஏற்பட்ட வரலாற்றையும், பூசாரிகளால் அத் தெய்வத்திற்குக் கற்பிக்கப்பட்ட சக்திகளையும், மதப் பெரியோர்களும், அறிஞர் பெருமக்களும் இவ் வழக் கத்தை உலகமூடம் என அழைத்துக் கண்டித்திருப்ப தையும், ஐந்து சிறு காவியங்களில் ஒன்ருன யசோதர காவிய சரித்திரக் கதையையும் அழகாக எடுத்துப் பேசினர், அவர் மேலும் பேசுகையில் உயிர்களி டத்து அன்பாயிருப்பதன் மேன்மையையும் உயிர்க் கொலையால் வரும் தீதையும் மக்கள் மனத்தில் பதியு மாறு விளக்கினர். மூட நம்பிக்கைகள் சமூக முன் னேற்றத்திற்குத் தடைகள். அத்தடைகளை ஒழிக்கக் கல்வியும் சட்டமும் தேவை '' என மேல்நாட்டறிஞர் கூறிய அறிவுரையை எடுத்துக்காட்டி, 'தருமகர்த் தாக்களும் பொதுமக்களும் இந்த உயிர்ப்பலியை நிறுத்தி, நமது தமிழகத்தின் பெருமையையும் மக் கள் நாகரிகத்தையும் திருக்குறள் கூறும் அறநெறி யையும் உலகறிய நிலைநாட்டவேண்டும்' என்று வணக்கமாகக் கூறித் தமது உரையை முடித்தார். அவர் தமது உரையை முடிக்கும்போது '' கோயில் முன் கொலை வேண்டாம். கோவிலைக் கொலைக்கள மாக்காதீர்கள். அஹிம்சா தர்மத்திற்கு ஜே!'' என்பன போன்ற ஒலிகள் முழங்கின, இவரது அன் றைய சொற்பொழிவு மக்களின் மனத்தைக் கவர்ந் ததோடல்லாமல், கோயில் தருமகர்த்தர்களில் ஒருவ ரான திரு. கே. என். சுவாமிநாத ஐயர் அவர்கள், '' பலியிடுவது தவறு என்பதை, இவரது சொற்பொ ழிவின் மூலமாகத்தான் நான் அறிந்துகொண்டேன் என்றும் சுருதி, யுக்தி, அனுபவ வாயிலாக விளக்கிய அவர்தம் சொற்பொழிவைக் கேட்ட பின்னரும் உயிர்ப்பலி செய்வது அறியாமை என்பதையும் அறிந்தேன் '' என்று பாராட்டினர். பின்னர் தலை வர் திரு. நஞ்சுண்ட கவுடர் அவர்கள் எழுந்து, '' இவ் வாண்டுமுதல் கோணியம்மன் கோயிலில் உயிர்ப்பலி வேண்டாமென்போர் தங்கள் கரங்களைத்தூக்கி ஆத ரவு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் '' என்ருர்.

பாராட்டுக்கூட்டம்

அவ்வூர் புகழ்பெற்ற வணிகரும் திரு. ஸ்ரீபால் அவர்களுக்கு உதவியாயிருந்து தொண்டு செய்தவருமாகிய திரு. சேட். அபயசந்த் வந்த்ராவன் அவர்கள் தர்மகர்த்தாக்களுக்கும், திரு. ஸ்ரீபால் அவர்களுக்கும் தேநீர் விருந்தளித்து 17-3-1941-ல் ஒரு பாராட்டுக் கூட்டம் நிகழ்த்தினர். அக் கூட்டத்திற்கு உயர் திரு.டி.ஏ. இராமலிங்கம் செட்டியார் எம்.எல்.சி. அவர்கள் தலைமை வகித்தார். திருவாளர்கள் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் சி. பி. இ. யு. சி., வெள்ளியங்கிரி கவுடர், சி. கே. சுப்பிரமணிய முதலியார் பீ. ஏ. பீ. எல்., நகரசபைத் தலைவர் கே. சுப்பிரமணியம், டி. டி. இரத்தினசபாபதிப் பிள்ளை, டாக்டர். சி. நஞ்சப்பா, கௌரவ மாஜிஸ்டிரேட் பி. என். சண்முக கவுடரும், ஆலந்துறை ஸ்ரீமதி ராமக்காள் முதலிய பெரியோர்கள் கோணியம்மன் கோயில் உயிர்ப் பலியை நிறுத்த விடாமுயற்சியுடன் தொண்டாற்றிய திரு. ஸ்ரீபால் அவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசித் தர்மகர்த்தாக்களின் உயர்ந்த மனப்பான்மையையும், ஜனநாயகத்துறையில் அவர்கள் உயிர்ப் பலியை நிறித்தியதையும் புகழ்ந்து பேசினர். பின்னர் திரு. ஸ்ரீபால் அவர்கள் பேசுகையில், 'இவ்வெற்றி கோயமுத்தூர் மக்கள் வெற்றி' யென்றும். 'இங்கு கூடியுள்ள பெரியோர்களின் ஆதரவினுலேயே இத்தகைய சீர்திருத்தங்களைச் செய்யமுடியும் என்பதற்கு இவ்விழாவே சான்று பகரும்' எனக்கூறி, 'எங்களுடன் இவ்வுயிர்ப்பலியை ஒழிக்க இரவுபகலாக உடனிருந்து தொண்டாற்றிய அன்பர்கள் திரு.ரமணிக்லால், ராஜேந்திரன், சுந்தரம், பழனியப்பன், மல்லிகார்ச்சுனன் முதலியோர்களையும் பாராட்டிப் பேசிப் பின், அவர்களை அங்குள்ள பெரியோர்களுக்கு அறிமுகப்படுத்தி அனைவருக்கும் தம் நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்தித் தம் உரையை முடித்தார். உடனே அங்கிருந்தவர்கள், "ஸ்ரீபால் அவர்கள் வாழ்க!" "ஸ்ரீபால் அவர்கள் வாழ்க!" என ஆரவாரமிட்டுத் தங்கள் மகிழ்ச்சி

யைத் தெரிவித்தனர். இவ் வெற்றிச்செய்தி, நாடெங்கும் பரவியது.

பூசாரிகளின் மனமாற்றம்

திருப்பாதிரிப்புலியூர் பாடலீஸ்வரர் தேவஸ்தானத்தைச் சார்ந்த கோயிலில் பிடாரியம்மன், வண்ணுரை மாரியம்மன் என்னும் இரு சிறு தெய்வங்கள் உள்ளன. இவைகளுக்கு விழாநடத்தி கோயிலின் சார்பில் ஐந்து ஆட்டுக் கடாக்களைப் பலிகொடுத்த பின்னர்தான் பாடலீஸ்வரர் விழா நடைபெறும். இதனை நிறுத்த வேண்டி திரு. ஸ்ரீபால் அவ்வூர் சென்று அங்குள்ள தேசிய வாலிபர் சங்கத்துச் செயலாளர் திரு. S. நடராசப் பிள்ளையுடன் கலந்து பேசினர். அதன் பயனாக அச்சங்கத்தார் துணைபுரிய முன் வந்தனர். பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் ஏராளமான மக்கள் வந்து பிரசாரத்தில் கலந்து கொண்டனர். திரு. ஸ்ரீபால் தமது சொற்பொழிவில், "மாரி, பிடாரிகள் உண்மையில் தெய்வங்கள் அல்ல" என்றும், "அன்பே சிவம்" எனக்கடவுளைப் போற்றி அன்புவழியி ல்வாழ்ந்த மக்களைக் கொலைவழியில் செலுத்தவேண்டி சிறு தேவதைகள் சிவாலயங்களுடன் சம்பந்தப் படுத்தப் பட்டனவேயன்றி இக்கொள்கை தெய்வ சம்பந்தமானதல்லவென்றும், ஆகவே அக் கற்பனைச் சிறு தேவதைகளை நம்பி உயிர்க்கொலை புரிதல் மூட நம்பிக்கை என்றும், திருக்குறள், அருட்பா போன்ற அறநூல்களின்வழி நின்று உயிர்ப்பலியை ஒழிக்கவேண்டும் என்றும் விளக்கிப் பேசினர். கூட்டத்தில் ஒருவர் எழுந்துநின்று "இச் சிறு தேவதைகளுக்குச் சிறப்புச் செய்யாவிட்டாலும், தங்கள் தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்தாவிட்டாலும் கிராமங்களில்பெருவாரியாக நோய்களும், துன்பங்களும் உண்டாகும் என்கிறார்களே அது பொய்யா?" என்றார். உடனே ஸ்ரீபால் அவர்கள், கேள்வி கேட்ட திரு. ஏகாம்பர கிராமணியார் அவர்களைப் பார்த்து, "இதைப் போன்று கேள்வி கேட்போரை நான் மனமார வரவேற்கிறேன்.

உயிர்ப்பலியிடும் வழக்கம் மிகப்பழங் காலத்திலிருந்தே நடந்து வருவதால் மக்களுக்குச் சந்தேகம் எழுவது இயல்பு. எனவே அவர்களின் வினவிற்கு விடைகொடாவிடில், எங்கள் பிரசாரத்தால் பயன் இல்லை. அது கடமையிலிருந்து வழுவிய குற்றமும் ஆகும். எனவே யார் வேண்டுமானாலும் இப்பொருள் பற்றிக் கேள்விகள் கேட்கலாம். அன்பர் ஏகாம்பர இராமணியார் கேட்ட கேள்வி ஆயிரக்கணக்கான மக்களின் மூடநம்பிக்கைகளை அகற்றும் என்பதில் ஐயமில்லை. எனவே நான் அவரைப் பாராட்டுகிறேன்'' எனக் கூறி அவர் கேட்ட கேள்விக்குக் கீழ்க்கண்ட பதிலைக் கூறினர்.

"எந்தத் தெய்வமும் மக்களுக்குத் திங்கு செய்யாது. அவ்வாறு தீங்கு செய்யுமானல் அது தெய்வமும் ஆகாது. எனவே அவைகள் துஷ்டதெய்வங்கள் என்று பூசாரிகளால் அச்சுறுத்தப் பட்டனவேயன்றி வேறில்லை. யான் இத் தமிழகத்திலும் ஆந்திர நாட்டிலுமுள்ள சிறு தேவதைகளுக்குக் கொடுக்கப்படும் உயிர்ப்பலியைத் தடைசெய்து சுத்தபூசை புரியுமாறு செய்துள்ளேன். சமயக் குரவர்களால்பாடல் பெற்ற திருவொற்றியூர் சிவாலயத்தில் நடைபெற்று வந்த எருமைக்கடாப் பலியை உண்ணாவிரதமிருந்து நிறுத்தியுள்ளேன். இவ்வாறு செய்துவரும் என்னை எந்தத் தெய்வமும் துன்புறுத்தவில்லை. அல்லது காலரா, வைசூரி முதலிய நோய்களால் கொன்றுவிடவுமில்லை. விருத்தாசலம் விருத்தாசலேஸ்வரர் கோயிலில் உள்ள செல்லியம்மனுக்கு சுமார் இருபத்தைந்து ஆட்டுக்கடாக்களைப் பலிகொடுப்பது வழக்கம். ஏழு எல்லைகள் சுற்றிவந்து ஆடுகளை வெட்டி இரத்தச்சோறு சிந்துவார்கள். அக்கொடும் பலியை நிறுத்த நான் முயற்சித்தபோது, அக்கோயில் தரும கர்த்தர் வழக்கறிஞர் உயர்திரு. பார்த்தசாரதி முதலியார் அவர்களும் அவர் தோழர்களும் பலியை அறவே நிறுத்துவதென முடிவு செய்தார்கள். இச் செய்தியறிந்த பூசாரிகள் பலியில்லாமல் எல்லைச்சட்டியை எடுத்தோட முடியாது என மறுத்துவிட்டார்கள்.

இந்த நெருக்கடியைச் சற்றுநேரம் சிந்தித்த தரும கர்த்தர் திரு. பார்த்தசாரதி முதலியார் அவர்கள் என்னை நோக்கினர். உடனே நான், உயிர்ப்பலியில்லாமல் பலிச்சட்டியைத் தூக்கிக்கொண்டு எல்லைகளைச் சுற்றிவரத் தயாராயிருக்கிறேன், என்றேன். உடனே இதற்கு எல்லோரும் சம்மதித்தார்கள். பூசாரிகள், ''ஐயோ! வழியில் அவரைத் தெய்வம் அறைந்துவிடுமே!'' என்று அச்சுறுத்தினர்கள். நான் அஞ்சவில்லை. ஓடத் தயாரானேன். பலிச்சட்டியும் என்னிடம் கொடுக்கப்பட்டுவிட்டது. பலிச்சட்டியைத் தூக்கிக்கொண்டு பூசாரிகளுடனும் பறைகொட்டுவோருடனும் மூன்று எல்லைகள் சுற்றிவந்தேன். இந்த அதிசயத்தைக் காண பொதுமக்களில் சிலர் என்னைப் பின்தொடர்ந்தனர். இம் மூன்று எல்லைகள் வரையிலும் எவ்வித ஆபத்தும் எனக்குத் தோன்ருததைக் கண்ணுற்ற பூசாரிகள் அச்சம் நீங்கித் தாங்களே ஓடுவதற்கு முன்வந்தார்கள். யானும் அவர்களிடம் பலிச் சட்டியைக் கொடுத்துவிட்டுக் கடைசி எல்லை வரை உடன்சுற்றி வந்தேன். யாருக்கும் எவ்வித ஆபத்தும் நேரிடவில்லை இரவு ஒன்பது மணிக்குப் புறப்பட்ட நாங்கள் காலை நான்குமணிக்கு வந்து சேர்ந்தோம். எங்களைப் பார்த்து மக்கள் ஆரவாரம் செய்தார்கள். இதுவரை இச்சிறுதெய்வங்களைப் பற்றிக் கூறிய கதைகள் எல்லாம் பொய் என்று மக்கள் பேசத் துவங்கினர். இதனல் எல்லாப் பலிகளும் நின்றுவிட்டன. ஆகவே தெய்வங்களைக் கொடிய தெய்வங்கள் என்று எண்ணவேண்டாம்'' என்று கூறிமுடித்தார்.

உடனே கேள்விகேட்ட திரு. ஏகாம்பர கிராமணியார் அவர்கள் மகிழ்ச்சிபொங்க எழுந்திருந்து ''பிடாரியம்மன் கோயில், வண்ணுர மாரியம்மன் கோயில் சம்பந்தப்பட்ட திரு. சின்னசாமி, பம்பைக்கார வெங்கடாசலம், சபாபதி ஆச்சாரி, நான் மற்றும் சில பிரமுகர்கள் பிரசாரத்திற்குக் கட்டுப்படாமல் உயிர்ப்பலி செய்தே தீருவது என முடிவுசெய்திருந்தோம். இன்றும், நேற்றும் உங்கள் சொற்பொ

திருப்பாதிரிப்புலியூர் கோயில் தருமகர்த்தாக்களும், திரு ஸ்ரீபால் அவர்களும். 1, 2, 3 எண்கள் குறித்துள்ளவர்களே உயிர்ப்பலியை நிறுத்த ஒப்புக் கொண்ட மூவர்.

ழிவைக் கேட்டு நல்லறிவு பெற்ருேம். உயிர்ப்பலியை நிறுத்த முழுமனதுடன் உங்களுடன் ஒத்துழைக்கின்ருேம்'' என்ருர். பின்னர் உயிர்ப்பலியிடும் உரிமை பெற்ற அம்மூவரும் உறுதி கூறினலன்றி நம்பமுடியாதென மக்கள் ஒருமுகமாகக் கூறினர். உடனே அம்மூவரும் சபையின்முன் வந்து உயிர்ப் பலியை நிறுத்த முழுமனத்துடன் சம்மதிக்கின்ருேம் என்றனர். இச்செய்தி கேட்டு, மக்கள் ஆரவாரம் செய்து, அம்மூவரையும் வாழ்த்தினர். தருமகர்த்தாக்கள், திருவாளர்கள் ஏ. டி. கிருஷ்ணசாமி அய்யங்கார், பி. ராமசாமி ரெட்டியார், முத்துக்குமார சாமி செட்டியாரும் பொதுமக்களும் உயிர்ப்பலியை நிறுத்தி விழா நடத்தினர்.

இவ் வெற்றியை தமிழ்நாடெங்கும் அறியும்படி ''புதியவர்கள்'' என்னும் தலைப்பின்கீழ், மேற்கூறிய பம்பைக்கார வேங்கடாசலம், சின்னசாமி, ஏகாலி, சபாபதி ஆச்சாரி முதலியவர்கள் தங்களுக்கு உரிமையான பலியிடும் வழக்கத்தை அகற்றி பாற்பொங்கல் படைத்த வரலாற்றைத் துண்டு வெளியீடுகள் வாயிலாக வெளியிட்டார்கள்.

பெண்மணிகள் தொண்டு

திருச்சி ஜில்லா லால்குடிக்குச் சமீபமாகவுள்ள பெருவள நல்லூர் கிராமத்தில் நடைபெறும் கிராம தேவதைவிழாவில் நடக்கும் உயிர்ப்பலியை நிறுத்தப் பிரசாரம் செய்தார் நம் ஸ்ரீபால். அங்கு மூன்று நாட்கள் அரிய சொற்பொழிவு ஆற்றினர். அம்மனின் தேர் ஊர்வலம் வந்தது. அன்று இரவுதான் பலியிடும் நாள். எனவே தேர் வரும்போது ஒவ்வொரு வீட்டிலும் பலிவிலக்கு நீதிமொழிகள் கோலமாக இடப்பட்டிருந்தன. ஸ்ரீபால் அவர்களின் சொற்பொழிவில் கூறிய அரிய மொழிகள் அக் கோலங்களில் காணப்பட்டன.

''கோயிலைக் கொலைக்கள மாக்காதீர்கள்''

''எந்தத் தெய்வமும் உயிர்ப்பலியை விரும்பாது''

''மனிதனே கொலையும் புலையும் தவிர்க்க வேண்டு மென்றால், தெய்வம் கொலையும் புலையும் விரும்புமா''

''கண்மூடி வழக்கங்கள் மண்மூடிப்போக''

''மதம் அறிவை வளர்ப்பது. தெய்வம் அருளை வளர்ப்பது. ஆகவே உயிர்ப்பலியிடுவது. மதசம்மந்தமும் அல்ல, தெய்வ சம்பந்தமும் அல்ல''

''நோய்களும் துன்பங்களும் தெய்வங்களால் உண்டாவதல்ல சுகாதாரக் கேட்டினாலும், உடற் கோளாறு கள் காரணமாகவும் உண்டாகும்.''

''உங்கள் மக்களும் நீங்களும் நோய்பட, எங்கள் மக் களும் யாங்களும் என்செய்தோம்''

இவைகளை எல்லாம் நம் ஸ்ரீபால் அவர்கள் பார்த்துப் பூரித்து விட்டார். மக்கள் எல்லோரும் கோலங்களைப் படிக்க ஆங்காங்கு கூட்டமாகக் கூடிவிட்டனர். கோலங்களில் உள்ள வாசகங்களைப் படித்து மகிழ்ந்தனர். இக் கோலங்களே மக்களின் சொற்பொழிவுகளாக மாறிவிட்டன. இதனால் சுமார் இருநூறு ஆட்டுக் கடாக்கள் பலியிடப்பட வேண்டிய இடத்தில் ஐந்நூறு ஆடுகள்தாம் பலியிடப்பட்டன, அவையும் பூசாரிகளின் குடும்பங்களைச் சார்ந்தவை எனக் கூறப் பட்டது. அன்றிரவு நடந்த பாராட்டுக் கூட்டத்தில், நம் ஸ்ரீபால் அவர்கள், இவ்வுயிர்ப்பலி நிறுத்தப் பெருமுயற்சியில் ஈடுபட்ட உயர்திருவாளர்கள் முத்து ரெட்டியார் அவர்களையும் கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களையும் பாராட்டியதுடன் பெண்மணிகள் செய்த அரும்பெரும் தொண்டையும் பாராட்டினர். ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள'' என்னும் தமிழ் மறைகூறும்பெருமைக்கேற்பவும்,''பெண்ணருங்கல மீது பெறுதன் மானுடர்க்கு, எண்ணருந்தகைத்து'' என்னும் சூளாமணி காவியத் திருமொழிக் கேற்பவும் இன்று பெண்களின் பெருமை விளங்கிற்று எனப்

புகழ்ந்து, இந்த முழு வெற்றிக்குக் காரணமாயிருந்த கலைச்செல்விகளுக்குத் தமது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து அமர்ந்தார்.

இவ்வூர், கோயமுத்தூர், திருப்பாதிரிப்புலியூர், பரமக்குடி ஆகிய இடங்களில் நடந்த உயிர்ப்பலிகள் நிறுத்தப்பட்டு வெற்றிகண்ட செய்தியைத் தமிழ் நாட்டின் ஹிந்து, சுதேசமித்திரன், மதருஸ் மெயில் போன்ற செய்தித்தாள்களும் வடநாட்டு ஜெயின் கெஜட்டிலும், இங்கிலாந்து தேசத்தில் வெளியாகும் "அனிமல் சாம்பியன்" (Animal Champion) என்ற ஆங்கில இதழிலும் நன்ருக விளக்கிப் புகழ்ந்து எழுதியுள்ளன. இவைகளில் "மதருஸ் மெயில்" 24-3-42 இதழிலும் இந்த வெற்றிச் செய்தியைத் துணைத் தலையங்கமாகவே எழுதிப்புகழ்ந்துள்ளது. இவைகளை இந்நூலின் இறுதியில் பிற்சேர்க்கையாக இணைத்துள்ளோம்.

கங்காதர நல்லார்

சித்தூர் ஜில்லாவில் உள்ள பொதட்டூர்பேட்டையில் ஆண்டுதோறும் மாரியம்மன் திருவிழா நடைபெறுவது வழககம். அவ்விழாவில் ஆயிரக்கணக்கான உயிர்ப்பலிகள் நடைபெறுவது வழக்கம். அதனை நிறுத்தவேண்டி அவ்வூர்ப்பிரபல வியாபாரி எகிரி, சுப்பிரமணிய முதலியார் அவர்கள் அழைப்பின் பேரில் நம் ஸ்ரீபால் அவர்கள் பொதட்டூர்ப் பேட்டைக்குச் சென்று பிரசாரம் செய்தார். அவர், நம் சொற்பொழிவினை ஆற்றும்பொழுது திருநெல்வேலி ஜில்லா சங்கர நயினூர் கோயில் முப்பிடாரி அம்மனுக்கு ஆயிரக்கணக்கான ஆடுகளைப்பலியிட்டு வந்த வழக்கத்தை அவ்வூர்ச் செங்குந்த மரபினைச் சார்ந்த இளைஞர்கள், "பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை" என்னும் நாடகத்தை நடித்துக் காண்பித்து, செங்குந்த மரபினர் அனைவரும் உயிர்ப் பலியை நிறுத்த வேண்டுமென நாடகத்தின் வாயிலாகக் கேட்டுக்கொண்டனர் என்றும் அதன் காரண

கோவில்பட்டி தாலுக்கா வாகைததாவூர் கிராமத்தில் மாரியம்மன் விழாவில் உயிர்ப்பலி நிறுத்திய பெரியோர்களும் ஸ்ரீபாலரும். உட்கார்ந்திருப்பவர்களில் வலமிருந்து இரண்டாவது ஸ்ரீபால்

சிதம்பரபுரத்தில் உயிர்ப்பலி நிறுத்திய காட்சி. உட்கார்ந்திருப்பவர்களில்
இடமிருந்து மூன்ருவது ஜீவபந்து ஸ்ரீபால்.

மாக ஆயிரத்தைந்நூறு செங்குந்தர் குடும்பங்கள் உயிர்ப்பலியை நிறுத்திப் பாற்பொங்கல் படைத்தார்கள். என்றும், அதுபோன்று இங்குள்ள இளைஞர்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இவர் தம் சொற்பொழிவை இரண்டு மூன்று நாட்களாகக் கேட்டுவந்த கங்காதர முதலியார் என்னும் இளைஞர் கடைசி நாள் கூட்டத்தன்று, "அவ்வூர் ஆடுகளை வெட்டுவது தமது குடும்பத்தைச் சார்ந்ததென்றும், அதற்காகத் தமக்கு மானியமும் விடப்பட்டிருக்கின்றது என்றும், இன்று முதல், தாம் உயிர்ப்பலி இடும் உரிமையையும் மானியத்தையும் விட்டுவிடுவதாகவும்" கூறி, ஆடு வெட்டும் கூரிய வாளைச் சபையின் முன் வைத்துவிட்டுத் தம்பணிவோடு கூடிய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார். உடனே மக்கள் கங்காதரன் வாழ்க! என்றுப் பலமுறை கூறி வாழ்த்தினர். ஸ்ரீபால் அவர்களும் கங்காதரருடைய தியாகத்தைப் பாராட்டி இன்றுமுதல் இவரைக், "கங்காதர நல்லார்" என அழைக்க வேண்டுமெனப் புகழ்ந்துப் பேசினார். அன்று முதல் பொதட்டூர் பேட்டை மாரியம்மன் கோயிலில் உயிர்ப்பலி நின்றுவிட்டது. இவ்வற்புதச் செய்தியை அச்சிட்டு வழங்கிக் கங்காதர நல்லாரின் செயற்கரிய செயலைத் தமிழ்நாடெங்கும் அறியும்படிச் செய்தார் நம் ஸ்ரீபால்.

சொற்பொழிவின் ஆற்றல்

திருநெல்வேலி ஜில்லா புதுப்பட்டி கிராமத்திலுள்ள முத்து மாரியம்மன் விழா ஆண்டுதோறும் நடைபெறுவதுண்டு. அவ்விழாவில் உயிர்ப்பலியிடும் வழக்கம் மனிதத் தன்மையற்றது. அம்மனின் பிரார்த்தனைக்காகக் கொண்டு வரும் ஆடுகளை ஓடவிட்டு அவைகளை உயிர் போகும் வரை தடிகளாலும் உலக்கைகளாலும் அடித்துச் சித்ரவதை செய்து பலியிடுவார்கள். இக்கொடிய நிகழ்ச்சியைத் தெய்வ வழிபாடாகக் கொண்டாடி வருகிறார்கள். இக் கொடும் பலியை நேரே அறிந்துவர ஸ்ரீபால்

1944 ஆம் ஆண்டு அவ்வூர் விழாவிற்குச் சென்றார் அன்று நடைபெற்ற கோரமான செயல்களைக் கண்டு வருந்திஞர். மன்னுயிர்களின் இடர்களைத் தவிர்க்கச் சென்ற அவர் அங்குள்ள மக்களின் மிருகச்செயல் களைக் கண்டு வருத்தத்தோடு சென்னை திரும்பிஞர். அடுத்த விழாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். 1945 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 'திருநெல்வேலி ஜில்லா கலெக்டருக்கும், திருநெல்வேலி எஸ்.பி.சி.ஏ. சங்கத்திற்கும், புதுப்பட்டியில் நடைப்பெறும் உயிர்ப் பலி பற்றி விவரமாக எழுதியதுடன் 28–3–45 ல் அவ்வூரில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டம் ஏற்பாடு செய் திருப்பதாகவும் அறிவித்தார். பின்னர் ஸ்ரீபால் அவர் கள் மார்ச்சு 27 ஆம் தேதி புறப்பட்டு புதுப்பட்டிக்குச் சென்றார். மறுநாள் மாலை நடைபெறப் போகும் பொதுகூட்டத்திற்கு அவ்வூரிலுள்ள உயர்திரு. சங்கர நாராயணம் பிள்ளை அவர்கள் போன்ற பிரமுகர்களி டம் பேசி ஏற்பாடு செய்தார். 28–3–45 மாலை ஸ்ரீவைகுண்டம் சப்மாஜிஸ்டிரேட் திரு. ஜெயமணி நாடார் பி.ஏ., அவர்கள், தாசில்தார்., திரு பொன்னு சாமி நாடார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், மௌல்வி சாயபு, எஸ்.பி.சி.ஏ. இன்ஸ்பெக்டர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அன்று ஸ்ரீபால் அவர்கள் உயிர்ப்பலியிடும் வழக்கம் தெய்வ வழி பாட்டிற்கு முரண்பாடானது என்பதை விளக்கிப் பேசிஞர். பின்னர் 10–4–45 ல் ஒரு கூட்டம் நடத்த முடிவு செய்து விட்டு, ஸ்ரீபால் அவர்கள் புதுப்பட்டி யைச் சார்ந்த சுற்றுக் கிராமங்களில் பிரசாரம் செய்து வந்தார். மேலே கூறிய அதிகாரிகளும் புதுப் பட்டி வந்து சேர்ந்தார்கள். கடைசியாக 10–4–45 ல் கூட்டத்திற்கு ஏற்பாடாயிற்று. இக்கூட்டம் மிக முக் கியமானதால் இக்கூட்டத்திற்கு சப்மாஜிஸ்டிரேட் உயர்திரு. ஜெயமணி நாடார் பி. ஏ. அவர்கள் தலைமைவகித்தார்கள். ஸ்ரீபால் அவர்களைப்பேசுமாறு திரு. மாஜிஸ்டிரேட் பணித்தார்கள். நாளைய தினம்

புதுப்பட்டி பிரசாரத்தில் கலந்து கொண்ட அதிகாரிகளும் ஸ்ரீபால் அவர்களும்.
இடது பக்கம் கோடியில் உட்கார்ந்திருப்பவர் ஸ்ரீபால்.

விழாவின் கடைசி தினமாயையால் ஆயிரக் கணக்கான மக்கள் வந்து கூடி யிருந்தனர். எனவே ஸ்ரீபால் அவர்கள் பெருத்த கை தட்டலிடையே எழுந்து முத்துமாரியம்மன் முன்னே நடைபெறப் போகும் ஆடுகளை அடித்துச் சித்திரவதை செய்யும் பிரார்த்தனையைப் பற்றி மக்கள் மனம் உருகுமாறு பேசினார்.

''தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ மன்னுயிர்க் கின்னா செயல்''

என்னும் திருக்குறளைக் கொண்டு ஒரு மணி நேரம் பேசினார். ஸ்ரீபால் அவர்களும் ஆடுகளின் துன்பங்களை விளக்கும் போது கண்ணீர் சிந்திவிட்டார். அதனைக் கண்ட அத்தனை மக்களும் கண்ணீர் உகுத்து கலங்கி விட்டனர். ஆடுகளை அடிப்பதற்காக கொண்டு வந்த தடிகளைச் சிலர் வீசி எறிந்தனர். கிராமப் பெரியோர்கள் கூட்டங்கூட்டமாகக் கூடி பேச ஆரம்பித்தனர். வெளியூர் மக்களும் தங்கள் தங்கள் பிராத்தனை ஆடுகளைப் பலியிடுவதில்லை யெனக் கூறி விட்டார்கள். புதுப்பட்டி கிராமத்தலைவர்கள் பலரும் சேர்ந்து திரு. ஸ்ரீபால் அவர்களிடமும் அதிகாரிகளிடமும் இவ்வாண்டு முதல் இக்கொடும் பலியை மனத்தாலும் நினைப்பதில்லை யென ஆணையிட்டுக் கூறினர். அதிகாரிகள் ஆனந்தமடைந்தனர். நமது ஸ்ரீபால் அவர்களின் அரிய சொற்பொழிவையும் உணர்ச்சி மிக்கச் சேவையையும் பாராட்டிப் புகழ்ந்தனர். மறுநாள் 11–4–1945 ஆண்டு முத்து மாரி அம்மன் கோயிலில் எவ்வித உயிர்ப் பலியும் நடைபெறவில்லை. பூசாரிகள் உள்பட அன்று கூடிய அத்தனை மக்களும் ஆர்வத்தோடு பாற்பொங்கல் படைத்தனர். எதிர்பாராத இவ்வெற்றி விழாவைக் கண்டு களித்த தாசில்தாரர், மாவட்ட தண்டலாளர்கள் (Collectar), துணைத் தண்டலாளரும் (Deputy Collector), S. P. C. A. சங்கத்தாரும் அதிகார பூர்வமாக எழுதிய கடிதங்களில் சிலவற்றைத் தங்கள் பார்வைக்குத் தருதல் நலம்.

*Copy of letter from Sri. S. Ponnuswami Nadar, B.A.,
Tasildar, Srivaikuntam,
To
Hon Secretary, S.P.C.A., Tinnevelly,

L. Dis 2735 Srivaikuntam Taluk office,
Dated 17-4-1945

Sir,

Besides the meeting on 28-3-1945 another Public meeting was held on 10-4-1945. Sripal Nainar who was specially deputed by you gave an appealing lecture. I am glad to inform you the propoganda was so effective and timely that there was no clubbing of sheep all on 11-4-1945 when the festival took place.

(Sd) S. Ponnuswamy Nadar.

Letter received from Sri. K. Jebamani, B. A,
Sub-Magistrate, Srivaikuntam.
Srivaikuntam Sub-Magistrate Court,
Dated 19-5-1945.

Sir,

Sub :- Clubbing of Sheep at Pudupatti

Ref : Your letter dated 16-5-1945

I thank you for the letter cited above. In this connection I may say that your propagandist Jeevabandu T. S. Sripal was a source of inspiration and enthusiasm to every one of us who had gathered at Pudupatti. I am sure that the inhuman practice of clubbing of sheep will never be repeated at Pudupatti.

(Sd) K. Jebamani

*Form S. I. H. L. Annual report

Copy of letter received from the Hon. Secretary, S. P. C. A., Tinnevelly to the president, South Indian Humanitarian League, Madras R. O. C. No. 7/45. Tinnevelly dated 29-4-1945.

Sir,

I am glad to thank your Society for kindly placing at the disposol of this society the valuable Service of your prapagandist Sri Jeevabandu Sripal Nainar. With a view to appeal to the public of the village, a mass propaganda meeting was held at the village on 10-4-1945 and the Tahsildar who presided over the meeting Speaks with appreciation, to the effect produeed by the powerful and eloquent lecturer of your propagandist at the meeting.

I shall say that Suceess that we achieved in stopping the cruelty is largely due to the lecture of Sri. Nainar. And there was no necessity for any Police action.

Once again, on behalf of this Society, I thank yon for the Services of your propagandist.

yours' Sincerely,

(Sd) K. Subramania pillai.

வேள்வியில் கொலை

வேதச் சார்பான யாகத்தில் ஆடுகளைச் சித்திர வதை செய்து பலியிடுவது வழக்கம். இத்தகைய கொலைபுரியும் வேள்விகளை தீக்ஷதப் பிராமணர்களே செய்வது வழக்கம். ஆடுகளின் வாயையும் கால்களையும் கட்டிவிட்டு பிஜங்களை நசுக்கிக் கொல்வதுதான்

யாகத்தின் கொலை முறை, இம்மாதிரியான வேள்வி கள் கும்பகோணம், தேவகோட்டை, காஞ்சிபுரம், கடலாடி, ஏத்தாப்பூர், சென்னை முதலிய நகரங்களில் நடைபெற்று வந்தன. வேதசம்பந்தமானதாயினும் கொலை எவ்விடத்தும் தீது எனத் திருக்குறள் அற நெறி குறிப்பதாகும்.

"அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று" — குறள்.

மகாவிரர், புத்தர் முதலிய பெரியோர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்தில் இவ்வேள்விக் கொலையை எதிர்த்துப் பிரசாரம் செய்துள்ளனர். அவர்களால் நிறுத்தப்பட்ட இவ்வேள்விக் கொலை பிற்காலத்தில் ஆங்காங்கு ஆரம்பிக்கப்பட்டது. எனவே இச்சபைக்கு இக்கொலையையும் நிறுத்தப் பிரசாரம் செய்ய வேண்டியது கடமையாயிற்று. தேவகோட்டையில் நடைபெற்ற வேள்வியில் உயிர்ப்பலியை நிறுத்த நம் ஸ்ரீபால் அவர்கள், திருவாளர்கள் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் எம். ஏ., பி. எல். எம். ஓ. எல்., ஆரணி. சி. வசுபாலநயினார், சென்னை எஸ். பி. சி. ஏ. செயலாளர் என். சி. அரங்கசாமி ஐயங்கார், கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரம் பிள்ளை, எஸ். மல்லிநாத் ஜெயின், உள்ளூர் வாசிகளான லக்ஷ்மிரதன் பாரதி பீ.ஏ.பீ.எல்., குமரன் பத்திராதிபர், முருகப்பா முதலியவர்களை அழைத்துச் சென்று யாகத்தில் நடைபெறும் கொலையைக் கண்டிக்கப் பெருங்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்தார். இந்தக் கூட்டத்திற்குத் தேவக்கோட்டை சரஸ்வதி வாசகசாலை உறுப்பினர்களும், அவ்வூர்ப் பெரியரான திரு. நாராயணன் செட்டியார் அவர்களும் பேருதவி புரிந்தனர்.

இது போன்றே கடலாடி (வட ஆற்காடு ஜில்லா) என்னும் ஊரிலும் யாகம் நடந்தது. அவ்வேள்வியைக் கண்டிக்கத்தக்க தமிழ்நாட்டின் தலைசிறந்த இரு பெரியார்களான திரு. ஈ. வே. இராமசாமிப் பெரியார்

தேவகோட்டை, கோட்டை அம்மன் கோயிலில் பலி நிறுத்திய போது திரு. ஸ்ரீபால் அவர்களைப் பாராட்டும் காட்சி· சரஸ்வதி வாசகசாலை தலைவர்களும், சொர்ணமூர்த்தி பெண் பாடசாலை ஆசிரியர் முருகன் அவர்களும், மாணவிகளும்.

அவர்களையும், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களையும் அழைத்துச் சென்றார். இவ்விரு பெரியார்களும் மாறுபட்டகொள்கை உடையவர்களாய் ஒருவரை ஒருவர் தங்கள் பத்திரிக்கைகளில் தாக்கிக் கொண்டிருந்த சமயம் அது. அச்சமயம் நம் ஸ்ரீபால் அவர்கள் இவ்விரு பெரியார்களையும் தனித்தனியே சந்தித்துப் பேசி அவ்விருவர் சம்மதத்தின் பேரில் ஆரணிக்கு அழைத்துச் சென்றார். இவ்விருவரையும் ஆரணி திரு. C. வசுபால நயினார் அவர்கள் இல்லத்தி லேயே தங்குமாறு ஏற்பாடு செய்தார். இப் பெரியார்கள் இருவரும் ஒருவரையொருவர் நலம் விசாரித்துக்கொண்ட விதமும், நட்புடன் பழகிய விதமும், அங்கு கூடியிருந்த மக்கள் அனைவரையும் பெரு வியப்பில் ஆழ்த்தின. முன்பிருந்த பழையநட்பின் இயல்பு அங்கே காட்சியளித்தது. இவ்வாறு இருவரும் ஒருமுகமாய் வேள்வியைக் கண்டிக்கமுன் வந்தனர். அன்று நடந்த பொதுக்கூட்டத்தில் இவ்விரு பெரியார்களையும் அறிமுகப்படுத்துகையில். சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு மகாவீரரும் புத்தரும் யாகத்தில் நடைபெற்ற கொலையைக் கண்டித்தது போலவே, இங்கு இப் பெரியார்கள் தோன்றி வேள்வியைக் கண்டித்துத் திருக்குறள் கூறும் கொல்லா விரதத்தையும் பகுத்தறிவுக் கொள்கையையும் நிலைநாட்ட வந்துள்ளனர் என்று சிறப்பித்துப் பேசினார். மக்கள் பெருத்த கைதட்டல் செய்து அவ்விருவரையும் வரவேற்றனர். பின்னர் அவ்விருவரும் வேள்வியில் கொலை செய்வதைப் பலமாகக் கண்டித்துப் பேசினர். இதனால் யாகஞ் செய்வோர் அச்சங்கொண்டு கலெக்டர் உதவியை நாடிப் பலமான போலீஸ் பந்தோபஸ்துடன் யாகத்தை நடத்தினார்கள். இத்தகைய அரும்பணியை ஆற்றிய இரு பெரியார்களையும் ஓரிடத்தில் சொற்பொழிவு ஆற்றச் செய்த பெருமை நம் ஸ்ரீபால் அவர்களையே சாரும்.

இவ்வாறு பலர் புகழ் ஞாயிறென விளங்கும் நமது ஜீவபந்து ஸ்ரீபால் நமது இடைவிடாத பிரசாரத்தால் வெற்றிகண்ட சில வரலாற்றுக் கோயில்களையும் கிராம, நகரங்களையும் காண்போம்.

எண்	ஊர்	தெய்வத்தின் பெயர்	வருடம்
1.	குடியாத்தம்	கங்கையம்மன்	1930
2.	சோழம்போடு	எட்டியம்மன்	,, 30
3.	வெல்லூர்	மாரியம்மன்	,, 31
4.	அசனுபுரம்	பொன்னியம்மன்	,, 32
5.	விருத்தாசலம்	செல்லியம்மன்	,, 33
6.	பூவனூர்	மங்கலநாயகியம்மன்	,, 33
7.	பெங்களுர்	மூன்று கோயில்கள்	,, 36
8.	சோளிங்கபுரம்	கோளாத்தியம்மன்	,, 36
9.	ஆத்தூர்	செல்லியம்மன்	,, 36
10.	பாளையங்கோட்டை	ஆயிரத்தம்மன்	,, 37
11.	களக்காடு	மாரியம்மன்	,, 38
12.	கயப்பாக்கம்	மாரியம்மன்	,, 38
13.	புத்தூர்	மாரியம்மன்	,, 38
14.	திருப்பூவனம்	கோரக்கநாதர்	,, 38
15.	திருநெல்வேலி	மாரியம்மன்	,, 38
16.	விருதுநகர்	மாரியம்மன்	,, 38
17.	சிங்காடிவாக்கம்	மாரியம்மன்	,, 39
18.	சேலம்	மாரியம்மன்	,, 40
19.	தேவகோட்டை	கோட்டையம்மன்	,, 40

எண்	ஊர்	தெய்வத்தின் பெயர்	வருடம்
20.	கோயமுத்தூர்	கோணியம்மன் ...	1941
21.	பரமக்குடி	இரண்டு கோயில்கள் ...	,, 41
22.	திருப்பாதிரிபுலியூர்	பிடாரியம்மன் ...	,, 41
23.	சங்கரநயினார்கோயில்	முப்பிடாரியம்மன் ...	,, 42
24.	திண்டுக்கல் (நாகல்நகர்)	காளிகோயில்	,, 43
25.	சிதம்பரம்	தில்லைமாரிகாளியம்மன்	,, 43
26.	மணப்பாறை	நல்லாண்டவர் ...	,, 44
27.	பொதட்டூர்பேட்டை	மாரியம்மன் ...	,, 44
28.	புதுப்பட்டி	முத்துமாரியம்மன் ...	,, 45
29.	லக்ஷ்மிபுரம்	பிடாரியம்மன் ...	,, 45
30.	வளர்புரம்	பிடாரியம்மன் ...	,, 45
31.	தென்காசி	மாரியம்மன் ...	,, 45
32.	விரிஞ்சிபுரம் வேலங்காடு	மாரியம்மன் ...	,, 47
33.	மாடுவெட்டிமங்கலம்	கமலக்கண்ணியம்மன் ...	,, 47
34.	ஆலங்காயம்	மாரியம்மன் ...	,, 47
35.	தின்னனூர்	பொன்னியம்மன் ...	,, 47
36.	சீர்காழி	பிடாரியம்மன் ...	,, 48
37.	நெட்டுக்குப்பம்	மாரியம்மன் ...	,, 49
38.	முக்கூடல்	மாடசாமி, முத்துமாரி ...	,, 49
39.	கரூர்	மாரியம்மன் ...	,, 49
40.	சிதம்பரபுரம்	அரியநாயகியம்மன் ...	,, 50

சங்கரநயினர் கோயில் முப்பிடாரி அம்மன் விழாவில் பலி நிறுத்திய போது
திரு. ஸ்ரீபால் அவர்களைப் பாராட்டும் காட்சி.

இவை போன்று வெவ்வேறு கிராமங்களிலிருந்து மக்கள் கூடி ஆயிரக்கணக்கில் உயிர்ப் பலியிடும் பெரியபாளையம், மலையனூர், திருச்சி, வெட்டுவாணம், அழகர்கோயில், வீராம்பட்டினம், நாட்டராயன் கோயில், படவேடு, வாழைப்பந்தல் போன்ற பல ஊர்க் கோயில்களிலும் ஆண்டுதோறும் சென்று பிரசாரம் செய்து உயிர்ப்பலியை நிறுத்தினர்.

மலையனூர் அங்காளம்மன் விழாவில் உயிர்ப் பலி நிறுத்தப் பிரசாரத்திற்கு அவ்வூர் மணியம் V.A. சந்திரநாத நயினர் அவர்கள் பலவகையிலும் உதவி செய்தது குறிப்பிடத் தக்கது. தொண்டர்களாகப் பணியாற்றிய திண்டிவனம் திருவாளர்கள் தெய்வ சிகாமணிப் பிள்ளை, சிங்காரம் பிள்ளை, ஆறுமுகம் பிள்ளை ஆகியோர் சேவை பாராட்டற்குரியது. திருவாளர்கள் தனபால நயினர், பத்திரபாகு நயினர் ஆகியோர் மேலப்பழுந்தை ஜீவகாருண்ய சங்கச் சார்பில் அரும்பெரும் சேவை செய்தனர். சங்கரநயினர் கோயில் முப்பிடாரி அம்மன் உயிர்ப்பலி நிறுத்தப்பிரசாரத்தில் திருவாளர்கள் N. S. தருமலிங்க முதலியார், சண்முக முதலியார், P. இராமலிங்கம், சங்கர குற்றால முதலியார், கோபால சுப்பிரமணிய பட்டர், திருவுடையான் போன்ற பலர் கலந்துகொண்டனர். திண்டுக்கல் மாரியம்மன் விழாவில் அவ்வூர் சன்மார்க்க சங்கம் காரியதரிசி, திரு. நடராஜன், நாகல் நகர் திரு. சக்ரபாணி அவர்களும் சிறுவாலை, நாடக மணி திரு. வீரநாதக்கோனர், அவர்கள் குழுவினர் பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை என்ற நாடகத்தை நடித்தனர். திரு. என். காளிரத்தினம் பூசாரியாக நடித்து மக்களைப் பரவசப்படுத்தினர். திருப்பாதிரிப்புலியூர் பலிநிறுத்தத்தில் ஜில்லா போர்டு கல்வி இலாகா தலைமைக் கணக்காயராகப் பணியாற்றிய திரு. ஆ. கு. அப்பாண்டை நயினர் பேருதவியாயிருந்தார்.

சென்னைக்கடுத்த பெரியபாளையத்தில் ஆண்டுதோறும் மக்கள் உயிர்ப்பலியிடுவதுடன் ஆண்களும் பெண்களும் ஆடைகளைக் களைந்துவிட்டுவேப்பிலையைச்

பெரிய பாளையத்தில் நடைபெறும் பிரசாரம். இடது பக்கம் 2 வது நிற்பவர் ஸ்ரீபால். மத்தியில் திருமதி பத்மாஸினி அம்மாள். வலது பக்கத்தில் தாளத்துடன் நிற்பவர் கிருஷ்ணசாமி அய்யர்.

சுற்றிக் கொண்டு கோயிலை வலம்வருவார்கள். இவ் வநாகரிகப் பழக்கத்தை நிறுத்த விழாக்காலங்களில் சென்னை ஜீவரக்ஷக பிரசார சபையின் வாயிலாகச் சென்னையிலிருந்து வாரந்தோறும் தொண்டர்களையும் அறிஞர்களையும் அழைத்துச்சென்று பிரசாரம் செய் வது வழக்கம். அடையாறு கலாக்ஷேத்திரத்தின் தலைவியார் திருமதி ருக்மணி தேவியார் அவர்கள் சென்னை ஜீவரக்ஷக பிரசார சபையின் தலைவியாக ஐந்து ஆண்டுகள் இருந்து சபையைத் திறம்பட நடத் தினார்கள். அவர்கள் தெய்வத்தின் பெயரால் நடை பெறும் மூடநம்பிக்கைக்குக் காரணமான செயல்களை அகற்றி மக்களை அறநெறியில் செலுத்த வேண்டும் என்னும் அவாவுடையவர்கள். எனவே அவ்வம்மை யார் நம் ஸ்ரீபால் அவர்களின் தன்னலமற்றத் தொண் டில்பெருமதிப்புகொண்டிருந்தார்கள். அதனால்பெரிய பாளையத்தில் ஆண்டுதோறும் நடைபெறும்விழாவில் செய்யும்பிரசாரத்திற்குத் தங்கள், அடையாறு தியா சாபிகல் சொசைட்டியின் அனிபெசண்ட் உயர்நிலைப் பள்ளி மோட்டார் வானையும் பெண் தொண்டர்களை யும் அனுப்பி உதவுவார்கள். அத் தொண்டர்களுக் குத் தலைவர்களாய் விளங்கியவர்கள் திரு. ஏ. கிருஷ் ணசாமி ஐயர் அவர்களும் திருமதி பத்மாசினி அம் மையார் அவர்களும் ஆவர். அவ்விருவரின் சேவை களை ஸ்ரீபால் அவர்கள் உரிய இடங்களில் பலபடப் புகழ்ந்துள்ளார்கள். பெரிய பாளையத்தில் நடை பெற்ற பிரசாரத்திற்கு சென்னையிலிருந்து ஸ்ரீபால் அவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட பெரியோர் கள் பலராவர். தொண்டர்களோ கணக்கில்லை. ஆரியசமாஜம், நடராஜா கல்விக் கழகம் போன்ற சங்கங்கள் பல. தமிழ்ப்பெரியார் திரு. வி.க, சுவாமி சுத்தானந்த பாரதியார், சுவாமி அருணகிரிநாதர், சுவாமி சண்முகானந்த அடிகள், திரு தண்டபாணிப் பிள்ளை, அவர்தம் மகளார் காந்திமதியம்மையார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள், திரு. எஸ். ரங்கநாதம், திருமதி குஞ்சிதம் குருசாமி, டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார், திரு உலகநாதனார், திரு. வில்வபதி, திரு. புலவர் மயிலை சிவமுத்து அவர்

சோளங்கிபுரத்தில் பலி நிறுத்தியதன் நினைவாக சுவாமி அருகிரிநாதர் அவர்களையும
திரு ஸ்ரீபால் அவர்களையும் பாராட்டும் வைபவம்

களும் திரு.க.ஜெ.அகஸ்தியப்பன் அவர்களும் மற்றும் பல பெரியோர்களும் ஆவார்கள். இவ்வாறு ஸ்ரீபால் அவர்களின் முயற்சியால் பெரியபாளையத்தில் உயிர்ப் பலி நின்றதுடன் வேப்பிலை கட்டித்திரியும் அநாகரிக வழக்கமும் பெரும்பாலும் அகன்றது.

இலக்கியச் சங்கங்களில் சொற்பொழிவு

நம் ஸ்ரீபால் அவர்கள் தமிழ்நூல் ஆராய்ச்சியிலும் நல்ல பயிற்சி உடையவர் என்பதை முன்னரே அறிந்துள்ளோம். அவர் தமிழகத்தில் தலைசிறந்து விளங்கும், பல்வேறு துறைகளில் பணியாற்றும் இலக்கியக் கழகங்களில் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். அவற்றுள் சில பின்வருமாறு ; புரசைத் திருவள்ளுவர் கழகம், சென்னை நக்கீரர் கழகம், மயிலைத் திருவள்ளுவர் கழகம், திருவல்லிக்கேணி நடராஜா கல்விக் கழகம், தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கம், விநாயகர் தமிழ்ச் சங்கம், திருச்சி சன்மார்க்க சங்கம், திண்டுக்கல், தேவக்கோட்டை போன்ற இடங்களிலுள்ள சன்மார்க்க சங்கங்கள் முதலியன.

தொண்டுச் செல்வருக்குப் பட்டம்

1943 ஆம் ஆண்டு வழக்கம்போல் கொண்டாடும் மகாவீரர் ஜயந்தியன்று சென்னைத் தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபையின் அமைப்பாளரும், தலைமைச் சொற்பொழிவாளருமான ஸ்ரீபால் அவர்களுக்கு அவரது தொண்டுகளைப் பாராட்டி, ஒரு பட்டம் வழங்கவேண்டுமென்று பல அறிஞர்கள் கூறிய ஆய்வுரையின்படி சபையின் செயற்குழு உறுப்பினர்கள் முடிவுசெய்தனர். அச்சமயம் சபைக்கு ராவ் பகதூர் வி. பாஷ்யம் ஐயங்கார் பீ. ஏ. பீ. எல்., அவர்கள் தலைவர்களாய் இருந்தார்கள்- சேத் மோஹன் மல்ஜி சோர்டியா, சேத் லால்சந்த் ஜீ டாடா, ஷா தேவ்ஸி முல்சந்த் ஜீ, சேத் ரிகப்தாஸ் ஜெயின். ராவ்பகதூர் ஏ. சக்கரவர்த்தி நயினார் எம். ஏ. ஐ. ஈ. எஸ் (ஓய்வு), திருமதி ருக்மணி தேவி

யார் (பிரமஞானசபை, அடையாறு), ராவ் சாகிப் என். சி. ரங்கசாமி ஐயங்கார், திரு. எம். கே. தேவ ராஜ் எம். ஏ. பீ. எல்., முதலிய சான்றோர் கூடி நம் ஸ்ரீபால் அவர்களுக்கு "ஜீவபந்து" எனப் பட்டம் வழங்குவதென்றும். அப் பட்டத்தை வழங்கத் திரு வாளர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் கே. சி. ஐ. ஈ., அவர்களை அழைப்பதென்றும் முடிவு செய்த னர்.

1943 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் தேதி சென்னை செளகார்ப்பேட்டையிலுள்ள ஜெயின் வழி பாடு மண்டபத்தில் சர். ஆர். கே. ஷண்முகம் செட்டி யார் அவர்கள் தலைமையில் மகாவீரர் ஜயந்தி சிறப் பாகக் கொண்டாடப்பட்டது. அச்சமயம் தலைவர் அவர்கள் ஜீவகாருண்யச் செல்வராகிய நம் ஸ்ரீபால் அவர்களின் தொண்டினைப் பாராட்டி, "ஜீவபந்து" எனப் பட்டம் வழங்கினர். திரு. எம். கே. தேவராஜ் எம். ஏ. பீ. எல்., ராவ்சாகிப் என். சி. ரங்கசாமி ஐயங்கார், ஷா தேவ்ஸி மூல்சந்த் ஜீ, சேத் லால்சந்த் ஜீ டாடா, சேத் விருஷபதாஸ், பி. ஜெயின் ஆகி யோர்களும் திரு. ஸ்ரீபால் அவர்களின் 15 ஆண்டு தொண்டுகளைப் பாராட்டிப் பேசினர்கள். பல சங் கங்களின் சார்பில் ஸ்ரீபால் அவர்களுக்கு மாலைகள் வழங்கப்பட்டன. பட்டம் வழங்கிய செய்தி பத்திரிக் கைகள் பலவற்றிலும் வெளியிடப் பட்டிருந்தமை யால், நண்பர்கள் பலர் ஜீவபந்து டி. எஸ். ஸ்ரீபால் அவர்களின் தொண்டினைப் பாராட்டி வாழ்த்துரை கள் அனுப்பிவைத்தனர்.

சென்னையில் பாராட்டுக் கூட்டம்

சென்னை ஜீவகாருண்ய தொண்டர் கழகச் சார் பில் பிரம்ம சமாஜ மண்டபத்தில் திரு. ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களைப் பாராட்ட ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. தமிழ்ப்பெரியார் திரு. வி. கல் யாண சுந்தரனர் அவர்கள் தலைமை தாங்கினர்கள். திருவாளர்கள் புலவர் மயிலை சிவமுத்து, புலவர் எஸ்.

திரு. T. S. ஸ்ரீபால் அவர்கட்கு அளிக்கப்பட்ட பட்டத்தின் பதிவு

The

South Indian Humanitarian League

(FOUNDED 1926 A. D.)

REJOICE IN SERVICE.

பணியில் பரவசப்படு

At. the celebration of the Mahaveer Jayanti

under the auspices of

The South Indian Humanitarian League Madras,

held on the 18th April 1943,

The Committee of the League was pleased to confer the title of

"JEEVA BANDHU"

on Sri T. S. SRIPAL, chief propagandist of the League,

in recognition of his valuable services rendered to the

League and also for the able propaganda activities

carried on by him systematically throughout South India

for the last Fifteen Years and the great success

achieved through his efforts in entirely stopping

animal sacrifices dedicated to Gcd and Godess,

in a number of places.

Honorary Secretaries.

President,

Among the noblest in the land,
That man I honour and revere
Who, without favour, without fear
In the great city dares to stand
The friend of every friendless beast.
—LONGFELLOW.



புத்தூர் இரத உற்சவத்தில் பலி நின்ற காட்சி.

எஸ். அருணகிரிநாதர், திருமதி. தருமாம்பாள் அம்மையார், திரு. என். தண்டபாணிப்பிள்ளை, திரு. பி. சத்திய மூர்த்தி, திரு. சிறுவை மோகன சுந்தரம், சுவாமி சண்முகானந்த அடிகள் முதலியோர் திரு. ஸ்ரீ பால் அவர்களின் அரிய தொண்டுகளையும் "ஜீவ பந்து" எனப் பட்டம் பெற்ற பேற்றையும் பாராட்டிப் பேசினுர்கள். தலைவர் திரு. வி. க. அவர்கள் பாராட்டும், அவர் ஸ்ரீபால் அவர்களைப் பற்றித் தமது சுயசரித்திரமாகிய வாழ்க்கைக் குறிப்பில் எழுதியுள்ள பகுதியும் கீழே தருகின்ருேம்.

* **ஸ்ரீபால்**

"கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்வது என் இச்சை பராபரமே"

என்பது தாயுமானவர் திருமொழி. இம் மொழிக்கு இலக்கியமானவரைக் காண்டல் அருமை. யான் எளிதில் சிலரைக் கண்டேன். அவருள் ஒருவர் ஸ்ரீபால்.

ஜைன அறவோர் ஒருவர் பூஜ்யபாத முனிவர் ஸ்ரீ கம்பீர விஜய மகராஜ் என்பவர் (9–12–1926) சென்னைக்கு எழுந்தருளியபோது அவர் அறிவுறுத்தலின் பயனுக "ஜீவரட்சா சபை" என்ருேர் அறநிலையம் உருக்கொண்டது. அச்சபையின் அடிப்படையான நோக்கம் அஹிம்சா தர்மத்தை வளர்ப்பது. அச்சீரிய நோக்கத்தை நிறைவேற்றுதற்கென்று ஜீவரட்சா சபை பலிநிறுத்தப் பிரசாரம் செய்துவருகிறது. தென்னுட்டு ஏழை உயிர்களின் தவம், சென்னை ஜீவரட்சா சபையாகப் பரிணமித்ததோ என்று யான் எண்ணுவதுண்டு. அச்சபைச்சார்பில் என் சிறுதொண்டும் அவ்வப்போது நிகழ்வதுண்டு.

****(திரு. வி. க. வின் வாழ்க்கைக் குறிப்புக்கள் பக்கம்-679)***

ஜீவரட்சக பிரசார சபையின் பிரசாரகருள் தலை சிறந்து விளங்குவோர் ஸ்ரீபால். ஸ்ரீபால் இளைஞர். அவர் தம் இளமை வாழ்க்கை ஜீவகாருண்யத் தொண்டுக்குப் பயன்பட்டு வருவது எனக்குத் தெரியும். ஸ்ரீபாலின் தவமே தவம்! அவர்தம் பிறவியே பிறவி! "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என வரும் அப்பர் மொழியின் உண்மையை யான் உணர்கிறேன்.

சில இடங்களுக்கு யான் ஸ்ரீபாலுடன் சென்றிருக்கிறேன். என் தலைமையிலும் அவர் சில இடங்களில் பேசியுள்ளார். ஸ்ரீபால் கூட்டமாவர். கூட்டம் அவராகும். அவர் பேச்சில் உணர்ச்சி ததும்பி வழியும்.

ஸ்ரீபால் பிரசாரத்தால் பலி நின்று வருவதை யான் அறிவேன். பலி ஓரிடத்திலா நின்றது. நூற்றுக் கணக்கான இடங்களில் நின்றது. சில இடங்களில் ஸ்ரீபாலின் பெயர் நினைவுக்குறிப்பாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீபாலுக்கு "ஜீவபந்து" என்னும் பட்டம் சூட்டப்பட்டது. பாராட்டுக் கூட்டம் என் தலைமையில் பிரமசமாஜ மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்ரீபால் என்பது 'கருணையைக் காப்பது' என்னும் பொருளுடையது. ஜீவபந்து என்பதும் அக்கருத்துடையதே. ஸ்ரீபால் சூத்திரம், "ஜீவபந்து பாஷ்யம்" என்று விளக்கஞ் செய்து ஜீவகாருண்யத் தொண்டரை வாழ்த்தினேன்.

காந்தியடிகள் அறிவுறுத்தும் விழுமிய அறத்தைச் செயலில் ஓம்பி வருவோர் ஸ்ரீபால் என்று கூற யான் தயங்கேன். சிறிதும் தயங்கேன். ஸ்ரீபால் வாழ்க என்றும், அவர்வாழ்நாள் பெருகுக என்றும் ஆதிபகவன் அடிமலரை இறைஞ்சுகிறேன்.

மகாவீர ஜயந்தி அல்லது ஜீவதயாத் திருநாள்

மகாவீர ஜயந்தி ஆண்டுதோறும் நடைபெறுவதுண்டு. இவ்விழா ஜீவதயாத் திருநாள் என்றும்

சிதம்பரம் தில்லை மாகாளி அம்மன் கோயில் பலி நிறுத்திய தருமகர்த்தாக்களும்
டாக்டர் சிதம்பர செட்டியாரும் திரு ஸ்ரீபால் அவர்களும் வலது பக்கத்தில் முதலில் காண்பவர்

அழைக்கப்படுவதுண்டு, ஒவ்வோராண்டும் தமிழ் நாட்டிலுள்ள பல தலைவர்களையும் அறிஞர்களையும் கொண்டு விழா சிறப்பாக நடைபெறும். 1928, 1929 ஆம் ஆண்டுகளில் இச்சபையைத் தோற்று வித்த முனிமகராஜ் ஸ்ரீ கெம்பீர விஜயாஜி அவர்கள் இவ் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். 1930ல் ராவ்பகதூர் ஏ. சக்கரவர்த்தி நயினார் எம். ஏ., ஐ. ஈ. எஸ். (ஓய்வு) அவர்கள், 1935ல் டாக்டர் ஜி. எஸ். அருண்டேல் அவர்கள், 1937 ல் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி, சி. ஐ. ஈ., அவர்கள் 1937ல் கே. ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள், 1938 ல் எஸ். இராமநாதன் அவர்கள் 1939ல் சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், 1940ல் ஈ. த. இராஜேச்சுவரி அம்மையார் அவர்கள், 1941ல் திவான்பகதூர் ப. பாஷ்யம் ஐயங்கார் பீ. ஏ. பீ. எல். அவர்கள், 1942ல் தெ.போ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சபையின் ஆண்டு விழாவிற்கு 6-3-42 திருமதி உருக்மணிதேவியார் அவர்கள், 1943ல் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள், 1945ல் திரு. கே. எம். முன்ஷி அவர்கள், (பம்பாய் முன்னாள் அமைச்சர்) தலைமை வகித்துள்ளார்கள். திரு. கே.எம்.முன்ஷி அவர்கள் தலைமையில் நடந்த விழாவில் 1930ஆம் ஆண்டு திருவிதாங்கூர் சமஸ்தானமெங்குமுள்ள கோயில்களில் உயிர்களைப் பலியிடுதல் கூடாது எனச் சட்டம் இயற்றிய திருவிதாங்கூர் ரீஜண்ட் மகாராணியார் திருமதி சேது இலக்குமிபாய் அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது. இப் படத் திறப்பு விழாவை நடத்திய திரு. கே. எம். முன்ஷி அவர்கள், திரு. ஸ்ரீபால் அவர்களின் சேவையைப் புகழ்ந்ததோடு, திருமதி சேது இலக்குமிபாய் அவர்களின் படத்தைத் திறக்க ஏற்பாடு செய்தமைப் பாராட்டத் தக்கது எனப் புகழ்ந்துரைத்தார் தன் பேச்சில்.

சட்டத்தின் மூலம் பலி விலக்கு

1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15ஆம் தேதி நாடு சுதந்திரம் பெற்றது. மகாத்மா காந்தியடிகளின்

அகிம்சை முறை வெற்றி கண்டது. காங்கிரஸ் கட்சி நமது பாரத நாடெங்கும் ஆட்சி செலுத்தத் தொடங் கியது. அந்நிய அரசாங்கத்தின் கீழ் நாடுஅடிமைப் பட்டிருந்த காலத்தில், "கிள்ளை விடு தூது" என்னும் அரிய பாடலின் வாயிலாகச் சட்டசபையை நோக்கிப் பலிவிலக்கு மசோதாவை நினைவூட்டினர். அதே அர சாங்கத்தின் கீழ், காங்கிரஸ் கட்சி ஆட்சி செலுத்திய போது 1938ஆம் ஆண்டில் சட்டசபைக்குள் பலி விலக்கு மசோதாவை அறிமுகப்படுத்தினர். நாடு குடியரசாகி அகிம்சா முறையில் வெற்றி கண்ட காங் கிரஸ் கட்சி ஆட்சி செலுத்தும்போது வாளாயிருப் பரோ நமது ஸ்ரீபால்? 1947ஆம் ஆண்டு பத்திரிக் கைகளில் "அந்நிய அரசாங்கம் நாட்டு மக்களின் அறி யாமையையும் அநாகரிகத்தையும் வளர்க்கும்; சுதந் திர அரசாங்கம் அறிவையும் நாகரிகத்தையும் வளர்க் கும்" என்னும் அயர்லாந்து தேசத்து அரசியல்ஞானி டெரன்ஸ்மாக் ஸ்வினியின் அறவுரையை எடுத்துக் காட்டி, நமது சென்னை காங்கிரஸ் அரசியலார் மக்க ளின் அறியாமையைப் போக்க உயிர்ப்பலித் தடைச் சட்டம் கொண்டுவர வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். இவ் வேண்டுகோள் தமிழ்நாட்டின் பல பத்திரிக்கைகளில் வெளிவந்தது.

இவ் வறிக்கைக்குப் பின்னர், சட்டசபை அங்கத் தினர்கள் பலரைக் கண்டு பலிவிலக்குச் சட்டமூலம் (Bill-மசோதா) பற்றிப் பேசினர். இறுதியில் மேல் சட்டசபை உறுப்பினர் திரு. எஸ். பி. ஆதித்தன், எம். எல். சி., அவர்களைக் கண்டு பேசியபோது, அவர் சட்டமூலத்தைக் கொண்டு வர இசைந்தார். "இச் சட்டமூலத்தைக் கொண்டுவருவதில் எனக் குள்ள பொறுப்பு ஒன்று உண்டு. திருச்செந்தூர் தாலுக்கா காயாமொழியில் மாரியம்மன் கோயில் ஒன்று உளது. அக் கோயிலுக்கு என் தந்தையார் தருமகர்த்தர். அவர் சில ஆண்டுகளுக்குமுன் உயிர்ப் பலியை நிறுத்திப் பாற்பொங்கல் படைக்கும்படி ஏற்பாடு செய்தார். அத்தகைய தந்தையாரின் கொள்கையைக் கடைப்பிடிக்கும் வகையில் இச் சட்ட



ஸ்ரீமதி சேது லக்ஷிமிபாய் திருவுருப்படத்தை திரு. K. M. முன்ஷி திறந்து வைக்கும் காட்சி.
சேத். மோஹன்மல்ஜி சோர்டியா அவர்களும் சேத். லால்சந்த்ஜி டாடா அவர்களும் படத்தில் காண்கின்றனர்

பரமக்குடியில் உயிர்ப்பலி நிறுத்தியபோது ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களை அவ்வூர்
மஞ்சபுத்தூர் வைசிய வாலிப சங்கத்தார் வாழ்த்தும் காட்சி.

மூலத்தைக் கொண்டு வர நேர்ந்தமையைக் குறித்து நான் பெருமையடைகிறேன்.'' என்றார். அத்துடன் இச் சட்டமூலத்தைச் சட்டசபையில் பிரேரேபிக்கும் முன்னரும் பின்னரும், இச்சட்ட மூலத்தைக் குறித்து மாகாணம் எங்குமுள்ள மக்களின் ஆதரவைப் பெற அதிகார பூர்வமற்ற பிரசாரங்கள் செய்ய வேண்டுமென்றும், ஆயிரக் கணக்கில் கை எழுத்துக்களும், தீர்மானங்களும் அரசியலாருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் கூறினார். நம் ஸ்ரீபால் அவர்கள் அவ்வாறே செய்வதாக ஒப்புக் கொண்டு நன்றியும் கூறினார். உடனே இருவரும் சட்டமூலத்தை தயார் செய்தனர். திரு S. B. ஆதித்தன் M. L. C. அவர்கள் அச் சட்டமூலத்தைச் சட்டசபைக்கு அனுப்பி வைத்தார்.

இச்சட்ட மூலம் பத்திரிகைகளில் வெளி வந்தது. இதை மக்கள் பத்திரிகைகளில் கண்டதும் அவர்கள் காட்டிய ஆர்வமும் ஆதரவும் அளவு கடந்தவை. ஸ்ரீபால் அவர்களின் வேண்டுகோளின்படி மக்கள் ஆங்காங்கு பொதுக்கூட்டங்கள் கூட்டிப் பலிவிலக்குச் சட்டமூலத்தை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியும் ஆயிரக் கணக்கான பொது மக்களிடம் கையெழுத்துக்கள் வாங்கியும் அரசியலாருக்கு அனுப்பிவைத்தார்கள். ஸ்ரீபால் அவர்களும், சட்ட சபை உறுப்பினர் பலரையும், கனம் பிரதம அமைச்சர் ஓமந்தூர் திரு இராமசாமி ரெட்டியார் அவர்களையும், கனம் மராமத்து இலாகா அமைச்சர் திரு. M. பக்தவத்சலம் அவர்களையும், கனம் கல்வி அமைச்சர் திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களையும், மற்ற அமைச்சர்களையும் பலிவிலக்குச் சட்டமூலத்திற்கு ஆதரவு தந்து சட்டம் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அப்போதைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கே. காமராஜ நாடார் அவர்களையும் பலிவிலக்குச் சட்டமூலம் சம்பந்தமாகக் கலந்து பேசினார். அப்போது திரு காமராஜ் அவர்கள், ''தாங்கள் எங்களூர் (விருதுநகர்) மாரியம்மன் விழாவிற்கு ஆண்டுதோறும் வந்து பிரசாரம் செய்வதை நான் கவனித்துள்ளேன். அதனால் வீட்

சென்னை ஸ்பர்டாங் ரோட்டிலுள்ள அம்மனுக்குப் பலியிடுவது நிறுத்தப்பட்ட காட்சி

டுக்கு வீடு கொலை புரியும் வழக்கம் ஒழிந்ததும் எனக்குத் தெரியும், எனவே தங்கள் முயற்சி வெற்றி பெறும் வகையில் காங்கிரஸ் கட்சி தன் முழு ஆதரவையும் அளிக்கும்'' என உளங் கனிந்து கூறினர். நம் ஸ்ரீபால் அவர்கள், ''அகிம்சா மலர் மாலை'' என்னும் ஒரு தமிழ்ப் புத்தகமும், "Mahatma Gandhi On Animal Sacrifice'' என்னும் ஆங்கிலப் புத்தகமும் ஆயிரக்கணக்கில் அச்சிட்டுச் சட்டசபை உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் அறிஞர் பெருமக்கள் பலருக்கும் அனுப்பி வைத்தார். சென்னை மாகாணம், மற்ற மாகாண சட்டசபைகளுக்கும் ஆங்கில நூலை அனுப்பிவைத்தார். இவ்விரண்டு நூல்களிலும், மகாத்மா காந்தியடிகள் தெய்வத்தின் பெயரால் பலியிடும் மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டித்துள்ள பல கருத்துரைகளும், மகாவீரர், புத்தர், கிருஷ்ண பகவான், இயேசுநாதர், நபிநாயகம், குருநானக் போன்ற மதப் பெரியார்களின் வாக்கியங்களும் சீவக சிந்தாமணி, திருக்குறள், யசோதர காவியம், திருவருட்பா முதலிய இலக்கியங்களில் உயிர்ப் பலியைக் கண்டித்திருக்கும் பாக்களும் நிரம்பியிருந்ததோடு பலிவிலக்குச் சட்டமூலத்தின் வாசகங்களும் வெளியிடப்பட்டிருந்தன. இவ்வாறு இவர் பலி விலக்கு மசோதாவிற்கு ஆதரவு தரத்தக்க வகையில் ஆற்ற வேண்டிய பலவகையான செயல்களையும் சோர்வின்றிச் செய்தார்.

இவ்விரு புத்தகங்களையும் படித்த அறிஞர் பெருமக்கள் பலரும், பத்திரிக்கை ஆசிரியர் பலரும் இந்நூல்களைப் பாராட்டியும் வரவேற்றும் கடிதங்கள் வாயிலாகவும், பத்திரிக்கைகளில் வெளியிடுதல் வாயிலாகவும் நம் ஸ்ரீபால் அவர்களுக்கு உறுதியளித்தார்கள். பத்திரிக்கைகள் எல்லாம் திரு.எஸ்.பி. ஆதித்தன் அவர்களைப் பாராட்டின. அக்காலத்தில் அவர் ஒரு பழுத்த காங்கிரஸ்வாதி. அவருடைய பத்திரிக்கைகளான தினத்தந்தி, தினத்தாள், தினத்தூது ஆகியவை காங்கிரசை முழுமனதுடன் ஆதரித்து எழுதி வந்தன. இவருடைய அறையில் இந்தியப் பிரதம அமைச்

சர் நேருவின் படமும், திரு. காமராஜர் படமும் காட்சி யளிக்கும். எனவே அவர் இச் சட்ட மூலத்தைக் கொண்டுவருவதற்கு முழு ஊக்கம் காட்டினார்.

1947 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் " உயிர்ப் பலித் தடைச் சட்ட மூலத்தைச் சென்னை மேல்சபை யில் பிரேரித்தார். இப் பிரேரணையைச் சட்டசபை உறுப்பினர்கள் பலரும் வரவேற்று 21–1–1949-ல் சட்டமாக்கினார்கள், அன்று மாலையில் ஸ்ரீபால் தென் னிந்திய ஜீவரக்ஷகப் பிரசார சபையின் முதன்மையா ளர்களான சேத். மோகன்மல்ஜீ சோர்டியா, சேத் லால்சந்த்ஜீ தாதா, ஷா தேவ்ஸி முல்சந்த் ஜீ, சேத் ரிஷபதாஸ், பி. ஜெயின், ஷா சிமன்லால் கொடாரி, ஷா. கபூர்சந்த் ஜீ சேத். பாக்சாந்த்ஜீ கலடா முதலா னவர்களை அழைத்துச்சென்று திரு. எஸ்.பி. ஆதித் தன் அவர்களுக்கு மாலையிட்டு நன்றி கூறிச் சிறப் பித்தார்.

உயிர்ப்பலித் தடைச் சட்டமுலம் மேல்சபை யில் சட்டமாக்கப் பட்டதும் திரு. எஸ். பி. ஆதித்தன் அவர்களும் ஸ்ரீபால் அவர்களும் வெளியே வந்தார் கள். அன்று பலிவிலக்கு சட்டமூலத்தின் வெற்றிச் செய்தியை அறிய மதுரை வைசிய வாலிப சங்கத் தாரும், சிதம்பரம் கருணைக் கழக அன்பர்கள் திரு. தில்லைச் சிதம்பரம், திரு. எஸ். கே. ஸ்ரீனிவாசன், கோவிந்தராஜன் ஆகியோர் இவ்விரு பெரியார்களை யும் வரவேற்று மகிழ்ச்சியுடன் நன்றி கூறினர். திருப் பூவனத்தில் உயிர்ப்பலியை நிறுத்தி வெற்றி கண்ட ஆர்வத்தினால் மதுரை வைசிய வாலிப சங்கத்தார் திருவாளர்கள் பிச்சைச் செட்டியாரும், தனபால செட்டியாரும், காசி செட்டியாரும், எஸ். எஸ். பால கிருஷ்ண செட்டியாரும், திரு. எஸ். பி. ஆதித்தன் அவர்களையும் திரு ஸ்ரீபால் அவர்களையும் சட்டசபை மண்டபத்தின் அருகே நிற்கவைத்து திரு. எஸ். எஸ். பாலகிருஷ்ண செட்டியார் அவர்களால் நிழற்படம் ஒன்று எடுக்கவைத்துத் தங்கள் ஆர்வத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர்.

முக்கூடல் முத்துமாரி அம்மன் விழாவில் உயிர்ப்பலி நிறுத்திய கிராமப் பெரியோர்கள்.
குழந்தையுடன் இருப்பவர் திரு ஸ்ரீபாலர்.

சட்டசபையில் பலிவிலக்குச் சட்டமூலம் வெற்றி

சென்னைச் சட்டசபை மேல்சபையில் நிறைவேறிய உயிர்ப்பலித் தடைச் சட்டம் கீழ்ச்சபையிலும் நிறைவேற வேண்டும், மேல்சபையை விடக் கீழ்ச் சபை தான் மிகமிக முக்கியமானது. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய மகாசபை அதுவாகும். எனவே இங்கு பலிநிறுத்தச் சட்டத்தைப் பிரேரிப்பவர் தக்கவராக இருக்கவேண்டும். அவர் சட்டசபை அங்கத்தினர்களின் அன்பிற்கும் ஆதரவிற்கும் பாத்திரமானவராய் இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாகவும் இருக்கவேண்டும். எனவே இப்படிப்பட்ட தகுதிகள் கொண்ட பெரியார் யார் என்பதை ஆராய்ந்தார் நம் ஸ்ரீபால். காங்கிரஸ் தியாகியும், மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுக்கா தொகுதியின் பிரதிநிதியும் காங்கிரஸ் சட்டசபை கட்சிக்குக் 'கொறடா' வாகவும் விளங்கிய திரு கே.இராஜாராம் நாயுடு எம்.எல்.ஏ. அவர்களே இம் மசோதாவைப் பிரேரிக்கத் தக்கவர் என அறிந்தார். உடனே திருமங்கலம் சென்றார். திரு இராஜாராம் நாயுடு அவர்கள் இல்லம் சென்று அவரைச் சந்தித்தார். திரு. நாயுடு அவர்கள் ஸ்ரீபால் அவர்களை அன்புடன் வரவேற்றதுடன் "உங்கள் முயற்சி வெற்றி பெற்றது போலும்" எனக் கூறி வரவேற்றார். ஸ்ரீபால் அவர்கள் புன்முறுவலுடன் "அது மகாத்மா காந்தியடிகள் ஆற்றிய அஹிம்சா தர்மத்தின் வெற்றியே ஆகும். யான் பலிவிலக்குச் சட்டமூலம் பற்றியே தங்களிடம் பேச வந்துள்ளேன்" என்று கூறிப் பலிவிலக்குச் சட்டமூலத்தின் வாசகத்தைத் தந்தார். திரு நாயுடு அவர்கள் மகிழ்ச்சியுடன் படித்துப் பார்த்து, "யான் தங்களை முன்னரே அறிவேன். நான் மாணவனாய் இருந்த காலத்தில் தாங்கள் இவ்வூரில் பிரசாரம் செய்ய வந்ததும் அப்போது நேரிட்ட சிலவருந்தத்தக்க சம்பவங்களையும் யான் அறிவேன்" என்று கூறி, "தங்கள் விருப்பத்தின்படியே, யானே இதனைப் பிரேபிக்கிறேன்" என்றும் அன்புடன் மொழிந்து, சட்டசபை



உயிர்ப்பலி தடை மசோதாவை சட்டமாக நிறைவேற்றிய மேல் சபை அங்கத்தினர் S. B. ஆதித்தனுர் அவர்களும் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களும்.

—120ம் பக்கம் பார்க்க.

ஜீவரக்ஷகப் பிரசாரசபை ஆண்டு விழாவும் தலைமை வகித்த
ஸ்ரீமதி ருக்குமணி தேவியாரும்.

யில் பலிவிலக்கு மசோதாவைப் பிரேரிபிக்கும் அறிவிப்புக் கடிதமொன்றை எழுதி அப்பொழுதே அதனைச் சட்டசபைக்கு அனுப்பினார். இச்செய்தி பத்திரிக்கைகளில் வெளியாயிற்று. ஸ்ரீபால் அவர்கள் மேல்சபை உறுப்பினர்களைக் கண்டு பேசியதுபோலவே கீழ்ச்சபை உறுப்பினர்களையும் கண்டு பேசி, கட்சி பேதங்களின்றி பலிவிலக்கு சட்டமூலத்தை அனைவரும் ஆதரிக்குமாறு வேண்டிக் கொண்டார். 1949-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திரு. இராஜாராம் நாயுடு அவர்களால் கீழ்ச்சபையில் உயிர்ப்பலித் தடைச்சட்ட மசோதா பிரேபிக்கப்பட்டது. அப்பொழுது அம்மசோதாவை வரவேற்றுப் பலர் பேசினார்கள். அச்சமயம் வேறு ஒரு சட்டமூலம் ஒன்று அரசியலார் நிறைவேற்ற இருந்ததால், பலிவிலக்குச் சட்டமூலம் ஒத்திவைக்கப் பட்டது.

அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் பலிவிலக்குச் சட்டமூலம் வரும் என்று எதிர்பார்த்தும் வரவில்லை. இவ்வாறே இரண்டு மூன்று சட்டசபைக் கூட்டங்களிலும் இந்தச் சட்டமூலத்தைப் பற்றிய பேச்சே இல்லை. இதைக் குறித்து திரு. இராஜாராம் நாயுடு அவர்களுக்கும் ஒன்றும் விளங்கவில்லை. ஸ்ரீபால் அவர்கள் பலிவிலக்குச் சட்டமூலம் வராமல் இருப்பதின் காரணத்தை அறிய முதன்மையான சிலரைக் கண்டு பேசினார். கடைசியாக இச் சட்டமூலம் நிறைவேருவண்ணம் ஒரு தலைவர் தலையிட்டு இருப்பதாகத் தெரிந்தது. பின்னர் ஸ்ரீபால் அவர்கள் இச் சட்டமூலத்தை நிறைவேற்றும் வகையில் நாடெங்கும் கிளர்ச்சி செய்வது எனத் தீர்மானித்தார். இக்கிளர்ச்சியை முதன் முதல் சென்னையில் துவக்கிவைத்தார். அது சம்பந்தமாக கோகலே மண்டபத்தில் பொதுக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்தார். சென்னை நகரம் எங்கும் சுவரொட்டிகள் மூலம் உயிர்ப்பலித் தடை சட்டமூலம் விரைவில் சட்டமாக்கப்பட வேண்டுமென அரசியலாரை வேண்டிக்கொள்ள ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும் என அறிவித்தார். 1949ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ஆம்

கரூர் மாரியம்மன் கோயிலில் பலி நிறுத்தப் பிரசாரத்தில் கலந்து கொண்ட கரூர் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களும் ஸ்ரீபால் அவர்களும் (வலது பக்கமிருந்து இரண்டாவது)

நாள் திரு. ஆர். வி. சுவாமிநாதன் எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் கோகலே மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். 1941 ஆம் ஆண்டு ஜனவரியில் பிரேரேபிக்கப்பட்ட பலிவிலக்குச் சட்டமூலத்தை விரைவில் சட்டசபையில் கொண்டுவந்து நிறைவேற்றிவைக்க வேண்டுமெனத் திருவாளர்கள் திவான்பகதூர் P. பாஷ்யம் ஐயங்கார் பீ. ஏ. பீ. எல்., கே. இராஜாராம் நாயுடு. எம். எல். ஏ., எஸ். பி. ஆதித்தன், எம். எல். சி., எம். கன்னியப்பன், எம் .எல். ஏ., ம. பொ. சிவஞானம், ராவ்சாகிப் என். சி. ரங்கசாமி ஐயங்கார், வேலுசாமிக் கவுண்டர். எம். எல். ஏ., என். அண்ணாமலைப் பிள்ளை எம். எல் .ஏ., பி. எஸ். செட்டியார் முதலிய பெரியோர்கள் அரசியலாரைக் கேட்டுக்கொண்டு, எக்காரணத்தாலும் அது நிறுத்தப்படக் கூடாதென்றும், விரைவில் அச் சட்டமூலத்தை நிறைவேற்றி மக்கள் சமுதாயத்தின் அறிவை வளர்க்க வேண்டும் என்றும், மக்கள்பால் உள்ள மூடநம்பிக்கைகளை அகற்றும் பணியில் நமது மாகாணம் எப்பொழுதும் பின்வாங்கக் கூடாதென்றும், திருக்குறள் போன்ற அறநூல்களின் கொள்கைகளை நிலைநாட்டுவதில் நாம் அக்கறை கொள்ள வேண்டுமென்றும் பேசினார்கள். அடையாறு பிரம்மஞான சபையைச் சார்ந்தவரும், "கலா க்ஷேத்திர" த்தைத் தோற்றுவித்தவருமாகிய திருவாட்டி உருக்குமணி தேவியார் அவர்கள் இக்கூட்டத்திற்கு வர இயலாமையால், பலிவிலக்குச் சட்டமுலத்தை விரைவில்சட்டசபையில் நிறைவேற்றி வைக்கவேண்டும்என ஒருஅறிக்கையை ஆங்கிலத்தில் அச்சிட்டுக் கூட்டத்தில் வழங்குமாறு அனுப்பிவைத்தார்கள். தமிழ் நாடெங்கும் உள்ள பல்வேறு சங்கங்களும், அன்பர்களும், தந்திகளும் கடிதங்களும் அனுப்பி வைத்தார்கள். அவையாவும் அக்கூட்டத்தில் படிக்கப்பட்டன. பொதுக் கூட்டத்தில் நடந்த நிகழ்ச்சிகளும் தீர்மானங்களும் அரசியலாருக்கு அனுப்பப்பட்டன. அச்சமயம் கனம் குமாரசாமி ராஜா அவர்கள் முதன் மந்திரியாகஇருந்தார். அப் பெரியாரையும், சட்டசபைத் தலைவர் திரு. ஜே. சிவஷண்முகம்

பிள்ளை அவர்களையும் ஸ்ரீபால் அவர்கள் நேரே கண்டு பலி விலக்கு சட்டமூலம் சம்பந்தமாகவும் கோகலே மண்டபத்தில் நடந்த பொதுக்கூட்டத்தின் விவரங்களையும் விளக்கமாகப் பேசினர். கனம் மந்திரி அவர்களும், தலைவர் அவர்களும் அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் அவசியம் பலிவிலக்குச் சட்டமூலத்தைக் கொண்டு வருவதாக உறுதி கூறினர்கள். அவ்வாறே 1950ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 7ஆம் நாளும், 14ஆம் நாளும் பலி விலக்கு சட்டமூலம் விவாதிக்கப் பெற்று பெரும் பாலான உறுப்பினர்களின் பேராதரவால் சட்டமாக்கப்பட்டது. திருவாளர்கள் முனுசாமி பிள்ளை, எம். எல். ஏ., இராஜமன்னர் செட்டியார், எம். எல். ஏ., எம். கன்னியப்பன், எம். எல். ஏ., தென்னேட்டி விசுவநாதன், எம். எல். ஏ., சர்தார் வேதரத்தினம் பிள்ளை எம். எல். ஏ., போன்ற அறிஞர்கள் பலிவிலக்குச் சட்டமூலத்தை ஆதரித்துப் பேசியதுடன் சென்னைத் தென்னிந்திய ஜீவரக்ஷகப் பிரசாரசபையின் இணையற்ற தொண்டுகளையும் பாராட்டிப் பேசினர்கள். இப்பொதுக் கூட்டத்திற்குரிய முயற்சியில் நமது ஸ்ரீபால் அவர்களுக்குப் பெருந்துணையாயிருந்தவர்கள் திரு. ஜெ. ஏ. அகஸ்தியப்பன் அவர்களும் சென்னை நடராஜா கல்விக் கழக அன்பர்களும், உமா அச்சகத்தின் உரிமையாளர் உயர்திரு ஜி. உமாபதி அவர்களுமவார்கள்.

மறம் சாய்ந்து அறம் வென்றது.

நாம் நமது பாரதநாட்டின் வரலாற்றைப் படித்துள்ளோம். தெய்வத்தின் பெயராலும் சமயத்தின் பெயராலும் எவ்வளவோ கொடுமைகள் நம் நாட்டில் நிகழ்ந்துள்ளன. மக்களைத் தவருன வழியில் செலுத்தியதால் நாட்டில் மூடநம்பிக்கைகள் வளர்ந்து விட்டன. இத்தகைய மூடநம்பிக்கைகளை அவ்வப்போது தோன்றிய அறிஞர் பெருமக்கள் பலவாறு முயன்று அகற்றியுள்ளனர். தெய்வத்தின் பெயரால் நரபலிகள் நடந்து வந்தன. அவைகள் ஆங்கில அரசியலார்



உயிர்ப்பலி தடைச்சட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய சட்டசபை கொறடா உயர்திரு. K. இராஜாராம் நாயுடு அவர்கள்.



தென்னிந்திய ஜீவரக்ஷகப்பிரசார சபையின் தொண்டினை உலகெல்லாம் புகழவும், அதன் கொள்கை சட்ட மூலம் வெற்றிகாணவும் செய்த ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் அலுவலகத்தில் அமர்ந்திருக்கும் காட்சி.

வருவதற்கு முன்னரே அகன்றன. உடன்கட்டை யேறும் கொடிய பழக்கம் இராஜாராம் மோகன்ராய் அவர்கள் பெருமுயற்சியால் அழிந்தொழிந்தது. உல கெங்கும் அலகு குத்திக்கொள்ளும் கொடூரமான தெய்வ வழிபாடு தஞ்சை வீரசிங்கம் பேட்டை கலகத் திற்குப் பின்னர் ஆங்கில அரசியலாரால் தடை செய் யப்பட்டது. நாடு சுதந்திரம் பெற்றதும் மகாத்மா காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய நம் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் பெருமுயற்சி செய்து காங்கிரஸ் அரசியலாரின் துணையினைக் கொண்டு 1–6–1951–ல் உயிர்ப்பலியை ஒழித்தார். ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் தாம் மேற்கொண்ட சேவையை உள்ளன்புடனும் உண்மை உணர்ச்சியுடனும் தளரா ஊக்கத்துடனும் தொண்டாற்றியதன் பயனாக அவர் தம் முயற்சி அவர் காலத்திலேயே வெற்றி யளித் தது. ஜீவகாருண்யச் செல்வர் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் தமிழ் நாட்டு வரலாற்றில் ஒரு சிறந்த இடம் பெற்று விட்டார். சென்னைத் தென்னிந்திய ஜீவரட்சகப் பிரசார சபையின் ஆதரவில் அவர் ஆற் றிய சேவையால் உலகமூடம், தேவமூடம், பாஷாண்டி மூடம் ஆகிய மும்மூடங்களும் ஒழிந்தன. மக்கள் அறிவையும் நாகரிகத்தையும் பெற்றனர். கண்மூடி வழக்கங்கள் மண்மூடப் பட்டன. இவ்வெற்றிச் செய்தி தமிழ்நாடெங்கும் பரவியது. ஆங்காங் குள்ள அன்பர்களும் அறிஞர்களும், சன்மார்க்கச் சங் கத்தினரும், ஜீவகாருண்ய சபையினரும், திருவள்ளு வர் கழகத்தினரும், காங்கிரஸ் சபையினரும் திராவி டக் கழகத்தினரும், பொதுநலச் சங்கத்தினரும், சம யச் சார்பான பல்வேறு சபையினரும் நம் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களைப் பாராட்டி வாழ்த்துச் செய்திகள் அனுப்பித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். அவற்றையெல்லாம் இங்கு வெளியி டுவதாயின் இச் சிறுநூல் இடம்தராதென நிறுத்திக் கொண்டோம்.

திருநெல்வேலி ஜில்லா எப்போதும் வென்று னைச் சேர்ந்த காட்டுநாய்க்கன்பட்டி திருவள்ளுவர்

ஜீவகாருண்யச் சங்கக் காரியதரிசி, உயர்திரு வெள்ளைச்சாமி அவர்களும் அவ்வூர் பிரமுகர்களும் ஸ்ரீபால் அவர்களுக்கு வரவேற்பும் வாழ்த்துரையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இவ் வெற்றிச் செய்தியைப் பலரும் எந்நாளும் அறியும்வண்ணம், 1932 ஆம் ஆண்டு "கிள்ளை விடு தூது" என்னும் அழகிய பாடலின் வாயிலாக உயிர்ப்பலித் தடைச்சட்டம் வேண்டுமென வற்புறுத்தியவாறு இன்று சட்டமாக்கப்பெற்றதால் அவ்வெற்றிச் செய்தியைக் "கிள்ளையின் வெற்றி" என்னும் பாக்களின் வாயிலாக ஒரு நூல் இயற்றி வெளியிட்டார். அதற்குக் "கிள்ளைவிடு தூதும் கிள்ளையின் வெற்றியும்" எனப் பெயரிட்டார். இந் நூலினைப் படித்து மக்கள் எல்லோரும் மகிழ்ந்தனர். தமிழ்நாடெங்கும் பாடிக் களித்தனர். இதனைப் படித்து அனுபவித்த அன்பர் பலருள் நாஞ்சில் ரா. கணபதி அவர்கள் பின்வரும் ஒரு புகழ்மாலையைச் சூட்டி அனுப்பி வைத்தார். அப் புகழ்மாலையில்:

சிற்றுயிர்கள் படும் பாட்டைப் போக்க ஆய்ந்து
சீரியநல் சட்டமன்றம் எய்திப் பெற்ற
கற்றுவல பசுங்கிளியே ஸ்ரீபால் என்னும்
கலைசான்ற பகுத்தறிவுச் சுடரே! உன்னால்
நற்றமிழ் நாடின்னும் பல நலங்களுற்று
நயங்கண்டு புகழ்கண்டு அறிவுகூர்ந்து
சுற்றமுடன் தோழருடன் துகள்தீர் வாழ்வு
தோய்ந்திடுக தூயவனே வாழிவாழி

கல்லாலின் கீழிருந்து அறவோர்க் கன்று
கைலைமலைப் பெம்மானால் உரைத்த வேத
நல்வழியை விஜயாஜி முனிபால் பெற்று
நாவன்மை ஆதித்தர் துணை கைக் கொண்டு
வல்லமதி இராசாராம் சலியாவூக்கம்
வாய்க்கவரு நல்லமைப்பால் மறத்தைச் சாய்த்த
அல்லல்தீர் பசுங்கிளியே அன்பால் வாழ்க
அனைத்துலகும் வெல்லும்வழி போற்றி வாழ்க!

சென்னைக்கு அடுத்த நெட்டுக்குப்பம் துலுக்காணத்தம்மன் கோயிலில் உயிர்ப்பலி நிறுத்திய மீனவர் தலைவர்கள். இடது கோடியில் கையில் மலர் செண்டுடன் நிற்பவர் ஜீவபந்து ஸ்ரீபால்.

நெட்டுக்குப்பம் மீனவர் பெண்மணிகள் துலுக்காணத்தம்மனுக்குப் பலியின்றிப்
பாற்பொங்கல் படைக்கும் காட்சி

அன்பாலே உலகுயிர்கள் ஒன்ருய் நண்பாய்
அமைந்திடவே அரன்படைத்தான் அவனிதன்னை
பண்பாடு விட்டுள்ளம் கெட்டமாந்தர்
கண்மூடித் தனங்கொண்ட கடவுள் பேரால்
வன்பாகக் கொல்லுதலை நீக்க நம்பால்
வரிந்து-கட்டி முனைந்திட்டார் பல்லாண்டாகத்
தன்பாலே வெற்றியுடன் சட்டங் கண்டார்
சார்ந்துவாழ் உயிர் போற்ற வாழி ஸ்ரீபால்

இப்பாடலைப் பாடிய நாஞ்சில் நா. கணபதி அவர்கள் நமது பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையாரின் அருமைச் சகோதரர் ஆவர். இப் பாடல்களைப் பலர் பாராட்டிச் சுவைத்தனர். மேலும் இவ்விடு தூது தவிர, "சட்டம் பேசுகிறது" என்னும் ஒரு நூலின் வாயிலாகவும் பலிவிலக்குச் சட்டம் பிறந்த வரலாற்றை தெளிவுற விளக்கி வெளியிட்டுள்ளார்.

சமயத்தொண்டு

1936ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் சென்னை வேல் பிக்சர்ஸ் கம்பெனியாரால் சைவ நாயன்மாரில் ஒருவராகிய அப்பர் அடிகள் கதையை நிழற்படமாக எடுக்கப்போவதாகப் பத்திரிக்கைகளில் விளம்பரப் படுத்தியிருந்தார்கள். ஸ்ரீபால் அவர்கள் இவ் விளம்பரத்தைக் கண்டதும், நேரே வேல் பிக்சர்ஸ் கம்பெனியின் உரிமையாளராகிய திரு. எம் டி. இராஜன் அவர்கள்பால் சென்று அப்பர் கதையைப் படித்துப் பார்க்கலாமா என்று கேட்டார். திரு.இராஜன் அவர்கள் கதை இன்னும் எழுதப்படவில்லை என்றும் திருவாளர்கள் கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் எழுதிக் கொண்டிருக்கிருர்கள் என்றும் சொன்னுர். ஸ்ரீபால் அவர்கள் இப்படத்திஞல் நம் நாட்டில் மக்களுக்குள் வளர்ந்துவரும் பரஸ்பர அன்பும் சகோதர உணர்ச்சியும் பாழாகிவிடும் என்பதைத் தாங்கள் அறியவேண்டும் எனத் தெரிவித்தார். அதற்கவர்,

உண்மைதான். இருந்தாலும் இக்கால மக்கள் அக் கதையைக் கதையாகக் கொள்வார்களே யல்லாமல் வேறு சமயவெறியாகக் கொள்ளமாட்டார்கள் என்றும் சொன்னார். "தாங்கள் அவ்வாறு நினைப்பது தவறு. தற்சமயம் தமிழ் நாட்டில் எஞ்சியிருக்கும் ஜைன சமயத்தாருக்கு இது பெருத்த தீங்கு விளைவிக்கும் என்பது என் கருத்து. தாங்களும் திருவாளர் பிள்ளை அவர்களும் நன்கு ஆராய்ந்து பாருங்கள். அவசரப்பட வேண்டாம்" என்று ஸ்ரீபால் கூறிவிடை பெற்றுக் கொண்டு வந்தார். பின்னர் அவர் சென்னையிலுள்ள தம்நண்பர்களைக் கொண்டு "தென்னிந்திய ஜைனசங்கம்" என ஒரு சங்கம் நிறுவினார். அச் சங்கத்தின் தலைவராக பேராசிரியர் திரு. ஏ. சக்கரவர்த்திநயினார் எம்.ஏ.,எல்.டி., அவர்கள் விளங்கினார்கள். திருவாளர் வி. அனந்தராஜ் ஜெயின் பீ.ஏ., அவர்கள் உபதலைவராகவும், ஸ்ரீபால் அவர்கள் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பின்னர் அச்சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில், "வேல் பிக்சர்ஸார் அப்பர் படம் எடுப்பதை நிறுத்த வேண்டும் என்றும் இல்லையேல் பொதுஜன அமைதிக்குப் பங்கம் ஏற்படும்" என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வேல் பிக்சர்ஸ் கம்பெனியாருக்கு அனுப்பப்பட்டது.

கடிதத்தைக் கண்டதும் திரு. எம். டி. இராஜன் அவர்களும், திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்களும் ஸ்ரீபால் அவர்களைக் கண்டு பேசினர். அப்பர் கதையை வேறு சில மாறுதல்களுடன் எழுதிக் கொண்டு வருவதாகவும் அதனைப் பார்வையிட்டு முடிவு சொல்லுங்கள் என்றும் கேட்டுக்கொண்டு இருவரும் சென்று விட்டார்கள்.

இவ்வாறு பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கையில் ஸ்ரீபால் அவர்கள் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களுடமும் மற்றும் சில சைவப் பெருமக்களையும் சந்தித்து அப்பர் படம் சம்பந்தமாகப் பேசிவந்தார். பெரும்பாலோர் சமா

தானமும் சகோதரத்துவமும் நிலவிவரும் இக்காலத்தில் அப்பர் கதை போன்றவைகளைப் படம்பிடித்தல் முற்றிலும் தவறு என்றே தங்கள் கருத்தைத் தெரிவித்தனர். அதுமட்டுமன்று தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் தாம் வெளியிட்டுவந்த "நவ சக்தி" என்னும் செய்தித்தாளிலும் அப்பர் படம் எடுப்பது தவறு எனக் கண்டித்து எழுதினர்.

இச்செய்தி தமிழ்நாடெங்கும் பரவியது. பெரும்பாலான மக்களும், அறிஞர்களும் ஸ்ரீபால் அவர்களின் முயற்சியை வரவேற்றனர். சில சமயப் பற்றுடையவர்கள் அப்பர் கதையைத் திரையிடலாம் என்று பேசினர். ஸ்ரீபால் அவர்கள் அப்பர் படம் எடுப்பதை ஆட்சேபித்துப் பல ஜைன கிராமங்களில் பொதுக்கூட்டம் கூட்டிச் சர்க்காருக்கும், வேல் பிக்சர்ஸ் கம்பெனியாருக்கும் தாம் நிறைவேற்றிய தீர்மானங்களை அனுப்பிவைத்தார்கள். தஞ்சை மாவட்ட ஜைன சங்க அன்பர்களும் ஸ்ரீபால் அவர்களுக்குப் பேருதவியாக இருந்தார்கள். கும்பகோணம், வேதாரண்யம், மன்னார்குடி, கரந்தை, திருப்பறம்பூர், ஆரணி, காஞ்சிபுரம் முதலிய இடங்களில் ஜைனப் பெரியார்கள் கூடி, அப்பர் வரலாற்றைப் படம் எடுப்பதை நிறுத்தவேண்டுமெனத் தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள்.

இவ்வாறு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் திரு. மறைமலையடிகளார் மூத்த மகனார் திரு. வித்துவான் மறை திருநாவுக்கரசு ஸ்ரீபால் அவர்களைச் சந்தித்து அப்பர் படம் சம்பந்தமாகக் கலந்து பேசினர். இருவரும் நெருங்கிய நண்பர்களாதலின் மனம்விட்டுப் பேசினர்கள். கடைசியாக ஸ்ரீபால் அவர்கள், 'தாங்கள் சிறுபான்மைச் சமூகத்தினராகிய எங்கள் நிலையில் இருந்து யோசியுங்கள். எங்கள் முயற்சி நியாயமானதே என்பதை அறிவீர்கள். எனவே தங்கள் விருப்பத்துக்கு இணங்காமைக்குத் தாம் வருந்துவதாகவும், திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை, எம். ஏ., அவர்கள் எழுதும் அப்பர் வரலாறு

வந்தபின்னர், அதனைப் படித்துப் பார்த்துத் தங்கள் சங்கத்தில் ஆலோசனை செய்து முடிவு தருவதாகவும் கூறினர்'. பின்னர் திரு மறை திருநாவுக்கரசர் அவர்கள் விடைபெற்றுச் சென்றார். திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட அப்பர் படக்கதை என்னும் அச்சிட்ட நூல் ஒன்று தென்னிந்திய ஜைன சங்கத்தின் பார்வைக்கு அனுப்பப் பட்டது அந்நூலினை ஆய்ந்து முடிவு செய்ய 7-1-37ல் இரவு தென்னிந்திய ஜைன சங்க செயற்குழு கூட்டம் கூடிற்று. அந்நூலினை முழுவதும் படித்துப் பார்த்த பின்னர், செயற்குழு அந்நூலிலும் குறைகள் இருப்பதாக அறிந்து, அக் கதையின்படி படம் எடுப்பதை எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானம் பத்திரிக்கைகளுக்கும் வேல் பிக்சர்ஸ் கம்பெனியாளருக்கும் சென்னை அரசியலாருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

அப்பர் நிழர் படத்துக்கு ஆட்சேபனையும் அரசியலாருக்கு விண்ணப்பமும்.

சென்னைத் தென்னிந்திய ஜைன மகா சங்கச் செயலாளர் டி. எஸ். ஸ்ரீபால் அவர்கள் எழுதுவதாவது.

''சில மாதங்களாகத் தமிழ் நாட்டில் அப்பர் நிழற் படக்காட்சி சம்பந்தமாக ஜைனர்கள் பெருங்கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இவ்வாறு செய்து வருவதை யாவரும் அறிவர். சிலநாட்களுக்குமுன் வேல் பிக்சர்ஸ் கம்பெனியார் அப்பர் வரலாற்றை அதன் மூலப் புராணத்துக்கு மாறாக எழுதிய ஓர் அச்சுப் பிரதியை எங்கள் பார்வைக்கு அனுப்பினார்கள். அதை எங்கள் சங்கத்தினர் பார்வையிட்டு வெகு ஜாக்கிரதையாக படித்துப் பார்த்த பின் நாங்கள் படம் எடுக்கக்கூடாதென ஒரு தீர்மானம்

நிறைவேற்றி வேல் பிக்சர்ஸ் கம்பெனியாருக்கு அனுப்பியுள்ளோம். நாங்கள் அப் படத்தை மறுப்பதன் உண்மையை அரசியலாரும், பொதுமக்களும் அறியவேண்டி இவ் வறிக்கையை வெளிப்படுத்தவேண்டியதாயுள்ளது. இத் தமிழ் நாட்டின்கண் ஜைனர்களின் பேரில் மக்களுக்குக் கெட்ட அபிப்பிராயத்தையும் பகைமையையும் வளர்ப்பதாய் தேவாரமும், பெரிய புராணமும், திருவிளையாடல் புராணமும் விளங்கிக் கொண்டிருக்கின்றன. இந் நூல்களைத் தழுவி அநேக சைவப் புலவர்கள் பல புத்தகங்களைப் பல கோணங்களில் வெளியிட்டிருக்கிறார்கள். இத்தகைய புத்தகங்களைப் பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பாடமாக வைத்தும், பொதுமக்களுக்குப் புராணப் பிரசங்களாலும் பரவச்செய்து துவேஷத்தை வேரூன்றச் செய்துள்ளார்கள்.

மதுரையிலும், திருமங்கலத்திலும், சீர்காழியிலும் இன்னும் சில இடங்களிலும் சம்பந்தர் விழாவில் ஜைனர்க்ளைக் கழுவேற்றுவது போல் பொம்மைகளை மாட்டி மக்களுக்குச் சமயக் காழ்ப்பை மேலும் வளர்த்து வருகிறார்கள்.

இவ்வாறு பல துறையிலும் ஜைனர்கள் பேரில் துவேஷத்தை வளர்க்கும் இவ் வேளையில் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தாற்போலப் படமூலமாகவும் இதனை வெளிப்படுத்தினால் குறைந்த கூட்டத்தினராகிய எங்கள் வகுப்பினருக்குப் பேராபத்து விளையும் என்பது நிச்சயம். ஆகையால் மக்கள் பலரும் சமாதானமாக வாழவேண்டி அரசியலார் இப்படக் காட்சியை உடனே நிறுத்த முயற்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கடைசியாக வேல் பிக்சர்ஸ் கம்பெனி யாருக்கு ஒரு வார்த்தை. வேல் பிக்சர்ஸ் கம்பெனியார் மதத்துவேஷம் ஏற்படக் கூடிய படங்களைத் தயாரிக்காமலிருக்க உண்மையில் விரும்பினால், அப்பர் சரித் திரத்தையே மூல புராணத்துக்கு மாருக எழுதியது போல் ஜைனர்களை அப் படக் காட்சியில் காட்டாமல் கதை எழுதிப் படம் எடுத்துக் கொள்ளலாம்

சுதேசமித்திரன். 8-1-37

இவ்வறிக்கையைக் கண்டதும் திருவாளர் கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்களும் வேல் பிக்சர்ஸ் கம்பெனியின் உரிமையாளர் திரு. எம். டி. இராஜன் அவர்களும் ஸ்ரீபால் அவர்களைக் கம்பெனிக்கு அழைத்துச் சென்று, தாங்கள் ஏதாகிலும் திருத்தம் செய்தால் அதன்படி படம் எடுப்பதாகவும் கூறினார்கள். ஸ்ரீபால் அவர்கள் இனி எவ்வித முடிவும் செய்வதற்கில்லை என்றும், ஜைன சமயத்தைப் பழிக்கும் எதையும் படத்தில் காட்டாமல் கதை யெடுத்துக் கொள்வதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்றும் கூறி விட்டார். இப்பதிலைக் கேட்ட இருவரும் ஸ்ரீபால் அவர்களிடம் வருத்தம் தெரிவித்ததுடன், ஸ்ரீபால் அவர்களின் தன்னலமற்றச் சேவையைப் பாராட்டி, சமயப் பாதுகாப்பின் பொருட்டுத் தியாக புத்தியுடன் பிடிவாதமாக நடந்து கொண்டதையும் பாராட்டிப் பேசினார்கள். ஸ்ரீபால் அவர்களும் அவ்விருவருக்கும் நன்றி கூறி விடை பெற்று வெற்றியுடன் திரும்பினார்.

இத்தகு சேவையில் ஸ்ரீபால் அவர்களுடன் இருந்து தொண்டாற்றியவர்கள் திருவாளர்கள் V. K. அப்பாண்டை ராஜன், A. ஜெயக்குமார், அ. ஜெ. அப்பாவு நயினர், B. தர்மசாம்ராஜ்யம், A. K. ஜெயின், T. அப்புகுட்டி நயினர், B. சத்தியமூர்த்தி, ஜெ. அகஸ்தியப்பன் N. B. ஜெயந்தரன், S. அனந்த பத்மநாப ஜெயின், S. கெஜபதி ஜெயின், D. வசந்த

ரன், D. அபராஜிதம், S. சுவர்ணபத்திரநயினர், சின்ன தம்பி நயினர், வி. அய்யாதுரை நயினர், தச் A. துரை சாமி நயினர் போன்ற இளைஞர்களும் மாணவர்களு மாவார்கள்.

திருஞானசம்பந்தர் கிராமபோன் ரிகார்டுகள்

1937 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருஞான சம்பந்தர் கதை, பாட்டுடன் கிராமபோன் ரிக்கார்டுகள் விலைக்குக் கிடைக்கும் என்றும், விற்பனை உரிமையாளர் சென்னை இப்ராஹீம் கம்பெனியார் என்றும் பத்திரிக்கைகளில் விளம்பரம் வந்தது. இதனைக் கண்டதும் ஸ்ரீபால் அவர்கள் திடுக்கிட்டார். உடனே அக்கம்பெனிக் குச் சென்று திருஞானசம்பந்தர் ரிகார்டுகள் விலைக் குவேண்டும் என்று கேட்டார். கம்பெனியார் இன் னும் ரிகார்டுகள் வரவில்லை என்றும் மாதிரிப் பிரதிக ளாகச் சில ரிகார்டுகள் வந்திருக்கின்றனவாகையால் அடுத்தவாரம் வந்தால் தருவதாகவும் கூறினார்கள். "தயவு செய்து மாதிரிப் பிரதிகளில் ஒன்று கொடுக் கக்கூடாதா? அதைக் கேட்க என்மனம் விரும்பு கிறது" என்றார் ஸ்ரீபால். இவர் விருப்பத்திற் கிணங் கக் கைவசமிருந்த ஒரு பிரதியை விலைக்குக் கொடுத் தார்கள். அவைகளை அவ்விடத்திலேயே போட்டும் காண்பித்தார்கள். ஸ்ரீபால் அவர்கள் ரிகார்டுகளைப் பெற்றுக்கொண்டு நேரே மேல் சித்தாமூர் ஜைன மடாதிபதி சுவாமிகளைத் தேடிச் சென்றார். அவர் ஆரணிக்கு அடுத்த சேவூர் கிராமத்தில் முகாம் செய் திருந்தார். ஆரணி திரு. வசுபாலநயினர் அவர்களை அழைத்துக்கொண்டு சுவாமிகளைச் சந்தித்து ரிகார்டுகளைப் போட்டுக் காண்பித்தார். இசைத் தட்டுக்களில் உள்ள பாடல்களையும் வசனங்களையும் கேட்டு சுவாமிகள் வருந்தினர். இப்படியுமா கதைகள் இருக்கின்றன வென்றும் கேட்டார். அதற்கு ஸ்ரீபால் அவர்கள் "இவ்வாறெல்லாம் பாடிய பாட்டுக்களை யும், கதைகளையும் நாம் பறிமுதல் செய்தாக வேண் டும். இல்லையேல் பெரிய புராணம் போன்றவை

களைப் படித்தவர்களே யன்றிப் பாமரமக்களும் நமது சமயத்தைப் பழிக்குமாறு நேரிடும். ஆகவே இதனைப் பறிமுதல் செய்ய வேண்டும். அதற்காகவே தங்களிடம் வந்தோம் என்று கூறினர். திரு. வசுபால நயினர் அவர்களும் மடத்தின் சார்பாகவே வழக்குத் தொடர்வது நலம் என்று சொன்னர். அதனைக்கேட்ட சுவாமிகள், "நமது சமயப் பெரியார்கள் அவசர்ப் பிணி காலங்களில், நமது சமயம் வீழ்ச்சியடையும் என்று எழுதி யிருப்பதுபோல, இக்காலத்தில் நமது சமயத்துக்கு இத்தகைய அறிகுறிகள் காணப்படு றன. இதற்காக வழக்குத் தொடர்வதால் மடத்துக் குப் பொருள் நஷ்டமும், வீண் உழைப்பும்தான் ஏற் படும் என்று கூறி, வழக்குத் தொடர மறுத்து விட் டார். உடனே ஸ்ரீபால் அவர்களும், திரு. வசுபால நயினர் அவர்களும் சுவாமிகளிடத்தில் விடைபெற் றுக் கொண்டு வந்து விட்டனர். ஸ்ரீபால் அவர்கள் சுவாமிகளின் பதிலைக்கேட்டு மனம் தளரவில்லை. நேரே சென்னைக்கு வந்தார். சென்னையிலுள்ள சுவே தாம்பர ஜைனர்களின் தலைவர்களாக விளங்கும் சேத். மோஹன்மல்ஜீ சோர்டியா அவர்களையும், ஷேத் லால்சந்த்ஜீ தாதா அவர்களையும், ஷேத் ரிகப் தாஸ் ஜெயின் அவர்களையும், ஷேத் இந்திரசந்த் கெலடா அவர்களையும், ஷா தேவ்ஸி முல்சந்த அவர்க ளையும் ஒன்றுகூட்டித் திருஞானசம்பந்தர் கிராம போன் ரிகார்டுகளைப் போட்டுக் காண்பித்தார். இக் கதையைக் கேட்டதும் அவர்கள் மனம் நொந்தனர். இதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு ஊக்கமளித் தார்கள். ஸ்ரீபால் அவர்கள் இவர்கள் சமய உணர்ச்சி யைக் கண்டு மகிழ்ச்சியுற்றுர். உடனே ஸ்ரீபால் அவர் கள் அட்வகேட் லோபோ, பி.ஏ., பி.எல்., அவர் களை நாடிச்சென்று கிராமபோன் ரிகார்டுகள் சம்பந் தமான விவரங்களைக் கூறி வழக்குத் தொடருமாறு கேட்டுக் கொண்டார். அவரும் உடன்பட்டார். உடனே ரிகார்டுகளில் உள்ள கதைகளையும், பாட்டுக் களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுத் தார். அவருக்கு உதவியாக திரு. எம். கே. தேவராஜ் எம். ஏ., பி. எல்., அவர்களையும் ஏற்பாடு செய்தார்.

எம். கே. தேவராஜ் அவர்கள் மங்களூர் ஜைன சமயத்தைச் சேர்ந்தவராகையால் இதில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார். இரு வழக்கறிஞர்களும் சேர்ந்து இந்த ரிகார்டுகளை பறிமுதல்செய்யவேண்டிய அவசியத்தைப்பற்றிக்கவர்னருக்கு மனுச்செய்தனர். கவர்னர் அவர்கள் அம்மனுவை ஏற்றுக்கொண்டு, இந்த ரிகார்டுகளை எடுக்கக்கூடாதென்ற உணர்ச்சி சென்னையிலுள்ள ஜைனர் பலருக்கும் இருக்கிறதா என்பதைத் தான் அறியவேண்டுமென்றும், அதற்காக 20–1–37 அன்று வாயிதா போட்டிருப்பதாகவும், அன்று சென்னைக் கோட்டையில் ஜைனர் பலரும் வந்து தங்கள் உணர்ச்சியைக் காட்டவேண்டுமென்றும் கூறினார். அவ்வாறே 20 ஆம் தேதியன்று காலை 10 மணிக்குக் கோட்டை வாயிலில் தமிழ், குஜராத், மார்வார், கன்னடம் ஆகிய பல மொழிகள் பேசும் ஜைனப் பெருமக்கள் அனைவரும் வந்து கூடினர். இச்செய்தியை வழக்கறிஞர் லோபோ அவர்கள் கவர்னருக்குத் தெரிவித்தார். கவர்னரும், அரசாங்கப்பிரதம செயலாளர் பிரேக்கன்பரியும் வெளியே வந்து பார்த்தார்கள். வெளியில் குழுமியிருந்த ஜைனப் பெருமக்கள் பலரும் தங்கள் குறையை அறிவிக்கும் வகையில் கவர்னர் அவர்களுக்கு வணக்கம் செலுத்தினர். உடனே மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் எல்லோருக்கும் வந்தனம் கூறித், தான் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்தார்.

பின்னர் அரசாங்கப் பிரதம காரியதரிசி திரு. பிரேக்கன்பரி அவர்கள் வழக்கை எடுத்துக் கொண்டார். கல்கத்தா "ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" கம்பெனியாரின் வழக்கறிஞர்கள் இந்தக் கதை வரலாற்று சம்பந்தமானதென்றும் கி.பி. 12–13 ஆம் நூற்றாண்டிலிருந்தே புராணங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்றும் வாதித்தார்கள். இவ்வழக்கைத் தொடர ஜைன சங்கத்தினரால் ஏற்பாடு செய்திருந்த திரு. லோபோ பீ.ஏ., பீ.எல்., அவர்கள் "இக்கதை வரலாறு சம்பந்தமானதென நம்புவதற்கில்லையென்றும். இதில் சிவபெருமான் ஒரு சார்பினர் பக்

கம் நின்று மற்றொரு சார்பினரை அழிக்கும் துறையில் ஈடுபடுவதாக எழுதப்பட்டிருப்பதால், இது சமய சம்பந்தமான கதையென்றும், இதனால் பொது மக்கள் அமைதிக்கு இடுக்கண் ஏற்படும் என்றும், குறைந்த எண்ணிக்கை உடைய சமூகத்தினரான ஜைனர்களுக்குப் பேராபத்து விளையும் என்றும், ஆகவே இரண்டு சமயத்தாரிடையே ஏற்படவிருக்கும் அந்தச் சச்சரவைத் தடுக்க வேண்டி இந்த ரிகார்டுகளைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட பிரதம காரிய தரிசி அவர்கள், "லோபோ அவர்கள் கூறியபடி இரு சமயத்தாரிடையே சச்சரவு நேரும் என்று தாம் அஞ்சுவதாலும், வரலாறு சம்பந்தமானாலும் இத்தகைய விபரீதங்களை வளர்க்கும், எந்த முயற்சியையும் தடுத்தாள்வதே இந்த அரசியலாரின் கடமையாதலால் தாம் அந்த ரிகார்டுகளைப் பறிமுதல் செய்வதாகப் பின்வரும் தீர்ப்பை அளித்தார்:

Abstract from Fort St. George Gazette, Madras.

PUBLIC DEPARTMENT NOTIFICATION

FORT. ST. GEORGE FEB. 9, 1937

G. O. No. 299 public (General)

No. 3—In exercise of the powers conferred by section 19 (OF THE INDIAN PRESS (Emergency Powers) Act 1931 XXIII of 1931) The Governer In Council hereby declares to be forfeited to His Majesty all copies where-ever found of the booklet in tamil entitled "THIRUGNANA SAMBANDAR" written by one S. Narayana Ayyar of Madras and of the set of Four Double-Sided Gramphone Records in tamil bearing Nos N. 8422, N. 8423, N. 8424, and N. 8425, produced by *His Master's Voice Gramaphone Company*, embodying

the subject matter of the said book-let and all other documents *containing* copies of *translations* of or extracts from the said book-let or Gramaphone Records on the ground that they contain matter which tends to promote feelings of enmity and hatred between different classes of His Majesty's Subjects and are consquently of the nature described in Sub-Section (1) of Section 4 of the Said act as embodied by section 16 of the Criminal Law Amendment Act, 1932 (XXIII of 1932.)

(Sd.) BRACKENBURY,
Chief Secretary.

மொழி பெயர்ப்பு

பொது இலாகா அறிவிப்பு

போர்ட் செயின்ட் ஜார்ஜ் 9-2-37

சர்க்கார் உத்திரவு நெ. 299 (பொது)

*நெம்பர் 3 — சென்னை எஸ். நாராயண ஐயர் என்பவர் எழுதிய "திருஞானசம்பந்தர்" என்னும் புத்தகமும் அந்தப் புத்தகத்தைத் தழுவி "**ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ்**" கிராமபோன் கம்பெனியார் தயாரித்துள்ள* N. *8422*, N. *8423*, N. *8424*, *நெ. 8425 நெ. இருபுறமும் பதிவு பெற்றுள்ள ரிகார்டுகளும் மன்னர்பிரான் பிரைஜைகளுள் ஒரு வகுப்பாருக்கு மற்றொரு வகுப்பார்மீது வெறுப்புண்டாக்கத் தக்க வசனங்களிருக்கின்றன ஆகையினாலே, இவை இந்திய அச்சுச் சட்டத்தின் 4வது விதி 1வது உள் விதிக்கும் 1932 ம் வருஷத்திய* XXIII*வது கிரிமினல் சட்டத் திருத்தச் சட்டத்திற்கும் உட்படுமாகையினாலே ஷை 1931-ம் வருஷத்திய 23வது சட்ட விசேஷாதிகாரத்தைப் பிரயோகித்து சபையோடு கூடிய கவர்னர் ஷை புத்தகத்தின் பிரதிகளையும், அந்த ரிகார்டுகளின் பிரதிகளையும், அவற்றின் எல்லாப் பகுதி*

களையும் எங்கு கண்டபோதிலும் பறிமுதல் செய்வ தாக உத்திர விடுகிருர்.

(ஒப்பம்) **பிரேக்கன் பரி,**
பிரதம காரியதரிசி.

இந்தத் தீர்ப்பை ஏற்றுக் காவல் அதிகாரிகள் சென்னையில் ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ் கம்பெனியின் விற்பனையாளராகிய இப்ராஹீம் கம்பெனியிலிருந்த திருஞானசம்பந்தர் ரிகார்டுகள் அனைத்தையும் பறிமுதல் செய்து எடுத்துச் சென்ருர்கள். இவ் வெற்றிக்குக் காரணமாயிருந்த திருவாளர் டி. எஸ். ஸ்ரீபால் அவர்களை பாரதநாட்டின் பல பாகங்களி லுள்ள ஜைனப் பெருமக்கள் வாழ்த்திப் பாராட்டி ஞர்கள். தஞ்சை ஜில்லா ஜைன சங்கத்தின் சார்பாக திருவாளர்கள், நேமிநாத முதலியார் அவர்கள், வர்த்தமான முதலியார் அவர்கள், அ. சக்கரவர்த்தி நயினுர் பி. ஏ., அவர்கள் துரைசாமி நயினுர் அவர் கள், ஜெ. அனந்தராஜய்யன் முதலியார் அவர்கள் (வேதாரணியம்) ஆகியோர் அச்சிட்ட வாழ்த்துப் பத்திரம் அனுப்பி வைத்தார்கள்.

இலக்கிய சேவை

"இளங்கோவடிகளின் சமயம் யாது?"

இனி ஸ்ரீபால் அவர்களின் இலக்கிய சேவையைக் காண்போம் தமிழ்நாட்டின் முதன்மையான தமிழ்ப் பெரும் புலவர்களில் ஒருவரான நாவலர் திரு. வேங் கடசாமி நாட்டார் அவர்கள், சிலப்பதிகாரத்திற்கு ஓர் உரை எழுதி, அதன் முகவுரையில் சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகள் சைவர் என எழுதி யிருந்தார். இக்கொள்கை தமிழ்நாட்டின் பெரும்பா லான புலவர் பெருமக்களின் கருத்துக்களுக்கு முரண்பாடாக இருந்தது. எனவே ஸ்ரீபால் அவர்கள் சிலப்பதிகாரம் முழுமையும் நன்ருகப் படித்தும், ஆசிரியர்களிடம் சந்தேகங்களைக் கேட்டறிந்தும், அடியார்க்கு நல்லார் உரையை நன்கு படித்தும்

இளங்கோவடிகள் சமயம் சைனம் என்பதை நன்கு அறிந்தார். இவ்வுண்மையைப் பலரும் அறியும் வண்ணம், சென்னைப் பெத்துநாயக்கன்பேட்டை, நக்கீரர் கழகச் செயலாளர் உயர்திரு சிறுவை மோகனசுந்தரம் அவர்களைக் கொண்டு பொதுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தார். முதல்கூட்டம் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீபால் அவர்கள் இளங்கோவடிகள் சமயம் யாது? என்னும் தலைப்பின் கீழ், சிலப்பதிகார காவியத்தினின்றும் பல மேற்கோள்களைக் காட்டி இளங்கோவடிகள் சைனரே என்று நிரூபித்துக் காட்டினார். அக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த உயர் திரு மயிலை சிவமுத்துக் குமாரசாமி முதலியார் அவர்கள் ஸ்ரீபால் அவர்களின் சொற்பொழிவை ஆதரித்து இ ள ங் கோ வ டி க ள் சைனரே என்பதில் சிறிதும் ஐயமில்லை எனக்கூறி ஸ்ரீபால் அவர்களின் இலக்கிய அறிவைப் பாராட்டிப் பேசினார். இதுபோன்றே பிரும்மசமாஜ மண்டபத்திலும், மயிலைத் திருவள்ளுவர் கழகத்திலும் ஸ்ரீபால் அவர்களின் சொற்பொழிவுகள் நடைபெற்றன. சொற்பொழிவைக் கேட்க வந்திருந்த புலவர் பெருமக்கள் ஸ்ரீபால் அவர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். இவ்வாறு சொற்பொழிவின் வாயிலாக வெற்றிகண்ட ஸ்ரீபால் அவர்கள் இக் கருத்துக்களைத் திரட்டி ஒரு நூலாக இயற்றினார். இந்நூலைத் தஞ்சை மாவட்ட சைன சங்கச் செயலாளரும் தாசில்தாருமான அ. சக்கரவர்த்தி நயினார், பீ. ஏ., அவர்களுக்கு அனுப்பிவைத்தார்கள். அவர் அச் சங்க தலைவர் திருநேமிநாத முதலியார் அவர்களிடம் படித்துக் காண்பித்தார். இதை நமது சங்கத்தின் வாயிலாக அச்சிடவேண்டுமென அவர் கூறினார். தலைவரும் மற்றவரும் இக்கருத்தை ஒப்புக்கொண்டமையால் "இளங்கோவடிகளின் சமயம் யாது?" எனும் நூலை 1943ல் தஞ்சை மாவட்ட சைன சங்கத்தின் சார்பில் வெளியிட்டார்கள். இந்நூல் வெளிவந்ததும் தமிழ்நாட்டின் பல பாகங்களிலுமுள்ள புலவர் பெருமக்கள் நூலைப் பெரிதும் பாராட்டினார்கள். பத்திரிகைகள் எல்

லாம் ஸ்ரீபால் அவர்களின் கருத்தை வரவேற்றுச் சிலப்பதிகார ஆசிரியர் சைனரே என வெளியிட்டு மதிப்புரைகள் எழுதின. இம் மதிப்புரைகளை யெல்லாம் ஒரு நூலாக வெளியிடின் அதுவே சிலப்பதிகார ஆராய்ச்சிக்குப் பெருந்துணை அளிப்பதாகும். எனவே, ஸ்ரீபால் அவர்கள் தமது கருத்தை நிலைநாட்டியதோடு இலக்கிய உலகில் ஒரு புத்துணர்ச்சியை வளர்த்து விட்டார். இவ்வாராய்ச்சி நூலின் இரண்டாம் பதிப்பு பிராட்வே, பாரி நிலையத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

"பகுத்தறிவியக்கத்தின் பழமை"

தற்காலத்தில் எங்கும் அறிவியக்கம் பரவி வருகிறது. கல்வி அறிவு வேண்டுமென்றும், அதன் துணைகொண்டு எப்பொருளையும் நன்கு ஆராய்ந்து தெளிய வேண்டுமென்றும், தெளிந்தபின் அதன்வழி நிற்க வேண்டுமென்றும் பேசப்படுகின்றன. இக்கொள்கை வரவேற்கத் தகுந்ததே. எனவே இவ்வறிவியக்கம் புதியதா, பழையதா என்பதை ஆராய்ந்தெழுதியதே இந்நூல். பொதுநல சேவையில் வெற்றிமேல் வெற்றிகண்டதைப் போலவே எழுத்திலும் வெற்றி பெற்றார் நம் ஸ்ரீபால், பகுத்தறிவியக்கம் பழமையானது என்ற உண்மையைத் தமிழ் இலக்கியங்களினின்றும் ஆராய்ந்து "பகுத்தறி வியக்கத்தின் பழமை" என்ற நூலை எழுதியுள்ளார். திருக்குறள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, சூளாமணி, அறநெறிச்சாரம் போன்ற தமிழ் நூல்களினின்றும் "பொய்தீர் காட்சி", "மாசறு காட்சி", "துகள் தீர் காட்சி" போன்ற சொற்றொடர்களே பகுத்தறிவின்பாற் பட்டன வென்பதைத் திறம்பட விளக்கியுள்ளார். இத்தொடர்கள் சைன நூல்களிலேயன்றி, ஏனைய நூல்களில் கிடையாதென்றும் அறுதியிட்டுப் பல ஆதாரங்களுடன் கூறியுள்ளார். இவ் வறிவியக்கத்தின் தலைவர் பகவான் விருஷபதேவர் என்பதையும் அப்பெருமகன் திராவிட நாகரிகத்தைச் சார்ந்தவரென்றும் நன்கு விளக்கியுள்ளார்.

இந்நூலினைத் தமிழகத்திலுள்ள பல செய்தித் தாள்களும் பாராட்டியுள்ளன. ஓய்வுபெற்ற கும்ப கோணம் கல்லூரியின் தலைவர், ராவ் பகதூர் ஏ. சக்கரவர்த்தி நயினார் எம். ஏ., ஐ. இ. எஸ்., அவர்கள் ஒரு அறிவுசான்ற முகவுரை எழுதியுள்ளார். தமிழ் ஆசிரியர்கள் பலரும் பாராட்டி யுள்ளார்கள். திரு. டாக்டர் மு. வரதராசனார், புரட்சிக் கவிஞர் திரு பாரதிதாசன், கும்பகோணம் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு. அ. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., முதலியோர் இந்நூலை மிகவும் பாராட்டி எழுதினார்கள். திருக்குறள் கூறும் ஆதிபகவான் விருஷபதேவரே என்பதை அனைவரும் ஏற்றுப் போற்றியுள்ளனர்.

ஆதிபகவனும் ஆச்சரிய விநோபாஜியும்

உலகெங்கும் பொதுவுடைமைத் தத்துவம் பேசப் படுகிறது. இக் கொள்கையை நிலைநாட்ட ஆச்சாரிய விநோபாஜி அவர்கள் மிகுதியாக நிலம் படைத்தவர்களிடமிருந்து நிலதானம் பெற்று அவைகளை நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்து அளித்து வருகிறார். பகுத்துண்டு வாழும் இக் கொள்கையும் பகவான் விருஷபதேவரால் தோற்றுவிக்கப்பட்டதென்பதைத் தமிழ் இலக்கியங்களில் காணும் "மிகுபொருள் விரும்பாமை" என்னும் கருத்தின் வாயிலாக நன்கு ஆராய்ந்து "ஆதி பகவனும் ஆச்சாரிய விநோபாஜியும்" என்னும் பெயரால் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இலக்கிய உலகில் இது போன்ற ஒரு உண்மையை, ஆராய்ந்து எழுதிய நூல் வேறு இல்லை எனலாம். இந் நூலினைப் பலரும் பாராட்டி யுள்ளனர். சென்னைப் பல்கலைக்கழகத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் சொல்லின் செல்வர் டாக்டர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை பீ. ஏ., பீ. எல்., அவர்கள், பன் மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் எம். ஏ., பீ.எல்., எம்.ஓ.எல்., அவர்கள், வித்வான் பா. ரா. கந்தசாமி பீ. ஓ. எல்., அவர்கள், முன்னைய ஆஸ்தான கவிஞர் உயர்திரு. வெ, இராமலிங்கம் பிள்ளை அவர்கள் ஆகிய பல அறிஞர்கள் இந்நூலினை

மிகமிகப் பாராட்டி அணிந்துரைகள் வழங்கியுள்ள னர். தமிழகத்துச் செய்தித்தாள்களும் சிறந்த மதிப் புரைகள் எழுதியுள்ளன. மற்றும் பல ஆசிரியர்க ளும் அறிஞர்களும் இந்நூலினைப் பலப்படப் புகழ்ந்து வாழ்த்துக் கடிதங்களும் வரைந்துள்ளனர். இவ்வாறு புகழப்பெறும் இந்நூல் கட்டுரைப் பகுதியில் 7 ஆம் பரிசுக்குரிய நூல் எனவும் சென்னைத் தமிழ் வளர்ச் சிக் கழகத்தாராலும் மதிக்கப்பெற்றது.

இந் நூலாசிரியர் நிலப்பங்கீடு, அல்லது பூமி தானம் எனும் கொள்கையை 1934 ஆம் ஆண்டிலேயே தாம் எழுதிய கலியுகப் பிரகலாதன் எனும் நாடகத் தின் வாயிலாகப் புகுத்தியுள்ளார். அந் நாடகத் தின் கதாநாயகனாகிய சிவநேசன் என்னும் சிறுவனை ஒரு ஜமீன்தார் ஸ்வீகாரமகனாக ஏற்று கொள்கின்றார். இதனை அச்சிறுவன் அறிந்து 'ஜமீன்தார் அவர்களே தங்கள் ஜமீன் நிலங்களையும் சொத்துக்களையும் எனக்குமட்டும் அளித்து மகிழ்வதைவிட, தங்கள் ஜமீனைச் சார்ந்த ஏழைக் குடிமக்களுக்குப் பங்கிட்டு மகிழுங்கள்' என அறிவுறுத்திஜமீன்தாரரைப்பூதான இயக்கத்தில் ஈடுபடுத்துகின்றான். ',எண்ணிய எண் ணியாங் கெய்தும்'' எனுந் தமிழ்மறைக் கொப்ப இன்று கனவு நினைவாகும் வண்ணம் ஆச்சாரிய விநோபாஜியின் பூதான இயக்கம் நடைபெறுவதைக் கண்டு நமது ஸ்ரீபால் மகிழ்ச்சியிலாழ்ந்தார்.

எம்மான் கோயில்

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் புழலேரியின் இருப்பிடமாகிய புழல் கிராமத்தில் அமைந்துள்ள பகவான் விருஷபதேவர் ஆலயத்தின் தொன்மையை யும் பகவான் விருஷபதேவர் வரலாற்றையும் விளக் குவதோடு, திருக்குறள் ஆசிரியர் போற்றும் ஆதி பகவன் விருஷபதேவரே என்பதையும் சைன நூல் களேயன்றி, ஏனைய வைதிக சமயச் சார்பான வேதம், பாகவதம், சிவபுராணம், மார்க்கண்டேய புராணம், ஸ்காந்தபுராணம், ஆகியவற்றினின்றும் மேற்கோள்கள் காட்டி நன்கு விளக்கியுள்ளார்.

ஒரு கல்லூரி ஆசிரியரும் இரு மாணவர்களும் உரையாடும் வகையில் மிகவும் அழகாக எழுதியுள்ள இந் நூலைப் பலரும் பாராட்டியுள்ளனர். செய்தித் தாள்களின் மதிப்புரைகளையும் இது பெற்றுள்ளது.

சமணர்மலை செல்வோம்

சமணர்மலை என்பது மதுரைக்கு மேற்கே ஐந்து மைல் தூரத்தில் கம்பம் போகும் பஸ் பாதையில் அமைந்திருக்கிறது. இம்மலை மிகப்பழங் காலத்திலிருந்தே சமண அறவோர்களின் உறைவிடமாக அமைந்து விளங்கி வந்துள்ளது. இம்மலையில் தீர்த்தங்கரர் உருவச் சிலைகளும், குகைகளும், முனிவர்கள் தங்கிய படுக்கைகளும், கல்வெட்டுச் செய்திகளும் நிறைந்திருக்கின்றன. இத்தகைய வரலாற்றுச் சிறப்புடைய பெருமலையை நமது ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் எதிர்பாராத வகையில் காண நேர்ந்தது. அச்சமயம் அம்மலையை உடைத்துக் கொண்டிருந்தார்கள். அதனைக் கண்டு பொறுத நமது ஸ்ரீபால் சென்னை வந்து புதைபொருள் ஆராய்ச்சியாளருக்கு எழுதியும் பத்திரிக்கைகளில் அம்மலையில் காணும் வரலாற்றுச் சின்னங்களை வெளியிட்டும் அங்கு கல் உடைக்கும் கொடுமையைத் தடுக்கவேண்டும் என்றும் கிளர்ச்சி செய்தார். பத்திரிக்கைகளில் இச் செய்தி வெளிவந்ததும் இந்திய சர்க்கார் கல்வெட்டு ஆராய்ச்சி நிபுணரான டாக்டர் பி. சி. எச். சாப்ரா அவர்கள் மதுரைக்கு விஜயம் செய்து சமணர் மலையைப் பார்வையிட்டு, அங்கு கல் உடைப்பதை நிறுத்தவேண்டியது அவசியமென அறிக்கை விடுத்தார். அவ் வறிக்கையின்படி சர்க்கார் அம்மலையில் கல் உடைப்பதை நிறுத்தி அம்மலைப் பாதுகாக்கப்பெறும் பழம்பெரும் வரலாற்றுச் சின்னமாக க்கொண்டனர். இவ் வெற்றிச் செய்தி தமிழ்நாடெங்கும் அறிந்து ஸ்ரீபால் அவர்களைப் பலர் பாராட்டினார்கள். அதன்பின்னர் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் அம்மலையில் காணும் கல்வெட்டுச் செய்திகளை ஆராய்ந்து வெளியிட்டார்கள். அச் செய்திகளில் 10 ஆவது இலக்கக் கல்வெட்டில்,

"ஸ்வஸ்தி ஸ்ரீ இப் பள்ளியுடைய
குண சேன தேவர் சட்டன் அந்த
லையான் மலைதன் மருமகன் ஆச்
சான் ஸ்ரீபால னைச் சார்த்தி
செய்வித்த ஸ்ரீ திரு மேனி"

எனப் பொறிக்கப் பெற்றிருந்தது. எதிர்பாராத வகையில் சமணர் மலையைக்காண நேர்ந்ததையும் அங்கு கல் உடைப்பதைக்கண்டு மனம்புழுங்கி அதை நிறுத்தத் தீவிரமாகப் பணியாற்றி வெற்றி கண்டதை யும், அம்மலையில் காணும் கல்வெட்டுச் செய்திகளில் அன்பர் ஸ்ரீபாலின் பெயர் கொண்ட ஒரு பெரியார் தவ மியற்றியிருந்தாரெனும் கல்வெட்டுச் செய்தியையும் ஒன்றிவைத்து நோக்கின் நமது ஸ்ரீபால் அவர்களின் ஆவிக்கும் அம்மலையில் தவங்கிடந்த ஆச்சான் ஸ்ரீ பாலன் என்பவரின் ஆவிக்கும் தொடர்பு இருக்க லாமோ என ஐயுறுவதற்கும் இடமுண்டாகின்றது. இவ் வரலாற்று மலையின் சிறப்பையும், அங்குக் காணும் கல்வெட்டுச் செய்திகள் ஆகியவற்றையும் ஆராய்ந்து "சமணர்மலை செல்வோம்" என்னும் பெயரால் ஒரு அரிய நூலை எழுதி வெளியிட்டார். இந்நூல் பத்திரிக்கைகளாலும் அறிஞர்களாலும் பாராட்டப் பெற்றுள்ளது. இதனை வெளியிடக் கல் கத்தா பாபு சோட்டேலால் ஜெயின் அவர்கள் பொரு ளுதவி புரிந்தார். இந்நூலைப் பற்றிய மதிப்புரை



மதுரை சமணர்மலையின் தோற்றம்



மதுரை சமணர்மலையில் ஜீவபந்து ஸ்ரீபால்.

களைப் படித்த உத்தம பாலையம் உயர் திரு. ஜனப். கா. சி. முகமத் இஸ்மாயில் அவர்கள் தங்களூர் மலையில் காணும் தீர்த்தங்கரர் சிலைகளைப் படம் பிடித்து அனுப்பி உதவினார்கள்.

"கற்கக் கசடறக் கற்பவை" என்ற குறளாசிரியரின் கருத்திற்கிணங்க, கற்கவேண்டிய பண்டைத் தமிழ்ப் பேரிலக்கியங்களை அரிதின் ஆராய்ந்து பலப் பல புதிய கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட இவ் வைந்து நூல்களையும் பாராட்டி எழுதியுள்ள பல பேராசிரியர்களின் வாழ்த்துரைகளையும், அணிந்துரைகளையும் சேர்த்துத் திருத்தக்கதேவர் இலக்கிய மன்றத்தாரால் ஒரு நூல் வெளியிடப் பெற்றுள்ளது. அந்நூலில் இவ்வைந்து நூல்களின் சிறப்புக்களையும் காணலாம். அணிந்துரைகளும் மதிப்புரைகளும் எனும் இந்நூலை வெளியிட சென்னை பிரபல மருந்து வியாபாரிகளான சேத் லால்சந்த்ஜீ தாதா அவர்கள் பொருளுதவி புரிந்தார்கள்.

திருத்தக்கதேவர் இலக்கிய மன்றம் :

தமிழ்க் காவியங்களில் தலை சிறந்த பெருங் காவியமாகிய சிவகசிந்தாமணியின் பால் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களுக்குள்ள ஆர்வமும் பற்றும் நாம் முன்னரே அறிந்துள்ளோம். எனவே சிவகசிந்தாமணியின் ஆசிரியராகிய திருத்தக்க தேவர் இலக்கிய மன்றமென 1944 ஆம் ஆண்டு சென்னையில் தோற்றுவித்தார். அம்மன்றத்தாரின் ஆதரவில் இலக்கியத் தொண்டுகள் பல ஆற்றி வந்தார். வாரந்தோறும் சிவக சிந்தாமணி சொற்பொழிவுக்கும் ஏற்பாடு செய்தார். முதலில் வித்துவான் முத்து. சு. மாணிக்க வாசக முதலியார் அவர்களைக் கொண்டு சிவகசிந்தாமணிச் சொற்பொழிவு ஆரம்பிக்கப் பெற்றது. இவ்வாரம்ப விழாவிற்கு தமிழ் நாட்டு சைன பெருமக்களில் தலை சிறந்தவராகிய பேராசிரியர் இராவ் பகதூர் ஏ. சக்ர வர்த்தி நயினார் எம். ஏ. எல். டி., ஐ. ஈ. எஸ் (ஓய்வு பெற்ற) அவர்கள் தலைமை வகித்தார்கள். தமிழ்ப்

பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும் சென்னைப் பல்கலைக் கழக தமிழ்த் துறை தலைவர் உயர் திரு எஸ். வையாபுரிப் பிள்ளை பீ. ஏ., பீ.எல்., அவர்களும், பன்மொழிப் புலவர் வித்துவான் வேங்கடராஜலு ரெட்டியார் ஆவர்களும் சென்னை க்வீன் மேரீ கல்லூரி விஞ்ஞானப் பேராசிரியை திரு வாட்டி ஈ. த. இராசேச்சுவரி அம்மையார் எம். ஏ., எல். டி., அவர்களும் சீவகசிந்தாமணியின் சிறப் பைப் பற்றியும் சைன அறிஞர் பெருமக்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர் பண் பாட்டிற்கும் செய்துள்ள அரும்பெரும் சேவைகளைப் பற்றியும் புகழ்ந்து பேசி, வித்துவான் முத்து சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள் சீவகசிந்தா மணிச் சொற்பொழிவை நிகழ்த்த முன்வந்ததைத் தாங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகக் கூறினார் கள். தலைவர் அவர்களும் சிந்தாமணியின் சிறப்பைப் பற்றிப் பேசி விழாவைத் துவக்கி வைத்தார். அன்று முதல் சென்னையில் வாரந்தோறும் சீவக சிந்தாமணிச் சொற்பொழிவு நடந்து வந்தது. சுமார் ஆறு மாதங்கள் சென்றதும் வித்துவான் முத்து சு. மாணிக்கவாசக முதலியார் வெளியூருக்கு மாற்றப் பட்டமையால், நம் ஸ்ரீபால், சீவகசிந்தாமணிச் சொற் பொழிவைத் தொடர்ந்து நடத்திவர வித்துவான் பன்மொழிப் புலவர் திரு. வே. வேங்கடராஜலு ரெட் டியார் அவர்களை வேண்டிக்கொண்டார். அப்பெரியா ரும் அவ்விலக்கியப் பணியை ஏற்றுத் தொடர்ந்து சில மாதங்கள் நடத்தி வந்தார். பிறகு அவருடைய உடல் நலம் சிறிது குன்றியதால் சொற்பொழிவு நிறுத்தப்பட்டது.

ஆனால் மன்றம் வாளாய் இராமல் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. ரா. நடேச நாயக்கர் அவர்களைக் கொண்டு சிறு பஞ்ச காவியங்களில் முதன்மை பெற்றதாகிய சூளாமணிச் சொற்பொழிவை நடத்த ஏற்பாடு செய்தது. அப் பெரியார் சூளாமணிக் காவியத்தினின்றும் முக்கிய மான சிலப்பகுதிகளைக் கொண்டு ஒன்பது சொற்

பொழிவுகளாக நிகழ்த்தினர். இத்துடன் மன்றத்தின் சார்பாக இலக்கியச் சார்பான பல துண்டு அறிக்கைகளையும், சிறு நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டு வந்தார் நம் ஸ்ரீபால். இம்மன்ற நிகழ்ச்சிகளில் இராயபுரம் திரு பாபு நயினார் அவர்களும், திரு ஜெ. பானு குமார் ஜெயின் அவர்களும் பங்கெடுத்துக் கொண்டனர்.

நாடகக் கலைஞர்களுக்குப் பாராட்டு விழா

நாடகத்துறையில் தலைசிறந்த நாடகக் குழுவினர் எனப் புகழப்படும் டி. கே. எஸ். நாடகக் குழுவினர் நமது சென்னைமா நகரில் ஔவை, இராச இராச சோழன் போன்ற பல வரலாற்று நாடகங்களைத் தொடர்ந்து பல ஆண்டுகள் நடத்திப் புகழ்பெற்று விளங்கினர். அவர்களுக்கு நமது ஸ்ரீபால் அவர்களும் கவிஞர் புத்தனேரி. ரா. சுப்பிரமணியம் அவர்களும் 1950ஆம் ஆண்டு மார்ச்சுமீ பத்தாம் நாள் இராஜாஜி மண்டபத்தில் இந்து மத அற நிலைய அமைச்சர் கனம் டி. எஸ். எஸ். இராசன் அவர்கள் தலைமையில் பாரட்டு பெருவிழா நடத்தி வைத்தார்கள். அவ்விழாவிற்குத் தமிழகத்துத் தலைசிறந்த வள்ளலாகிய ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களும் பல நாடகக் கலைஞர்களும் விழாவில் கலந்து கொண்டு நாடகமணி டி. கே. சண்முகம் அவர்களையும் அவர் தம் குழுவினரையும் பலபடப் புகழ்ந்து பேசினார்க்ள். இவ்வாறு அறிஞர்களையும் கலைஞர்களையும் பாராட்டுவதில் பேரவாக் கொண்டு பல விழாக்கள் நிகழ்த்தியும், புலவர்களைப் பாராட்டும் பல விழாக்களில் பங்கெடுத்துக் கொண்டும் பணி புரிந்து வருபவர் திரு ஸ்ரீபால் அவர்கள்.

"அருகன் அருகே அல்லது விடுதலை வழி:"

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களிடம் ஜீவ பந்து ஸ்ரீபால் அவர்களுக்குள்ள அன்பையும், தொடர்பையும் நாம் நன்கு அறிந்ததே. திரு. வி. க.

அவர்கள் " அருகன் அருகே அல்லது விடுதலை வழி " என்ற ஒரு அரிய நூலை இயற்றினர். அப் பெரியாரின் இரு கண்களிலும் படலம் மறைந்திருந்தமையால் அவரால் அச்சுத் திருத்தங்கள் செய்ய இயலவில்லை. எனவே, தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர் அவர்களும், நமது ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களும் அச்சுத் திருத்தங்களைச் செய்துவந்தார்கள். அதன் திருத்தங்களைச் செய்து வருகையில், அந்நூலில் சிறப்பாக இவ்வுலகத்து முதல் ஆசிரியராகவும் தலைவராகவும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அருளறத்தை முதன்முதல் உலகுக்கு அறிவித்தோருமாகிய பகவான் விருஷபதேவரின் வரலாறுகள் அடங்கி இருந்தமையால், ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் அந்நூலின் வயமானர். எனவே இவ்வரிய நூலுக்கு ஒரு பெரும் சிறப்புச் செய்யவேண்டும் என விரும்பினர். அவர் விருப்பத்திற்குத் திரு. வி. க. அவர்கள் இணங்கினர்கள். உடனே " அருகன் அருகே " என்னும் அந்நூலின் வெளியீட்டுவிழா சிறப்பாக நடைபெற மன்றத்தின் சார்பாக நம் ஸ்ரீபால் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். 1951ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் நான்காம் நாள் சென்னை விவசாய இலாக்கா அமைச்சர், கனம் எம். பக்தவத்சலம், பீ. ஏ., பீ. எல்., அவர்கள் தலைமையில் அவ்விழா நடைபெற்றது. அப்போது திருவாளர், ஸ்ரீ லால் சந்த் ஜீ டாடா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். திரு. வி. க. அவர்களின் " அருகன் அருகே, அல்லது விடுதலை வழி " என்ற நூலின் மிக உயர்ந்த சிறப்பைப் போற்றிச் சொல்லின் செல்வரும் தமிழ்க் காவலருமான திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை பீ. ஏ., பீ. எல்., அவர்களும், பன்மொழிப் புலவரும், கட்டுரைக் கலைஞருமான பேராசிரியர் திரு. தெ. பொ. மீனட்சிசுந்தரனர், எம். ஏ. பீ. எல்., எம். ஓ. எல்., அவர்களும், தமிழ்நாட்டின் தலைசிறந்த நூலாசிரியரான டாக்டர் மு. வரதராசனர் அவர்களும், ஆங்கிலப் பேராசிரியராகிய திரு. சினிவாசராகவன் அவர்களும், சென்னை நகரசபையின் முன்னள் தலைவர் திரு. எம். இராதாகிருஷ்ணப் பிள்ளை அவர்களும்,

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களைப் பாராட்டும் விழா. கனம். M. பக்தவச்சலம் அவர்கள் பேசுகிறார்கள். வரவேற்புத்தலைவர் ஸ்ரீ லால்சந்ஜீ டாடா அவர்களும் நிற்கின்றார்.

கல்வெட்டு ஆராய்ச்சித்துறையில் பல அரிய நூல்களை வெளியிட்டவரும் சிறந்த தமிழ்ப் பேராசிரியருமான டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை எம். ஏ., எம். ஓ. எல்., எல். டி., அவர்களும் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், பீ. ஏ., பீ. எல்., அவர்களும், பன்னூல் ஆசிரியர் மயிலை சீனிவேங்கடசாமி அவர்களும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். இவ்விழாவில் சென்னையிலுள்ள அறிஞர் பெருமக்களும் புலவர் பெருமக்களும் நிறைந்திருந்தது குறிப்பிடத் தக்கது. கடைசியாக ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் அனைவருக்கும் நன்றிகூறித் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் நுண்ணறிவைப் பெரிதும் பாராட்டினார். திரு. வி. க. அவர்கள் தன்னுடைய நூலுக்குச் சிறப்பியற்றி விழாக் கொண்டாடிய திருத்தக்கதேவர் இலக்கிய மன்றத்திற்கும் சிறப்பாக ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களுக்கும் வாழ்த்துக் கூறினார்கள்.

சிந்தாமணி வகுப்புத் துவக்கம்.

மீண்டும் 1953ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் ஒன்பதாம் நாள் ராவ்பகதூர் உயர்திரு ஏ. சக்கரவர்த்திநயினார் அவர்கள் தலைமையில் தமிழ்ப் பெரியார் திரு வி. க. அவர்கள் சீவகசிந்தாமணி வகுப்பைச் சிறப்புடன் துவக்கி வைத்தார். பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் எம். ஏ., பீ. எல்., எம். ஓ. எல்., அவர்கள் வாரந்தோறும் சீவகசிந்தாமணிச் சொற்பொழிவினைச் சிறப்பாக நிகழ்த்தி வந்தார். ஏராளமான மக்கள் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்து வந்தனர். இதுவரை மன்றத்தின் பொறுப்பை ஏற்று நடத்தி வந்த ஜீவபந்து அவர்கள் மன்றம் மேலும் வளர்ச்சிப் பெற்று விளங்க சிறந்த அறிஞர்களைக் கொண்ட செயற் குழுவினை அமைத்துக் கொண்டார்.

திருக்குறள் ஆங்கில உரை வெளியீட்டு விழா

திரு இராவ்பகதூர் ஏ. சக்ரவர்த்தி நயினார் அவர்கள் தமிழ்நாட்டு சைனப் பெருமக்களின் நன்மதிப்புப்

மதுரை ஜில்லா உத்தமபாளையத்து மலையில் விளங்கும்
ஜைன அறவோர் சிலைகள்.

நாகர்கோயில் அருகில் உள்ள சித்ரால் மலையில் காணும் திர்த்தங்கரர் சிலைகள்.
(இங்கே ஜைன சமயப் பல்கலைக் கழகம் இருந்தது)

பெற்ற தலைவர். இவர் கும்பகோணம், சென்னை, இராஜமகேந்திரம் முதலிய நகரங்களிலுள்ள அரசினர் கல்லூரிகளில் தத்துவப் பேராசிரியராகவும், தலைவராகவும் சேவைசெய்து புகழ் பெற்றவர். அப்பெரியார் திருக்குறளுக்கு ஒரு அரிய ஆங்கில உரை எழுதினர். இவ்வுரை இதுவரை வந்திருக்கும் பல உரைகளுக்கும் மாறுபட்டு திருக்குறளாசிரியரின் உட்கருத்தைப் படம்பிடித்தாற்போன்று விளங்கும் அரிய உரை. இப்பேருரையைப் பாராட்ட திருத்தக்க தேவர் இலக்கிய மன்றச் சார்பில் 28–3–54-ல் ஒரு விழா நடத்தப்பட்டது. இவ்விழாவிற்குச் சென்னை நிதி அமைச்சர் கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார்கள். பேராசிரியர் உயர்திரு இராவ்பகதூர் ஏ. சக்கரவர்த்தி நயினுர் அவர்களுக்கு "**தத்துவ சூடாமணி**" எனப் பட்டம் வழங்கி, மன்றத்தின் சார்பில் வாழ்த்துரை வழங்கப் பெற்றது. அச்சமயம் திருவாளர்கள், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர், சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள், வித்துவான் மே. வி. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள், முன்னுள் நீதிபதி கஜபதி நாயக்கர் பீ. ஏ., பீ. எல்., எம். எல். சி., அவர்கள், கி. வா. ஜெகந்நாதன் அவர்கள் ஆகியோர், ஏ. சக்கரவர்த்தி நயினுர் அவர்களின் ஆங்கில மேதையையும் உரையின் சிறப்பையும் பாராட்டிப் பேசினர். பாரத நாட்டின் உப தலைவரும், தத்துவப் பேராசிரியருமான டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், டால்மியா சாந்தி ப்ரசாத் ஜெயின் அவர்கள் ஆகிய பலரிடமிருந்து வாழ்த்துச் செய்திகளும் வந்திருந்தன. திருத்தக்க தேவர் இலக்கிய மன்றம் இத்தகு சிறப்புடன் விளங்க சென்னை வாழ் தமிழ் ஜைனப் பெருமக்களும் வட நாட்டு ஜைனப் பெரு மக்களும் தந்த ஆதரவும் ஒத்துழைப்புமேயாகும்.

சீவகசிந்தாமணி நினைவு மலர்

தமிழ்க் காவியங்களில் முதன்மையாய் விளங்கும் சீவகசிந்தாமணியைப் பலரும் படித்தும் கேட்டும் இன்புற வேண்டும் என்னும் பேராவலால் நம் ஜீவ பந்து ஸ்ரீபால் அவர்கள் 1949 ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்தில் சைனத் தமிழ் இலக்கிய மன்றம் என ஒரு மன்றத்தை நிறுவி அதன் ஆதரவில் வித்துவான் மே.வி. வேணுகோபாலப் பிள்ளை அவர்களைக் கொண்டு சீவகசிந்தாமணிச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தார். அக்கலை விருந்தை வரவேற்றுக் காஞ்சிபுரம் ஜைனப் பெருமக்களும் ஏனைய அறிஞர்களும் கேட்டு மகிழ்ந்தனர். 1950 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு முடிய சொற்பொழிவு வாரந்தோறும் நிகழ்ந்தது. பின்னர் சொற்பொழிவின் நினைவாக ஒரு மலர் வெளியிடவேண்டுமென காஞ்சீபுரம் ஜைனப்பெருமக்கள் விரும்பினர். அவ்வாறே ஸ்ரீபால் அவர்கள் ஒப்புக்கொண்டு தமிழகத்தின் தலைசிறந்த பெரும் புலவர்களை யெல்லாம் சீவகசிந்தாமணி மலருக்குக் கட்டுரை வழங்குமாறு வேண்டிக் கொண்டார். ஜீவ பந்து அவர்களின் அன்பு கனிந்த பணிவான வேண்டுதலுக்கிசைந்து முப்பத்து நான்கு வித்துவான்கள் சீவகசிந்தாமணியைப் பல துறைகளினின்றும் ஆராய்ந்து அறிவு சான்ற கட்டுரைகளை அனுப்பி உதவினார்கள். அவைகளைச் சேர்த்துச் "சீவகசிந்தாமணிச் சொற்பொழிவு நினைவு மலர்"எனப் பெயர் வழங்கி ஒரு அரிய மலரை வெளியிட்டார். இம்மலர் வெளியீட்டு விழா நடத்த ஒரு சிறந்த ஏற்பாடு செய்தார். 1954 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பத்தாம் நாள் காஞ்சீபுரத்தில் நமது சென்னை விவசாய இலாக்கா அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் வெளியிட்டு விழா நடந்தேறியது. உயர் திரு எஸ். அப்பாண்டை ராஜ் நயினார், பி. ஏ., (ஓய்வு பெற்ற டி. எஸ். பி.) அவர்களால் வரவேற்புரை வழங்கப் பெற்றது. திரு எஸ். சுயம்பு நயினார் அவர்கள், வித்துவான் மே. வி. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கு வாழ்த்துரை

வாசித்தளித்தார். பின்னர் தமிழ்ப் பெரியார்கள் திரு வி.க. அவர்கள் திருவுருவப் படமும், டாக்டர் சாமிநாத ஐயர் அவர்கள் திருவுருவப் படமும் திறக்கப்பட்டன. பின்னர், சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவர் சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள் சீவகசிந்தாமணிச் சொற்பொழிவு நினைவு மலரை வெளியிட்டுப் பேசுகையில், "இவ் வெளியீட்டு விழா தமிழகத்தின் வரலாற்றில் பொறிக்க வேண்டிய நல் விழா வென்றும் ஒரு மாநாடுபோல் விளங்கி தமிழ் மக்களின் தமிழ் ஆர்வத்தை வளர்க்கக் கூடியதாய் அமைந்துள்ளது" என்றும் பாராட்டிப் பேசினார். பின்னர், திரு பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், கலைமகள் ஆசிரியர் திரு, கி. வா. ஜெகந்நாதன் அவர்கள், திரு அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ., அவர்கள், பேராசிரியர் திரு அ. மு. பரமசிவானந்தம் அவர்கள், டாக்டர் திரு மொ. அ. துரை அரங்கனார் அவர்கள், வித்துவான் பண்டித ரா. நடேசனார் அவர்கள், பேராசிரியர் பாலூர்கண்ணப்ப முதலியார் அவர்கள் ஆகிய அறிஞர் பெருமக்கள் அனைவரும் சீவகசிந்தாமணி நினைவு மலரினையும் அம்மலரை வெளியிட்ட காஞ்சீபுரம் ஜைனப் பெருமக்களையும் புகழ்ந்து பாராட்டிப் பேசினார்கள்.

தலைவர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் சீவக சிந்தாமணி மலரையும் அதில் எழுதியுள்ள அறிஞர் பெருமக்களின் கட்டுரைகளையும் பாராட்டிப் பேசினார், மேலும் அவர் பேசுகையில், "இத்தகைய சிறந்த தமிழ்மொழிக் களஞ்சியத்தை வெளியிடும் விழாவில் நான் தலைமை வகிப்பதை ஒரு பாக்கியமாக கருதுகிறேன் எனவும் காஞ்சீபுரம் சைனத் தமிழ் இலக்கிய மன்றத்தினர் தமிழ்மொழிக்கும் சிறப்பாக சீவக சிந்தாமணிக்கும் செய்துள்ள சேவை எந் நாளும் மறக்கமுடியாத ஒரு கலைச் சின்னமாகக் கூறலாம்" என்றும் சிறப்பித்துக் கூறினார்.

இம்மலர் வெளிவந்ததும் அறிஞர் பெருமக்களும் தமிழ்நாட்டிலுள்ள பல பத்திரிகைகளும் சீவக சிந்தாமணியின் சிறப்பையும் அதற்கென அமைந்த அறிவுக்களஞ்சியமான இந்நினைவுமலரையும்புகழ்ந்து மதிப்புரைகள் வழங்கின. இந்து, எக்ஸ்பிரஸ், சுதேச மித்திரன், தினமணி, கலைமகள், கலைகதிர், நவஇந்தியா, ஆனந்தவிகடன், அமுதசுரபி, உமா, பிரசண்ட விகடன் முதலிய இதழ்களும் மதிப்புரைகள் வரைந்தன. அவைகளில் பெரும்பாலான இதழ்களில் அம்மலர் வெளிவருவதற்குக் காரணமாய் இருந்த நம் ஸ்ரீபால் அவர்களின் சேவையை மிகப் புகழ்ந்துள்ளன. அவைகளில் ஆனந்த விகடன் கூறியதாவது: "தமிழ் இலக்கிய உலகின் மணிவிளக்குகளில் ஒன்று சீவகசிந்தாமணி, சமணர் தமிழ்த் தொண்டின் சிகரஜோதி, வளரும் தமிழிலே விளைந்து வாழும் இலக்கியம், தமிழ்க் கவிதையின் இசைச் செல்வங்கள் நிரம்பிய கருவூலங்களில் ஒன்று. இப்படியெல்லாம் சிந்தாமணியைத் தெரிந்துகொள்வதற்கு இக் கட்டுரைத்தொகுதி வாசகர்க்கு வழிகாட்டக்கூடும்"

"இத்தகைய கட்டுரையாளர்களுக்கும், இந்த நினைவு மலரை அழகாக மலரச் செய்வதில் ஈடுபட்ட ஊக்கத்தின் அவதாரமாகிய ஸ்ரீபால் என்ற சைனத் தமிழ்ச் செல்வருக்கும் தமிழ்க் காதலோடு கூடிய நன்றி உரியதாகும்" எனப் பாராட்டியுள்ளது. இவ்வாறு தமிழ்த் தொண்டும், பொதுத்தொண்டும், அருளறத் தொண்டும், சமூக சமயத் தொண்டும் ஒருங்கே புரிந்துவரும் நமது ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களை வரலாற்றுலகம் என்றும் மறவாது.

உயர்திரு. அ. அருக்கக் கீர்த்தி நயினார் அவர்கள் இவ்விழாவில் பெரிதும் பங்கெடுத்துக் கொண்டார். கார் முதலியவைகளையும் உதவி செய்து விழாவைச் சிறப்பித்தார்.

திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்

இந்நூலில் திருக்குறளாசிரியர் ஆதிபகவன் எனப்போற்றும்இறைவன் பகவான் விருஷபதேவரே

என்பதைப் பல இலக்கிய ஆதாரங்களுடனும் வரலாற்று உண்மைகளுடனும், நன்கு விளக்கியுள்ளார். இவ் ஆராய்ச்சி நூலினை தமிழ்ப் பேராசிரியர்கள், டாக்டர். மு. வரதராசனுர் அவர்கள், டாக்டர். மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களும் பாராட்டி அணிந்துரை வழங்கியுள்ளார்கள். இந் நூலினை அச்சிட்டு வழங்கியவர் திருத்தக்க தேவர் இலக்கிய மன்றத் துணைத் தலைவர் உயர்திரு. ஸ்ரீ சாமிநாத ஜெயின் அவர்களாவர்.

ஆதிநாதர் பிள்ளைத் தமிழும் ஜினனந்தமும்.

ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களின் வாழ்க்கைத் தொடக்கமே நூல் நிலையம் அமைப்பதும், ஓலைச் சுவடிகளைத் தேடி சேகரித்து வைப்பதும் என்பதை முன்னரே அறிந்துள்ளோம். தமிழகத்தில் தலை சிறந்த அறிஞர்களில் ஒருவராய் விளங்கிய சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் இயற்றிய ஜினனந்தம் என்ற மகாவீரர் வரலாற்றை வெளியிடத் தருமசாகர சுவாமிகள் நூல் நிலையத்தின் நிதியினின்றே பொருளுதவி புரிந்தார் நம் ஸ்ரீபால். 1945ல் பண்டைய ஓலைச் சுவடிகள் தேவை எனத்துண்டு வெளியீடு அச்சிட்டு ஜைன கிராமங்கள் தோறும் அனுப்பி ஓலைச் சுவடிகளைச் சேகரித்தார். ஆதிநாதர் பிள்ளைத் தமிழ் என்னும் நூலும் அச்சூர்தி ஏருத ஓலைச் சுவடியாகவே இருந்தது. அதனைச் செம்மைப் படுத்தி தச்சூர் திரு. சின்னசாமி நயினர் அவர்களை உரை எழுதச் செய்து மோட்டூர் உயர்திரு. M. N. எசோதா நயினர் அவர்களின் பொருளுதவியால் அந்நூலை வெளியிட்டார். இந்நூலை வெளியிட்டதற்குத் திரு. N. சாந்தகுமார் ஜெயின் பெரிதும் துணை புரிந்தார். இது போன்றே அறநெறிச்சாரம், ஜீவ சம்போதனை, நடன நூல், அப்பாண்டை நாதர் உலா முதலிய நூல்களையும் தமிழ்ப் பெரியார் S. வையாபுரி பிள்ளை அவர்களிடமும், உயர்திரு ஸ்ரீனிவாச முதலியார் அவர்களிடமும், உயர்திரு மயிலை சீனி. வேங்கட

சாமி அவர்களிடமும் அளித்து ஆராயச்சி செய்தார். இவ்வாறு கலை உலகில் அரும்பணியாற்றி வருகின்றார். ஆதிநாதர் பிள்ளைத் தமிழுக்கு அணிந்துரை எழுதிய பேராசிரியர் உயர்திரு A. சக்கரவர்த்தி நயினார் M. A. L. T., I. E. S., (Rtd)., அவர்கள் பின்வருமாறு ஸ்ரீபால் அவர்களைப் பாராட்டியுள்ளார்கள்.

"This book is published through the the efforts of Jeevabandhu Sri. T. S. Sripal. He must be congratulated for his enthusiasm and untiring efforts to serve Jain community by publishing books like these, bringing out Jaina Culture and showing its importance to the society at large."

தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க விழா.

டக்டர் கமில் சுவலெபில் சென்னை வருகை.

சென்ற நூற்றாண்டில் **டாக்டர் கால்டுவேல்** என்ற பெருமகனார் தமிழ் மொழியின் பெருஞ் சிறப்பைத் தாம் இயற்றிய **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** என்ற திப்பிய நூலால் எவ்வாறு உலகறியச் செய்தாரோ அதுபோன்றே இந்நூற்றாண்டில் **டாக்டர் கமில் சுவலெபில்** அவர்கள் தமிழ் மொழியின் பெருஞ்சிறப்பை உலகமெலாம் பரவச் செய்வதில் ஈடுபட்டுள்ளார்.

டாக்டர் கமில் சுவலெபில் செக்கொஸ்லோவேகியாவில் பிறர் உதவியின்றி நூற்களின் துணைகொண்டு தமிழ் பயின்றவர். தம் நுண்மாண் நுழைபுலத்தால் சங்க இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர். மற்றும் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆகிய முப்பெரும் காப்பியங்களையும் சிறப்பாகக் கற்றார், இவற்றில் சிலப்பதிகாரத்தை செக் மொழியில் மொழி பெயர்த்துள்ளார். பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய நூல்களின் பாடல்களில் சிறந்த



ஜீவபந்து ஸ்ரீபால் டாக்டர் கமில் சுவலெபில் அவர்களையும் தலைவர்களையும் வரவேற்கும் காட்சி.
இடமிருந்து நான்காவதாக அமர்ந்திருப்பவர் டாக்டர் கமில் சுவலெபில்.



ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் டாக்டர் கமில் சுவலெபில் அவர்களுக்கு சீவகசிந்தாமணி ஓலைச்சுவடி வழங்கும் காட்சி.

வற்றைத் திரட்டி **மல்லிகை மாலை, நீலோற்பலம்** என்னும் எழிற்பெயர் சூட்டி இருபெரும் தொகுதிகளாகச் செக் மொழியில் கொணர்ந்துள்ளார். இத்தகு சிறப்புக்கள் அமைந்த **டாக்டர் கமில் சுவலெபில்** அவர்களுடன் நம் **ஜீவபந்து ஸ்ரீபால்** அவர்கள் சில ஆண்டுகளாகவே கடிதப் போக்குவரத்தின் மூலம் நட்புக்கொண்டிருந்தார். டாக்டர் விரும்பிய தமிழ் நூல்களை அவ்வப்பொழுது அனுப்பி அவர் ஆய்வுக்குத் துணை புரிந்து வந்தார். இவ்வாறு நட்பாம் கிழமை பூண்ட மேலைநாட்டுத் தமிழறிஞர் டாக்டர் கமில் சுவலெபில் அவர்கள் தமிழகந்தினை நேரிற் காணும் பொருட்டுச் சென்னைக்கு வரலானார்.

தமிழகத்திலுள்ள தமிழறிஞர்களுக்கும் புலவர் பெருமக்களுக்கும் அவ்வப்பொழுது சிறப்புச் செய்து மகிழும் நம் ஸ்ரீபால் அவர்கள் மேல்நாட்டுத் தமிழறிஞராகிய தம் நண்பர் தமிழகத்துக்கு வருகிறார் எனில் அவர் உள்ளம் என்னென்ன திட்டங்கள் திட்டும்.

திருத்தக்க தேவர் இலக்கிய மன்றத்தின் சார்பில் 1958-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 2-நாள் கோகலே மண்டபத்தில் மாபெரும் வரவேற்பு அளிக்க ஒரு விழா ஏற்பாடு செய்தார். சென்னை நகரமெங்கும் டாக்டர் அவர்களை வரவேற்பதற்கான சுவரொட்டிகள் காணப்பட்டன. அவ்விழாவிற்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் திரு. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள். சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடி டாக்டர் கமில் அவர்களை வரவேற்று மகிழ்வித்தனர். கூட்டத்துவக்கத்தில் நம் ஸ்ரீபால் அவர்கள் ஆன்டுக்குழுமியிருந்த அனைவரையும் வரவேற்றுச் சிறப்புரை வழங்கி, டாக்டர் கமில் சுவலெபில் அவர்களுக்குத் திருத்தக்க தேவர் இலக்கிய மன்றத்தின் சார்பில் **வரவேற்புரை** வாசித்தளித்து சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட **சீவக சிந்தாமணி ஓலைச்சுவடி** ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கினர். அவைகளை மேல்நாட்டுத்

தமிழறிஞர் கட்டுக்கடங்கா மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். பண்டைக் காலத்து ஓலைச்சுவடியைக் கண்டதும், அதிலும் அது தமிழ்க்காவியங்களில் தலை சிறந்ததான சீவக சிந்தாமணி என்பதை அறிந்ததும் புலவர்களும் பொதுமக்களும் மகிழ்ச்சி மேலீட்டால் கைதட்டி ஆரவாரித்தனர்.

தலைவர் திரு. **டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை** அவர்கள் **டாக்டர் கமில் சுவலெபில்** அவர்களின் சேவைகளையும், அவர் தமிழின்பால் கொண்டுள்ள அன்பையும், பேரறிவையும் பாராட்டிப் பேசினர். தமிழரசுக் கழகத்தலைவர் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும், பன்மொழிப்புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களும், டாக்டர் திரு. துரை அரங்கனார் அவர்களும், திரு. மயிலை சீனி வேங்கடசுவாமி அவர்களும் டாக்டர் கமில் சுவலெபில் அவர்களைப் பல படப் புகழ்ந்து பாராட்டினர்.

இறுதியாக டாக்டர் கமில் சுவலெபில் அவர்கள் பலத்த கைதட்டல்களுக்கு இடையே எழுந்து தமிழகத்தின் தலைநகரில் தமிழ் நூல்களில் தலைசிறந்த சீவக சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்கதேவர் பெயரால் விளங்கும் திருத்தக்க தேவர் இலக்கிய மன்றத்தின் சார்பில் தமிழ்ப்பெரியோர்களும் தமிழ் மக்களும் என்னை அன்போடு வரவேற்றுப் பாராட்டிப் புகழ்ந்த இவ்விழாவினை யான் என்றென்றும் மறவேன் என்று மகிழ்ச்சி பொங்கக் கூறித் தம் நன்றியறிதலைத் தெரிவித்தார்.

இவ்வரலாற்று நிகழ்ச்சியின் நினைவாகத் திருத்தக்க தேவர் இலக்கிய மன்ற அங்கத்தினர்களும் அன்பர்களும் ராவ் பகதூர் A. **சக்கரவர்த்தி நயினர்** அவர்கள் தலைமையில் **டாக்டர் கமில் சுவலெபில்** அவர்களுடன் நிழர்படம் எடுத்துக் கொண்டார்கள்.

மகாநாட்டின் தலைவர் சொல்லின் செல்வர் டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையுரை வழங்குகிறார். சிலம்புச் செல்வர் மா. பொ. சி. அவர்கள் தலைவருக்கு இடது பக்கத்தில் அமர்ந்துள்ளார்.



டாக்டர் கமில் சுவலெபில் அவர்கள் திருத்தக்கதேவர் இலக்கியமன்றத்திற்கும் சென்னை மக்களுக்கும் நன்றி கூறும் காட்சி.

நமது மதிப்புக்குரிய பன்மொழிப்புலவர் உயர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை M. A. B. L. M. O. L. அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக சீவக சிந்தாமணி சொற்பொழிவு ஆற்றியதன் நினைவாக ஷை தேவர் மன்றத்தினரால் இப்பெருவிழாவிலேயே அப்பெரியாருக்கு அன்பளிப்பாக வெள்ளிக் கோப்பையும் அன்பர் ரா. கண்ணன் அவர்களால் வாழ்த்துப்பாவும் அளிக்கப்பெற்றது.

இத்தகு சிறப்புக்களுடன் விளங்கும், சென்னை. திருத்தக்கதேவர் இலக்கிய மன்ற செயற் குழுவினர்.

1957–1958

ராவ்பகதூர் A. சக்கரவர்த்தி நயினார் M. A. L. T., I. E. S. (Rtd) அவர்கள்

உயர்திரு V. K. அப்பாண்டைராஜ் ஜெயின் B.A., (Hons) ,,
,, S. தன்ய குமார் ஜெயின் ,,
,, D. வர்த்தமான் ஜெயின் B. A. B. L, ,,
,, V. அனந்தராஜ் ஜெயின் B. A., ,,
,, J. சுவாமிநாத் ஜெயின் ,,
,, ஜீவபந்து T. S. ஸ்ரீபால் ,,
,, K. வஜ்ஜிரம் நயினார் ,,
,, மல்லிநாத் ஜெயின் சாஸ்திரியார் ,,
,, பூரணசந்திர சாஸ்திரியார் ,,
,, பாத சக்கர்வர்த்தி ஜெயின் ,,
,, சிம்மச் சந்திர சாஸ்திரியார் ,,
,, S. கெஜபதி ஜெயின் ,,
,, S. கமலநாத் ஜெயின் ,,
,, வித்வான் கம்பீர நயினார் ,,
,, P. பாஸ்கரநாத் ஜெயின் ,,
,, நாபிராஜ்ஜெயின் ,,
,, V. ஸ்ரீதர ஜெயின் ,,
,, A. குணபால் ஜெயின் ,,
,, A. ஸ்ரீவிஜயபால் ஜெயின் ,,
,, A. சுகுமார் ஜெயின் ,,
,, நாக குமார் சாஸ்திரியார் ,,
,, A. கிருஷ்ணசாமி ஜெயின் ,,
,, A. J. அப்பாவு ஜெயின் ,,
,, B. வர்த்தமான் ஜெயின் ,,
,, O. பொன்னுசாமி நயினார் ,,
,, D. அபராசிதம் ஜெயின் ,,
,, P. பாபுநயினார் ,,
,, N. சாந்தகுமார் ஜெயின் ,,

நல்லறம் தோன்றுதல்.

நம் ஸ்ரீபால் அவர்கள் காலத்திற்குகந்தது எது எனத் தோன்றுகிறதோ அதனைச் செய்து முடிப்பதில் ஈடு இணையற்றவர். எத்தகைய இடையூறுகள், எதிர்ப்புகள் ஏற்படினும் அவற்றைப் பொருட்படுத்த மாட்டார். இத்தகைய நிகழ்ச்சிகள் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்கள் வாழ்க்கையில் பல ஏற்பட்டிருக்கின்றன. பொறுமையும், பகைமையும் உடையோர் வசைமொழிகளையும் பழிச்சொற்களையும் தாங்கிக்கொண்டு உண்மையை நிலை நாட்டுவதில் மிகக் கண்ணும் கருத்தும் உடையவர்.

